# சூளவம்சம்

கூறும்

# இலங்கை வரலாறு



**கலாநிதி க. குணராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூளவம்சம்

## கூறும் இலங்கை வரலாறு

கலாநிதி க.குணராசா

கமலம் பதிப்பகம்
75/10 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நூல் : சூளவம்சம்
- முதலாம் பதிப்பு : ஜனவரி, 2008
- ஆசிரியர் : கலாநிதி செங்கை ஆழியான் க. குணராசா
- உரிமை : திருமதி கமலா குணராசா
  75/10A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
- வெளியீடு : கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்
- விலை : 400/-
- அச்சுப்பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
  48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13.
- ISBN : 978-955-1624-05-7

- Book : CULAVAMSA
  (An Early Historical Description of Sri Lanka)
- First Edition : January 2008
- Author : Dr. Sengiaaliyan K. Kunarasa
- Copyright : Mrs. Kamala Kunarasa
  75/10A, Brown Road, Jaffna.
- Published : Kamalam Pathippakam, Jaffna.
- Price : 400/-
- Printed : Unie Arts (Pvt) Ltd.,
  48B, Bloemendhal Road, Colombo 13.
- ISBN : 978-955-1624-05-7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் வரலாற்றினைக் கூறும் நூலெனக் கொள்ளப்படுகின்ற ஆவணம் மகாவம்சம் ஆகும். தீபவம்சம் என்ற நூலின் மிகத்திருத்தமான வடிவமே மகாவம்சம் (Mahavamsa) என்ற பனுவலாகும். இதன் மூல ஆசிரியராக மகாநாம தேரர் என்பவர் அடையாளங் காணப்பட்டிருக்கிறார். மகாவம்சம் என்பது 100 அதிகாரங்களைக் கொண்டமைந்த நூல். தீபவம்சத்தில் அடங்கியிருப்பதுபோல் 37 அத்தியாயங்கள் மகாவம்சத்தில் அடங்கியுள்ளன. அந்த 37 அத்தியாயங்களையும் பாளி மொழியிலிருந்து மொழி' பெயர்ந்த வில்லியம் கெய்கர் முதல் 37 அதிகாரங்களை மகாவம்சம் என்றும், ஏனைய 38 தொட்டு 100 வரையான அதிகாரங்களின் தொகுப்பை "சூளவம்சம்" (Culavamsa) எனவும் வகுத்து மொழி பெயர்த்துள்ளார். சூளவம்ச மொழிபெயர்ப்பில் இரு தொகுதிகளுள்ளன. ஆனால், ஜோர்ஜ் ரேனர் என்பவர் 100 அதிகாரங்களையும் ஒருங்கே மஹாவம்சம் (Mahavamsa) என்ற பெயரோடு மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். வில்லியம் ஹெய்கர் பாளியிலிருந்து முதலில் ஜேர்மனுக்கு மொழிமாற்றம் செய்துள்ளார். ஆனால், ஜோர்ஜ் ரேனர் பாளியிலிருந்து நேரடியாக ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்துள்ளார். அது பின்னர் முதலியார் விஜயசிங்க என்பவரால் மீளாய்வு செய்யப்பட்டு வெளிவந்துள்ளது.

கெய்கரின் மகாவம்சத்தில் 37 அதிகாரங்கள் அடங்கியிருக்கின்றன. புத்தரின் இலங்கை விஜயங்களோடு மகாவம்சத்தின் முதலாவது அதிகாரம் ஆரம்பமாகின்றது. கி.மு. 483 இலிருந்து கி.பி 362 ஆம் ஆண்டு வரையிலான வரலாற்றினை இது விபரிக்கின்றது. இலங்கையின் முதலாவது மன்னனாக மகாவம்சம் கூறும் விஜயனிலிருந்து 58 வது மன்னனாகிய மகாசேனன் வரை மகாவம்சம் விபரித்துச் செல்கின்றது. மகாசேனனின் மகன் ஸ்ரீ மேகவண்ணனிலிருந்து (கி.மு.362) ஸ்ரீ விக்கிரமசிங்கன் வரை (கி.பி..1815) சூளவம்சம் விபரிக்கின்றது.

மகாவம்சத்தில் மாமன்னன் துட்டகாமினி எப்படிப் பாட்டுடைத்தலைவனாகக் கொள்ளப்பட்டானோ அவ்வாறே சூளாவம்சத்தில் மகா பாராக்கிரமாகு கொள்ளப்படுகிறான். மகாவம்சத்தில் கூறப்படுகின்ற வரலாற்றில் எவ்வளவு தூரம் நம்பகத்தன்மைக்கான ஐயப்பாடு எழுகிறதோ, அதேபோன்றதொரு வரலாற்று அவநம்பிக்கையைச் சூளவம்சத்தில் கொள்வதற்கான ஏதுக்கள் குறைவு. ஏனெனில் சூளவம்சத்தில் கூறப்படுகின்ற பல்வேறு வரலாற்றுச் செய்திகளும், கல்வெட்டு ஆதாரங்களால் நிருபணமாகின்ற மெய்ம்மையைப் பரக்கக் காணலாமென கெய்கர் உறுதிப்படுத்துகிறார். சூளவம்சம் கூறும் 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு 79 வரையிலான அதிகாரங்களைத் தொடுத்தளித்த தர்மகீர்த்தியின் சூளவம்ச வருணனைகள் இந்தியக் காவிய மரபினை நினைவுபடுத்துவனவாக இருக்கின்றன என்பர்.

சூளவம்சத்தைத் கூடிய வரை தமிழில் அளிக்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டிருந்தது. மூலத்தை அறியாமலேயே இந்நூலிலுள்ளவற்றை எடுத்தாளுகின்றவர்கள் பலர் உள்ளனர். இலங்கை வரலாற்றை, மகாவம்சத்தோடு சூளவம்சம் என்றொரு நூலும் தருகின்றதென பலர் அறிந்திருந்தும் மூல நூலைப் படித்தறிய வாய்ப்பின்றி இருந்துள்ளனர். அக்குறைபாட்டை இந்நூல் இல்லாதொழிக்கின்றது. நான்கு ஆண்டுகளுக்கு முதல் மகாவம்சத்தைத் தமிழாக்கி வழங்கியிருந்தேன். அந்நூலுக்கு இருந்த, இருக்கின்ற தேவை அதனைத் தொடர்ந்து சூளவம்சத்தையும் தமிழில் அளிக்க வேண்டுமென்ற உந்துதலைத் தந்தது. சூளவம்சம் விபரிக்கின்ற இலங்கை வரலாற்றை கூடியவரை அவ்வாறே தந்துள்ளேன். புத்தம், தர்மம், சங்கம் ஆகியவற்றைப் பேணித் தம் ஆட்சிக்காலத்தில் பெரும் பங்களித்த மன்னர்களைச் சூளவம்சம் உயர்த்திப் பேசுவதையும், நீர்ப்பாசன நாகரிகத்துக்குத் தொண்டாற்றிய மன்னர்களை விதந்துரைப்பதையும் அவ்வாறு தொண்டாற்றாத மன்னர்களின் பணிகள் அமுக்கிப் பேசப்படுவதையும் சூளவம்சத்தில் காணலாம்.

இந்நூலை உவந்தேற்று இலங்கை வரலாற்றினைச் சூளவம்சம் எவ்வாறு தெரிவிக்கின்றதென அறிந்து கொள்க. குற்றம், குறை இருப்பின் அறியத்தாருங்கள். திருத்திக் கொள்வோம்.

கலாநிதி க. குணராசா
75/10 A. பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
25.10.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூளவம்சம்

## அத்தியாயம்: 1
## சூளவம்சத்தின் ஆரம்ப மன்னர்கள்

மகாவம்சத்தின் இறுதி அதிகாரத்தின் (XXXVII) தொடர்ச்சியாக சூளவம்சத்தின் முதலாவது அதிகாரம் அமைகின்றது. மகாசேனனின் இருபத்தேழு வருட ஆட்சியின் (கி.பி.334 – கி.பி 361) இறுதியில் அவன் இறந்துபோக, அவனது மகனான ஸ்ரீ மேகவண்ணன் முடிதரித்துக் கொண்டான். அவன் முடிசூடிக் கொண்ட கால வேளையில், இலங்கையின் சமய, சமூக, பொருளாதாரச் சூழல் எவ்வாறிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளில், தொடர்ந்து சூளவம்சத்தின் வரலாற்று விபரணையைப் புரிந்து கொள்ள முடியும்.

1 அனுராதபுரம் தொடர்ந்தும் முக்கிய ஆட்சிமையமாக விளங்கியது. அனுராதபுர மாமன்னனின் அதிகார வரையறைகளை ஏற்றுப் பல சிற்றரசுகள் இலங்கையின் நாலா பகுதிகளிலும் இருந்தன.

2. தேரவாத பௌத்த கருத்துக்களை அனுட்டிக்கும் மகாவிகாரைப் பிக்குகளும், மகாயான பௌத்தக் கருத்துக்களை அனுட்டிக்கும் அபயகிரி விகாரைப் பிக்குகளும் இந்த ஆட்சிக்காலத்தில் இருந்தனர். ஆட்சியாளனின் சிந்தனையில் இம்மதங்களில் எது உண்மையான புத்தரின் போதனைகளைக் கொண்டதென்ற எண்ணம் தலை தூக்கியபோது அவன் எடுக்கும் முடிவு ஒரு சமயப்பிரிவிற்குப் பெரும் சோதனைகளை ஏற்படுத்தியது. மகாசேனன் தான் குருவாகக் கொண்ட மகாயான சமயத் தலைவரான சங்கமித்ததேரரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தமையால், மகாவிகாரைப்பிக்குகள் வெளியேற நேர்ந்ததோடு, மகாவிகாரைச் சொத்துக்கள் சூறையாடப்பட்டு, அபயகிரி விகாரைக்கு முதன்மை வழங்கப்பட்டது. ஒன்பதாண்டுகள் மகாவிகாரை சன சஞ்சாரமற்றுப் போயிற்று. மகாவிகாரைக் கட்டிடங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. மகாவிகாரையைச் சேர்ந்த தேரவாத பிக்குகள் மலையகத்திற்கும் உருகுணைக்கும் தப்பியோடினார்கள். மகாயான பௌத்தத்தை அனுட்டித்த அபயகிரி விகாரைப் பிக்குகள் மேலோங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நீர்ப்பாசன நாகரீகமும் நீர்ப்பாசன நெற்செய்கையும் சிறப்புற்று விளங்கியது மகாசேனனின் கட்டமைப்பான நீர்ப்பாசன வசதிகள் நீரைத்தேக்கி நெற் செய்கையின் விருத்திக்குதவின.

## ஸ்ரீ மேகவண்ணன்


இவ்வாறான சூழலில் தான் மகாசேனனின் மகனான ஸ்ரீ மேகவண்ணன் அரசனாக முடிசூடிக் கொண்டான். இவன் அரியணை ஏறியதும் முதலில் செய்த காரியம், அவனது தந்தை மகாசேனனால் அழிக்கப்பட்டும் போற்றுவாரற்றுமிருந்த மகாவிகாரையைச் சேர்ந்த பிக்குகளை வரவழைத்தமைதான். அவன் அப்பிக்குகளை வரவேற்று, அமர்த்தி "சங்கமித்த தேரரின் ஆலோசனையோடு எனது தந்தை மகாவிகாரைக்குச் செய்த தீங்குகள் யாவை?" என வினவினான். "உங்கள் தந்தையார் மகாவிகாரையின் எல்லைகளை குறுக்கி விட்டார். எனினும், முற்றாக அவ்வாறு செய்யமுடியாது போனமைக்கு சில பிக்குகள் அந்த எல்லைப் பரப்பிற்குள் இருந்தமை தடையாக அமைந்தது. ஏழு பிக்குகள் மகா விகாரை எல்லைக்குள் நிலவறை ஒன்றினுள் மறைந்திருந்தனர். உங்கள்



அனுராதபுரம்
வெள்ளரசுமரம் மகாபோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூபராம தாதுகோபம்

தந்தையை அவரின் அமைச்சரான சேனாவும், மாகாயான தேரர் சங்கமித்திரரும் சேர்ந்து, பிழையான வழியில் நடாத்தியுள்ளனர். மகாவிகாரைக்குச் சொந்தமான ஏழடுக்கு மாளிகையான லோகபாசாத உட்படப் பல கட்டிடங்களை அழித்தனர். அப்பொருட்களை அபயகிரிவிகாரைக்கு எடுத்துச் சென்றனர்" என மகாவிகாரைப் பிக்குகள் கூறினர். அவன் தந்தை மகாவிகாரைக்கு இழைத்த தீமைகளுக்குப் பரிகாரம் காணவேண்டி, மகாசேனனால் அழிக்கப்பட்ட லோகபாசாத முதலான கட்டிடங்களைப் புதிதாக அவற்றின் பழைய தோற்றப் பொலிவோடு நிறுவிக் கொடுத்தான்.

தந்தையால் அழிக்கப்பட்டிருந்த பிரிவேனாக்கள், விகாரைகள் என்பனவற்றினை முன்னைய பொலிவோடு புனர்நிர்மாணம் செய்வித்தான். மகாசேனனால் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத திருப்பணியான ஜேத்தவனவிகாரையைக் கட்டி முடிப்பித்தான். இலங்கைக்குப் பௌத்த தர்மத்தினை எடுத்துவந்த மகிந்ததேரரின் உருவைத் தங்கச்சிலையாக வடிப்பித்து, அம்பத்தல சேத்தியத்தில் நிறுவினான்.


ஸ்ரீ மேகவண்ணனின் ஒன்பதாவது வருடத்தில் ஒரு பிராமணப் பெண் துறவி, கலிங்கதேசத்திலிருந்து அனுராபுரத்திற்கு புத்தரின் தந்ததாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினை எடுத்து வந்தாள். அதனை மன்னன் வெகு கௌரவத்தோடு ஏற்று, அதற்கென ஒரு கோயிலைத் தலைநகரில் அரண்மனைக்கு அருகாக அமைப்பித்தான். இதுவே பின்னர் தந்ததாதுக் கோயிலென புகழ்பெற்றது. அனுராதபுரநகரின் தென் கிழக்குப் பாகத்தில் இந்த தலதா மாளிகை அமைந்திருந்தது. இதனைப் பாதுகாக்கும் பொறுப்பினை அபயகிரி விகாரையினரிடம் ஒப்படைத்தான். வருடா வருடம் அபயகிரி விகாரைக்கு இத்தந்ததாது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, மக்களின் தரிசனத்திற்கு வைக்கப்பட்டது.

ஸ்ரீ மேகவண்ணனை அடுத்து ஆட்சியை ஏற்றவன் ஜெட்டதீசனாவான் (கி.பி. 331 – 339) அவன் ஸ்ரீ மேகவண்ணனின் சகோதரனின் கடைசி மகனாவான். யானைத் தந்தங்களினால் சிற்பங்கள் செய்வதில் இவன் புகழ் பூத்திருந்தான் முன்னைய மன்னனின் வேண்டுகோளின்படி போதிசத்துவருக்கு உருவச் சிற்பம் அமைத்து அதை ஒரு அலங்கார மண்டபத்தில் நிறுவினான். ஒன்பது ஆண்டுகள் இலங்கையை பரிபாலித்த பின்னர், தனது மகன் புத்ததாசனிடம் அரியணையை ஒப்புவித்து மரணமானான்.




மிகிந்தலை கண்டகி சேந்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரம்
ரூவான்வெலிசாயா தூபி



## புத்ததாசன்


புத்ததாசன் நல்லியல்புகளையுடைய ஒரு மன்னன், நற்பண்புகளை அணிகலன்களாகக் கொண்ட புத்ததாசன், போதிசத்துவ வழிபாட்டையும், வாழ்க்கை நெறிகளையும் கைக்கொண்டு மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கினான். மருத்துவக் கலையில் வல்லுனநாகவிருந்தமையால் தன் குடிகளுக்கும் உயிரினங்களுக்கும் சிகிச்சைகள் புரிந்து குணப்படுத்தினான். ஒரு நாள் தன் யானையில் ஏறி, திஸ்ஸவாவியில் நீராடும் நோக்கோடு வந்து கொண்டிருந்தபோது, புத்தகாயா விகாரைக்கு அருகில், ஒரு கறையான் புற்றின் மேல், வயிற்றுநோயால் (நாகரோகம்) பாதிக்கப்பட்டு, வயிறு வீங்கிய பெரிய சர்ப்பம் ஒன்று கிடந்தது. அதனைச் சுகப்படுத்த விரும்பிய மன்னன், யானையை விட்டு இறங்கி அதன் அருகில் வந்து, “சர்ப்பமே உனது நோயை ஆற்ற விரும்புகிறேன். ஆனால் நீயோ என்னைத் தீண்டிவிடலாம் என அஞ்சுகிறேன்” என்று கூறினான். அதனைச் செவிமடுத்த சர்ப்பம், தன் தலையைக் கறையான் புற்றுக்குள் நுழைத்துக் கொண்டு வயிற்றுப்பகுதியை மட்டும் வெளிக்காட்டியது. மன்னன் கத்தியினால் அதன் வயிற்றில் கீறி அறுவை செய்து, சீழ் முதலானவற்றை வெளிப்போக்கி, மருந்திட்டுக் கட்டிவிட்டான். சர்ப்பத்தின் நோய் தீர்ந்தது. அதற்குப்பரிசாக அச்சர்ப்பம் தனது நாகமணியை மன்னனுக்கு வழங்கியது. மன்னன் அதனை அபயகிரி விகாரையின் புத்தசிலையின் ஒரு விழியாகப் பதிப்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்தி என்ற நகரத்தில் தனக்குத் தானமாக வழங்கிய சிறுபுழுக்கள் கொண்ட பாலை அறியாமல் பிக்கு ஒருவர் அருந்திவிட்டார். கடும் வயிற்றுநோயால் மன்னனிடம் தஞ்சம் புகுந்தார். புத்ததாசன், காயப்பட்டிருந்த குதிரையொன்றிலிருந்து எடுத்த குருதியை அப்பிக்குவிடம் மருந்தெனக்கூறி அருந்த வைத்தான். பிக்கு அருந்தியதுடன், அவர் குடித்தது குதிரையின் இரத்தம் என எடுத்துரைத்ததும் பிக்குவானவர் ஓங்காளித்து வயிற்றிலுள்ள அனைத்தையும் சத்தியாக வெளியேற்றினார். அவர் வயிற்றிலிருந்த பாற்புழுக்களும் வெளித்தள்ளப்பட்டன. அவர் சுகமடைந்து மன்னனிற்கு நன்றி தெரிவித்தார்.

நீர்ப்பாம்பு ஒன்றின் முட்டையையும் சேர்த்து நீர் அருந்திய ஒரு மனிதனின், வயிற்றினுள் நீர்ப்பாம்பு விரைவாக வளர்ந்து அவனை வருத்தியது அவனை மன்னன் ஒரு படுக்கையில் குப்புறப்படுக்க வைத்தான். வாயைத் திறந்த நிலையில் வைத்திருக்கப் பணித்த பின்னர், வாட்டிய இறைச்சித் துண்டொன்றினை திறந்த வாயருகில் வைத்தான். இறைச்சியின் மணத்தால் கவரப்பட்ட நீர்ப்பாம்பு, வேகமாக வாயினூடாக வெளிவந்தது. இவ்வாறு மருத்துவக் கலையில் புத்ததாசன் சிறந்து விளங்கினான் என சூளவம்சம் பெருமைப்படும். அருந்திய நீருடன் உடலினுள் புகுந்த தவளை முட்டை, வாயினூடாக மண்டை ஓட்டிற்குள்



அபயகிரி தாதுகோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்து, தவளையாக வளர்ந்து விட்டது. புத்ததாசன், அந்த மனிதனின் கபாலத்தை திறந்து, தவளையை வெளியே நீக்கிவிட்டு, பழையவாறு கபாலத்தை மூடித்தைத்து விட்டான் எனவும் சூளவம்சம் கதைவிடுகிறது.

புத்ததாசன் மருத்துவ நூல்களில் உள்ளவற்றைத் தொகுத்து எழுதியதோடு மருத்துவமனைகளைக் கிராமந்தோறும் அமைப்பித்தான். ஐந்து கிராமங்களுக்கு ஒரு வைத்தியசாலை அமைத்தான். அத்தோடு யானைகள், குதிரைகள், படைவீரர்கள் என ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு வைத்தியனை நியமித்திருந்தான். வலது குறைந்தவர்கள், குருடர்கள் முதலியோருக்காக சில நிலையங்களைத் தாபித்திருந்தான். புத்த தர்மத்தை நாடெங்கும் போதிப்பதற்காகப் போதகர்களை அவன் நியமித்திருந்தான்.. அவர்களுக்குச் சம்பளமும் வழங்கினான்.

ஒரு நாள் புத்ததாசன் தனது படையுடன் பவனிவந்தபோது, வழியில் எதிர்ப்பட்ட குஷ்டரோகி ஒருவன் மண்ணை அள்ளி எறிந்து எறிந்து, மன்னனைத் தூஷணை வார்த்தைகளால் திட்டினான். ஒரு காலத்தில் அவன் தனது எதிரியாக இருந்தவன் என்பதைப் புரிந்து கொண்ட மன்னன், அவனது பகைமையைப் போக்க எண்ணினான் ஒருவனை அழைத்து, அந்தக் குஷ்டரோகியிடம் சென்று "அவனது பகைமைக்கான காரணத்தை அறிந்துவா" என அனுப்பி வைத்தான். அவனும் அந்தக் குஷ்டரோகியிடம் நட்பு பேசி, "மன்னனை ஏன் இவ்வாறு கோபிக்கிறீர்" என வினவினான். அதற்கு அந்தக் குஷ்டரோகி, 'இந்த புத்ததாசன் ஒரு காலத்தில் என் அடிமையாக இருந்தவன் இன்று மன்னனாக யானையில் பவனி வருவதைக்காண ஆத்திரமாகவுள்ளது. அவனுக்கு அவன் யாரென இன்னும் கொஞ்ச நாட்களில் புரிய வைப்பேன். அல்லது என் கால்களால் அவனைக் கொன்று அவனது கழுத்து இரத்தத்தினை அருந்துவேன்" என்றான். அதனை அறிந்த மன்னன், அவனது பகைமையை அகற்ற விரும்பி, முதலில் அனுப்பிய மனிதனை அழைத்து, பலவாறாகக் கூறி குஷ்டரோகியை அழைத்துவருமாறு அனுப்பி வைத்தான். அம்மனிதன் அக்குஷ்டரோகியைத் தனது வீட்டிற்கு அழைத்து வந்து, பேசித்து, மருந்திட்டு, சுகதேகியாக்கி நல்ல படுக்கை, பரிமாற அழகான இளம்பெண் முதலான வசதிகளையும் வழங்கி அவனை நன்கு பராமரித்தான். ஒரு நாள் "இவ்வளவு வசதிகளையும் மன்னனே உனக்கு வழங்கினான்" என அறிவித்தான்.. அந்த முன்னைய குஷ்டரோகி தனது செயலுக்காக கழிவிரக்கப்பட்டான். பின்னர் புத்ததாசன் மரணமடைந்த செய்தி கேட்டு இதயம் உடைந்து போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்ததாசன், மகாவிகாரைக்கு மொறபரிவேனா எனும் தர்ம மண்டபம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தான். அத்துடன் விகாரைகளையும் பிரிவேனாக்களையும் கட்டுவித்துள்ளான். இந்த மன்னனுக்கு வீரமும் ஒழுக்கமும் நிறைந்த எட்டு ஆண் மக்கள் இருந்தனர். புத்தரின் எட்டு ஒழுக்கங்களாலும் அவர்களை அவன் பெயரிட்டு அழைத்தான். உதாரணமாக ஒருவனுக்குச் சாரிபுத்தா என்று பெயர். தனது ஆட்சியின் இருபத்தொன்பதாவது வருடத்தில் புத்ததாசன் மரணமானான்.

**உபதீசன்**


அவன் பின்னர், அவனது மூத்த புதல்வனான உபதீசன் என்பான் அரசனாகினான். தந்தையைப் போலவே, உபதீசனும் நல்ல ஒழுக்க சீலன். வலது குறைந்தோரின் நலனுதவிகளுக்குக் கூடியளவு கவனம் எடுத்தான். மங்கல சேத்தியத்திற்கு வடக்கே ஒரு தாதுகோபத்தையும், சில மண்டபங்களையும் கட்டுவித்தான். சிவா மண்டபத்தில் புத்தரின் சிலையை நிறுவினான். இராஜுப்புப்மாலா, கிஜுக்குற்றா, பொக்கற்றாபசாய, வலகஸ, அம்புத்தி முதலான குளங்களைக் கட்டுவித்தான். கந்தராஜ விகாரையை அமைப்பித்தான்.

இம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் மழையின்மையால் பஞ்சமும், பிளேக் நோயும் நாட்டில் பரவின. மனம் வருந்திய மன்னன், பிக்குகளை அழைத்துப் பரிகாரம் கேட்டான். அதன் பின்னர் தங்கத்தினால் புத்தர்சிலை ஒன்றினை வடித்து, அவரின் கரங்களில் ஏந்திய பாத்திரத்தில் நீரை வார்த்து, அச்சி விக்கிரகத்தினைத் தேரில் இருத்தி, ஊர் ஊராக வலம் வந்தான். மக்களும் கலந்து கொண்டனர். அதன் பயனாக வானத்தில் முகில்கள் நிறைந்து, சோனாவாரியாக மழை பொழிந்து தள்ளியது. பஞ்சமும் நோயும் மறைந்து போயின.

உபதீசனிடம் நல்லியல்புகள் பலவுள்ளன. ஒருநாள் அவன் புத்த சேத்தியம் ஒன்றிற்குச் செல்லும் வழியில், எறும்புகள் சாரிசாரியாகப் பாதைக்குக் குறுக்காக ஊர்ந்து காட்டுப்பகுதிக்குச் செல்வதைக் கண்டான். மயிலிறகால் அவற்றை ஒதுக்கி விட்டே அவன் பயணத்தைத் தொடர்தான். அவன் எப்போதும் சாதாரண உணவையே (மகாமலி களி) உண்பான். வழமை தவறாது தோட்டத்திலுள்ள காலண்டா பறவைகளுக்கு (காகங்கள்) தனதுணவில் ஒரு பகுதியை அளித்து விட்டே உண்பான். மிகுந்த இரக்க குணம் உடையவன். கொலைக்குற்றத்திற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேத்தவனராம தாதுகோபம்

மரணதண்டனை வழங்கிய குற்றவாளிமேல் இரக்கப் பட்டு, அவனை எவருமறியாது இரவோடிரவாக அழைத்துப் பணம் கொடுத்து நாட்டை விட்டோடி விடுமாறு அனுப்பி வைத்தான். பின்னர் இடுகாட்டில் செப்புத்தாழியில் போடப்பட்டிருந்த சடலத்தை எடுத்து, குற்றவாளியின் உடலாக எண்ண வைத்து, எரிப்பித்தான். தூபராம விகாரையிலுள்ள புத்தர் சிலைக்கு தங்கக் கலசமிட்டான். நாற்பத்திரண்டாண்டுகள் (368-410) ஆட்சி செய்தபின்னர் மரணமானான்.


**மகாநாமன்**

உபதீசனின் இறப்புத் துயரமானது உபதீசனின் இளைய சகோதரரான மகாநாமன், பிக்குவாக விளங்கினான். அவன், தமையனான உபதீசனின் மனைவியுடன் கள்ள உறவு வைத்திருந்தான். மகாநாமன், உபதீசன் தனித்திருந்தபோது கத்தியால் குத்திச் சாகடித்தான். (பிக்குவான மகாநாமனுடன் இரகசிய உறவு கொண்டிருந்த மகாராணி, அவனை அரசனாக்க விரும்பியே மன்னனைக் கொன்றாள் எனவும் கூறப்படுகிறது)

மகாநாமன் (410-432) தன் தமையனும் தந்தையும் மேற்கொண்ட பணிகளைத் தொடர்ந்து செய்தான். அவன் தனது பட்டத்து மகிஷியாகத் தான் கொன்ற தமையனின் மனைவியையே கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசுருமுனியா விகாரை

லோகாத்வரா, நலக்கம்,. கொற்றிபாசாவன முதலான விகாரைகளை அமைப்பித்து, அபயகிரி விகாரைக்கு வழங்கினான் சிதிலமடைந்திருந்த விகாரைகளைப் புனருத்தாரணம் செய்வித்தான்.

போதிகாயாவிலுள்ள போதிமண்ட என்ற கிராமத்தைச் சேர்ந்த பிராமணன் ஒருவன், மூன்று வேதங்களையும் நன்கு தெரிந்தவன், இலங்கைக்கு வந்து, ரேவத்ததேரரின் போதனைகளை ஏற்றுப் பௌத்தத்தைத் தழுவியதோடு, தன்னை புத்தகோசர் என்று அழைத்துக் கொண்டார். அதன் பின்னர் புத்தகோசர், நானோதய, அற்றசாலினி ஆகிய நூல்களைப் பாளியில் எழுதினார். அத்தோடு சிங்கள மொழயில் உருவாகியிருந்த அட்டதாக்கள் என்ற திரிபீடக விளக்கத்தைப் பாளியில் மொழி பெயர்த்தார். அவரது நூல்கள், போதிமர விகாரையில் அரங்கேற்றப்பட்டன. இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்த பின் மகாநாமன் மரணமடைந்தான்.

**மூன்று மன்னர்கள்**


மகாநாமனுக்கு இரு மனைவியர், பட்டத்து மகஷிக்குப்பிறந்த மகள் சம்ஹா ஆவாள். மற்றைய தமிழ்ப்பெண்ணுக்கு சொத்திசேனன் என்றொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் பிறந்தான். மகாநாமன் மரணமானதும், சொத்திசேனன் அரச கட்டிலேறினான். அவனது ஆட்சி பீடமேறிய அன்று மாலையே, சம்ஹராவால் கொலை செய்யப்பட்டான். அதன் பின்னர் சம்ஹராவின் ஆசைநாயகனான பறையடிப்போனை மணந்து அரசனாக்கினாள். அவன் சட்டகக் குளத்தை நிர்மாணித்தவனாவான். ஓராண்டு காலத்துள் அவன் இறந்து போனான்.

இம்மன்னனின் அமைச்சன் அரசனின் பூதவுடலை இரகசியமாகத் தகனம் செய்து விட்டு, மித்தசேனன் என்ற அரிசி களவாடும் கள்வன் ஒருவனை அரசனாக்கும் நோக்கோடு, அரண்மனைக்குள் இரகசியமாக இருக்கச் செய்தான்.. "அரசன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் உள்ளான்" என்று மக்களை நம்பவைத்தனர். ஒரு கட்டத்தில் "எங்கள் மன்னன் எங்கே? எங்களுக்கு அவரைக் காட்டுங்கள்" என்று மக்கள் குரல் எழுப்பியபோது, மித்தசேனனை யானையிலேற்றி அரசனாக நகர்வலம் வரச்செய்தான். மக்கள் அவனைத் தம் மன்னனாகவே எண்ணி ஏற்றனர். இவன் ருவான் வெலிசாய தாதுகோபத்தின் யானைச் சிற்பங்கள் கொண்ட மதிலில் ஏறு படிகளோடு கூடிய வாசல்களை அமைத்துக் கொடுத்தான். ஓராண்டு ஆட்சி செய்தபின்னர் மரணமுற்றான்.




குட்டன் பொக்கனை

# அத்தியாயம்: 2
# தாதுசேனனும் காசியப்பனும்

**தெ**ன்னிந்தியாவிலிருந்து படையுடன் வந்த பாண்டு என்ற தமிழன், மித்தசேனனைப் போர்க்களத்தில் கொன்று அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அரச குடும்பத்தினர் மகாவலி ஆற்றைக் கடந்து உருகுணைக்குத் தப்பிச் சென்றனர். வாயிற் காவலன் சுபா என்பவனோடு, தப்பிச் சென்ற மோரிய மரபினர், அங்குமிங்கும் அலைந்து கரந்துறைந்தனர். அவர்களில் ஒருவன் நந்திவாபி கிராமத்தினைச் சேர்ந்த தாதுசேனன் ஆவான். அம்பிலாயாகு கிராமத்தில் வசித்த அவனது மகனான தாடநாமனுக்கு தாதுசேனன், சிலாதிஸ்ஸபோதி எனும் இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்களது தாய் மாமன் அனுராதபுரத்திலுள்ள மகாவிகாரையைச் சேர்ந்த தீகசந்த பிரிவேனாவில் துறவறம் பூண்டு பிக்குவாக வாழ்ந்து வந்தான். துறவறம் மேற்கொள்ளும் நோக்கோடு தாதுசேனன், தன் மாமனுடன் வந்து தங்கினான்.


தாய்மாமனான பிக்கு, அரசனாவதற்குரிய அறிகுறிகள் தாதுசேனனிடம் இருப்பதைக் கண்டான். சில சம்பவங்கள் அவனது எண்ணத்தை உறுதிப்படுத்தின. ஒரு நாள் ஒரு மரத்தடியில் தாதுசேனன், தியானத்தில் இருக்கும்போது, திடீரென முகில் அவ்விடத்தில் கூடி



பராக்கிரமபாகுவின் சபாமண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பராக்கிரமபாகுவின் அரண்மனை

மழையாகப் பொழிந்தது. ஒரு சர்ப்பமானது, தாதுசேனனின் தலைக்குமேல் தனது படத்தை விரித்து மழையிலிருந்து பாதுகாப்பு வழங்கியதை மாமன் கண்டார். இன்னொரு தடவை தாதுசேனன் தியானத்திலிருக்கும் போது, கோபம் கொண்ட ஒரு மனிதன் சாணத்தினை அள்ளி அவனது தலையை நோக்கி எறிந்தான். அப்போதும் தாதுசேனனின் தியானம் கலையவில்லை. இவற்றினை அவதானித்த மாமன், "சந்தேகமேயில்லை.. இப்பிள்ளை நிச்சயமாக அரசனாக வருவான். அவனைப் பாதுகாக்க வேண்டும்" என்ற முடிவிற்கு வந்தார். அதனால் தாதுசேனனை அழைத்துக் கொண்டு கோணிச விகாரைக்கு வந்தார். அவனை சகல துறைகளிலும் விற்பன்னனாக மாற்றுவதென முடிவெடுத்தார்.

பாண்டு மன்னனுக்கு இவை தெரிய வந்தன. உடனே தன் படைவீரரை அனுப்பி தாதுசேனனைப் பிடித்து வருமாறு கட்டளையிட்டான். அன்றிரவு பிக்குவானவர் கனவு ஒன்றின் மூலம் நிகழவிருப்பதை அறிந்து கொண்டார். அதனால், தாதுசேனனையும் அழைத்துக் கொண்டு அதி தெற்கே கோணாநதி (காலஓயா)க்கு அப்பாலுள்ள ஒரு விகாரைக்குச் செல்ல முடிவெடுத்தார். கோணாநதியில் அவ்வேளை வெள்ளம் கரை முட்டியிருந்தது. அதனைக் கடக்க முடியாமல் தவித்தபோது, பெரியதொரு சர்ப்பம் அவர்களைத் தனது முதுகில் இருத்தி அக்கரையில் சேர்த்தது. வெள்ளம் கரைபுரண்டோடும் இக்காலஓயாவில் பெரியதொரு நீர்ப்பாசனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தை அமைப்பிக்க வேண்டுமென பிக்கு முடிவு செய்தார். தமிழ் மன்னன் பாண்டுவுக்கு எதிராகப் படை திரட்டுவதில் தாதுசேனன் ஈடுபட்டான்.

பாண்டு மன்னன் தனது ஐந்தாவது வருட ஆட்சியின் பின்னர் மரணமடைந்தான். பாண்டுவின் மகனான பாரிந்தன் அரசகட்டிலேறினான். மூன்றாண்டுகள் ஆண்ட பின்னர் மரணமுற்றான். அதன் பின்னர் பாரிந்தனின் இளைய சகோதரன் குட்டபாரிந்தன் முடிசூடிக் கொண்டான். இவனது காலத்தில் தாதுசேனன், படையோடு வந்து இவனை வெற்றி கொண்டு, அனுராதபுர அரியணையில் அமர்ந்தான். பதினாறு ஆண்டுகளுக்குப்பின், திரிதரன் என்ற தமிழன் ஆட்சியைக் கைப்பற்றினான். அவனை இரண்டே மாதங்களில் தாதுசேனன் புறமுதுகிடச் செய்து மீண்டும் அரியணை ஏறினான். அதன் பின்னர் தாடியன் என்ற தமிழ் இளவரசன் அனுராதபுரத்தைக் கைப்பற்றி மூன்றாண்டுகள் ஆண்டான்.. முடிவில் அவனும் தாதுசேனனால் கொல்லப்பட்டான். மீண்டும் சிம்மாசனமேறிய தாதுசேனன், பீடியன் என்ற தமிழ் மன்னனால் தோற்கடிக்கப்பட்டான் பீடியனின் ஏழுமாத ஆட்சியின் பின்னர் அவனையும் தாதுசேனன் வென்று, மன்னனாகினான். தமிழரின் படைகளோடு அடிக்கடி மோதி வெற்றி காண்பதில் தாதுசேனனின் ஆட்சி இருந்தது.

இலங்கை முழுவதற்குமான பகைமை அனைத்தையும் வென்று தாதுசேனன் (459-477) மன்னனாக முடிதரித்துக் கொண்டான். தனது சகோதரனோடு இணைந்து, இலங்கையின் இருபத்தொரு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த தமிழரின் படை அரண்களை நிர்மூலமாக்கினான். தமிழரின் படையெடுப்புக்கள் நிகழாது, ஸ்திரமான ஆட்சியை நிறுவிக் கொண்டான்.

காலஓயாவை மறித்து அணைகட்டி பெரியதொரு நீர்ப்பாசனக்குளமான 'காலவாவி'யை உருவாக்கிய பெருமை தாதுசேனனையே சாரும். வயல்களுக்கு நிரந்தரமான பாசனவசதியை ஏற்படுத்திக் கொடுத்தான். தலைநகரிலிருந்த முப்பெரும் விகாரைகளுக்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தான். மகாவிகாரைக்கு ஆபரணங்கள் அளித்தான். போதிகா என்ற கட்டிடத்தைப் போதிமரத்தின் அருகில் கட்டுவித்தான். பதினெட்டு விகாரைகளையும், பதினெட்டுக் குளங்களையும் இம்மன்னன் தன்காலத்தில் கட்டுவித்தான். காலவாவி விகாரை. பலதாகா விகாரை, தாதுசேனபாபட்ட விகாரை,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள விகாரை, தூபவித்தி விகாரை, தாதுசேன விகாரை, அந்தாரமேகிரி விகாரை, ரோகண விகாரை என அப்பட்டியல் நீளும். காலவாவியோடு, பாடுலகா, ஹம்பத்தி, மகாதத்தா முதலான குளங்களையும் தாதுசேனன் கட்டுவித்தான். போதிமர விழாவை நடாத்தினான். மகிந்த தேரரின் முழு அளவிலான சிலாவிக்கிரகத்தை, அவருடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நிறுவினான். பல சமயப்பணிகள் செய்வித்தான்.

## காசியப்பன்

தாதுசேனனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். மூத்தவன் மொகல்லானன் பட்டத்து மகசியின் மகனாவான். இளையவன் காசியப்பன், வைப்பாட்டி பிள்ளையாவான். இவர்களோடு அழகான ஒரு புதல்வியும் தாதுசேனனுக்கு இருந்தாள். தாதுசேனனின் சகோதரியின் மகன் மீகாரன் என்பான் சேனாதிபதியாக படையணியில் பதவி வகித்தான். அவனுக்கு மன்னன் தன் ஒரே மகளைத் திருமணம் செய்து கொடுத்திருந்தான். எதுவித குற்றமுமின்றி தனது பாசமகளை, மருமகன் மீகாரன் சவுக்கினால் அவளது தொடையில் அடித்து ஏற்படுத்தியிருந்த இரத்தக்காயத்தைத் தாதுசேனன் கண்டான். அதனால் கோபமுற்ற தாதுசேனன் மருமகன் மீகாரனின் தாயை, தனது சகோதரியை, நிர்வாணமாக்கி எரியூட்டிக்




பராக்கிரமபாகுவின் சபாமண்டபம் (பின்பக்கப்பார்வை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லுமாறு கட்டளையிட்டு நிறைவேற்றினான். அவ்வாறு தனது தாயைத் தண்டித்தமைக்குப் பழிவாங்கும் நோக்கோடு மீகாரன் உயர்குலப் பெண்ணிற்குப் பிறக்காத காசியப்பனுடன் சேர்ந்து, தாதுசேனனுக்கு எதிராக அவன் மனதை மாற்றி, தாதுசேனனைக் கைது செய்து சிறையிட வைத்தான்.

அதன் பின்னர் அரியணை ஏறிய காசியப்பன், தனக்கு எதிராகவும் தாதுசேனனுக்கு ஆதரவாகவும் செயற்பட்டவர்களைக் கொன்றொழித்தான். அதனால் காசியப்பனைப் பொருதி வெல்லும் நோக்குடன் படை திரட்டுவதற்காக காசியப்பனின் தமையன் மொகல்லானன் இந்தியாவிற்குத் தப்பி ஓடிச் சென்றான். அதன் பின்னரும் சேனாதிபதி மீகார, தாதுசேனன் மீது கொண்டிருந்த வன்மம் மாறவில்லை. "தாதுசேன மன்னன் திரண்ட புதையல் ஒன்றினை எங்கோ அரண்மனையில் மொகலாயன் எடுக்காமல் புதைத்து வைத்துள்ளார்" என்று காசியப்பனிடம் ஓதினான். அதனால், அப்புதையலைக் காட்டுமாறு காசியப்பன் சிறையிலிருந்த தந்தையைக் கட்டாயப்படுத்தினான். "என்னைக் கலாவாவிக்கு அழைத்துச் செல் அங்கு என் புதையலைக் காட்டுகின்றேன்" என்றான் தாதுசேனன். அதனால் மகிழ்ச்சியடைந்த காசியப்பன், ஒரு தேரில் தாதுசேனனை காலவாவிக்கு அழைத்து



நிசங்கலதா மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வந்தான். குளத்தினை அடைந்த தாதுசேனன், அதில் இறங்கி நீராடியதோடு, அந்நீரையும் அருந்தினான்.. பின்னர் குளித்துவிட்டு, நீரைக் கரங்களில் ஏந்தி, 'இதுதான் நான் தேடிய புதையல்' எனச் சத்தமிட்டான். கோபமுற்ற காசியப்பன், 'இவரைக் கொன்றுவிடுக' என சேனாதிபதி மீகாரனுக்குக் கட்டளையிட்டான். மகிழ்வடைந்த மீகாரன் தாதுசேனனை நிர்வாணமாக்கி, சங்கிலியால் பிணைத்து, சுவர் ஒன்றினுள் வைத்து, மூடிக் கட்டிச் சமாதி வைத்தான். தனது மகனாலேயே தாதுசேனன் கொல்லு விக்கப்பட்டான். கால்வாய் கட்டியபோது, அணைக்கட்டில் பாதையில் தியானத்திலிருந்த துறவி ஒருவரை அவ்விடமிருந்து அகற்றமுடியாது போனமையால் அவரையும் அணைக்குள் வைத்து மண்ணிட்டு மூடிய நிகழ்ச்சி தாதுசேனனின் மரணத்தை நியாயப்படுத்துவதாகிறது.

காசியப்பன் (477-495) அனுராதபுரத்தின் மன்னனாக முடி புனைந்து கொண்டான். அவனால் அரசுக்குரிமையுடையவனான மூத்த சகோதரன், மொகலானனைக் கொல்லமுடிவில்லை. மொகாலானன் எந்த வேளையிலும் இந்தியாவிலிருந்து படையுடன் வரலாமென்ற பயம் இருந்தமையால், எவரும் இலகுவில் அடையமுடியாத சிகிரியாக் குன்றில் தனது அரண்மனையை அமைத்துக் கொண்டான். சிகிரியாவைத் தன் தலைநகரமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். சிங்கம் வடிவ நுழைவாயில் தோற்றத்தோடு கூடியதாகச் சிகிரியாவை உருவாக்கினான். தனது திரண்ட செல்வங்களை எல்லாம் அச்சிகிரியா மாளிகையில் சேர்த்து வைத்து, குபேரன் போல வாழ்ந்தான். சேனாதிபதி மீகாரனும் தனது பெயரால் ஒரு பிரிவேனாவை அமைத்தான். சிகிரியாவைச் சுற்றி பூந்தோட்டங்களையும் நகரத்தையும் காசியப்பன் உருவாக்கினான். அவன் இசுறுமுனியா விகாரையைப் புதுப்பித்தான்.

காசியப்பனுக்கு போதி, உபுல்வண்ண என இரு புதல்விகள் இருந்தனர். இவ்வாறு புதல்விகளின் பெயரால், இசுறுமுனியா விகாரையில் இளம் பிக்குகள் கற்கும் கல்விக்கூடம் அமைக்கப்பட்டது. நீயாந்தித்தோட்டத்திற்கு அருகிலும் ஒரு விகாரையைக் காசியப்பன் கட்டினான். அவ்வாறு பல சமயப் பணிகளை அவன் மேற்கொண்டான். எனினும் மறு உலகம் பற்றியும், மொகல்லாணன் பற்றியும் எப்பொழுதும் பயந்தவனாகவே விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை
கிரிவிகாரை

மொகல்லானன்

பதினெட்டாம் வருடம், மொகல்லானன் இந்தியாவிலிருந்து பெரும்படையுடன் வந்திறங்கி, அம்பத்துகோல மாவட்டத்தில் குதாரி விகாரையின் அருகில் பாசறை அமைத்துக் கொண்டான். காசியப்பன் தனது படையுடன் அணிவகுத்து எதிர்கொண்டான். பெரும் போர் இரு படைகளுக்கும் மூண்டது. இரு பெரும் கடல்கள் போல மோதிக் கொண்டனர். போர் நடந்து கொண்டிருந்தவிடத்தில் காசியப்பனுக்கு முன் தடையாகப் பெரும் சதுப்பு நிலம் காணப்பட்டது அதனால், காசியப்பன் தனது யானையை புதிய பாதையில் நடாத்துவதற்காகத் திருப்பினான். அதனைக் கண்ணுற்ற காசியப்பனின் படைவீரர்கள், 'நமது மன்னர் திரும்புகிறார். புறமுதுகிடுகிறார் எல்லாரும் பின்வாங்குங்கள்' என சத்தமிட்டபடி பின் வாங்கி ஓடினர். மொகாலனன் வீரர்கள். 'எதிரிகளின் முதுகுகள் தெரிகின்றன" என வெற்றி ஒலி எழுப்பினர் அவற்றினைக் கண்ணுற்ற காசியப்பன், தன் உறையிலிருந்து கத்தியை எடுத்துத் தன் கழுத்தினை அரிந்து தற்கொலை செய்து கொண்டான்.

காசியப்பனுக்கான மரணச்சடங்குகளை மொகல்லானன் நிறைவேற்றினான். அரண்மனை திரும்பி, காசியப்பனின் முழுச்செல்வத்தையும் தனதாக்கிக் கொண்டான். மகாமேகவனத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து வழிபாடியற்றினான். ஏனைய இரு விகாரைகளுக்கும் (அபயகிரி, ஜெந்தவனராம) சென்று வழிபாடு இயற்றினான். மன்னனாகியதும் தன் தந்தை தாதுசேனனின் மரணத்திற்குக் காரணமானவர் எனக்கருதிய ஆயிரமளவிலான உயர் பதவியினரை சிறைசெய்து, அவர்களது காதுகளையும், மூக்குகளையும் அரிந்த பின்னர், நாடு கடத்திவிட்டான். தந்தையின் சடலத்திலிருந்து அவரின் பல் ஒன்றை எடுத்து ரக்ஷைசையாக அணிந்து கொண்டான்.

இலம்பகர்ண மரபினைச் சேர்ந்த தத்காபப்குதி என்பவன் முன்னர் காசியப்பனின் படையில் இருந்தவன். சிறு மனத்தாக்கம் காரணமாக மேரேலிய என்ற கிராமத்தில் கரந்துறைந்தான். அவனுக்கு சிலாகாலன் எனறொரு மகன், அவனும் காசியப்பனுக்குப் பயந்து இந்தியா சென்று மொகல்லானனுடன் சேர்ந்து கொண்டான். சிலாகாலன், இந்தியாவிலிருந்து புத்தரின் கேசதாது (மயிர்ச்சின்னம்)வை இலங்கைக்கு எடுத்து வந்தான். மொகல்லானன் அவனை மரியாதையோடு வரவேற்று, அதற்கென ஒரு தனிக்கட்டிடத்தை அமைத்து அதில் கேசதாதுவை தாபித்தான். அத்தோடு சிலாகாலனை வாள்படைத் தளபதியாகவும் (அசிகாஹா) நியமித்தான். அதனால் அவன் அசிகாஹா சிலாகாலன் என அழைக்கப்பட்டான். மொகாலனன் தனது சகோதரியையும் அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். மொகலானன் தனது ஆட்சியின் பதினெட்டாம் வருடம் மரணமடைந்தான்.



பொலநறுவை றன்கொத்விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 3
# அக்கபோதி மன்னர்கள்

## ஒன்பது மன்னர்கள்

மொகல்லானனின் மரணத்தின் பின்னர் அவனது மகனான குமாரதத்துசேனன் அரசனாகினான். ஒன்பதாண்டு ஆட்சியின் பின்னர் அவன் மரணமடைய, அவனுடைய மகனான கீர்த்திசேனன் என்பான் அரியணையில் அமர்ந்தான். ஒன்பதாம் மாதம், அவனுடைய மாமன் சிவா என்பதனால் கொலை செய்யப்பட்டான், நூறு நாட்களே சிவாவால் ஆட்சியிலிருக்க முடிந்தது. சிவாவைக் கொன்றழித்துவிட்டு உபதீசன் என்பவன் முடிசூடிக் கொண்டான். மொகலானனுடைய ஒரு சகோதரியின் கணவனும் சேனாதிபதியுமான உபதீசன் ஆட்சியை நடாத்தினான் இன்னொரு வகை உரித்தாளியான சிலாகாலனைத் திருப்திப்படுத்து வதற்காக தனது மகனையும் திரண்ட செல்வத்தையும் சிலாகாலனுக்கு திருமணத்தின் மூலம் வழங்கினான்.

உபதீசனுக்குக் காசியப்பன் என்றொரு மகனுள்ளான். அவன் சிறந்த வீரன், பதினாறு திறனுடைய தோழர்களைக் கொண்டிருந்தான். உபதீசன் அரசுரிமை பெற்றதும், சிலாகாலன் தனது உரிமையை நிலைநாட்ட விரும்பி மலையகத்தில் படை திரட்டி, அனுராதபுரத்தின்மீது தண்டெடுத்து வந்தான். இதனைக் கேள்வியுற்ற காசியப்பன், தன் தந்தை உபதீசனின் கட்டளைப்படி, யானையிலிலமர்ந்து தன் தோழர்களுடன் படை நடாத்திச் சென்று சிலாகாலனை எதிர்கொண்டான். காசியப்பன் தோல்வியடைய நேரிட்டது. வயோதிபனான தந்தை உபதீசனையும் தாயையும் திரண்ட திரவியங்களையும் எடுத்துக் கொண்டு தப்பி ஓட முயன்ற காசியப்பனின் முயற்சி தோல்வி கண்டது அதனால் அவன் தற்கொலை செய்து கொண்டான். இதனை அறிந்த உபதீசன் மரணமடைந்தான்.


அதன் பின்னர் சிலாகாலன் முடி புனைந்து கொண்டான். பதின்மூன்றாண்டுகள் ஆட்சி புரிந்தான் பல சமயப் பணிகளை நிறைவேற்றினான். சிலாகாலனுக்கு மொகாலனன், தடாபபூதி, உபதீசன் என மூன்று புதல்வர்கள் இருந்தனர். மன்னன் உயிரோடிருக்கும் போதே, இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தின் ஆதிபதா (முடிக்குரிய இளவரசன்) வாக மொகல்லானன் நியமிக்கப்பட்டிருந்தான். இரண்டாவது மகனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாபபூதி, மலையராஜாவாக நியமிக்கப்பட்டிருந்தான், தக்கிண தேசத்தின் நிர்வாகம் அவனுக் குரியதாகவிருந்தது. மூன்றாவது புதல்வன் உபதீசன், தந்தையுடன் வாழ்ந்து வந்தான்.

சிலாகாலன் ஆட்சியில் பன்னிரண்டாமாண்டு, ஒரு இளம் வர்த்தகன், இந்தியாவிலிருந்து தர்மதூது எனும் மகாயான பௌத்த நூலை இலங்கைக்கு எடுத்து வந்தான், அதனை வெகு மரியாதையுடன் ஏற்று, அதனைக் கொண்டுவந்த வர்த்தகனுக்கு ஏராளமான தங்கக்காசுகளையும் வழங்கினான் சிலாகாலன் இறந்ததும், கூடவே இருந்த உபதீசன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அதனைக் கேள்வியுற்ற மலைய ராஜா தாடாபபூதி விரைந்து வந்து தம்பியைக் கொன்று அரியாசனம் ஏறினான். அதனைக் கேள்வியுற்ற மொகல்லாலன் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து பெரும் படையுடன் வந்தான். தாடாதபூதியும் படைகளைத் திரட்டிக் கொண்டு எதிர்கொண்டான். 'நமது உரிமையை நிலைநாட்ட எமது மக்கள் பலியாகக் கூடாது. ஆகவே, நானும் நீயும் தனித்துப் போராடி, சண்டையிட்டு உரிமையை நிலை நாட்டுவோம்' என மொகல்லானன் அறிவித்தான். இரு சகோதரர்களும் தத்தமது யானைகளிளேறி ஆரோகணித்து, பஞ்ச ஆயுதங்களுடன் போரிட்டனர் போரில் தாடாபபூதி தோல்விகாண நேர்ந்தபோது அவன் தனது கத்தியை எடுத்துக் கழுத்தினை அரிய முயல்வதைக் கண்ட தமையன், 'வேண்டாம்



றன்கொத் விகாரை வழியிலுள்ள தூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் செய்யாதே' எனத்தடுத்தும் கேளாது, அவன் தற்கொலை புரிந்து கொண்டான். தாடாபூதியின் ஆட்சி ஆறுமாதங்கள், ஆறுநாட்கள் மட்டுமே, நிலைத்திருந்தது.


அதன்பின்னர் மொகலானன், சூளமொகல்லானன் என்ற நாமத்தோடு அரி கட்டிலமர்ந்தான். ஏனைய மன்னர்கள் போலப் பல சமயப்பணிகளைச் செய்தான் கவிஞனாக விளங்கினான். கதம்பநதியில் (அருவியாறு) அணைகட்டி பத்தசனவாபி, தனவாவி, கறித்தறவாவி ஆகிய குளங்களைக் கட்டுவித்தான்.

மொகலானனிற்குப்பின் அரசுரிமை தனது மகனான கீர்த்திஸ்ரீமேகனுக்குக் கிடைக்கவேண்டுமென்பதற்காகப் பட்டத்து மகாராணி, அரச உரிமையுடைய உறவினர்களை நஞ்சூட்டிக் கொன்று ஆட்சியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தாள். மன்னன் இறந்ததும், கீர்த்தி ஸ்ரீமேகனை அரசனாக்கி அதிகாரத்தைை ராணியே தன் கரங்களில் வைத்திருந்தாள். அதனால் நாட்டின் நிர்வாகம் ஊழல்கள் மலிந்து, கலவரங்கள் தலை தூக்கின.

சிலாகாலன் அரசனாக விளக்கிய காலத்தில் சங்கில்லா என்ற கிராமத்தில், மௌரிய வம்சத்தைச்சேர்ந்த பஹாயாசிவா என்றொருவன் வசித்து வந்தான். அவனது மகன் அக்கபோதி என்பனாவான். அத்தோடு பஹயாசிவாவின் சகோதரி மகனாக மகாநாகன் உயர்ந்த கம்பீரமான தோற்றத்தினன். அக்கபோதி மிகுந்த அழகன். தனது பயத்தினாலும், மாந்திரிகன் ஒருவனின் உதவியாலும் மாகாநாகனை உருகுணையின் ஆட்சியாளனாக மாற்றினான். தலை நகரில் சகோதரர்களிடையே ஏற்பட்டிருந்த (மொகலானன், தடாபபூதி, உபதீசன்) குழப்பத்தினைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றப் படையுடன் விரைந்த மகாநாகன், மொகலானன் அரசனாகிவிட்ட செய்தியைக் கேள்வியுற்று உருகுணைக்குத் திரும்ப நேர்ந்தது. இப்போது கீர்த்திஸ்ரீமோகன் ஆட்சியில் குழப்பம் ஏற்பட்டிருப்பதை அறிந்து, ஏற்றவாய்ப்பிற்காகக் காத்திருந்த மகாநாகன் அனுராதபுரத்திற்குப் படையுடன் விரைந்து ஆட்சியைக் கைப்பற்றி மன்னனாகினான் மௌரியமரபினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர் மைத்துனன் அக் கபோதியை அழைத்து, உபராஜாவாக்கினான். சமயப் பணிகளை ஏனைய மன்னர்கள் போல ஆற்றி மூன்றாண்டுகள் அனுராதபுர ஆட்சியாளனாக விளங்கி மரணமுற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றன்கொத் விகாரை வழியிலுள்ள தடாகம்

**அக்கபோதி**

மகாநாகன் மரணமடைந்ததும், உபராஜவான அக்கபோதி (575 - 608) அரசனாக்கினான். எல்லா நற்பண்புகளும் நிறைந்த மன்னனாக விளங்கினான். தனது தாய்மாமனை உபராஜாவாகவும், சகோதரியின் மகனை மலையகத்தின் யுவராஜாவாகவும் நியமித்தான். எல்லா அதிகாரிகளினதும் மனங்களை வெல்லக்கூடியதாகவும் திருப்திப்படுத்தக் கூடியதுமான பதவியணிகளை வழங்கினான்.

அக்கபோதி மன்னன் கிரிவிகாரையைக் கட்டுவித்தான். மலையகத்தின் யுவராஜாவாக இருந்த தனது மருமகனுக்கு தனது ஒரே மகளான தத்தாவை மணம் முடித்துக் கொடுத்தான். ஸ்ரீசங்கபோதியின் பெயரால் ஒரு பிரிவேனாவையும் அமைப்பித்தான். மகாசிவாவிற்காக இன்னொரு பிரிவேனாவையும் கட்டுவித்தான். அவனது ஆட்சிக்காலம் அமைதியும் சிறப்பும் பெற்றதாக விளங்கியது. சிங்கள மொழியில் கவிஞர்கள் பலர் பாக்கள் யாத்தளித்தனர்.

அம்பிலா பாசாவா விகாரை, உண்ணாவளி விகாரை, சுமணபர்வத விகாரை, ஹற்றிருக்கி விகாரை, முகசேனாபதி விகாரை, மகாநாக விகாரை முதலான பல விகாரைகளை அக்கபோதி கட்டுவித்தான். லோகபாசதாவைப் புனருத்தாரணம் செய்வித்தான். அபயகிரி விகாரைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடுவதற்கான குளம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தான். சேத்திய பர்வதவிகாரைக்கு நாககொண்டிக் குளத்திலிருந்து நிரந்தரமான நீர்வசதி அமைத்து அளித்தான். மகாதூபிக்கு (ருவான் வெலிசாயா) தங்கக்குடையொன்றினை வழங்கினான். மகாகங்கையில் (மகாவலிகங்கை) மஹாமேகலா (மினிப்பே) என்றவிடத்தில் அணைகட்டி மணேரிரக்குளத்திற்கு (மின்னேரி) ஒரு கால்வாய் மூலம் நீர் வழங்கினான்.

அவனுடைய ஆட்சிக்காலத்தில் ஜோதிபாலா என்றொரு தேரர், வைதுல்யப் பிரிவினருடன் சமயவாதம் புரிந்து வெற்றிபெற்றார். அதனால் மன்னன், அவருக்கென வசிப்பதற்கு விகாரைக்கு அருகில் ஒரு மாளிகை அமைத்துக் கொடுத்து, மரியாதையும் செலுத்தினான் அக்கபோதி மன்னன் இவ்வாறான பலசமயப்பணிகளைச் செய்து முடித்து, முப்பத்திநான்காம் ஆட்சி வருடம் மரணமாயினான்.

அக்கபோதியின் பின்னர் அரச கட்டிலேறியவன், அரசனின் சகோதரி மகனான இன்னொரு அக்கபோதி (II) ஆவான் (608-618). அவன் தனது தாய் மாமன் மகளான சம்ஹபத்தாவைத் தனது பட்டத்து மகரிஷியாக்கிக் கொண்டான். விருப்பு வெறுப்பின்றி தகுதிக்கேற்ப பதவிகளை வழங்கினான். வேலுவன விகாரை, ஜம்புரத்ன கல்விகாரை, மற்றிகாபித்தி விகாரை என்பனவற்றினை அமைப்பித்தான்.

அரசசபைத்தேரர் இறந்ததும், கலங்கிய மன்னன் அவர் நினைவாக சூளகல விகாரையை அமைப்பித்தான். ஒரு தடவை ஜோதிபாலா தேரர், தூபராம சேத்தியத்தின் முன் சில சமயச் சடங்குகள் செய்ய விரும்பி நிறைவேற்றியபோது, தூபராமசேத்தியக் கட்டிடத்திலிருந்து ஒரு மிகச்சிறு பகுதி தகர்ந்து அவர்முன் விழுந்தது. தூபராமசேத்தியத்தின் பொறாமைக் குணம் கொண்ட தேரர், மன்னனை அழைத்து அதனைக் காட்டினார். மன்னன் மனம் கலங்கி தூபராம சேத்தியத்தை முழுமையாகப் புனருத்தாரணம் செய்து கொடுப்பதாக உறுதி அளித்தான்.

அதன்படி தூபராம சேத்தியத்தினைத் திருத்தும் பணி ஆரம்பமாகியது. அச்சேத்தியத்திலுள்ள புத்தரின் தோள்மூட்டு எலும்புப் புனித சின்னத்தை வெகுபாதுகாப்பாக லோகபாசாவுக்கு எடுத்துச் சென்று அங்கு வைத்துவிட்டு, தூபராமசேத்தியத்தின் புனருத்தாரணப்பணிகள் நடைபெற்றன. தூபராம சேத்தியத்தின் திருத்தப்பணிகள் சற்று தாமதமாகிய போது, தேரர்கள் அவன் கனவில் தோன்றி, 'தூபராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை பொத்கல் விகாரை



பொலநறுவை கோட்டை மதிலின் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத்தியத்தை மன்னன் திருத்துவதற்கு மனங்கொள்ளானாகில், புத்தரின் புனித சின்னங்களை வேறிடத்திற்கு எடுத்துச் செல்வோம்' என்றனர். மன்னன் விழிப்படைந்து திருத்தப்பணிகளை விரைந்து நிறைவேற்றினான். புதுப்பொலிவோடு உருவாக்கினான். லோகாசாபவிலிருந்து புனித சின்னத்தை ஊர்வலமாகப் பெருந்திருவிழாவாக எடுத்து வந்து தூபராமசேத்தியத்தில் தாபித்தான். அப்பெரஹர ஊர்வலத்தில் ஜோதிபாலா தேரர் பிக்குகள், மக்கள் எனப்பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். அக்கபோதி, நாகதீபத்தில் இராஜயத்னதாது விகாரையைக் கட்டுவித்ததோடு, அமலசேத்தியத்திற்கு ஒரு குடையையும் வழங்கினான்.

## 2வது அக்கபோதி

அக்கபோதி (II) யின் ஆட்சிக்காலத்தில் கலிங்கநாட்டு இளவரசன் ஒருவன், அங்கு நடைபெற்ற யுத்தத்தின்போது அவமே மரணமானவர்களைக் கண்டு மனம் குழப்பமடைந்து இலங்கைக்கு வந்து பிக்குவாக இணைந்து கொண்டான். இவனுக்கு பௌத்த தர்மத்தைப் போதித்து துறவியாக்கியவர் ஜோதிபாலாதேரர் ஆவர். கலிங்க இளவரசனைத் தொடர்ந்து அவனது மனைவியும், அமைச்சரும் இலங்கைக்கு வந்து சங்கத்தில் இணைந்தனர்.

அக்கபோதியின் பட்டத்துராணியும் சமயப் பணிகள் பல செய்தாள். கபல நாகவிகாரையை அவளே கட்டுவித்தாள். அக்கபோதி தனது காலத்தில் கங்கா தடவாவி (கந்தளாய்) கிரித்தலை வாவி, வாகல்கஹா வாவி என்பனவற்றினை அமைத்து நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தான். ஆட்சியின் பத்தாவது வருடம் அக்கபோதி மரணமடைந்தான்.

## சங்கதீசன்

அக்கபோதியின் மரணத்தின் பின்னர் இராணியின் உறவினனும் வாட்படைத்தளபதியுமான சங்கதீசன் அரச கட்டிலேறினான். அக்கபோதியின் ஆட்சியில் சேனைத்தலைவனாக விளங்கிய மொகல்லானன், உருகுணயிலிருந்து படையுடன் அனுராதபுரத்திற்கு வந்து மகாகல்ல என்றவிடத்தில் பாசறை அமைத்துத் தங்கினான். சங்கதீசன் இதனையறிந்து, தனது படையை அனுப்பி வைத்தான். எனினும், மொகல்லானனின் படைக்கு முன் எதிர்நிற்கவியலாது. படை பின்வாங்கின. சங்கதீசனின் படையிலிருந்த யானைகளையும் குதிரைகளையும் மொகலானன் நெருங்கி றத்திவிகாரை வரை பின்வாங்க வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேள்வியுற்ற சங்கதீசன், தனது படையை நடாத்திச் சென்று கடலடிநிவத்தி என்னுமிடத்தில் எதிர் கொண்டு மொகலானனின் சேனையைச் சிதற அடித்து விட்டு தலைநகர் மீண்டான். ஆனால் மொகாலனன் மீண்டும் தனது படைவீரர்களை ஒன்று திரட்டி போர் முழக்கமிட்டான். அரசனின் சேனாதிபதி நோய் வாய்ப்பட்டிருந்தமையால் தனது மகனை அரசனின் படையை நடாத்திச் சென்று எதிரியை முறியடிக்குமாறு பணித்தான். இதனைக் கேள்விப்பட்ட சங்கதீசன் சேனாதிபதியிடம் வந்து, 'எனக்காக யுத்தகளத்திற்குப் போக வருத்தமுற்ற உம்மால் முடியாது. ஆனால், இங்கேயே தங்கியிரும். நகரத்தைப் பாதுகாக்கும் இளவரசனுக்கு எவ்வாறு பரிபாலனம் செய்ய வேண்டுமென ஆலோசனை கூறும்' என்று கூறினான். அதன் பின்னர் தனது மகனுடன் யானை ஒன்றில் அமர்ந்து, சிறிய படையுடன் யுத்தகளத்திற்கச் சென்றான். நோயுற்றிருப்பதாக வேஷமிட்ட சேனாதிபதி தனது நம்பிக்கையான படையாட்களுடன் அரசனுக்குப் பின் சென்று அரசனின் படையைத் தாக்க விரைந்தான். முன்புறத்தில் மொகல்லானனின் படையணியும், பின்புறத்தில் வஞ்சக சேனாதிபதியின் படையணியும் தாக்க இடைநடுவில் சங்கதீசன் அகப்பட்டுக் கொண்டான். இதனக் கண்ணுற்ற இளவரசன், 'இந்தத் துரோகியின் படையைத் துவம்சம் செய்ய அனுமதி தாருங்கள்" என வினவினான். தனது படைவீரர்களே இரண்டு அணிகளாகியதைக் கண்ணுற்ற மன்னன் "வேண்டாம் பொறு" என்று கூறி தனது யானையை ஒரு மிக்கா மரத்தின் நிழலிற்கு நடாத்திச் சென்றான். மரக்கிளை தடுத்ததால் மன்னனின் அம்பாரிக்குடை சரிந்து முறிந்து விழுந்தது. அக்குடையைக் கண்ட எதிரிப்படை அதனை எடுத்து, மொகல்லானனிடம் கையளித்தது. அவன் அதனைத் தூக்கி ஆரவாரித்தான். அதனைக் கண்ணுற்ற சங்கதீசன் சேனாவீரர்கள் 'இனி அவனே தமது அரசன்' என மயங்சி, மொகல்லானனிடம் சரணடைந்தனர். தனித்து விடப்பட்ட சங்கதீசன் தனது மகனுடனும் நம்பிக்கையான அமைச்சர் ஒருவனுடனும் யானையிலேறி அவ்விடத்தைவிட்டு மேகுமஜ்ஜரா காட்டிற்குள் புகுந்து மறைந்தான்.

**மொகல்லானன்**

மொகல்லானன் தனது படையுடனும், துரோகம் புரிந்த சேனாதிபதியினதும் அவனது மகனினதும் படையோடு தலைநகருக்குத் திரும்பி அரசனாக முடிதரித்துக் கொண்டான். எனினும் அரசுரிமையுடையோர் இருக்கும் வரை ஆட்சிக்கு பிரச்சினை என எண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகல்லானன், அனுராதபுரத் தலைநகரில் அரண்மனையிலுள்ள இளைய இளவரசனின் கரங்களையும், கால்களையும் வெட்டிவிடுமாறு தனது நம்பிக்கையான சேவகனிடம் பணித்தான். அரசனது கட்டளையை நிறைவேற்றுவதற்காக விரைந்த சேவகனிடம், 'எனது கரங்களை வெட்டி விட்டால் நானெப்படி உணவை உண்பேன்" என இளவரசன் மன்றாடிக் கண்ணீர் விட்டான் மனமிரங்கிய சேவகன், இளவரசனின் இடது கரத்தையும் இடது காலையும் வெட்டி எறிந்து விட்டு மீண்டான் இதனை அறிந்த சங்கதீசனின் இன்னொரு மகனான ஜெந்தீசன் மேருகந்தார மலைப் பிரதேசத்திற்கத் தப்பி ஓடி ஒளிந்தான்.

அதேவேளை மகனோடும் அமைச்சரோடும் யுத்த களத்திலிருந்து தப்பியோடிய சங்கதீசன், வேலுவனவிகாரையை அடைந்தான். அவர்களை வரவேற்ற பிக்குகள், அவர்களையும் காவியுடை அணிந்திருக்குமாறு வேண்டினர். அவர்களை உருகுணைக்கு அழைத்துச்செல்ல ஒரு பிக்கு முன்வந்தார். அவர்களை மகாகங்கைக்கரையில் மின்னேரியாவில் விடுவதாகக் கூறினார். வழியில் அவர்களை அடையாளம் கண்டு கொண்ட மொகலானனின் சேவகர்கள், உடன் அரசனிடம் செனறு செய்தி கூறினர். இதனைக் கேட்ட மன்னன் மகிழ்வுடன் "அவர்களைப் பிடித்து சிகிரியாவில் சிறை வையுங்கள் மூவரில் மன்னனதும் மகனினதும் தலைகளைத் துண்டித்து எடுத்து வாருங்கள். ஆனால் அமைச்சனை உயிரோடு அழைத்து வாருங்கள்" எனக் கட்டளையிட்டான். மன்னனின் கட்டளைப்படி அவர்கள், சிறைபிடிக்கப்பட்டு சிகிரியாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இளவரசனதும் மன்னரினதும் தலைகள் துண்டிக்கப்பட்டன. அமைச்சரை அழைத்துச் செல்ல முற்பட்டபோது, அவர் சங்கபோதியின் இறந்த சடலத்தின் கால்களை இறுகப்பற்றிக் கொண்டார். அவரை விடுவிக்க முடியாதபடியால் சேவகர்கள் அவரின் தலையை துண்டித்து தலைநகருக்கு எடுத்து வந்தனர்.

சங்கதீசனின் துரோக சேனாதிபதியை மலையராஜாவாகவும், அவனது மகனை வாட்படைத் தளபதியாகவும் மொகல்லானன் நியமித்தான் அதன் பின்னர் அரசன் பல சமயப்பணிகளை ஆற்றினான். அனுராதபுரத்தில் மூன்று பெரும் தூபிகளையும் புத்தாடையால் போர்த்தி விழா எடுத்தான். தந்ததாதுவுக்கும் கேசதாதுவுக்கும் விழாவெடுத்துக் கொண்டாடினான். விசாகதினத்தைப் பெருவிழாவாக நாடெங்கும் அனுசரிக்க வைத்தான். அனைத்துப் பிக்குகளுக்கும் பௌத்த அங்கிகள் வழங்கினான். வதிவிடங்கள் ஏற்படுத்திக் கொடுத்தான். மொகல்லான விகாரை, பிற்றிகமம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகமம், வற்றகமம் ஆகிய கிராமங்களில் விகாரைகள், றக்கா விகாரைக்கு சேத்தியமனை என்பனவற்றினை நிர்மாணித்துக் கொடுத்தான்.

இந்நிலையில் மலையராஜாவான முன்னைய சேனாதிபதியின் மேல் மொகல்லானனுக்கு சில ஐயப்பாடுகள் ஏற்பட்டன அவன் தனது முன்னைய எஜமானுக்குப் புரிந்த துரோகத்தையும் நினைவுபடுத்திய மன்னன், மலையராஜாவின் கால்களையும் கரங்களையும் வெட்டி விடுமாறு கட்டளை பிறப்பித்தான். இதனை முன்கூட்டியே அறிந்த மலையராஜன் மகனாகிய வாட்படைத்தளபதியான, தனது மகனை அழைத்துக்கொண்டு உருகுணைக்குத் தன் ஆட்களுடன் தப்பி ஓடி, விரைவில் உருகுணையில் ஆட்சியாளனாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டான். அவன் உருகுணையில் கரந்துறைந்த சங்கதீசனின் மகன் ஜெத்ததீசவுடன் நட்புப் பாராட்டி, படையைத்திரட்டிக் கொண்டு தொல்காபர்வத்தருகில் பாசறை அமைத்தான். அதனைக் கேள்வியுற்ற மொகாலானன், தனது படையுடன் அவனை எதிர்கொள்ள வந்தான். துரதிர்ஷ்டவசமாக மன்னனின் படையினரில் பெரும்பாலோர் காட்டு நோய் ஒன்றிற்கு பலியாகினர். அதனை அறிந்த உருகுணைத் தலைவன், மொகலானனின் படையைத் தாக்கி அழித்தான் பலவீனமுற்றிருந்த படை பின்வாங்கி ஓடியது. மன்னனும் அவன் ஆட்களும் அதன்பின் ஓடினர். சிகிரியாவில் அவர்களை மடக்கிய உருகுணைத் தலைவன் மன்னனையும் அவனது பரிவாரங்களையும் தலைகளைக் கொய்து அழித்தான் அவர்களோடு ஜெத்ததீசனையும் கொன்று விட முடிவு செய்தான். ஆனால் அவன் அருகிலில்லை. ஒரு தூதுவன் மூலம், 'இங்கு வந்து இந்த அரசுரிமையை ஏற்றுக் கொள்' எனச் செய்தி அனுப்பினான். சந்தேகமுற்ற ஜெத்தாதீசன், 'இவ்வளவு கஷ்டப்பட்டு இழப்புகளுடன் கைப்பற்றிய அனுராதபுர அரசினை இவ்வளவு இலகுவாக எனக்குத் தாரை வார்க்க விரும்புகிறானெனில் ஐயமுள்ளது' என எண்ணி மலைநாட்டிற்குத் தப்பிச் சென்றான்.

**சீலமேகவண்ணன்**


உருகுணைத் தலைவன், முன்னாள் சங்கதீச மன்னனின் சேனாதிபதியின் மகன், தன் பெரும்படையுடன் அனுராபுரத்திற்குள் நுழைந்தான். சீலமேகவண்ணன் என்ற சிம்மாசனப் பெயரோடு அரசகட்டிலமர்ந்தான். இலங்கைத் தீவு முழுவதும் தன் ஆதிக்கத்தினை நிறுவிக்கொண்டான் சமயப்பணிகள் பலவற்றினை ஆற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது ஆட்சியின்போது, ஜெத்தாதீசனின் மாமனும் தளபதியுமான ஸ்ரீநாகன் என்பான், இந்தியாவிற்கு ஓடிச்சென்று, தமிழர் படை ஒன்றினைத் திரட்டிக் கொண்டு, வடக்கே உத்தரதேசத்தில் பாசறை அமைத்தான். இதனை அறிந்த சீலமேகவர்ணன் பெரும் சேனையுடன் சென்று ராஜமித்தி என்ற இடத்தில் போரிட்டு ஸ்ரீநாகனையும் அவனது நெருங்கியவர்களையும் கொன்று யுத்த களத்தில் கொல்லப்படாத எஞ்சிய தமிழர்களைச் சிறைப்பிடித்து வந்தான். மிகவும் கொடூரமாக அவர்களைச் சித்திரவதை செய்தபின்னர், அவர்களை விகாரைகளுக்குச் சேவைசெய்ய அடிமைகளாக அனுப்பி வைத்தான்.

அபயகிரி விகாரையில் ஒழுக்கமின்றிப் பல பிக்குகள் செயற்படுவதைக் கண்ட, போதி என்ற இளம் தேரர் மன்னனிடம் வந்து முறையிட்டார். அவ்வாறானவர்களை நீக்கி விடுகின்ற அதிகாரத்தை மன்னன் போதிதேரருக்கு வழங்கினான். அதன் பயனாக பல பிக்குகள் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஒன்று கூடி, போதிதேரரை இரகசியமாகக் கொலை செய்து சடலத்தை மறைத்துவிட்டனர். இதனை அறிந்த சீலமேகவண்ணன், கோபமுற்று அப்பிக்குகள் அனைவரதும் கரங்களைத் துண்டிக்கக் கட்டளை பிறப்பித்தான். அத்தோடு அவர்களை நீராடும் குளங்களின் காவலர்களாக



பராக்கிரம சமுத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்தான். இவர்களைவிட வேறு நூற்றளவிலான பிக்குகள் தம்மைக் காத்துக் கொள்ள இந்தியாவிற்குத் தப்பியோடினர். அதன்பின்னர் மன்னனின் அழைப்பினை ஏற்று சமய விழாக்களில் கலந்து கொள்ளப் பிக்குகள் மறுப்புத் தெரிவித்தனர். திடீரென ஏற்பட்ட நோய் காரணமாக, தனது ஆட்சியின் ஒன்பதாவது வருடத்தில் சீலமேகவண்ணன் மரணமடைந்தான்.

## 3 வது அக்கபோதி

அவனின் மரணத்தின் பின்னர் அவனது மகனாகிய அக்கபோதி (III) (633-643), ஸ்ரீசங்கபோதி என்ற சிம்மாசனப் பெயரோடு அரசனானான். அவன் தனது இளைய சகோதரனான மானா என்பானை உபராஜாவாக்கி தக்கிணதேசத்தின் தலைவனாக்கினான். மலைய நாட்டிலிருந்த ஜெத்தாதீசன், மக்களின் ஒரு பகுதியினரைத் தமது பக்கமாக்கி, இலங்கையின் தென் பிராந்தியத்தையும் கிழக்குப்பிராந்தியத்தையும் தனது ஆதிக்கத்தினுள் கொண்டு வந்தான். பின்னர், தலைநகரை நோக்கித் தனது படையுடன் முன்னேறினான். அதற்கு முதல் தனது அமைச்சனான தத்தாசிவன் என்பானை இலங்கையின் மேற்குப்பகுதியை ஆக்கிரமிக்குமாறு அனுப்பினான். ஜெத்தாதீசன், ஸ்ரீபித்திக்கிராமத்தில் பாசறை அமைத்திருந்தபோது, அதனைக் கேள்வியுற்ற அக்கபோதி மன்னன், யுவராஜாவான மானாவை மேற்குப் பிராந்தியப் படையை முறியடிக்குமாறு அனுப்பினான். மானா, தத்தாசிவனுடன் போரிட்டான். ஆனால், தோல்வியே கிட்டியது அதனால் அக்கபோதி தனது படையுடன் ஜெத்தாதீசனுடன் போரிட்டு, தோல்வியுற்று, இந்தியாவுக்குத் தப்பி ஓடினான். ஜெத்தாதீசனும் தத்தாசிவனும் அனுராதபுரத்தைக் கைப்பற்றினர்.

## ஜெத்தாதீசன்

ஜெத்தாதீசன் அனுராதபுரத்தின் மணிமுடியைத்தரித்துக் கொண்டான். வழமைபோல விகாரைகளுக்கு தானம் வழங்கி பணிவாக நடந்தான். கிராமங்களை விகாரைகளுக்குத் தானமாக அளித்தான். இந்தியாவிற்குத் தப்பியோடிய ஸ்ரீசங்கபோதி, அங்கு கரந்துறைந்த உறவினரையும் வேறு படையினரையும் சேர்த்துக் கொண்டு மீண்டு வந்தான். இதனை அறிந்த ஜெத்தாதீசன், காலவாவியில் சேனையைச் சந்தித்துத் தோல்வியுற வைத்தான். மீண்டும் இந்தியாவிற்குத் தப்பியோடிய ஸ்ரீசங்கபோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகைக்கு அமர்த்திய தமிழ் வீரர்களுடன் இலங்கைக்குத் திரும்பினான். மீண்டும் கால வாவிப் பகுதியில் இரு படைகளும் மோதின. அதில் ஜெத்தாதீசனின் படை தோல்வி கண்டது. தத்தாசிவன் நிலைமையைப் புரிந்துகொண்டு, இந்தியாவிற்குத் தப்பி ஓடினான். பல தமிழ் வீரர்களை ஜெத்தாதீசன் வெட்டிக் கொன்ற போதிலும், வேலப்பா என்ற தமிழர் படைத்தளபதி தன்னை நெருங்கி வருவதைக் கண்டான். உடனே வெற்றிலைப்பெட்டிக்குள் இருந்த தனது கத்தியால் தன் தொண்டையை அறுத்துத் தற்கொலை செய்து கொண்டான். அச்செய்தியைக் காவி வந்த தூதுவனிடம், "மன்னன் எவ்வாறு இறந்தான்? எனக்காட்டுக" என மாகராணி வினவ, தூதுவன் அவள் முன் அமர்ந்து, மண்டியிட்டு, தன் கத்தியால் "இவ்வாறே' எனத்தன் கழுத்தை அறுத்து இறந்து வீழ்ந்தான். ராணியும் இருதயம் உடைந்து மரணமானாள். ஜெத்ததீசனின் ஆட்சி ஆக ஐந்து மாதங்களே நிலவியது.

ஸ்ரீசங்கபோதி (அக்கபோதி) மீண்டும் அனுராதபுரத்தின் அரியணை ஏறினான். அவனது மகனும், யுவராஜனுமாகிய மானா, அரசனின் மனைவியருடன் குற்றம் செய்தமைக்காக அவனைக் கொல்வித்தான். அதன் பின் தனது இளைய சகோதரரான காசியப்பன் என்பானை உபராஜா வாக்கினான். இந்தியாவில் கரந்துறைந்த தத்தாசிவன், தமிழ் வீரர்களைத் திரட்டிக் கொண்டு இலங்கைக்கு வந்து, ஸ்ரீசங்கபோதியை வெற்றி கொண்டான். ஸ்ரீ சங்கபோதி அனைத்துச் செல்வங்களையும் இழந்து அரச சின்னமான கழுத்து மாலையுடன் இந்தியாவுக்கு ஓடித் தப்பினான். அதன் பின்னர் தத்தாசிவன் அனுராதபுரத்தின் மன்னனாக முடிதரித்துக் கொண்டான். சிம்மாசனப் பெயராக தத்தோபதீசன் என நாமம் பூண்டான்.

## தத்தோபதீசன்

தத்தோபதீசனின் ஆட்சி பௌத்தமத மக்களின் கண்டத்திற்குரிய தாகியது. நாடு உள்நாட்டுப் போர்களினால் பஞ்சம் பசிக்குள்ளாகியது. தத்தோபதீசனுக்கு இந்திய மன்னர்கள் ஆக்கிய பணிகளை இவன் தலைகீழாக்கினான். மூன்று பெரும் விகாரைகளிலும், தாதுகோபங்களிலும் உள்ள அனைத்துத் திரவியங்களையும் தனதாக்கிக் கொண்டான். தங்கச் சிலைகளை உருக்கித்தனது தேவைக்குரியதாக்கினான். சேத்தியங் களுக்கு வழங்கிய ஆபரணங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தான். தூபராமதூபிக்கு இடப்பட்டிருந்த பொன்கூரையைக் கவர்ந்து உருக்கித் தனதாக்கினான். பெருந்தூபியிலிருந்த (ருவான் வெலிசாய) விலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பற்ற இரத்தினங்களைக் கவர்ந்து கொண்டான் நாட்டிலிருந்த நெல்லைக் கப்பல்களின் ஏற்றி தமிழ் வீரர்களுக்குத் தாரை வார்த்தான். தமிழ் வீரர்கள் அரசனின் அரண்மனை, தாது வீடுகள் என்பனவற்றை அழித்தனர்.

எனினும், ஸ்ரீசங்கபோதி (அக்கபோதி) மீண்டும் திரும்பிவந்து, போரிட்டு, அனுராதபுர அரசினைத் தனதாக்கிக் கொண்டான். அவ்வேளை அவனது யுவராஜாவான காசியப்பன் தூபராமசேத்தியத்தினை உடைத்து வீழ்த்தி. அங்கிருந்த செல்வங்களைக் கொள்ளையிட்டான். அவை இலங்கையின் முதல் மன்னன் தேவநம்பியதீசனால் அளிக்கப்பட்டவை. தக்கிண விகாரையை உடைத்து, அங்கிருந்த செல்வங்களையும் காசியப்பன் கொள்ளையடித்துக் கொண்டான். இவ்வாறு பல விகாரைகளை உடைத்துக் கொள்ளையிட்டான். இவனது தவறான செயற்பாடுகளை, மன்னனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. எனினும், தூபராமதூபியை மீண்டும் புதுப்பித்துக் கொடுக்கவே மன்னனால் முடிந்தது.

மீண்டும் ஸ்ரீசங்கபோதி, தத்தோபதீசனால் துரத்தியடிக்கப்பட்டான். ஸ்ரீசங்கபோதி இம்முறை உருகுணைக்குத் தப்பியோடி அங்கு படைதிரட்டலில் ஈடுபட்டான். ஆனால் அங்கு நோய்வாய்ப்பட்டு மரணமடைய நேர்ந்தது. எனினும் யுவராஜாவான காசியப்பன் உருகுணையிலிருந்து



பராக்கிரம சமுத்திரம் - வாய்க்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையுடன் வந்து தத்தோபதீசனை இந்தியாவிற்குத் துரத்திவிட்டான். அதன்பின்னர் தன்னை அரியணைக்குரியவனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். முன்னர் பௌத்த சேத்தியங்களுக்கு ஆற்றிய கொடுமைகளுக்குப் பிராயச்சித்தமாக விகாரைகளுக்கு பல்வேறு தானங்களை வழங்கினான்.

இந்தியாவிலிருந்து இன்னொரு படையுடன் தத்தோபதீசன் இலங்கை வந்து, காசியப்பனோடு பொருதித் தோல்வி கண்டான் இந்த யுத்தத்தில் தத்தோபதீசன் கொல்லப்பட்டான். ஆனால், அவனோடு வந்த அவனது மருமகன் தத்தோபதீசன் (மருமகனுக்கும் மாமனின் பெயரே வழங்கியது) இந்தியாவுக்குத் தப்பிச் சென்றான்.

### காசியப்பன்

போரில் வெற்றிபெற்ற காசியப்பன் சமயப்பணிகளில் முழுமூச்சுடன் செயற்படத் தொடங்கினான். காசியப்பனுக்குப் பல புதல்வர்கள் இருந்தனர். மூத்தவன் மாணகா ஆவான். அவனது புதல்வர்கள் சிறுவர்களாக இருந்தமையால், தனக்குப்பின் இந்த அரசையும், தன் பிள்ளைகளையும் வழிநடத்தத் தகுந்த ஒருவன் தேவை என மன்னன் உணர்ந்து, தன் சகோதரி மகனான மானா என்பவனை உருகுணையிலிருந்து அழைப்பித்தான். ஒன்பது வருட ஆட்சி நிறைவில் காசியப்பன் மரணமடைந்தான்.

### தப்புலன்

மருமகனான மானா, தமிழரின் செல்வாக்குகளைக் குறைக்க முயற்சிகள் எடுத்தான். தமிழர்கள் ஒன்றிணைந்து மானாவை அரசிலிருந்து அகற்றும் நோக்கோடு, இந்தியாவில் கரந்துறைந்திருக்கும் ஹத்தநாடன் என்பானுக்கு ‘இதுவே தக்க தருணம். வருக.’ என்ற செய்தியை அனுப்பி வைத்தனர். அதேவேளை மானா, தனது தந்தையான தப்புலன் என்பானை உருகுணையிலிருந்து உடனடியாக அனுராதபுரத்திற்குத் தருவித்தான். தனது தந்தை தப்புலனை முடிசூட்டி அரசனாக்கி விட்டு, மானா தமிழரை விரட்டும் பணியிலீடுபட்டான். ஹத்ததாடன் உடனடியாகத் தமிழ் வீரர்களைத் திரட்டிக் கொண்டு இலங்கைக்கு படைநடாத்தி வந்தான். இங்கிருந்த தமிழர்களும் அவனுடன் சேர்ந்து கொண்டனர். இவற்றினைச் சீர்தூக்கிய மானா. ‘இது சண்டையிடத்தக்க தருணமல்ல’ எனவுணர்ந்து, விலை மதிப்பான பொருட்களுடன் தன் தந்தை தம்புலனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகுணைக்கு அனுப்பி வைத்தான். தானும் கிழக்கு பிராந்தியத்துக்கு ஓடிச் சென்று கரந்துறைந்தான்.

## ஹத்ததாடன்


ஹத்ததாடன் இலகுவாக போரில் வென்று, அனுராதபுரத்தைக் கைப்பற்றி, தத்தோபதீசன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனாக முடி தரித்தான். (659–667). தனது சிறிய தந்தையின் மகனான அக்கபோதி என்பானை அழைத்து, யுவராஜனாக்கி, தக்கிணதேசத்தைப் பரிபாலனம் செய்ய நியமித்தான். சமயப்பணிகளில் பின்னர் ஈடுபட்டான். விகாரைகளுக்குக் கிராமங்களைத் தானமாக வழங்கினான். காசபகிரி விகாரைக்கு சேனமாகமம், மாகாகல ஆகிய கிராமங்களை வழங்கினான். மோராபிரிவெனாவுக்குக் காசாகமத்தையும், தூபராமசேத்தியத்துக்கு புன்னொளி கிராமத்தையும் தானமாக வழங்கினான். அபயகிரி விகாரையில் கப்புறா பிரிவேனா மண்டபத்தினை அமைத்துக் கொடுத்தான். இந்த விகாரையைக் கட்டிக் கொண்டிருக்கும்போது தேரர் குருகுலத்தினைச் சேர்ந்த பிக்குகள், 'இந்த விகாரை தங்கள் காணிக்குள் அடாத்தாகக் கட்டுப்படுகிறது. நிறுத்துக' என எதிர்ப்புக் காட்டினர். ஆனால் மன்னன் அவற்றினை செவிசாய்க்காது, பலோத்காரமாக அந்த விகாரையைக் கட்டி முடித்தான். கோபமுற்ற அப்பிக்குகள், மன்னனிடம் தானம் வாங்குவதை நிறுத்தினர். தமது பிட்சா பாத்திரத்தை கவிழ்த்துக் காட்டியபடி அவன் மாளிகையைக் கடந்தனர். இந்நிலையில் நோய்வாய்ப்பட்ட மன்னன், தனது ஒன்பதாவது ஆட்சிக் காலத்தில் மரணமெய்தினான்.

## மீண்டும் தப்புலன்

இக்காலத்தில் முன்னைய அரசனான தப்புலன் உருகுணை அரசினைத் தனதாக்கிக் கொண்டான். இவ்விடத்தில் தப்புலனின் பரம்பரை வரலாற்றினை அறிவது அவசியமாகும். இவன் ஒக்காகா இனத்தைச் சார்ந்தவன் மகாதீசன் ஆவான். அவன் உருகுணையின் மன்னன் மகளான சங்கசிவாவை மணந்திருந்தான். அவர்களுக்கு அக்கபோதி. ஒப்புலன், மணி ஐக்கியன் என மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர்களது ஒரே புதல்வி, உருகுணை மன்னனான அக்கபோதியை மணந்திருந்தாள். அக்கபோதி உருகுணையின் மன்னனாக மாறினான். அதிக செல்வங்களைக் கொண்டிருந்தான். மகாமத்தில் மகாபலிதான மண்டபம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டதாகே - பொலநறுவை

கனாகமத்தில் வைத்தியசாலைகள், கலாரகமத்தில் (கதிர்காமம்) இன்னொரு விகாரை என்பனவற்றினை அமைப்பித்தான். அவன் மரணமானதும் அவனது சகோதரன், தம்புலன் உருகுணையின் அரசனாகினான். உருகுணையில் நிலவிய உண்ணாட்டுப் பகைமையை ஒழித்துக் கட்டினான். எதிரிகளை அழித்தான். அதனால் மக்கள் அவனைப் பெருந்தலைவன் எனக் கொண்டாடினர்.

சீலநாகன் என்ற தலைவன் இவற்றினைக் கேள்விப்பட்டு, தனது மகளை தப்புலனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அவர்களின் மகனே மானவர்மன் என்ற மானா ஆவான். கிழக்குப் பிராந்தியத்தில கரந்துறைந்த இவன் படை திரட்டி அனுராதபுரத்திப் மீது தண்டெடுத்தான். இந்த யுத்தத்தில் தத்தோபதீசனால் மானாவும் அவனது படையணியினரும் கொல்லப்பட்டனர். தன் மகன் இறந்ததைக் கேள்வியுற்ற தப்புலன் மனமுடைந்து மரணமானான். தப்புலன், அனுராதபுரத்தில் ஏழு நாட்களும், உருகுணையில் மூன்றாண்டுகளும் ஆட்சி செய்துள்ளான்.

## ஸ்ரீ சங்கபோதி


தத்தோபதீசனின் மரணத்திற்குப்பிறகு, அவனது இளைய சகோதரனான அக்கபோதி என்பான் ஸ்ரீசங்கபோதி (667 – 683) என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமத்துடன் முடிதரித்துக் கொண்டான். சமயப்பணிகள் பலவற்றினை ஆற்றினான். பிக்குகளுக்கான விருந்தோம்பு மண்டபமான மாகபலி மண்டபத்தினைப் பெரிதாகக் கட்டுவித்தான். பிக்குகளுக்கு உரிய கௌரவம் அளித்து வந்தான். ஒரு தடவை நாகசாலையைச் சேர்ந்த ததாசிவா என்ற தேரர் வந்தார். அவரது அறிவையும் ஞானச் செறிவையும் உணர்ந்த மன்னன் அவரிடம் பௌத்த போதனைகளைப் பெற்றான். மகாவிகாரையைச் சேர்ந்த தேரர்களின் குருகுலத்திற்குத் தன் முன்னோர்களால் இழைக்கப்பட்ட தீங்குகளை நிவர்த்தி செய்வான் பொருட்டு, அங்கு சிதைந்திருந்த கட்டிடக் கலைகளைச் செம்மைப்படுத்திக் கொடுத்தான். ததாசிவா தேரருக்காக அவர் வசிப்பதற்கு ஒரு வீடமைத்துக் கொடுத்தான். அவருக்குப் பல கிராமங்களைத் தானமாகவும் வழங்கினான்.


அக்கபோதி ஸ்ரீசங்கரதபோதியின் ஆட்சியில் தமிழரின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. படைத்தலைவனும் இரு அமைச்சர்களும் தமிழர்களாக விளங்கினர். மன்னனின் பிரதான அமைச்சனாக பொத்தகுட்டன் என்பான் விளங்கினான். அவன் பெருஞ்செல்வந்தனாக இருந்தான். மத்தம்பியா என்ற அற்புதமான தியான மண்டபத்தினை



வட்டதாகேயின் ஒரு முகப்புத்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை - பப்புலு விகாரை

நிர்மாணித்து கிராமங்களுக்கு வழங்கினான். அத்தோடு கப்புறா. பரிவேனா, குருந்தபில்லகா முதலான கிராமங்களில் கட்டிடங்கள் அமைத்து விகாரைகளுக்கு வழங்கினான்.

ஸ்ரீசங்கபோதியின் சேனைத்தலைவனாக விளங்கிய பொத்தசதா என்ற தமிழன், ஜேத்தவன விகாரைக்கு ஒரு பிரிவேனா கட்டிக் கொடுத்தான். மகாகந்தன் என்ற தமிழ் அமைச்சன், தனது பெயரில் ஒரு பிரிவேனா கட்டிக் கொடுத்தான். யுவராஜாவான சங்கதீசன் என்பான், சேகல உபராஜா பிரிவேனாவைக்கட்டி வழங்கியுள்ளான். மன்னனின் அடியொற்றி இவ்வாறு சேனாதிபதி, அமைச்சர்கள், யுவராஜா என்போர் விகாரைகளையும் பிரிவேனாக்களையும் அமைத்து வழங்கியுள்ளனர்.

மன்னனின் மனைவியான ஜேத்தாதேவி, ஜேத்தாராமா என்ற கட்டிடத்தை அமைத்துப் பிக்குனிகள் தங்க வழங்கினாள். மன்னனின் பிரதிநிதியாகவிருந்த மலையராஜா என்பான் மண்டல விகாரை சேத்தியத்தில் புனித தாதுகோயில் ஒன்றினைக் கட்டிக் கொடுத்தான். லோகபாசாடா கட்டிடத்திற்குப் புதிதாகக் கூரையமைத்து வழங்கினான். போதிதீசன் என்பான், போதிதீச விகாரையை அமைத்துக் கொடுத்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசங்கபோதியின் புலத்தி நகரத்தை (பொலநறுவை) அரச உறைவிடமாகச் சிலகாலம் வைத்திருந்தான், அங்கு தனது பிற்காலத்தைத் தியானத்தில் கழித்தான். அவன் அங்கு இறந்ததும், இறுதிக்கிரியைகள் ஒழுங்கு முறையாக நடந்தது. அவனது சடலச்சாம்பலை மக்கள் பலர் சேகரித்து, மருந்தாகப் பேணினர். புலத்தி நகரிலிருந்த செல்வங்களும், சேனையும் அனுராதபுரத் தலைநகருக்குத் திரும்பின. பதினாறு வருடங்கள் இம்மன்னனின் ஆட்சி நிலவியது.

## பொத்தகுட்டன்

ஸ்ரீசங்கபோதியின் பிரதம அமைச்சனாக விளங்கிய பொத்தகுட்டன் என்ற தமிழ் அதிகாரி, ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். யுவராஜாவாக விளங்கிய ததாசிவனைச் சிறைப்படுத்தி சிறையில் பலத்த காவலுடன் வைத்தான். நாட்டில் முறையான அரசன் ஒருவனின்மையால் ஏற்பட்ட கலவர நிலையைச் சீர்செய்வதற்காக பொத்தகுட்டன், தத்தன் என்ற அரசகுலத்தைச் சேர்ந்த ஒருவனைப் பொம்மை ராஜாவாக்கி, ஆட்சியதிகாரத்தைத் தானே வைத்திருந்தான். தத்தன் தனது பெயரில் ஒரு விகாரை அமைப்பித்தான். இரண்டாண்டுகளின் பின்னர் தத்தன் மரணமானான். அதன் பின் பொத்தகுட்டன், ஹத்ததாடன் என்பானை அரசனாக்கினான். ஆறுமாத ஆட்சியுடன் மரணமடைந்தான்.



பொலநறுவை - மெனிக்விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 4
## மானவர்மன்

**ஹ**த்ததாடன் (ii) மரணமடைந்ததும் மானவர்மன் ஆட்சி பீடமேறினான். யார் இந்த மானவர்மன்? அவன் அரச குலமென்ன?


தூபராமசமாதி சேத்தியத்தினைக் கொள்ளையிட்ட முன்னைய காசியப்பன் (ii) என்ற மன்னனின் மகனே மானவர்மன் ஆவான். மானவர்மன் மயைராஜாவின் மகளான சங்கமான தேவியைக் கரம்பற்றியிருந்தான். அவளை மணந்ததும் இலங்கையின் வடபகுதியான உத்தரதேசத்தில் கரந்துறைந்தான். அச்செய்தி அனுராதபுர மன்னன் ஹத்ததாடனுக்குத் தெரிய வந்ததும், இந்தியாவிற்குத் தப்பிஓடி, (பல்லவ மன்னனான) நரசிம்மனிடம் போர்ச்சேவையில் சேர்ந்து கொண்டான். அவனையும் அவன் மனைவியையும் வரவேற்ற நரசிம்மன், தன் படைப்பிரிவொன்றின் தளபதியாக மானவர்மனை நியமித்தான். கந்தவேதி என்ற பிறிதொரு சிற்றரசனின் துணையும் மானவர்மனுக்குக் கிடைத்தது. இக்காலவேளையில் அவனுக்கும் அவனது மனைவி சங்காவுக்கும் நான்கு புதல்வர்களும் நான்கு புதல்விகளும் கிடைத்தனர்.

நரசிம்மபல்லவனுக்கும் மானவர்மனுக்கும் இடையில் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. ஒரு நாள் இருவரும் யானையில் உலா வந்தபோது, இளநீர் ஒன்றினை யானையிலிருந்த வாறே பருகும் நிலை ஏற்பட்டது. இளநீரில் ஒரு பகுதியை அருந்திய நரசிம்மன், மிகுதியை மானவர்மனிடம் நீட்டினான். தான் முதலில் பருகியதை அருந்துகிறானா எனத் தன்னை நரசிம்மன் பரீட்சிக்கிறான் என்பதை உணர்ந்த மானவர்மன், அதனை வாங்கி அருந்தினான். உடன் நரசிம்மன், அவனிடமிருந்து பறித்து மிகுதியைத் தான் பருகினான். இருவரது நட்பு இவ்வாறு தராதரம் பார்க்காது இருந்தது. அதன் பின்னர் நரசிம்மன், உணவு, உடை, வதிவிடம், சகலத்திலும் தனக்குச் சமனதையாகவே மானவர்மனை நடாத்தினான்.

இவ்வாறிருக்கையில் வல்லபன் என்பான் நரசிம்மபல்லவனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். 'தன்னிடம் போர் உதவிகேட்டு ஈழத்திலிருந்து வந்திருக்கும் மானவர்மனை, இந்த யுத்தத்திலீடுபடுத்தி, அவனை இழக்க நேரிடில், அவன் இங்கு வந்த நோக்கமே வீணாகிவிடும்' என எண்ணிய நரசிம்மன், மானவர்மனை அரண்மனையிலிருக்க வைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹட்டதாகே - பொலநறுவை

போருக்குப் புறப்பட்டான். 'நரசிம்மனுடனான எனது நட்பு, ஆபத்துக் காலத்தில் உதவாவிடில் பலனில்லை. இந்த யுத்தத்தில் நரசிம்மன் உயிரிழக்க நேரில், நான் இங்கு வந்ததன் நோககம் நிறைவேற்றப்போவதில்லை. வாழ்வோ, சாவோ என் நண்பனுக்காக அமையட்டும்' என எண்ணிய மானவர்மன். எஞ்சிய படையோடு யுத்தகளம் சென்றான். நரசிம்மனும். மானவர்மனும் சேர்ந்து வல்லபனின் சேனா சமுத்திரத்தைத் துவம்சம் செய்து வெற்றி வாகை சூடினர். 'உம்மாலேயே நான் வென்றேன்' என மானவர்மனை நன்றியுடன் பார்த்தான் நரசிம்மன்.

யுத்த வெற்றியின் பரிசாகப் பெரும் சைனியம் ஒன்றினை நரசிம்மன், மானவர்மனுக்கு வழங்கினான். 'தன்னுடைய அன்பையும் விசுவாசத்தையும் எனக்குக் காட்டிய என் நண்பனுக்கு இன்னமும் நான் கடனாளியாக இருக்கக் கூடாது' என எண்ணிய நரசிம்மன், மானவர்மனைப் பெரும்படையுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். "மானவர்மனை அனுராதபுர அரியாசனத்தில் அமர்த்துக' எனத் தன் சேனா வீரர்களுக்குக் கட்டளையிட்டான். நரசிம்மன் தான் விரும்பிய தன் சொந்த மகனை இழப்பதுபோல, மானவர்மனை வழியனுப்பி வைத்தான். படைவீரர்களோடு கடலைக்கடந்து கப்பல்கள் மூலம் இலங்கையின் கரையை மானவர்மன் அடைந்தான். இதனைக் கேள்வியுற்ற தத்தோபதீசன், நம்பிக்கையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹட்டதாகே - புத்தர்

வீரர்களோடு தலைநகரை விட்டுத் தலைமறைவாகினான். தலைநகருக்குள் பிரவேசித்த மானவர்மன் நகரைத்தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பின்னர், முடிதரிப்பதற்கு முன்னர், தப்பியோடிய தத்தோபதீசனைச் சிறைப்பிடிக்கும் நோக்கோடு தன் வீரர்களை நடாத்தினான். அவ்வேளை நரசிம்மபல்லவன் கடும் சுகயீனமுற்றிருப்பதாக வதந்தி பரவியதால், தமிழர் படையில் ஒரு பகுதியினர் இந்தியா திரும்ப நேர்ந்தது. இதனைப் பயன்படுத்திய தத்தோபதீசன், பெரும் சைனியத்துடன் மானவர்மன் மீது படையெடுத்தான். இந்த தருணத்தில் அவனை எதிர்ப்பதால் பயனில்லை எனக் கண்ட மானவர்மன் மீண்டும் இந்தியாவிற்குத் தப்பி ஓடி, நரசிம்மனிடம் அடைக்கலம் புகுந்தான். அவன் அடைக்கலம் புகுந்த பின்னர், இலங்கை ஆட்சியில் நான்கு மன்னர்கள் மாறியிருந்தனர்.

நரசிம்மன் யோசித்தான். 'எனது நண்பன் பல வருடங்களை எனது சேவையில் கழித்து விட்டான். இனியும் அவனது இராச்சியத்தைப் பெற்றுக் கொடுக்காதிருப்பது நியாயமாகாது. அவனுக்கும் வயதாகி வருகின்றது'. என்று எண்ணிய நரசிம்மன், மீண்டும் ஒரு படையுடன் மானவர்மனை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். நரசிம்மனும் இப் படைகளுடன் வருவது போன்றதொரு மயக்கத்தைத் தமிழ் வீரர்களிடையே ஏற்படுத்தியிருந்தான். கப்பற்படைக்குத் தலைமையேற்று முன்சென்ற காலத்தில், அரசமுரசை அடிக்கடி முழங்கச் செய்ததன் மூலம், தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கப்பலில் பயணிப்பதாகத் தனது வீரர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தினான். படைவீரர்கள், மாதோட்டத்தில் கரையிறங்கினர். உடனடியாக வடபகுதியைத் தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்தனர். சில நாள் அவ்விடத்தில் இளைப்பாறிய பின்னர், அனுராதபுரத்தை நோக்கி படை நடந்தது. பொத்தகுட்டன் (தமிழ் அமைச்சர்), மன்னன் ஹத்தாடன் ஆகிய இருவரினதும் சேனைகளுடன் போரிட்ட மானவர்மன், அவர்களின் சேனாவீரர்களை வதம் செய்தான். தப்பியோடிய ஹத்ததாடனை நாட்டு மக்கள் சிலர் பிடித்து, அவனது தலையைக் கொய்து, மானவர்மனிடம் வழங்கினர். தப்பியோடிய பொத்தகுட்டன் மேருகந்தாரம் மலைப்பகுதியில் அடைக்கலம் புகுந்தான். மேருகந்தார மலைப்பகுதியின் தலைவன், 'எனது நீண்டகால நண்பனான பொத்தகுட்டனுக்கு அடைக்கலம் அளிக்காது எவ்வாறு என்னால் விடமுடியும்? அதேவேளை என் மன்னனுக்கு எவ்வாறு நான் துரோகம் செய்ய முடியும்?' என பிரச்சினை வசப்பட்டு நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டான். தனக்காக மேருகந்தாரத் தலைவன் இறந்தான் எனக் கேள்விப்பட்ட பொத்தகுத்தன் கழிவிரக்கமடைந்து தானும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டான். இந்நிலையில் மானவர்மன், அனுராதபுரத்தின் மணி முடியைத் தரித்துக் கொண்டான்.



ஹட்டதாகே வாயிலிலுள்ள கல் கும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல விகாரைகளையும், நீர்ப்பாசனக் குளங்களையும் அமைப்பித்தான், முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

### மூன்று மன்னர்கள்

மானவர்மனுக்குப்பின்னர் அவனுடைய புதல்வர்களான அக்கபோதி (V) காசியப்பன் (iii) மகிந்தன் (ii) ஆகியோர் ஆட்சிபுரிந்தனர் என அறியப்படுகிறது. மானவர்மனின் பின் அவனது மூத்த மகளான அக்கபோதி அரசனானான். அவன் பௌத்தசமயத் தொண்டுகள் பலவற்றினைச் செய்தான். ஆறுவருட ஆட்சியின் பின் அவன் மரணமடைந்தான். அதன் பின்னர் அவனது சகோதரனான காசியப்பன், அரச கட்டிலேறினான். பிக்குகளையும், பிராமணர்களையும் தக்கவாறு மரியாதை செலுத்திப் பராமரித்தான். காசியப்பனுக்குப் பிறகு ஆட்சிபீடமேறியவன் மகிந்தன் (777-797) ஆவான்.

மகிந்தனுக்கு, நீலன் என்றொரு இணைபிரியாத நண்பன் இருந்தான். முடிபுனைவு நாளன்று அவன் மரணமடைந்தமையால், மகிந்தன் மணிமுடி தரிக்காது விட்டான். தன்னை ஆட்சியின் மேற்பார்வையாளன் "ஆதிபாதா" என அழைத்து முடிபுனையாது அரசியற்றினான். தனது மூத்த சகோதரன் காசியப்பனின் மகனான அக்கபோதியை அழைத்து அவனை யுவராஜாவாக நியமித்தான். பட்சின தேசத்தை (கிழக்குப்பிராந்தியம்) நிர்வகிக்குமாறு அவனை அனுப்பி வைத்தான். தக்கிணதேசத்தைத் தனது சொந்த மகனின் (அவனது பெயரும் அக்கபோதி) பொறுப்பில் நிர்வகிக்க வைத்தான்.

மகாவலி விருந்தினர் விடுதிக்கு (பிக்குகள் உணவு சாலை) ஒவ்வொரு நாளும் பத்து வண்டிகள் உணவு அனுப்பி வைத்தான். பிக்குனிகளுக்காக ஒரு விடுதி, தன் பெயரில் அமைத்துக் கொடுத்தான். மூன்றாண்டுகள் ஆட்சியின் பின்னர் மரணமடைந்தான்.

### சீலமேகன்


மகிந்தன் மரணமானபோது, தக்கண தேசத்தின் ஆட்சியாளனான, மகிந்தனின் சொந்த மகன் அக்கபோதி அருகில் இருந்தான். அதனால் அவன் உடனடியாக அனுரதபுரத்தில் ஆட்சிப் பொறுப்பினைத் தனதாக்கிக் கொண்டான். எனினும், பட்சின தேசத்தின் ஆளுனரான அக்கபோதிக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் அனுப்பி, உடன் வந்து யுவராஜாவாக அவனே ஆட்சிப்பொறுப்பை ஏற்க வேண்டுமென செய்தி அனுப்பிவைத்தான். அவனும் அவ்வாறே வந்து சீலமேகன் (அக்கபோதி VI) என்ற சிம்மாசனப் பெயரோடு முடிதரித்துக் கொண்டான். மகிந்தனின் மகனான அக்கபோதியை யுவராஜாவாகப்பட்டம் கட்டி அமர்த்தினான். 'நான் அரசநிர்வாகத்தைக் கவனிக்கிறேன். நீங்கள் அரச பதவியின் இனிமைகளை அனுபவியுங்கள்' என அக்கபோதி இரண்டு கருத்துப்பட, சீலமேகனுக்குக் கூறினான். எனினும் இருவரும் வெகுகாலம் ஒற்றுமையாக இருந்தனர். அவர்களின் ஒற்றுமையைக் கலைக்க சில துஷ்டர்கள் சமயம் பார்த்திருந்தனர். அதற்கான திட்டம் ஒன்றினையும் வகுத்தனர். சீலமேகமன்னனிடம் சென்று, "நீங்கள் பெயருக்குத் தான் அரசனாக இருக்கிறீர்கள். ஆனால், உபராஜா அக்கபோதியே மன்னனாகவுள்ளான். மக்களுடைய அன்பையும் ஆதரவையும் அவனே பெற்றுள்ளான். வெகுவிரைவில் உங்களிடமிருந்து ஆட்சியைப் பறித்துக் கெள்வான்" என்றோதினர்,

சீலமேகன் அவற்றை நம்பினான். இதனை அறிந்த யுவராஜா அக்கபோதி, உடனே தனது ஆளுமைக்குட்பட்ட தக்கிணதேசத்திற்கு ஓடிச்சென்றதுடன், மன்னனுக்கு எதிராகப் புரட்சிக்காரனாகவும் மாறினான். அங்கு படை திரட்டிக்கொண்டு மன்னனுக்கு எதிராக தண்டெடுத்தான்.




ஹட்டதாகே - பொலநறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனிவத்தை என்றவிடத்தில் இரு சைன்யங்களும் மோதிக்கொண்டன. யுத்தத்தில் அதிகம் சேதமடைந்த யுவராஜா அக்கபோதி, மலையதேசத்திற்குத தப்பிச் சென்றான்.

சீலமேகன், அதன்பின்னர் தனது மருமகனுக்காக மிகுந்த கவலையடைந்தான். 'அக்கபோதியும் தானும் எவ்வளவு அன்பாகவும் பாசத்தோடும் இருந்தோம். இப்படியாகிவிட்டதே. அக்கபோதி விரும்பியிருந்தால் ஆரம்பத்திலேயே ஆட்சியை ஏற்றிருக்க முடியும். தன்னை அழைத்து ஒப்படைத்திருக்கத் தேவையில்லை' என கழிவிரக்கப்பட்டான். இவ்வாறே அக்கபோதியும் மனம் வருந்தினான். ஒரு நாள் சீலமேகன் மலையதேசத்திற்குச் சென்று, அக்கபோதியை அழைத்துக் கொண்டு அனுராதபுரத்திற்கு மீண்டான். அத்தோடு தனது மகள் கங்கா என்பாளை அவனுக்கு மணம் முடித்து வைத்தான். இருவரும் வெகு அந்நியோன்யமாக வாழ்ந்தநாளில், ஒரு நாள் அக்கபோதி ஏதோ ஒரு காரணமாகக் கோபமுற்று தன் மனைவி கங்காவைக் கன்னத்தில் அடித்து விட்டான். அவள் தந்தை முன் சென்று கண்ணீர்விட்டு விம்மினாள். 'என் கணவன் என்னைக் கொல்லப்பார்க்கிறார்" என்றாள். மன்னன். "அவ்வாறாயின் நீ அவனை விட்டு, பிக்குனிகள் மடத்திற்குச் சென்று பிக்குனியாகுக' என அவளை அங்கு சேர்த்துவிட்டான்.



திசங்க மன்னன் சபா மண்டப வாசல் கடவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில், கங்கா மீது ஏற்கனவே காதல் கொண்டிருந்த அவளது மாமன் மகன், அவன் பெயரும் அக்கபோதி, 'இதுவே தக்க தருணம், கங்காவைக் கவர்ந்து செல்வதற்கு" என எண்ணினான். அவ்வாறே அவளைக் கடத்திச் சென்றான். உடனே சீலமேகன், யுவராஜா அக்கபோதியுடன் உருகுணைக்கு சென்றான். கடத்திய அக்கபோதியை தண்டித்தல் நோக்கமாகவிருந்தது. ஆனால் யுவராஜா அக்கபோதி, தனக்குத் துரோகமிழைத்த அக்கபோதியை தண்டிக்க விரும்பினான். அதனால், உருகுணையை விட்டு விட்டு, தனது மனைவியைக் கடத்திச் சென்றவனைத் தேடி, மேற்குப்புற மலைப்பிராந்தியத்திற்குள் புகுந்தான். தனது படையுடன் தேடி அவனைப் பழி வாங்கிய பின்னர், தனது மனைவியுடன் மீண்டான். அதன் பின்னர் மன்னன், யுவராஜா, கங்கா மூவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.


காவற்சிலை

சீலமேகன், பல விகாரைகளைப் புனருத்தாரணம் செய்வித்தான். தானங்களாகக் கிராமங்களை விகாரைகளுக்கு வழங்கினான். நாற்பதாவது ஆட்சியாண்டில் மரணமடைந்தான். அதன் பின்னர் யுவராஜா அக்கபோதி அனுராபுரத்தின் மன்னனாக முடிசூடிக் கொண்டான். தனது மகன் மகிந்தனை யுவராஜா ஆக்கினான். போதிமரப் பழைய கட்டிடத்தைத் திருத்துவித்தான். கலந்தா, மல்லவத்திகா ஆகிய மண்டபங்களை அமைப்பித்தான். புலந்திநகருக்குச் சென்று அடிக்கடி அங்கு தங்கி வருவது வழக்கம். அக்கால வேளையில் யுவராஜாவான மகிந்தன் மரணமடைந்தான். ஆட்சிக்காலத்தில் ஆறாமாண்டு அக்கபோதிமன்னனும் புலந்திநகரில் மரணமடைந்தான். அரசுரிமைக்கு ஒருவருமற்ற தேசமாக இலங்கை மாறியது.


## மகிந்தன்

ஆனால், முன்னைய மன்னன் சீலமேகனுக்கு மகிந்தன் என்றொரு மகன் இருந்தான். அவனது சாதகத்தைக் கணித்த சோதிடர்கள் அவன் ஒரு இராச்சியத்தின் முடி மன்னனாக வருவான் என அறிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்த விடயத்தைச் சீலமேகன் வெகு இரகசியமாகப் பேணினான். அவனுக்கு வயது வந்ததும் அவனை தனது படைத்தளபதியாக நியமித்திருந்தான். அவனுடைய தந்தை சீலமேகன் இறந்ததும், ஆட்சிக்கு உரிமைக்கு கோர அவன் விரும்பவில்லை. யுவராஜா அக்கபோதியையே அரசனாக வழிவிட்டான். அக்கபோதி மன்னன் வாரிசில்லாமல் புலந்தி நகரில் இறந்த வேளையில் மகிந்தன் மாதோட்டத்துறைமுகத்தில் (மகாதீர்த்தம்) பணிநிமித்தம் தங்கியிருந்தான். மன்னனின் மரணத்தை அறிந்ததும், யாராவது துரோகிகள் ஆட்சியை அபகரித்துக் கொள்ளலாம் என்ற பயத்தில் உடனடியாகத் தலைநகரிற்கு விரைய முடிவு செய்தான். அதேவேளை உத்தரதேசத்தின் (வட பிராந்தியம்) தலைவர்கள் அதனைத் தனதாக்கிக் கொண்டதுடன், இனிமேல் திறைசெலுத்தமாட்டோமெனவும் அறிவித்தனர். உடனே தலைநகரிற்குச் செல்லாது, படையுடன் உத்தரதேசத்திற்குச் சென்று கிளர்ச்சி செய்த தலைவர்களையும், அவர்களது உதவியாளர்களையும் அடக்கியபின், தலைநகருக்கு விரைந்தான். அங்கு மன்னனின் மகாராணியோடு கலந்துபேசி, துக்கத்தில் பங்கு கொண்டான். ஆறுதல்கூறினான். 'மகாராணியாரே. மன்னனின் பிரிவு ஈடு இணையற்ற துயரமாகும். நான் இலங்கைத்தீவின் பாதுகாப்பினைப் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன். நீங்கள் இந்த நாட்டை ஆளுங்கள்'



பொலநறுவை கிரிவிகாரை முன்னுள்ள மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரிவிகாரைத் தடாகம்

என்றான். ராணி மௌனமாக இருந்தாள். எதுவும் பேசவில்லை. ஆனால், மகிந்தனைக் கொன்றொழித்து விடுவதற்கான இரகசியத் திட்டம் ஒன்றினை வகுத்தாள். இந்த இரகசியத் திட்டம் மகிந்தனுக்குத் தெரிய வரவே ராணியையும் அவளது ஆட்களையும் கண்காணிக்குமாறு ஆட்களை நியமித்தான். அதன் பின் அவளைக் கைப்பற்றி, புலந்திநகரிலிருந்து அநுராதபுரத்திற்கு கொண்டு வந்தான். திரவியங்களோடு அரசுரிமையையும் கைப்பற்றிக் கொண்டான்.


சீலமேகனின் ஒரு சகோதரியின் மகனான தப்புலன் என்பான் அதிக செல்வம் நிறைந்தவனாகவும், தனக்கென ஒரு படையையும் கொண்டவனாகவும் இருந்தான். அவன் தனது சேனையோடு, காலவாவிக்கு வந்து, அங்கிருந்து சங்கமம் நோக்கி முன்னேறினான். மகிந்தன் தன் சேனாவீரர்களுடன் தப்புலனின் படையை எதிர்கொண்டான். அப்படையுடன் மகிந்தன், ராணியையும் கூடவே அழைத்து வந்தான். கடும் யுத்தத்தில் தோல்வி கண்ட தப்புலன் மலைய தேசத்திற்குத் தப்பி ஓடினான். மகிந்தனின் வெற்றி உறுதிப்படுத்தப்படுகிறது.

அக்காலவேளையில் உத்தரதேசத்தலைவர்கள் ஒருங்கே கூடி, தலைநகருக்கு வந்து, அதனைத் தம் பொறுப்பில் எடுக்க முயன்றனர். ஆனால் மகிந்தன் உத்தரதேசத் தலைவர்களை அடித்துத் துரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விட்டான். அதன் பின்னர் மலையதேசத்திலிருந்த தப்புலன், மீண்டு படை திரட்டினான். அவன் தனது சகோதரியின் இரு புதல்வர்களையும் உருகுணையிலிருந்து அவர்களது ஆள் அணிகளுடன் வருமாறு அழைப்பித்தான். பெருஞ் சேனையுடன் தப்புலன் கடலென தலைநகரை நோக்கி நகர்ந்தான். அவனது படையை மகிந்தன் நிர்மூலமாக்கினான். தப்புலன் தப்பி உருகுணைக்கு ஓடிச் சென்றான். இதனை அறியாது சற்றுத் தாமதமாக வந்த இரு இளவரசர்களின் படைகளும் மகிந்தனால் நிர்மூலமாக்கப்பட்டதுடன், இரு இளவரசர்களும் கைதாகினர். அத்துடன் பச்சின தேசத்திற்கும் (கிழக்கு மாநிலம்) தக்கின தேசத்திற்கும் (வடக்கு மாநிலம்) தன் படைகளை அனுப்பி அங்கெழுந்த கிளர்ச்சிகளை அடக்குவித்தான். அதன் பின்னர், மகிந்தன் தனது ராணியாக, தான் ஏற்கனவே கைது செய்து காவலில் இருப்பவளுமான, முன்னைய மன்னன் அக்கபோதியின் மனைவியைத் தனது பட்டத்து ராணியாக்கிக் கொணடான். அதன் பின்னர் ராணியானவள், மன்னனுக்குப் பெரும் உதவியாக அமைந்தாள். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். பின்னர் அவன் நாட்டின் யுவராஜாவானான்.



பொலநறுவை அட்டதாகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை குமார பொக்கணை (தடாகம்)

பச்சணதேசத்தில் (கிழக்குப் பிராந்தியம்) இரண்டு ஆதிபாதாக்கள் (ஆட்சித் தலைவர்கள்) இருந்தனர். அவர்கள் அனுராதபுர மன்னனுக்கு எதிராகப் படைதிரட்டினர். படைதிரட்டியபின்னர், உருகுணையிலிருந்த தப்புலனுக்குச் செய்தி அனுப்பினர். அவனது சேனையையும் இணைத்துக் கொண்டு மகாகங்கையின் கரையில் பாசறை அமைத்துக் கொண்டனர். இதனைக் கேள்விப்பட்ட மன்னன், அங்குமிங்குமாக இயங்கிய பிராந்தியத் தலைவர்களை (ஆதிபாதாக்கள்) அரண்மனைக்கு அழைத்தான். அவர்களை தன்னோடு இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொண்டான். மறுத்தவர்களில் சிலர் சிறையிடப்பட்டனர். சிலரின் தலைகள் துண்டிக்கப்பட்டன. அதன் பின்னர் நகரத்தின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டபின்னர். பெரும் சைனியத்துடனும் ராணியுடனும் யுத்த களத்திற்குப் புறப்பட்டு மாகும்மாரை என்றவிடத்தில் பாசறை அமைத்தான். பின்னர் கோவிஜறகமத்தில் பெரும் போர் மூண்டது. அதில் மன்னனின் படை எதிரி படைகளைத் துடைத்தெறிந்தது, தப்புலன் தப்பி ஓட, ஏனைய இரு ஆதிபாதாக்களும் கொல்லப்பட்டனர்.

உருகுணைக்குத் தப்பியோடிய தப்புலன் மீண்டும் படை திரட்டினான். அனுராதபுர மன்னன் இதனைக் கேள்விப்பட்டான். 'இந்த மண்ணில் அமைதி தேவை. பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் எல்லாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து போரில் ஈடுபடக்கூடாது" என எண்ணினான். தூபராம சேத்தியத்தில் அனைத்துப் பிக்குகளும், ஏனைய அறிஞர்களும் கூடி, ஒரு மன்னனின் கடமையை எடுத்துரைத்தனர். மன்னன் தனது நாற்படைகளோடு உருகுணை நோக்கிப் படை நடத்தி உருகுணையின் மாரபர்வதத்தினை அடைந்தான். சமுத்திரம் போன்ற சேனை உருகுணையை முற்றுக்கையிட்டதும், உருகுணை மக்கள், தப்புலனை அரசனிடம் கையளித்தனர். அதன் பின்னர் மன்னன், தப்புலனோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான், தப்புலனிடமிருந்து யானைகள், குதிரைகள், வைரங்கள் என்பனவற்றினைத் திறையாகப் பெற்றுக் கொண்டதுடன் மகா கங்கையை (மகாவலிகங்கை) எல்லையாகக் கொண்டிருந்த உருகுணையின் பரப்பினைச் சுருக்கி கல்காகங்கையை (கல்லோயா) உருகுணையின் வட எல்லையாக்கினான். உருகுணையின் எஞ்சிய பகுதியைத் தனதாக்கிக் கொண்டு தலைநகர் திரும்பினான். தப்புலன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு உடன்படிக்கைக்கு இணங்கிப்போனான்.

அதன் பின்னர் இராச்சியத்தில் அமைதி நிலவியது பௌத்த விகாரைகளைக் கட்டுவித்தும், திருத்தியும், புத்தர்சிலையைத் தங்கத்தில் வார்த்தும் பல பணிகளைச் செய்தான். பிராமணர்களின் இந்துக் கோயில்களைத் திருத்தியதோடு, கடவுட் சிலைகளையும் செதுக்குவித்து ஸ்தாபித்தான். தங்கக் கிண்ணங்களை பிராமணர்களுக்குப் பால் பருக வழங்கினான். அவர்களுக்குப் பசுக்களைத் தானமாக வழங்கினான். பசுக்களை விரும்பாத தமிழருக்குக் குதிரைகளைத் தானாகவே தந்தான்.

மகிந்த மன்னனின் மகனான யுவராஜா மரணமடைந்தான். ஆனால், மகிந்தனுக்கு இன்னொரு புதல்வன் வாரிசாகப்பிறந்திருந்தான். அவன் சிறந்த வீரன், தனக்கெதிராகக் கிளம்பிய அரசுரிமைத் தடைகளை எல்லாம் வென்று, தந்தையின் மதிப்பினைப் பெற்றதோடு, சேனாதிபதியாக பதவியில் அமர்த்தப்பட்டான். இருபது வருட ஆட்சி நிறைவில் மகிந்தன் மரணமடைந்தான்.

**உதயன்**

மன்னன் மகிந்தன் இறந்ததும் உபராஜாவான அவனது மகன் உதயன் அரசுரிமையைப் பெற்றான். எதிரிகளின் எதிர்ப்பை அடக்கியும், நண்பர்களின் உறவைப் பெற்றும் ஆட்சிபுரிந்தான். உதயனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை - தூபராம விகாரை


மகாராணியான சேனவும் அவர்களின் சிறுகுழந்தையும் (மகன்) மன்னனுக்கு நல்லுறவாக விளங்கினர். மூத்தமகனை யுவராஜாவாக நியமித்ததோடு, ஏனைய புதல்வர்கள் ஆதிபாதாக்களாக (ஆளுநர்களாக) வெவ்வேறு பிராந்தியங்களுக்கு நியமித்தான். தனது புதல்வியரை உருகுணையின் மன்னனுக்கும் ஏனைய தலைவர்களுக்கும் திருமணம் செய்வித்தான். இந்நிலையில் எல்லைப்புறப் பிராந்தியங்களில் கிளர்ச்சியாளர்கள் மன்னனுக்கு எதிராகக் கலகங்கள் புரிவதான செய்தி தெரியவந்தது. மக்களின் மனங்களை மன்னனுக்கு எதிராக மாற்றவும் முயற்சிகள் நடந்தன. உதயன் தனது சேனாதிபதியையும், யுவராஜனையும் படைகளோடு அனுப்பி அப்பிராந்தியங்களைக் கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீட்குமாறு அனுப்பிவைத்தான். ஆனால், கெட்டமதியுடைய சிலர் சேனாதிபதியையும், யுவராஜாவையும் மன்னனுக்கெதிராக வசியம் செய்துவிட்டனர். அதனால், இந்த இருவரும் துரோகிகளாக மாறி நாட்டினைத் தம் பொறுப்பிலெடுக்க எண்ணினர். இதனை அறிந்த மன்னன் தன் படையுடன் தூரதிஸ்ஸவாவி வரை சென்று அங்கிருந்த இத்துரோகிகள் இருவரையும் சிறைப்படுத்தி, தலைகளைக் கொய்து தண்டனை வழங்கி, அங்கிருந்த செல்வங்களோடு புலத்தி நகருக்குத் திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை உருகுணையின் சிற்றரசனாக தத்தாசிவன் என்பான் இருந்தான். அவனுடைய மகனான மகிந்தன் தந்தையோடு முரண்பட்டு உதயனிடம் அடைக்கலம் புகுந்தான். மகிந்தனுக்கு அடைக்கலம் அளித்த மன்னன் தனது மகள் தேவியை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததோடு ஒரு சைனியத்தோடு உருகுணைக்கு அனுப்பி வைத்தான். தனது தந்தை தத்தாசிவனை இந்தியாவுக்கு துரத்திவிட்டு மகிந்தன் உருகுணையின் சிம்மாசனத்தைக் கைப்பற்றினான். அதன்பின் உருகுணைக்கும் அனுராதபுர அரசுக்குமிடையில் நல்லுறவு நிலவியது.

சமயப் பணிகளை ஏனைய மன்னர்கள் போன்று உதயமன்னனும் ஆற்றினான். பௌத்த விகாரைகளுக்குப் பல கிராமங்களைத் தானமாக வழங்கியதோடு பல கட்டிடங்களையும் அமைத்துக் கொடுத்தான்.



பொலநறுவை - இலங்காதிலக சிலாமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலத்திநகரிலும் பண்டாவியாக் கிராமத்திலும் இரு மருத்துவ நிலையங்களை ஸ்தாபித்தான். ராணியும் பல சமயக் கட்டிடங்களை அமைத்துக் கொடுத்துள்ளாள். உதயமன்னனின் ஆட்சிக்காலம் ஐந்தாண்டுகள் நிலைத்திருந்தது.


உதயனின் மரணத்தின் பின்னர் அவனது மகனான மகிந்தன் (iii) அரச கட்டிலேறினான். இவன் ஆற்றிய சமயப் பணிக்காக தம்மிக்கசீலமேகன் என அழைக்கப்பட்டான். நான்காண்டு கால ஆட்சியில் அவன் மரணமடைய அவனது சகோதரனான அக்கபோதி (viii) மன்னனாகினான். அவன் தனது தாயாரை மிகவும் பக்குவமாகப் பராமரித்தான். அவளது நலனை ஒவ்வொரு விடயத்திலும் தானே கவனித்து நிறைவேற்றினான். ஒருநாளில் மூன்று தடவைகள் அவளை வணங்கி வந்தான். அவள் அறையை விட்டு வெளியேறும்போது புறமுதுகு காட்டி வெளியேறமாட்டான். சமயப்பணிகளையும் ஆற்றி, பதினொராவது வருடம் மரணமானான். அதன்பின்னர் அவனது இளைய சகோதரனான தப்புலன் (iv) அரச கட்டிலேறினான்.

## தப்புலன்

தப்புலனின் காலத்தில் உருகுணை மன்னனான மகிந்தவுடன் முரண்பட்ட அவனது இரு புதல்வர்கள் நாட்டை விட்டு அகன்று அனுராதபுரம் வந்து மன்னனிடம் அடைக்கலம் புகுந்தனர். மன்னன் தப்புலன், பெரும் படையோடு அந்த இருவரையும் உருகுணைக்கு அனுப்பி வைத்தான். அதனைக் கேள்வியுற்ற உருகுணைத் தலைவன் மகிந்தன் பெரும் சேனையோடு எதிர்கொள்ள பயந்துபோன இரு புதல்வர்களும் ஒரு சேனைத் தலைவனிடம் பொறுப்பினைக் கொடுத்துவிட்டு அனுராதபுரத்திற்கு மீண்டனர். உருகுணை மன்னன் வேறொரு மன்னனுடன் போரிட்ட வேளை இரு மன்னரும் மரணமடைந்தனர். அதன்பின் அனுராதபுர மன்னன் தப்புலன் உருகுணை இளவரசர்களில் மூத்தவனான கித்தக்கபோதி என்பானுக்குத் தன் மகள் தேவியை மணம்முடித்துக் கொடுத்து அடுத்த இளவரசன் தப்புலனை (ஆதே பெயர்) சேனைத் தலைவனாக்கி திரண்ட செல்வங்களுடன் உருகுணைக்கு அனுப்பி வைத்தான். கித்தக்கபோதி உருகுணையின் அரசனாகினான். அவனுக்கும் தேவிக்கும் பல ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் பிறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை - கல்புத்தகம்

அனுராதபுர மன்னனான தப்புலன் பல சமயப் பணிகளை ஆற்றினான். விகாரைகளைத் திருத்துவித்தான். சமயக் கட்டிடங்களை அமைப்பித்தான். அவனுடைய சேனாதிபதியான வைஜ்ஜிரா என்பவனும் கச்சாவல எனும் விகாரையைக் கட்டுவித்தான். பதினாறு வருட ஆட்சி முடிவில் தப்புலன் மரணமடைந்தான்.

## அக்கபோதி

அதன்பின் இராச்சியத்தின் அரசுரிமை தனக்கேயுரியதென தப்புலனின் மகனான அக்கபோதி அறிவித்தான். ஆனால் தப்புலனால் முன்னரேயே அவனது சகோதரன் மகனான மகிந்தன் என்பான் ஒரு பிராந்தியத்தின் ஆதிபாதா (ஆளுநர்) வாக இருந்தான். அவனும் அவனது சகோதரர்களும் இராச்சியம் தமக்குரியதெனத் தம் சேனையுடன் கிளர்ந்தெழுந்தனர். அவர்களை தன் படையுடன் எதிர்கொண்ட அக்கபோதி அவர்தம் படையைச் சிதறடித்து மகிந்தனையும் சகோதரர்களையும் சிறைப்பிடித்து அவர்கள் அனைவரினதும் சிரசுகளைக் கொய்வித்தான். பின்னர் பல சமயப் பணிகள் ஆற்றினான். பிச்சைக்காரர்களை எல்லாம் பறையறிவித்து அழைத்து அவர்களுக்குத் தங்கம் வழங்கி வாழ்க்கை நடாத்த வழிசெய்தான். தனது மூன்றாண்டு ஆட்சியின் பின் மரணடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழடுக்கு தூபி
(சற்மகால் பிரசாத)

## சேனன் (i)

அக்கபோதியினுடைய இளைய சகோதரனான சேனன் (833 – 853) அடுத்து அரியணை ஏறினான். முன்னைய மன்னர்கள் செய்த நற்பணிகளைத் தொடர்ந்து ஆற்றினான். இந்தியாவிற்குத் தப்பி ஓடியிருந்த முன்னைய அரசனின் மருமகனாகிய மகிந்தனால் தனதாட்சிக்கு இடைஞ்சல் வரலாமென அஞ்சி அவனை ஆட்களை அனுப்பிக் கொலை செய்வித்தான். சேனனுக்கு இளைய சகோதரர்களாக மகிந்தன், காசியப்பன், உதயன் என மூவர் இருந்தனர். இவர்களில் மகிந்தனை யுவராஜாவாக்கினான். ஏனையோரைப் பிராந்தியங்களுக்கு ஆதிபாதாக்களாக்கினான்.

அரசனின் பட்டத்து மகஷியாக சங்கா (தேவி) என்பாள் விளங்கினாள். ஒரு தடவை மன்னன் கடல்துறைக்கு (மகாதீர்த்தம்) ஓய்வின் நிமித்தம் சென்றிருந்தபோது அவரது சகோதரனும் ஒரு பிராந்திய ஆளுநனுமாகிய உதயன் அரண்மனைக்குள் புகுந்த அரசனின் பாதுகாப்பிலிருந்த அத்தை மகளான நாலா என்பவளைக் கடத்திக் கொண்டு புலத்திநகர் சென்றான். மன்னன் உடன் திரும்பி வந்து கோபமுற்றானாயினும், பதற்றப்படாது யுவராஜா மகிந்தனை அனுப்பி உதயனையும் நாலாவை மீண்டும் தலைநகருக்கு வரவழைத்துக் கொண்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 5

## ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன்


**இ**வனது ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கையைக் கைப்பற்றும் நோக்கத்துடன் பாண்டிய மன்னன் (ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன்) பெரும் படையுடன் வந்தான். மகாதீர்த்தத்திலிறங்கி உத்தரதேசம் (வடபிராந்தியம்) முழுவதையும் தனதாக்கிக் கொண்டான். அதன் பின்னர் மகாதாலிதகமத்தில் பாசறை அமைத்துக்கொண்டான். தமிழர்கள் பலரும் பாண்டிய மன்னனுடன் இணைந்துகொண்டனர். தமிழ் வீரர்களும் அவ்வாறே இணைந்துகொண்டனர். அதனால் பாண்டியனின் சேனை பலமடைந்தது. பாண்டிய மன்னன் யானை மீது ஆரோகணித்துத் தமிழ்ப்படை தொடர அனுராதபுரத்திற்கு வந்தான். சேனனின் படைகளை வழிநடாத்துவதில் சேனாதிபதிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாட்டினால் பாண்டிய மன்னன் சேனனின் சேனையைச் சிதறடித்தான். சிங்கள சைனியத்தினை



தமிழ்க் கல்வெட்டுத்தூண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா பராக்கிரமபாகு சிலை

இராக்கதர்கள் போல பாண்டிய தமிழ்ப்படை முறியடித்தது. இதனைக் கேள்வியுற்ற அரசன் சேனன் மலையதேசத்திற்குத் தப்பி ஓடினான். அதன்பின் யுவராஜா மகிந்தன் தன் படையுடன் யுத்தகளத்திற்குச் சென்றான். பாண்டியனின் பெரும் படையைக் கண்டதும் சண்டையிட முடியாத நிலைமையைத் தெரிந்து கொண்டான். தன் கத்தியினால் தன் கழுத்தை அறுத்துக்கொண்டு தற்கொலை புரிந்து கொண்டான். அதனைக் கண்ணுற்ற அவனது படையினரில் பலரும் அவ்வாறே தத்தமது கழுத்தை அரிந்துகொண்டு தற்கொலை செய்து மாண்டனர். தமிழ்ச்சேனை வெற்றி முழக்கமிட்டது. இதனைக் கேள்வியுற்ற ஆதிபாதா காசியப்பன் ஆயுதபாணியாகத் தன் அசுவத்திலேறி அபயகிரி விகாரையை நோக்கி தன் சேனையுடன் யுத்தகளம் வந்தான். கழுகின் காலில் அகப்பட்ட சர்ப்பம் போல பாண்டிய சேனையுள் அகப்பட்டுக் கொண்டான்.

அதன்பின் பாண்டிய மன்னன் அனுராதபுரத்தினைக் கைப்பற்றிக் கொண்டான். யுவராஜா மகிந்தனின் தலையைக் காட்டியதும் அவனது உடலையும் சேர்த்து உரிய மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் நடாத்தப் பணித்தான். பாண்டிய சேனை அரண்மனையிலிருந்த அனைத்து செல்வங்களை மட்டுமன்றி, விகாரைகளிலிருந்த செல்வங்களையும் சூறையாடியது. நகைகள், தங்கச் சிலைகள், சிலைகளில் விழிகளாகப் பதித்திருந்த வைரங்கள், தூபராமசேத்தியத்தின் பொன்கூரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை கொள்ளையிட்டு இந்தியாவிற்கு அனுப்பினர். இதனைக் கேள்வியுற்ற சேனன் மனம் வருந்தினான். இரண்டு யானைகளின் அம்பாரிகளில் நிரம்பிய ஆபரணங்களுடன் பாண்டிமன்னனுக்குத் தன் அன்பளிப்பினை அனுப்பி வைத்தான். அதன் அர்த்தத்தை புரிந்துகொண்ட பாண்டிய மன்னன், சேனனை அழைத்து அவனிடம் இராச்சியத்தைக் கையளித்து (திறைதரும் மன்னனாக நியமித்து) இந்தியா திரும்பினான். சேனன் என்ற சீலமேகன் ஆட்சியை மீளப் பொறுப்பேற்றதும் நகரத்தை மீளப் புதுப்பிக்கும் வேலைகளில் முழுமூச்சுடன் செயற்பட்டான். இரண்டாவது சகோதரன் உதயனை யுவராஜாவாக்கி தக்கிண தேசத்தை (தென் பிராந்தியம்) நிர்வகிக்க நியமித்தான்.

புலத்தி நகரில் பாண்டியனோடு நிகழ்ந்த போரில் காயமுற்ற சேனனின் சகோதரன் காசியப்பன் தன் நான்கு புதல்வர்களுடன் வாழ்ந்து வந்தான். காசியப்பனின் மூத்த புதல்வனும், வீரனுமான சேனன் (ii) தக்கிண தேசத்தின் நிர்வாகத்தை உதயனோடு ஏற்றுக்கொண்டான்.

உருகுணையின் ஆட்சியாளனான கித்தாக்கபோதிக்கு நான்கு புதல்வர்களும், மூன்று அழகிய புதல்விகளும் இருந்தனர். மகிந்தன்



மகா பராக்கிரமபாகு
சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மூத்த மகனை நாட்டையும் செல்வங்களையும் அடைவதற்காக உருகுணை ஆட்சியாளனின் சகோதரி கொலை செய்தாள். அதனால் ஏனைய மூன்று புதல்வர்களும் மூன்று புதல்விகளும் நாட்டைவிட்டோடி அனுராதபுர மன்னன் சேனனிடம் அடைக்கலம் புகுந்தனர். அரசன் அவர்களை வெகு வாஞ்சையுடன் வரவேற்று மூத்தவனான காசியப்பனுக்குப் படையுதவி வழங்கி உருகுணைக்கு அனுப்பி வைத்தான். அவன் அவ்வேளை சூழ்ச்சியால் ஆட்சியை அபகரித்திருந்த அத்தைக்காரியைக் கொன்று உருகுணையைக் கைப்பற்றிக் கொண்டான். அதன்பின்னர் தன்னிரு சகோதரர்களான சேனனையும் உதயனையும் தன்னோடு அழைத்துக்கொண்டான்.

அனுராதபுர மன்னன் சேனனுக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். அவன் பொறுப்பில் விடப்பட்ட உருகுணை இளவரசிகள், பேரழிகளாக வளர்ந்திருந்தனர். அவர்களில் மூத்தவளான சங்காவை மகாராணி அந்தஸ்துக்கு உயர்த்தி சேனனுக்கும், மற்றைய இருவரையும் திசா, கீர்த்தி என்போரை யுவராஜா மகிந்தனுக்கும் மணம்புரிவித்தான். அவர்களுக்கான திரவியங்களையும் வசதிகளையும் வழங்கினான். அர்த்தபர்வதம் விகாரை, பிரிவேனாக்கள், மண்டபங்கள் என்பன அரசனால் கட்டப்பட்டன. அரச குடும்பத்தினர் பல சமயப் பணிகளை ஆற்றினர். துஸ்யவாவியும் வேறு பல சிறு குளங்களையும் புலத்தி நகரில் அரசன் அமைத்தான். இருபது வருட ஆட்சியின் பின்னர் சேனன் மரணமடைந்தான்

**சேனன் (ii)**

சீலமேகன் (சேனன்) மரணமடைந்ததும், மகாதிபாதாவான சேனன் (ii) (853 – 887) அரியணை ஏறினான். அவனுடைய மனைவி சங்கா பட்டமகிஷியாகினாள். அனுடைய இளைய சகோதரனான மகிந்தன் தக்கிணதேசத்தின் உபராஜாவாக நியமிக்கப்பட்டான். எனினும் மகிந்தன் அரண்மனைப் பெண்கள் விடயத்தில் புரிந்த குற்றத்திற்காக மன்னன் அவர்களை குடும்பத்தோடு மலைய தேசத்திற்கு அனுப்பிவைத்தான்.

அந்தவேளையில் மகாராணி சங்காவிற்கு அழகான ஒரு மகன் பிறந்தான். லும்பினி நகரில் சுத்தோதனுக்கு சித்தார்த்தன் பிறந்த போது மகிழ்ந்தது போல சேனன் மகிழ்வடைந்தான். பெயரிடும்போதே (காசியப்பன் - V) அவனை யுவராஜாவாக்கி தக்கிண தேசத்தை வழங்கினான். இதனைக் கேள்வியுற்ற முன்னைய யுவராஜா மகிந்தன் பிக்குகளுடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனின் மனதை மாற்றி உடன்பாடிற்கு வந்து மலைய தேசத்திலிருந்து திரும்பிவந்து தக்கண தேசத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டான். மகிந்தனின் முதல் மனைவி திசாவிற்கு ஒரு பெண் மகவு சங்கா என்ற நாமத்தோடு இருந்தாள். இரண்டாவது மனைவி கீர்த்திக்கு நான்கு புதல்வர்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். சேனன் தனது சகோதரனின் ஆதரவைப் பெறும் நோக்கோடு அவனது மகள் சங்காவை தனது மகன் காசியப்பனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.


புனித தந்ததாதுவிற்கு விழாக்கொண்டாடும் நோக்கோடு இரத்தினாநேத்தியத்திற்கு சேனன் வந்திருந்தான். அச்சேத்தியத்தில் புத்தரின் சிலை இல்லாதிருந்தமை ஆச்சரியத்தை விளைத்தது. "ஏன் இவ்வாறுள்ளது" என வினவியபோது அவனுடைய அமைச்சர்கள் "மாநிலத்தின் அதிபதியே, உங்களுடைய மாமனார் சேனன் ஆட்சி செய்தபோது, இங்கு படையெடுத்துவந்த பாண்டிய மன்னன் இலங்கையைக் கொள்ளையிட்டு இங்கிருந்த தங்கச் சிலையையும் கவர்ந்து சென்றான்." என்றனர். அன்றே தனது படைப்பலத்தை அதிகரிக்கு மாறு சேனன் அமைச்சர்களுக்கு கட்டளையிட்டான். பாண்டியரைப் பழிவாங்குவதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது. பாண்டிய மன்னன் (ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன்) உடன் முரண்பட்ட அவனது மகனான (வரகுணன்) என்ற இளவரசன், தந்தைக்கு எதிராகக் கலகஞ் செய்து, புகலிடம் தேடி



தாமரைத்தடாகம் (பொக்குணை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பராக்கிரமபாகுவின் சபா மண்டபத்துக்கு பின்புறமுள்ள கிணறு

இலங்கைக்கு வந்து சேனனிடம் அடைக்கலம் புகுந்தான். மகாதீர்த்தத் துறையில் இளவரசனை வரவேற்ற மன்னன் அவனுக்குப் படையுதவி வழங்கினான். தனது சேனாதிபதியை அழைத்து "பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று பாண்டிய மன்னனைக் கொன்று, இளவரசனை சிம்மாசனத்தில் அமர்த்துக. பாண்டிய மன்னன் முன்பு இங்கிருந்து கவர்ந்து சென்ற அனைத்துத் திரவியங்களையும் எடுத்து வருக" எனப் பணித்தான். சேனாதிபதி, இளவரசன் வரகுணனுடன் கப்பற்படையுடன் உடன் மகாதீர்த்தத் துறையிலிருந்து புறப்பட்டு இந்தியக் கரையில் இறங்கினான். மதுரையை முற்றுகையிட்டான். மதுரையைக் கைப்பற்றி கோட்டைக் கதவுகள் அனைத்தையும் மூடி பலப்படுத்திக் கொண்டான். அதன்பின் கோட்டைக்கோபுரங்கள், தளங்கள், களஞ்சியக் கட்டிடங்கள் என்பனவற்றினைத் தீயிட்டான். கடும் யுத்தத்தில் பாண்டிய மன்னன் வேலால் காயமுற்று மரணமடைந்தான். அவனது மனைவியும் மரணத்தைத் தழுவிக் கொண்டாள். அதன்பின்னர் சிங்களச் சேனை அசுரர்கள் போல நகரத்தினைத் துவம்சம் செய்தது. இலங்கையிலிருந்து கவர்ந்து வந்த திரவியங்களுடன் மதுரை நகரத்தில் கொள்ளையிட்ட திரவியங்களையும் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அதன் பின்னர் பாண்டிய இளவரசனை மன்னனாக முடிசூட்டுவித்து இலங்கை மீண்டான். மகாதீர்த்தத் துறையில் சேனாதிபதிக்கும் (இலங்காபுரத் தண்டநாயக்கன்) சிங்கள வீரர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்விகாரைப் புத்தர் சிலைகள் - சயனக்கோலம், நின்ற வடிவம்**

சேனன் பெரும் வரவேற்பளித்தான். பாண்டியர்கள் இங்கிருந்து கவர்ந்து சென்ற தங்கப் புத்தர் சிலைகளை மீண்டும் அவ்வவ்விடங்களில் நிறுவினான். இரத்தினாசேத்தியத்திலும் பழைய சிலை நிறுவப்பட்டது.

மன்னனின் இருபதாவது வருட ஆட்சிக்காலத்தில் அபயகிரி விகாரையைச் சேர்ந்த பான்சுகுலிகா பிக்குகள் விலகிப் புறம்பாக ஒரு குழுவை அமைத்துக் கொண்டனர்.

யுவராஜா மகிந்தன் புனித அரசமரத்திற்கு அற்புதமான வேலைப்பாடு களுடன் கூடிய கட்டிடம் ஒன்றினை அமைக்க விரும்பினான். ஆனால் அதற்குத் தடையாக புனித அரச மரத்தின் கிளை ஒன்று தாழ்ந்து குறுக்கிடுவதால் அதனைக் கட்டுவது சாத்தியமாகாது என யுவராஜாவுக்கு அறிவித்தனர். மகிந்தன் கவலையோடு 'இறைவா, புனிதரே, இக்கட்டிடம் சமூக சேமத்துக்காக அமைக்கப்பட வேண்டும். குறுக்கிடும் அரச கிளையை மேனோக்கிச் செல்ல வை.' என வேண்டியபடி உறங்கிப் போனான். அன்றிரவு அந்தக் குறுக்கிட்ட கிளை மேனோக்கித் தன்னை அமைத்துக் கொண்டது. சிரமமின்றி அக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. மகிந்த-சேன என்ற விகாரையையும் அவன் கட்டுவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விகாரை – சமாதிபுத்தர்



முப்பத்திமூன்றாவது வருட ஆட்சியிறுதியில் யுவராஜா மகிந்தன் மரணமடைய அவனிடத்திற்கு அவனது இளைய சகோதரனான உதயன் நியமிக்கப்பட்டான். சேனன் பல சமயப் பணிகளைச் செய்தான். ஓராயிரம் சிறு தட்டுகளில் முத்துக்களை நிரப்பி அவற்றிடையே விலைமதிப்பில்லா வைரம் ஒவ்வொன்றினை வைத்து ஆயிரம் பிராமணர்களுக்குத் தானம் வழங்கினான். அவர்களுக்குத் தங்கத் தட்டுகளில் பால்சோறு வழங்கினான். அதேபோல பிக்குகளுக்கும் அங்கிகள் வழங்கிக் கௌரவித்தான். கங்கையில், மணிமேகலா அணையைக்கட்டி மனிகிரக்குளத்திற்கு (மினிப்பே) நீர் வழங்கினான். 'இரத்தின சூத்தா' எனும் சமய ஒழுக்க நூலை தங்க ஓலைகளில் மீள எழுதுவித்தான். சங்காசேன விகாரையை மன்னனின் ராணி சங்கா கட்டுவித்தாள். சேனாதிபதி பிரிவேனாவை மன்னனின் சேனாதிபதி துத்தன் அமைத்துக் கொடுத்தான். முப்பத்தைந்தாவது வருடம் சேனன் மரணமடைந்தான்.

## உதயன்

சேனனுக்குப் பின்னர் ஆட்சிபீடமேறியவன் யுவராஜா உதயன் ஆவான். தனது சகோதரன் மகனான காசியப்பனை மாஅதிபாதப் பதவிக்கு நியமித்தான். (பிரதம ஆளுநர்) பௌத்த சமயத்திற்குப் பல பணிகள் செய்தான். பிராமணர்களுக்குத் தானம் வழங்கிக் கௌரவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியுரிமையில் பாரபட்சம் காட்டுவதாக நினைக்கக் கூடாது என்பதற்காக இன்னோர் சகோதரன் காசியப்பனை அழைத்து யுவராஜா காசியப்பனின் ஒரு மகளான சேனாவை அவனுக்கும் இன்னொரு மகளான தீஸ்ஸாவை தானும் மனைவியாக்கிக் கொண்டனர்.

உபராஜாவான மகிந்தனுக்கும் இளவரசி கீர்த்திக்கும் பிறந்த கித்தகபோதி என்பான் தனக்குரிமை கிட்டாததால் ஏமாற்றமுற்று அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி யாளனாக மாறி உருகுணைக்கு இரவோடு இரவாக ஓடித் தலைமறைவாகினான் கித்தகபோதி அங்கு மக்களைத் தம்வசமாக்கி உருகுணை மன்னனான மாமனைக் கொன்று இராச்சியத்தைத் தனதாக்கிக் கொண்டான். இதனைக் கேள்வியுற்ற அனுராதபுர மன்னன் அடங்காக் கோபமுற்று கித்தகபோதியை தலைநகருக்கு அழைக்க முடிவு செய்தான். அவன் தனது சகோதரன் காசியப்பனை (யுவராஜவல்ல) அழைத்து "நீ எனக்கு உதவ வேண்டும்" எனக் கேட்க காசியப்பன் "அரசே, எவ்வாறு?" என வினாவினான். அரசன் அதற்கு "உனது மகனான மகிந்தனே ஆட்சிக்கு இரத்த உருத்துடையவன். அவன் வயதுக்கு வந்துள்ளான். பலசாலியும், புத்திசாலியுமாவான். ஆட்சியை நடாத்தும் திறன் அவனுக்குண்டு. போர் நடாத்தும் திறனுடையவன். அவனைப் படையோடு உருகுணைக்கு அனுப்பி தன் மாமனைக் கொன்ற துரோகியை கித்தகபோதியை சிறைப்பிடிக்க வேண்டும்." என்றான். "எனது மகன் எதற்கு? நானே உருகுணைக்குப் படையுடன் செல்கின்றேன்" என்றான் அரசன் மனமகிழ்வுடன் சம்மதித்தான். பெரும் சேனை ஒன்று ஆயத்தமாகியது. இளவரசன் மகிந்தனே தலைமை தாங்கிச் செல்வதென முடிவாகியது. மன்னன் வஜ்ரராஜா எனும் படைத் தலைவனை அழைத்து "இளவரசன் மகிந்தனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பது உன் கடமை" எனப் பணித்தான். உருகுணை நோக்கி அனுராதபுர மன்னனின் சைனியம் புறப்பட்டது. உருகுணைத் தலைவர்களும் இச்சேனையுடன் இணைந்து கொண்டனர். கித்தகபோதியின் படை முறியடிக்கப்பட்டு தோல்வியைக் காண, அவன் விலைமதிப்பில்லா அரண்மனைச் செல்வத்துடன் மலைய தேசத்திற்கு ஓடிச்சென்றான். அவனைப் பின்தொடர்ந்த மகிந்தன் மலைய தேசத்தைக் சல்லடையிட்டுத் தேடிய போது, தான் கவர்ந்துவந்த திரவியங்களை கித்தகபோதி கங்கையில் எறிந்துவிட்டு ஒரு குகையுள் மறைந்தான். அதனைக் கண்ட மக்கள் அவனைப் பிடித்து மகிந்தனிடம் ஒப்படைத்தனர். அவனைச் சிறைப்படுத்தி சேனாதிபதி வஜ்ரராஜாவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளித்துவிட்டு உருகுணையின் தலைநகரான மகாகமத்திற்கு வந்து உருகுணையின் மன்னனாக முடிபுனைந்து கொண்டான்.

சேனாதிபதி வஜ்ரராஜா கித்தபோதியைச் சிறையெடுத்துக் கொண்டு ஒரு பகுதி சேனையுடன் அனுராதபுரம் திரும்பினான். அங்கு கிந்தகபோதி கடுங்காவல் சிறையிலிடப்பட்டான். பல விகாரைகள் அமைத்தான். கதம்ப நதியில் மேயூத்திக் குளத்தை அமைப்பித்தான். தனது பதினோராவது ஆண்டு ஆட்சியின் பின்னர் மரணமடைந்தான்.

**காசியப்பன்**

அரசனின் மரணத்தின் பின் யுவராஜாவாகவிருந்த காசியப்பன் முடி சூடிக்கொண்டான். தனது பட்டத்து மகிஷியான திஸ்ஸாவின் தந்தையான காசியப்பனை யுவராஜாவாக்கி தக்கிணதேசத்தினை நிர்வகிக்க நியமித்தான். தானதருமங்கள் ஆற்றியபடியால் அவன் 'தன்திஸ்சாரா' என அழைக்கப்பட்டான்.


உருகுணையின் அரசனாக விளங்கிய மகிந்தன் (iV) படையுடன் இராஜரட்டை (சூளவம்சத்தில் இராஜரட்டை என்ற பெயர் முதன்முதலாக இவ்விடத்தில் வருகிறது) இராச்சியத்தைக் காசியப்பனிடமிருந்து கைப்பற்ற முன்னேறினான். அனுராதபுரத்தின் ஆட்சியைக் கைப்பற்றப் பல குறுநிலத் தலைவர்கள் முயல்வதான தகவல் வெளிவந்திருந்தது. கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருந்த தலைவர்களைச் சிரச்சேதம் செய்வித்தான். மன்னன் அனுப்பிய படையும் மகிந்தனால் துவம்சம் செய்யப்பட்டது. மகிந்தனுடைய தந்தையான யுவராஜா காசியப்பன் மூலம் அவனைத் திரும்பிச் செல்லுமாறு பணித்தான். அத்தோடு பிக்குகள் சமூகம் மகிந்தனை ஆறுதல்படுத்தி மன்னன் முன் வரச்செய்தனர். அரசன் அவனைச் சாந்தப்படுத்தி தனது மகளையும் அவனுக்குத் திருமணம் புரிவித்து உருகுணைக்குத் திருப்பி அனுப்பி வைத்தான். அதன்பின் புதிய விகாரைகள் புனருத்தாரணம், சேத்தியங்கள், விகாரைகளுக்கான கிராமதானங்கள் என்பன மன்னனால் நிறைவேற்றப்பட்டன. சேனாதிபதியான இலங்காசேனன் என்பான். அரச உரித்துடையவன். தூபராமசேத்தியத்திற்குப் பின்புறமாக தேரவாத பிக்குகளுக்கு ஒரு வீடமைத்துக் கொடுத்தான். அபயகிரிப் பிரிவினருக்கு தர்மராமக் கட்டிடத்தையும், கேந்திரவினப் பிரிவினருக்கு காசியப்பசேன என்ற கட்டிடத்தையும் அமைத்துக் கொடுத்தான். சேந்தியபர்வதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹடயுன்கா விகாரையை அமைத்து தர்மாருசிகப் பிரிவினருக்கு வழங்கினான். மகாவிகாரைக்கு சமுத்தாகிரி எனப்படும் அழகான பிரிவேனா ஒன்றினைக் கட்டிக் கொடுத்தான். ராக்க'ன் என்ற படைத் தலைவனும் சேனன் என்ற படைத்தலைவனும் பௌத்த விகாரைகளைப் புதுப்பித்தும் புதியதாக அமைத்தும் வழங்கியுள்ளனர். அரசனின் அமைச்சனான சோழராஜா என்பவன் பிரிவேனா ஒன்றினை மீள் அமைத்துக் கொடுத்துள்ளான்.

பதினேழு ஆண்டு ஆட்சியின் பின்னர் அரசன் காசியப்பன் மரணமடைந்தான். அதன் பின்னர் யுவராஜா காசியப்பன் மன்னனாக அரியணை ஏறினான். தப்புலன் என்பானை ஆதிபாதாவாக, யுவராஜா நியமித்தான். மன்னனுக்கு ஒரேயொரு மகன் இருந்தான். துட்டகாமினியால் கட்டப்பட்டு சிதிலமடைந்திருந்த மிரிசுவெட்டி விகாரையைப் புதுப்பித்தான். தன்னிடமிருந்த தங்க ஓலைகளில் எழுதப்பட்ட அஹிதர்மாபித்திகா என்ற தூபிக்கு பிரமாண்டமான ஒரு கோயிலமைத்தான். அதனைப் பாதுகாக்கும் பொறுப்பிற்கு 'சக்க சேனாதிபதி' என்ற பதவியைத் தன் மகனுக்கு வழங்கினான். காசியனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் பட்டத்துமகிஷி திஸாவிற்கு சக்கசேனாதிபதி மகனாகவும், இரண்டாவது



சிகிரியா குன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி ராஜினி என்பாளுக்கு சித்தார்த்தன் மகனாகவும் விளங்கினர். சித்தார்த்தனை மன்னன் மலையராஜாவாக நியமித்தான். அவன் இறந்தபோது மன்னன் அவனுக்கென ஒரு மண்டபம் அமைத்து அன்னதானம் நடைபெற ஒழுங்கு செய்தான்.

இக்காலப் பகுதியில் பாண்டிய மன்னன் (மாறவர்மன்) சோழமன்னனின் (பராந்தகன்) படையெடுப்புக்கு உட்பட்டான். அதனால் இலங்கை மன்னனிடம் இராணுவ உதவி வேண்டித் தூதனுப்பினான். மன்னனும் பெரும் சைனியம் ஒன்றினை மகன் சங்கசேனாதிபதி தலைமையில் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான். மகாதீர்த்தத் துறையிலிருந்து இலங்கை வீரர்கள் இந்தியக் கரையில் இறங்கினர். பாண்டிய மன்னன் பெருமகிழ்ச்சியோடு 'இப்படையின் உதவியுடன் ஜம்புத்தீபம் (இந்தியா) முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வருவேன்' என ஆர்ப்பரித்து சோழப் படையோடு மோதினான். சோழப்படையை வெற்றி காணமுடியாது பின்வாங்க நேரிட்டது. சக்கசேனாதிபதி மீண்டும் ஒரு தடவை முயன்று தோல்வி கண்டான். அங்கு பரவிய 'பிளேக்' நோய்க்கு பாண்டிய மன்னனும், சக்கசேனாதிபதியும், படையினரின் பெரும் பகுதியினரும் இரையாக நேர்ந்தது.

இலங்கை மன்னன் இதனைக் கேள்விப்பட்டு வருந்தினான். தனது மகன் சக்கசேனாதிபதிக்கும் அவனது மனைவி வஜ்ராதேவிக்கும் பிறந்த புதல்வனை சக்கசேனாதிபதியாக்கி படைத்தலையை அவனிடம் ஒப்படைத்தான். பத்தாவது ஆட்சியாண்டில் அரசன் மரணமடைய நேர்ந்தது.

## தப்புலன் (iii)

அரசனின் மரணத்தின் பின்னர் யுவராஜாவாக இருந்த தப்புலன் (iii) அரசு கட்டிலேறினான். அவன் தப்புலன் என்ற பெயருடைய இளவரசை யுவராஜாவாக நியமித்தான். ஏழு மாதங்களில் மன்னன் இறக்க யுவராஜா தப்புலன் (924 – 935) மன்னனானான். அவன் உதயன் என்ற இளவலை ஆதிபாத (யுவராஜா)வாக நியமித்தான். அக்காலத்தில் பாண்டிய மன்னன் (இராஜசிம்மன் ii) சோழரால் விரட்டப்பட்டு இலங்கைக்கு வந்து மகாதீர்த்தத்தில் இறங்கி சரணடைந்தான். அவனை வரவேற்ற மன்னன், அனுராதபுர நகருக்கு வெளியே இருப்பிட வசதி செய்து கொடுத்தான். பாண்டியனுக்குப் படையுதவி செய்து இழந்த இராச்சியத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொடுக்க விரும்பிபோது, முக்கிய அதிகாரிகள் இதற்கு இணங்காமையால் பாண்டிய மன்னன் தனது சிம்மாசனம் அரச சின்னங்கள் என்பவற்றைத் தப்புலனிடம் ஒப்படைத்துவிட்டு சேர நாடு சென்றான்.

தப்புலன் ஏனைய மன்னர்கள் போன்று சமயப் பணிகள் ஆற்றினான். பன்னிரண்டாவது ஆட்சி ஆண்டில் மரணமடைந்தான். அதன்பின் யுவராஜாவான உதயன் ஆட்சி பீடமேறினான். சேனன் எனும் இளவல் யுவராஜாவாகப் பட்டம் ஏற்றான். அக்கால வேளையில் சில அமைச்சர்கள் மன்னனுக்கு எதிராகக் குற்றம் இழைத்ததால் நாட்டைவிட்டுத் தபோவனக் காட்டிற்குள் ஓடி மறைந்தனர். மன்னனும், யுவராஜாவும் அவர்களைத் தேடிப் பிடித்து சிரசுகளைக் கொய்வித்தனர். அதனால் நகரத்திலிருந்த பல முக்கிய பிக்குகள் நகரத்தைவிட்டு வெறுப்புடன் வெளியேறி உருகுணை சென்றனர். இவற்றால் கோபமுற்ற நாட்டு மக்கள், நகரத்தினர், படையணியினர் என்போர் கோபமுற்று இரத்தின பாசாடா மண்டபத்தில் (அபய கிரிவிகாரை) கூடிப் புரட்சி செய்து மன்னனைப் பயமுறுத்தியதோடு தபோவனக் கொலைகளுக்குத் துணைநின்ற அதிகாரிகளின் தலைகளையும் துண்டித்து எறிந்தனர். யுவராஜா சேனனும் அவனது நண்பனும் (உதயன்) மதிலேறித் தப்பி உருகுணையையடைந்தனர். கிளர்ச்சியாளர்கள் அவர்களை களுகங்கை வரை துரத்தி வந்தனர். அதற்குள் சேனனும் உதயனும் ஆற்றைக் கடந்து சென்றுவிட்டனர். படகுகள் அவ்விடத்தில் இல்லாமையால் கிளர்ச்சியாளர்களால் ஆற்றைக் கடந்து பின்தொடர முடியவில்லை. தப்பியோடிய இளவரசர்கள் உருகுணைக்கு அகன்று சென்ற பிக்குகளின் கால்களில் விழுந்து கதறி மன்னிப்புப் பெற்றுக் கொண்டனர். கிளர்ச்சியடங்கியதும் இவ்விருவரையும் பிக்குகள் அழைத்துக்கொண்டு தலைநகர் வந்தனர். மன்னன் அவர்களை வரவேற்று பிக்குகளிடம் தபோவனக் கொலைகளுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மூன்றாவது ஆட்சியாண்டில் மன்னன் மரணமடைந்தான்.

### சேனன்/ உதயன்


அதன்பின்னர் சேனன் அரசனானான். உதயன் யுவராஜாவாக நியமிக்கப்பட்டான். சமயப் பணிகள் பலவற்றினையும் ஆற்றிய சேனன் தனது ஆட்சியின் ஒன்பதாவது வருடம் மரணமடைந்தான். அதன்பின்னர் உதயன் (iV) (946 – 956) அரச கட்டிலேறினான். யுவராஜாவாக சேனன் என்ற அரச குலத்தவன் நியமிக்கப்படடான். உதயன் மிகுந்த குடிகாரனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினான். நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்திருந்தன. சோழமன்னன் (பராந்தகன்) தனது வலிமையைப் பெருக்கிக்கொண்டு மதுரையில் பாண்டிய இராச்சியத்தின் மன்னனாக முடிசூட விரும்பி, முன்னர் இலங்கையில் பாண்டிய மன்னனால் (இராஜசிம்மன்) கையளிக்கப்பட்ட சிங்காசனத்தையும், முடியையும் ஏனைய அரச அணிகலன்களையும் திருப்பி வழங்குமாறு இலங்கை மன்னன் உதயனுக்குத் தூதுவர்களை அனுப்பினான். உதயன் அக்கோரிக்கையை மறுக்கவே சோழமன்னன் பெரும் படையை அனுப்பி அவற்றினை பலோத்காரமாகவேனும் பெறமுடிவு செய்தான். எதிர்த்த இலங்கைப் படை தோல்வி கண்டது. அரண்மனை சோழரால் தீக்கிரையானது. பாண்டிய சிம்மாசனத்தையும் முடியையும் அரச சின்னங்களையும் எடுத்துக்கொண்டு உதயன் உருகுணைக்கு தப்பிச் சென்றான். உருகுணைக்குச் சோழனின் படை தொடர்ந்து சென்றது. உருகுணை நாட்டிற்குள் பிரவேசிக்க வழி தெரியாததால் பயத்துடன் தனது நாட்டிற்கு மீண்டனர். விதுராஜா என்ற இலங்கை சேனாதிபதி, சோழமன்னனின் எல்லைப்புறம் தாக்கி, அவன் இலங்கையிலிருந்து கவர்ந்து சென்ற திரவியங்களை மீட்டு வந்தான். உதயன் சமயப் பணிகள் பல ஆற்றி, தனது எட்டாவது ஆட்சிக் காலத்தில் மரணமடைந்தான்.

**சேனன்**




சிகிரியா ஓவியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனின் மரணத்தின் பின்னர் சேனன் அனுராதபுரத்தின் சிம்மாசனத்தில் ஏறினான். ஆதிபாத மகிந்தனை யுவராஜாவாக்கிக் கொண்டான். அரசன் திறமைசாலியாகவும், கவிஞராகவும் விளங்கினான் மூன்றாண்டு கால ஆட்சியின் பின்னர் மரணமடைய யுவராஜா மகிந்தன் (ஐஏ) (956-972) அரச கட்டிலேறினான் அவன் கலிங்கத்து இளவரசி ஒருத்தியை மணந்து தன் பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். அவர்களுக்கு இரு புதல்வர்களும் அழகிய ஒரு மகளும் பிறந்தனர். இரு புதல்வர்களையும் ஆதிபாதாக்களாகவும், மகளை உபராணியாகவும் நியமித்தான்.



பொலநறுவைக் கோட்டை வாயில் மரத்தடி பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 6
# சோழ மன்னன் வல்லபன்

அவ்வேளையில் சோழ மன்னனான வல்லபன் நாகதீபத்திற்கு (வடபகுதி – உத்தர தேசம்)ப் பெரும்படை ஒன்றினை அனுப்பி, அதனைக் கைப்பற்றிக் கொண்டான். அதனைக் கேள்வியுற்ற மன்னன், சேனாதிபதி சேனபனையை பெரும் சைனியத்துடன் நாகதீபத்திற்கு அனுப்பி வல்லபனோடு மோதி, வெற்றி வாகை சூடினான். அதன்பின்னர் இலங்கை அரசனோடு வல்லபன் ஓர் நட்பு உடன்பாடிற்கு வந்தான். அதனால் இலங்கை மன்னனது புகழ் இந்தியாவிற்கும் பரவியது. மன்னன், பங்சு கூளிகர் பிக்குகளோடு அதிக அக்கறை கொண்டிருந்தான். சமயப்பணிகள் பல புரிந்தான். பதினாறு வருட ஆட்சி இறுதியில் மகிந்தன் மரணமாயினான்.

## 5வது சேனன்

மகிந்தனின் பின்னர் அவனது கலிங்கராணியின் மகனான சேனன் ((972-982) தனது பன்னிரண்டாவது வயதில் அரசனானான். தனது இளைய சகோதரன் உதயனை யுவராஜாவாக்கி, சேனனைத் தொடர்ந்து சேனாதிபதியாக நியமித்தான். ஒரு தடவை சேனாதிபதி சேனன்,




விஷ்ணு தேவாலயம் - பொலநறுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைப்புறங்களில் ஏற்பட்ட கலவரங்களை அடக்குவதற்காக படையோடு சென்றிருந்த வேளையில், தனது கலிங்கத்துத் தாயோடு சேனாதிபதி சேனனின் சகோதரன் மகாபல்லன் கள்ளத்தொடர்பு கொண்டிருப்பதைக் கண்டதும் அவன் சிரசைக் கொய்வித்தான். அத்தோடு சேனாதிபதி சேனனுக்குப் பதிலாக உதயன் என்பானைச் சேனாதிபதியாக நியமித்தான். அதனைக் கேள்வியுற்ற சேனாதிபதி சேனன், தன் சைனியத்துடன் அரசினைக் கைப்பற்றும் நோக்குடன் விரைந்து வருவதைக் கேள்விப்பட்ட மகிந்தன் உருகுணைக்கு ஓடிச்சென்றான். ஆனால் அவனது கலிங்கத்துத் தாயாரோ, யுவராஜா உதயனோ தலைநகரை விட்டு வெளியேறவில்லை. அவர்கள் சேனாதிபதி சேனனை ஆதரித்தனர். சேனாதிபதி சேனனை அழைத்துப் பேசினர். அவன் தமிழர்களை எல்லாம் அழைத்து, அரசினை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, புலத்தி நகரத்திற்குச் சென்று சீவிக்கலானான். உருகுணையிலிருந்த மன்னன், சேனாதிபதிக்கு எதிராக ஒரு படையை அனுப்பினான். அவனது சைனியம் தோல்வியைத் தழுவியது.


அதன் பின்னர் தமிழர்கள், இராச்சதர்கள் போல நாட்டினை நாசமாக்கினர். நாட்டு மக்களிடமிருந்து தமக்குத் தேவையானவற்றைப் பறித்துக் கொண்டனர். அதனால், மக்கள் உருகுணையில் வாழ்ந்த



விஷ்ணு சிலா விக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் சிவ தேவாலயம் – முன் பக்கத் தோற்றம்

மன்னனிடம் சென்று முறையிட்டனர். மன்னன் தனது அமைச்சர்களுடன் கலந்து பேசி, சேனாதிபதி உதயனைத் தூதுவனாகச் சேனாதிபதி சேனனிடம் புலத்தி நகருக்கு அனுப்பி வைத்து சமயத்தையும் நாட்டையும் காப்பாற்ற உதவுமாறு வேண்டிக் கொண்டான் அத்தோடு சேனாதிபதி சேனனின் மகளையும் மணந்து கொள்வதற்கு உடன்பட்டான். அதனால் அனுராதபுர சிம்மாசனம் மீண்டும் அவனுக்குக் கிடைத்தது. அவனுக்கும் சேனனின் மகளுக்கும் காசியப்பன் என்றொரு மகன் பிறந்தான். எனினும், அரசனது பலவீனத்தைப் பயன்படுத்தி படையினர் சூறையாடல் களிலீடுபட்டனர். அரசனின் கூடா நடத்தையினருடனான நட்பும், குடிப்பழக்கமும் இராச்சியத்தை ஸ்திரமாக வைத்திருக்க விடவில்லை. தனது ஆட்சிக்காலத்தின் பத்தாவதாண்டில் மரணத்தைத் தழுவிக்கொண்டான்.

## கொள்ளைபோன இலங்கை

சேனனின் மரணத்தின் பின்னர், அவனது இளைய சகோதரனான மகிந்தன். (V) (982-1029) அரசகட்டிலேறினான். முன்னைய சேனாதிபதி சேனனால் அநுராதபுரத்திற்கு அழைத்து வரப்பட்டு விடப்பட்ட தமிழராலும் கூலிப்படைகளாலும் அவனது ஆட்சி நிம்மதியாக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் சிவதேவாலய கர்ப்பக்கிரகம்

மக்களும் அரசனுக்குரிய வரிகளை செலுத்தாது விட்டனர். அவனும் அவற்றினை நெருக்கிப்பெறும் வலிமையற்றவனாக இருந்தான். வரி சரிவர வசூலாகாததால் தனது படைவீரர்களுக்கும் வேதனம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் அவனது படையிலுள்ள கேரள வீரர்கள் (தமிழர்) தம் கரங்களில் வேல்களையும் வாள்களையும் ஏந்தி, அரண்மனை வாயிலில் பலாத்காரமாக அமர்ந்து, “வேதனத்தைத் தருவதற்கு முன் அரசன் உணவுண்ணக் கூடாது” எனக் குரலெழுப்பினர். அரசன் பயந்து பெறுமதி வாய்ந்த திரவியங்களை எடுத்துக் கொண்டு, சுரங்க வாயிலினூடாகத் தப்பி ஓடி உருகுணைக்குச்சென்றான். சுசுபர்வதகமத்தில் தனது சிறிய படையோடு தங்கினான். தனது சகோதரரின் (சேனன்) மனைவியைத் தனது மகிஷியாக்கிக் கொண்டான். அவள் சிறிது காலத்தி லிறந்ததும், தனது சகோதரரின் மகளை மணந்து, பட்டமகிசியாக்கிக் கொண்டான். இவர்களுக்குக் காசியப்பன் என்றொரு மகன் பிறந்தான். அதன்பின் தாம் வசித்த கிராமத்தைவிட்டு வெளியேறி உருகுணையில் கப்பகல்லா எனும் நகரினை ஸ்தாபித்து, அங்கு இருந்து மன்னன் அரசியற்றி வந்தான். அதே வேளை அனுராதபுர அரசை கேரளர் (மலபார்) சிங்களவர், கன்னடர் ஆகியோர் தம் விருப்புப் போல நிர்வகித்து வரலாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை இந்தியாவிலிருந்து இக்கரைக்கு வந்து நிலைமைகளை அவதானித்துத் திரும்பிய ஒரு குதிரை வியாபாரி, சோழமன்னனிடம் இலங்கையின் பரிதாபநிலையை எடுத்தியம்பினான். இதனைக் கேளவியுற்ற சோழமன்னன் (இராஜராஜன்) இலங்கையை சோழரின் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவரும் நோக்குடன் பெரும் சைனியம் ஒன்றினை அனுப்பி வைத்தான். அப்படை இலங்கையில் இறங்கி, எதிர்ப்பட்ட கிராமங்களை அடக்கி, உருகுணை நோக்கி நகர்ந்தது. அவர்கள் மகாராணியை அவளது அனைத்து தங்க ஆபரணங்களுடனும், மகுடம், விலைமதிப்பில்லா வைரங்கள், முறியாத வாள், பதக்கங்கள் என்பவற்றையும் கவர்ந்து கொண்டனர். நாட்டிற்குள் மறைந்திருந்த மன்னனையும் சமாதான உடன்படிக்கை செய்வதாக எமாற்றி சிறைப்படுத்திக் கொண்டனர். சிறைப்பட்ட அரசனையும் கவர்ந்த திரவியங்களையும் சோழ நாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.



முதலாம் சிவதேவாலய பலிபீடமும் குண்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தந்ததாது கோயிலைச் சோழர்கள் அழித்தனர். விகாரைகளிலுள்ள தங்கச்சிலைகளையும் ஆபரணங்களையும் சூறையாடினர். குருதிகுடிக்கும் பூதங்கள் போல, அனுராதபுரத்துச் செல்வங்களைக் கொள்ளையிட்டனர். அவர்கள் புலத்திநகரை (பொலநறுவை)த் தம் தலைநகராக்கிக் கொண்டு தங்கினர். அதேவேளை நாட்டுமக்கள், இளவரசனான இளம் காசியப்பனை மிகக் கவனமாகச் சோழப் மன்னர்களின் கண்களில் படாது பாதுகாப்பதில் சிரத்தையாகவிருந்தனர். காசியப்பனுக்கு பன்னிரண்டு வயதாகிறதென்ற செய்தியை அறிந்த சோழமன்னன், தனது படைத்தலைவர்களை அனுப்பி அவனைச் சிறைப்படுத்துமாறு கட்டளை பிறப்பித்தான். அப்படையில் 95 ஆயிரம் வீரர்கள் இருந்தனர் அவர்கள் உருகுணையை முற்றுகையிட்டுச் சல்லடையிட்டு இளவரசனைத் தேடினர். அரசபணியிலிருந்த கீர்த்தி, புத்தா ஆகிய இரு மாபெரும் வீரர்கள் தம் படையுடன் சென்று சோழப் படையை சிதறடித்தனர், பின்னர் பாலுத்தகிரியில் பாசறை அமைத்து, ஆறுமாதங்கள் தொடர்ந்து போரிட்டு



இரண்டாம்
சிவதேவாலயம் -
முன்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் சிவதேவாலயம் - நந்தி

ஏராளமான தமிழ்வீரர்களை அழித்தனர். சோழரின் சேனை புலத்திநகரிற்குப் பின்வாங்கிச் சென்றது. இளவரசன் காசியப்பன் இவ்விரு படைத்தளபதிகளுக்கும் அவர்கள் விரும்பிக்கேட்ட கிராமங்களைப் பரிசாகக் கொடுத்தான். சோழ நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்ட மகிந்த மன்னன் பன்னிரண்டாண்டுகளுக்குப்பின் (1029) சோழநாட்டில் இறந்தான்.

## விக்கிரமபாகு


மகிந்தனின் மகனான காசியப்பன், விக்கிரமபாகு என்ற சிம்மாசனப் பெயரோடு உருகுணையில் முடிசூடிக்கொண்டான். எஞ்சிய இலங்கை சோழராட்சியினுளடங்கிக் கிடந்தது. விக்கிரமபாகுவின் முழுச்சேனைகளும் தமிழர்களை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை அடைவதிலேயே இருந்தது. அனுராதபுரத்தினைச் சோழரிட மிருந்து மீட்டு, அரியணை ஏறும்போது தேவைப்படுமென சிம்மாசனம், மகுடம், செங்கோல், ஆபரணங்கள், கொற்றக்குடை என அனைத்தையும் செய்து தயார்நிலையில் வைத்திருந்தான். அவற்றினை உருகுணையில் பயன்படுத்த மறுத்து விட்டான். "ராஜரட்டையில் முடிசூடும்போது தான் என் கொற்றக்குடை உயரும்" எனச் சூளுரைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் சிவதேவாலயம் - கோமுகி



இரண்டாம்
சிவதேவாலயம்
பின்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலட்சம் போர்வீரர்களைத்திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தமாகும் வேளையில் கடும் நோய்வாய்ப்பட்டான். 'யுத்தத்திற்கு இது ஏற்ற தருணமல்ல' எனக்கூறினான். அந்நோயின் காரணமாக ஆட்சியேற்ற பன்னிரண்டாவது ஆண்டில் மரணமடைந்தான். அதன்பின்னர் கீர்த்தி என்ற படைத்தலைவன், தன்னை ஆட்சியாளனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். அவனுடைய ஆட்சி ஏழுநாட்களே நிலைத்தது. ஏனெனில், மகாலானகீர்த்தி என்பவன் அவனைக் கொன்று உருகுணையின் அரசனாகினான். அவனுடைய ஆட்சியின் மூன்றாம் வருடம் சோழர் படையெடுத்து, உருகுணையைக் கைப்பற்றிக் கொண்டனர். மகாலானகீர்த்தி, தன் கரத்தினால் தன் கழுத்தினை அரிந்து தற்கொலை செய்து கொண்டான். தமிழர்படை உருகுணையை வழமைபோலச் சூறையாடி புலத்திநகர் மீண்டது.

## விக்கிரமபாண்டு

அதற்குப்பிறகு, விக்கிரமபாண்டு என்ற அரசவழியைச்சேர்ந்தவன், உருகுணையின் ஆட்சியாளனாக ஒரு வருடம் ஆட்சிபுரிந்தான். அவனை ஜகதிபாலா என்பான் போரில் கொன்று உருகுணையை நான்கு வருடங்கள் ஆண்டான். அவனைச்சோழர்கள் மீண்டும் படையெடுத்து அவனை வென்று கொன்றதன் பின்னர், அவனது ராணியையும் மகளையும் திரவியங்களையும் கவர்ந்து சோழநாட்டிற்கு அனுப்பிவைத்தனர். அதன்பின் பாண்டுவின் மகனான பராக்கிரமா என்பான் இரண்டாண்டுகள் உருகுணை மன்னனாக விளங்கினான். அவனையும் சோழர் படை வென்று சிரம் அரிந்தது.

## உருகுணை எதிரிகளை அடக்கல்

லோகேஸ்வரன் என்றொரு சிங்கள இராணுவத்தலைவன், உருகுணையை ஒன்றாக்கி, சோழருடைய ஆதிக்கத்தினை முறியடிக்கும் நோக்குடன், உருகுணையைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான். கஜரகமத்தில் (கதிர்காமம்) தனது தலைமைப்பீடத்தை நிறுவிக் கொண்டான். அவ்வேளையில் கீர்த்தி எனப்படும் பலமிக்க இளவரசன் ஒருவன் இருந்தான். மன்னன் காசியப்பனுக்கு மானா என்றொரு மகன் இருந்தான். அவன் ஆதிபாதாவானான். (யுவராஜா) அவனுடைய மூத்த சகோதரன் மந்திரவித்தைகள் தெரிந்த மானவர்மனாவான். அவன் மாணிக்க கங்கை (கொக்கனா நதி) க்கரையில் ஒரு நாள் அமர்ந்திருக்கும்போது மந்திரத்தை உச்சரிக்க குமரக்கடவுள் பறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனம் (மால்) ஒன்றில் அமர்ந்து அவன் முன் தோன்றினார். குமரக்கடவுளைக் காவிவந்த மயிலானது, தனது அலகினால் தேங்காய் ஒன்றினைப் பிளந்தபோது, அதனுள்ளிருந்த இளநீர் தேங்காயின் துவாரம் விழுந்த குழிக்கண்கள் ஊடாக ஓடி வறண்டிருந்தது. மயிலானது மந்திர மானவர்மன் முன் போய் நின்றது. மானவர்மன் பவானி சித்தியை நினைவில் கொண்டு, தனது கண் ஒன்றினை மயிலுக்குத் தானமாக்கினான். மயிலானது அவனது விழி ஒன்றினைப்பறித்து, அதிலிருந்த திரவத்தினை அருந்தியது. குமரக்கடவுள் அவனது செயலால் மனம் மகிழ்ந்து அவன் விரும்பிய வரம் வழங்கி, வானத்தில் மறைந்தார்.

விழி ஒன்றினை இழந்த நிலையில் மானவர்மனைக் கண்ட, பிரமுகர்கள் வியப்புடன் காரணம் கேட்டனர். அவன் பெருமையுடன் நடந்தவற்றினைக் கூறினான். அதனைக் கேட்ட பிரமுகர்கள், 'நீங்கள் அனுராதபுரம் சென்று முடிசூடிக் கொள்ள வேண்டுமெ'னப்பிரார்த்தித்தனர். 'உடலில் ஊறுடைய ஒருவன் அரசனாக முடியாது. நீங்கள் எனது தம்பி மானாவை அழைத்து, அனுராதபுரத்தின் மணிமுடியைத்தரிக்க வையுங்கள்' என்றான். அவ்வாறு வரவழைக்கப்பட்ட மானா, தமையனின் பாதங்களில் விழுந்து விம்மினான். அவனை வாரித்தூக்கிய மானவர்மன், அவனை அனுராதபுரத்தின் மன்னனாக மானவர்மன் என்ற நாமத்தோடு முடிசூட்டிவித்தான். அதன்பின்னர் அபயகிரி விகாரைக்குச் சென்று அங்கு தங்கி, பிக்குவாகினான். மன்னன் மானா "உத்தர முல்லா" என்ற விகாரையை அமைத்து அதனை மானவர்மன் தேரருக்கு வழங்கியதோடு, அறுநூறு பிக்குகளையும் இணைத்து விட்டான். அத்தோடு தச்சர், நெசவாளர், சாயம்போடுவோர், நாவிதர், தோற்தொழிலாளர் என ஐவகைப் பணிபுரிவோரையும் வழங்கினான். மன்னனின் ஆலோசகர்களாக அபயகிரி விகாரைப் பிக்குகள் மாறினர். எனினும், மன்னன் மானவர்மனின் உறவினரில் சிலர் பௌத்த ஒழுக்கத்தினை ஏற்காது, தம்மை "மகாசாமி" களென அழைத்துக் கொண்டனர்.

மன்னர் மகிந்தனுக்கு இரண்டு மருமக்கள் இருந்தனர். அவர்கள் மகிந்தனின் தாயின் சகோதரரின் புதல்விகளாவார்கள். மூத்தவள் தேவலா என்றும், இளையவள் லோகிதா என்றும் அழைக்கப்பட்டனர். லோகிதா காசியப்பனை மணந்தாள் மொகலானன், லோகா என்ற பெயருடைய இரு புதல்வர்களுக்குத் தயானாள். மூத்தவன் மொகலானன், சமய நம்பிக்கையும், சமூக சேவை நாட்டமுடையவனாக விளங்கினான் அதனால் அவன் "மகாபிரபு" என அழைக்கப்பட்டான். உருகுணையைத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிவிடமாகக் கொண்டிருந்தான். அவன் தத்தோபதீசன் வழிவந்த போதி இளவரசனின் மகளான லோகிதாவை மணந்து கொண்டான் அவர்களுக்குக் கீர்த்தி, மித்தா, மகிந்தன், இறக்சித்தன் என நான்கு புதல்வர்கள் பிறந்தனர். மூத்தவனான கீர்த்தி, தனது பதின்மூன்றாவது வயதிலேயே மிகச்சிறந்த வாள்வீரனாக விளங்கினான். 'இலங்கையை இந்த எதிரிகளிடமிருந்து எவ்வாறு காப்பேன்' என அடிக்கடி கூறிக்கொள்வான்.

## புத்தராஜா

அதேவேளை உருகுணையை ஆட்சிபுரிந்த லேகேஸ்வரனுக்கு எதிராக புத்தராஜா என்ற இளவரசன் கிளர்ச்சி செய்தான். அதில் தோல்விகண்டு மலைய தேசத்திற்கு ஓடிப்போக நேர்ந்தது. கங்கா என்ற சோதிடன், புத்தராஜாவிடம் சென்று இளவரசன் கீர்த்தியைப்பற்றி, "வருங்காலத்தில் இளவரசன் கீர்த்தி மிகப்புகழ் பெறுவான். இந்திய ஆதிக்கத்தை அகற்றி ஒரு குடைக்கீழ் இலங்கையைக் கொண்டுவருவான்" என்றுரைத்தான். இதனைக்கேட்ட புத்தராஜா "இளவரசனுக்கு உதவவேண்டும்" என முடிவு செய்து, தூதுவரை அவனிடமனுப்பி வைத்தான். இதனைத் தூதுவர் மூலமறிந்த கீர்த்தி, இதில் ஏதாவது சூழ்ச்சியிருக்கலாமெனக் கருதி, தன் பெற்றோருக்கும் தெரியாமல், தான் இருந்த வீட்டையும், கிராமத்தையும் துறந்து, தனது ஆயுதங்களுடன் இரகசியமாகத் தலைமறைவாகினான் சாரிவாக்கப்பிட்டி எனும் கிராமத்தில் வாழலானான். அங்கு தன்னாட்களுடன் சேர்ந்து, மன்னன் லோகேஸ்வரனுக்குச் சொந்தமான போதிவெல என்ற கிராமத்தைத் தனதாக்கிக் கொண்டான்.

அதனால் கோபமுற்ற மன்னன் லேகேஸ்வரன், தனது படையை அனுப்பி வைத்தான். அக்கிராமத்தை முற்றுகையிட்ட சேனையை, கீர்த்தியும் அவனது வீரர்களும் காற்றில் பறக்கும் தூசெனச் சிதறடித்து விட்டனர். அதன் பின் குணடனசாலைப் பிராந்தியத்தையும் கைப்பற்றி மலையதேசம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டான். லோகேஸ்வரன் இரு தடவைகளுக்கு மேல் படைகளை அனுப்பி வைத்தும், கீர்த்தியை வெற்றி கொள்ள முடியவில்லை.

இத்தருணத்தில் உருகுணையின் மக்காகுட்றுஸா எனும் பிரதேசத்தின் தலைவனான தேவமல்லன் என்பான். பெருந்தொகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களுடனும் மக்களுடனும் கீர்த்தியின் பால் வந்து சேர்ந்தான். அப்போது பதினைந்து வயதடைந்த கீர்த்தி, வாட்பலத்தினால் ஆளுநனாக மாறியிருந்தான். லேகேஸ்வரன் மீண்டும் பலதடவை படையனுப்பி முயன்றும் கீர்த்தியைச் சிறைப்பிடிக்க முடியவில்லை. தனது ஆட்சிக்காலத்தின் ஆறாவது வருடம் லோகேஸ்வரன் மரணமடைந்தான்.

## காசியப்பன் (கேசதாது)


அதன் பின்னர் உருகுணையின் அரசனாக காசியப்பன் (கேசதாது) முடிபுனைந்து கொண்டான். இதனைக் கேள்விப்பட்ட சோழமன்னன் புலத்திநகரிலிருந்து ஒரு படையை உருகுணைக்கு அனுப்பிவைத்தான். கஜரகமத்தில் சண்டை நிகழ்ந்தது, மன்னன் கேசதாது சோழபடையை சிதறடித்து மீண்டான் இவற்றினைக் கேள்விப்பட்ட கீர்த்தி, மலையகத்திலிருந்து பெரும்படையுடன் வந்து கேசதாதுவின் சேனையை வென்று, உருகுணையைத் தனதாக்கிக் கொண்டான். அரசனாகச் சிம்மாசனம் ஏறினான். ஆறுமாதமளவில் காசியப்பன் கேசதாது உருகுணையை ஆள முடிந்தது. தனது பதினாறாம் வயதில் கீர்த்தி விஜயபாகு என்ற நாமத்தோடு அரச கட்டிலேறினான்.



சிவதேவாலயம் (3) - கர்ப்பக்கிரகலிங்கோற்சவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதேவாலயம் (3) - வடக்குவாயிலிலுள்ள லிங்கோற்சவர்

# அத்தியாயம்: 7
# விஜயபாகு

**கீ**ர்த்தி இளவரசன் விஜயபாகு என்ற பெயருடன் உருகுணையின் அரசனாகினான். விஜயபாகு மிகுந்த அறிவும் திறனுடையவன் பிரமுகர்களை அரசபதவிகளில் ஏற்றவாறு நியமித்து, நாடெங்கும் பறையறைந்து தன் ஆட்சியை வெளிப்படுத்தினான். சோழருக்கு எதிரான யுத்தத்திற்காக நாற்படைகளையும் பலப்படுத்துவதில் ஈடுபட்டான். இதனைக் கேள்விப்பட்ட சோழமன்னன், புலத்திநகரிலிருந்து தன் படையை சேனாதிபதியொருவனின் தலைமையில் உருகுணைக்கு அனுப்பி வைத்தான். 'அது போரிடுவதற்குத்தகுந்த தருணமல்ல' என உணர்ந்த, விஜயபாகு காஜரகமத்தினை (கதிர்காமம்) விட்டு மலைநாட்டிற்கு தன் படையுடன் வெளியேறினான். எதிர்ப்பின்றி கதிர்காமத்திற்குள் புகுந்த சோழர்படை, அங்கேயுள்ள கோட்டையையும் கைப்பற்றி, அங்கு பல அழிவுகளையும் ஏற்படுத்தியபின், புலத்திநகர் திரும்பினர்.. அதன் பின்னர் மலைப் பிரதேசத்திலிருந்து திருப்பி வந்த விஜயபாகு ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபாகு, பெறுமதியான திரவியங்களை வர்த்தகக் குழுவிடம் அளித்து, ராமன்னா (பர்மா) நாட்டிற்கு அனுப்பி, அங்கிருந்து துணிவகைகள், கற்பூரம், சந்தனக் கட்டைகள் இன்னும் பல அரிய பொருட்களையும் காவிக் கொண்டு வணிகக்கப்பல்கள் உருகுணை மீண்டன. அவற்றினைப் போர் வீரர்களுக்கு வழங்கி, தன் படைவலிமையை அதிகரித்துக் கொண்டான். பின்னர், தனது அரசிருக்கையை காஜாகமத்திலிருந்து தம்பலகாமம் (அம்பாந்தோட்டை அருகே) என்ற இடத்திற்கு மாற்றிக் கொண்டான்.

இராஜரட்டையில் சோழராட்சிக்கு எதிராகக் கலகங்கள் ஏற்பட்டன. இராஜரட்டை மக்கள் தமது வரிகளை ஒருவர் பின் ஒருவராகச் செலுத்தாது விட்டனர். சில அதிகாரிகளும் இணைந்து கொண்டனர். அதனால் கோபமுற்ற சோழ மன்னன் (வீரராஜேந்திரன) தனது படையொன்றினைத் தனது சேனாதிபதியின் தலைமையில் அனுப்பி வைத்தான். அப்படை மகாதீர்த்தத்தில் வந்திறங்கியது. இப்படை மக்களை ஈவிரக்கமின்றி கொன்று அழித்து, இராஜரட்டைக் கலகத்தை அடக்கியது. அதன் பின்னர் சோழ படையானது கடல் பெருக்கெடுத்தது போல விஜயபாகுவை அடக்கும் நோக்குடன் விரைந்தது. உருகுணையின் சேனாதிபதியான ரவிதேவா என்பானும் கலா என்பானும், விஜயபாகுவிற்கு எதிராக, தமிழ்ப்படைத் தளபதியிடம் சேர்ந்து கொண்டனர். அவர்கள் சரணடைந்ததும் சோழத்தளபதி, இனி இலகுவில் உருகுணை பிடிபட்டு விடுமென நினைத்துக் கொண்டான்.

தனது இக்கட்டான நிலையை உணர்ந்த விஜயபாகு, தனது படையுடன் பல்லுத்தபர்வதத்தில் (பலாட்டுப்பாலன) தனது அரணை அமைத்துக் கொண்டான். சோழர்படை இந்த அரணைச் சூழ்ந்து கொண்டது. பெரும்போர் இரண்டு சைனியங்களுக்கும் மூண்டது. விஜயபாகுவின் படைவீரர்கள் சோழர் படையைச் சிதறடித்தனர். சோழர் படை பின்வாங்கி ஓடியது. அதனைத் தொடர்ந்த விஜயபாகுவின் வீரர்கள், சோழப்படைத் தளபதியின் சிரசினைக் கொய்து, மன்னனிடம் எடுத்து வந்தனர். அத்தோடு சோழரின் ஆயுதங்கள், யானைகள், குதிரைகள், தேர்கள் என்பவற்றையும் கைப்பற்றி எடுத்து வந்தனர். 'மன்னனே இதுவே சரியான தருணம். நாம் இப்போதே புலந்திநகரைத் தாக்கிச் சோழரை துரத்திப்பிடிக்கவேண்டும்' என்றனர். விஜயபாகு பெரும்படையுடன் புலந்திநகரை நோக்கிச் சென்றான். சோழரின் உருகுணைத் தோல்வி சோழ மன்னனுக்கு அறிவிக்கப்பட்டது. அதனைக் கேட்ட சோழ மன்னன், என்றுமில்லாத தொகையில் சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினை உடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். விஜயபாகு, சோழர்படையை அனுராதபுரத்திற்கு அருகில் சந்தித்தான். பெரும் சமர் மூண்டது. விஜயபாகுவின் படைவீரர்கள் ஏராளமானோர் பலியாகினர். அதனால், விஜயபாகு, புலத்திரநகரைக் கைவிட்டு வில்லிகபான என்றவிடத்திற்குத் தன் படையோடு நகர்ந்து, அங்கு ஆட்சி செய்த இரு அதிகாரிகளை அழித்து விட்டுத் தங்கினான். சோழர்களை வெற்றி கொள்ள ஏற்ற தருணத்தை எதிர்பார்த்து வட்டகிரி என்றவிடத்தில் பாசறை அமைத்துத் தங்கினான். அதன் பின் பெரும்படையோடு தமிழரோடு மூன்று மாதங்கள் போராடி, அவர்களைத் துரத்தியடித்தான்.

முன்னைய போரில் வீரமரணமடைந்த கேசதாதுவின் இளைய சகோதரன், தனது தமையனின் மரணத்திற்குப் பழிவாங்கும் நோக்கோடு பெரும் படையொன்றினைத் திரட்டி குட்டசாலா பிரதேசத்தில் விஜயபாகுவுக்கு எதிராகக் கிளர்ச்சியாளனாக மாறினான். அதனைக் கேள்விப்பட்ட விஜயபாகு, ஒரு சேனையுடன் சென்று மக்குத்தலம் என்னுமிடத்தில் பாசறை அமைத்து, கிளர்ச்சியாளனை வென்று துரத்தி விட்டான். துரத்தப்பட்ட கிளர்ச்சியாளன் தனது மனைவி, பிள்ளைகளுடன் சோழரிடம் சென்று அடைக்கலம் புகுந்தான். அதன்பின்னர் தம்பலகாமம் நகரிற்குத் திரும்பிய விஜயபாகு, தகுந்தவாறு திட்டங்களை வகுத்தான். தனது சேனாவீரர்களை இரு பிரிவினராக்கி, ஒவ்வொரு சேனாதிபதி தலைமையில், ஒரு படையை தக்கண தேசத்திற்கூடாக அனுரதபுரத்திற்கு அனுப்பி அங்குள்ள சோழபடையைச் துவம்சம் செய்யுமாறும், மற்றப்படையை மகாகங்கைக் கரையோரமாகப் புலத்திநகருக்கு அனுப்பிச் சோழர் படையைத் துவம்சம் செய்யுமாறும் பணித்தான். இரு படைகளும் பணித்தவாறு முன்னேறின. அனுராதபுரம் வந்த விஜயபாகுவின் படை அவர்களைத் துரத்தியடித்தது. இறுதியில் எஞ்சிய சோழ வீரர்களை மகாதீர்த்தம் நோக்கி ஓடவைத்து விட்டு, விஜயபாகு அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

புலந்திநகரினைக் கைப்பற்றுவதற்கு ஒன்றரை மாதங்கள் எடுத்தது, சோழரின் படைவீரர்கள் புலத்திநகர் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். கோட்டைக்கதவுகளை மூடிக் கொண்டனர். நடைபெற்ற யுத்தத்தில், விஜயபாகு கோட்டை மதில்களை உடைத்து உள்நுழைந்து, அனைத்து தமிழர்களையும் வேரோடு அழித்தான். புலத்திநகரைக் கைப்பற்ற, முன்பு சோழரோடு மன்னனுக்கு எதிராகக் சேர்ந்து கொண்ட சேனாதிபதிகளான ரவிதேவாவும், கலாவும் மீண்டும் விஜயபாகுவோடு சமரசமாகி உதவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதேவாலயம் (3) - கோமுகி

விஜயபாகு, வெற்றிப் பேரிகை முழங்குமாறு கட்டளையிட்டான். சோழ மன்னன், 'சிங்கள சேனை பலமானது' என எண்ணி, அதன் பின்னர் படையனுப்பும் எண்ணத்தைக் கைவிட்டான். விஜயபாகு அனுராதபுரத் (1073) தில் உபராஜாவாகவே சிலகாலம் வாழத் தலைப்பட்டான்.

**விஜயபாகுவின் குடும்பம்**

அனுராதபுரத்தில் முடிசூடிக் கொண்ட விஜயபாகு மன்னன், தனது வெற்றிக்காக உழைத்த தலைவர்களுக்குத் தகுந்த பதவியிடங்களை வழங்கினான். நாட்டினைக்கட்டி எழுப்ப, அனைவரின் உதவிகளையும் வேண்டினான். அதன் பின்னர் மூன்று மாதங்கள், பௌத்த வணக்கத் தலங்களுக்குச்சென்று வழிபாடியற்றிய பின், புலத்திநகருக்கு மீண்டான்.

அவ்வேளையில், ஆதிபல்லவன் என்ற ஒரு படைத்தலைவன், அரசனுக்கு எதிராகத் தன் படையோடு கிளர்ச்சி செய்தான். அவனைத் தனது படையோடு சென்ற மன்னன் தோற்கடித்து, அவனது படைவீரர்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு புலத்திநகர் வந்தான். பதினேழு ஆண்டுகள் விஜயபாகு, உபராஜாவாகவே இருந்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் மன்னனுக்குரிய சகல சடங்குகளையும் முறைகளையும் அறிந்து கொண்ட பின்னர், அனுராதபுரத்திற்குச் சென்று, முடிசூட்டுவிழாவினைச் சிறப்பாக நடாத்தினான். அதன்பின் புலத்திநகர் வந்து, ஸ்ரீசங்கபோதி என்ற நாமத்தோடு பரிபாலனம் செய்தான். பகைமை அனைத்தையும் இல்லாதொழித்து ஆட்சி புரிந்தான்.


தனது இளைய சகோதரனான வீரபாகு என்பானை யுவராஜாவாக்கி, தக்கண தேசத்தின் நிர்வாகத்தை அவனிடம் ஒப்படைத்தான். இன்னொரு இளைய சகோதரனான ஜெயபாகுவை ஆதிபாதாவாக்கி, உருகுணையின் பரிபாலனத்தை அவனிடம் ஒப்படைத்தான். மன்னன் தனது அமைச்சர்களை பரிசளித்து கௌரவித்ததோடு, இதுவரை நிலுவையாகவுள்ள வரிகளை அறவிடுமாறு பணித்தான். எனினும், ஆட்சியில் மூன்று முக்கிய பதவிகளை வகித்த, மூன்று சகோதரர்கள், அரசனுக்கு எதிரிகளாக மாறி ஜம்புத் தீபத்திற்கு (இந்தியா) ஓடிச்சென்றனர். அரசனின் பத்தொன்பதாவது ஆட்சியாண்டில், தமது சிறிய படையுடன் உருகுணைக்கும், மலையதேசத்திற்கும் திரும்பி வந்து அத்தோடு தக்கிண தேசம் முழுவதையும் மன்னனுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தனர். மன்னன் உடனே படையுடன் உருகுணைக்கும் மலையதேசத்திற்கும் வந்து



சிவதேவாலயம் (4) சிதைந்த கர்ப்பக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதேவாலயம் (4) – உடைவுற்ற லிங்கமும் ஆவுடையாரும்

கிளர்ச்சியாளர்களை ஆங்காங்கு கொன்றொழித்தான். பின்னர் தனது ஒரு மனைவி சமானியின் வழிச் சகோதரன் தலைமையில், படையைத் தக்கிண சேதத்திற்கு அனுப்பிக் கிளர்ச்சியாளர்கள் அனைவரையும் கொன்றழித்தான்.

முன்னர் சோழ மன்னனால் சிறைப்படுத்தப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்ட ஜெகதிபாலனின் மனைவியான பட்டமகிஷியின் மகள் லீலாவதி சோழ தேசத்திலிருந்து தப்பி, இலங்கைக்கு வந்து, விஜயபாகுவின் முன் பிரசன்னமாகினாள். மன்னன் அவளின் வரலாற்றைக் கேட்டு, அவள் அரச வழிவந்தவளென உறுதி செய்த பின்னர், அந்த அழகிய லீலாவதியைத் தன் பட்டத்து மகிஷியாக்கிக் கொண்டான். அவர்களுக்கு யசோதரா என்றொரு மகள் பிறந்தாள். வீரவன்மன் என்பானுக்கு, மேருகந்தாரப்பிரதேசத்தையும் தனது மகளையும் திருமணத்தின் மூலம் மன்னன் அளித்தான். யசோதராவுக்கும் வீரவன்மனுக்கும் இரட்டையர்களாக இரண்டு புதல்விகள் பிறந்தனர். மூத்தவளுக்கு லீலாவதி என்றும் இளையவளுக்கு சுகலா என்றும் பெயரிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறிருக்கும் காலத்தில், கலிங்கதேசத்து மன்னனோடு நல்லுறவைப் பேணும் நோக்கமாக, கலிங்கத்து இளவரசியான திரிலோகசுந்தரி என்பாளைத் தனது இன்னொரு ராணியாக ஏற்றுக் கொண்டான். அவர்களுக்கு சுப்தா, சுமித்தா, லோகநந்தா, இரத்தினாவளி, ரூபவதி எனும் ஐந்து புதல்விகள் பிறந்தனர். அத்தோடு விக்கிரமபாகு எனும் ஒரு புதல்வனும் பிறந்தான். திரிலோகசுந்தரி மன்னனின் அன்பை ஏனையோரிலும் பார்க்கக் கூடுதலாகப் பெற்றிருந்தாள். ஏனெனில், அதிக பிள்ளைகளை மன்னனுக்கு வழங்கியதோடு, பட்டத்து இளவரசன் ஒருவனையும் பெற்றிருந்தாள். அத்தோடு மன்னன், இரத்தினாவளி மீது தனிப்பாசம் கொண்டிருந்தான். சோதிட உடற்கூற்றியலின்படி இரத்தினாவளியே தகுந்த புதல்வனைப் பெறுவாளென அவன் நம்பினான்.

விஜயபாகுவிற்கு மித்திரா என்றொரு இளைய சகோதரி இருந்தாள். சோழ மன்னன் அவளை மணந்து கொள்ள விழைந்தபோது, விஜயபாகு அதனை மறுத்து பாண்டிய வம்சத்தில் வந்த இளவரசன் ஒருவனுக்கு



சிவதேவாலயம் (4)
ஒரு தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைத் திருமணம் செய்து வைத்தான். அவர்களுக்கு மானவர்மன், கீர்த்தி ஸ்ரீமேகன், ஸ்ரீ வல்லபன் என மூன்று புதல்வர்கள் பிறந்தனர். இளவரசி சுப்தாவை வீரபாகுவுக்கு மன்னன் திருமணம் செய்து வைத்தான். சுமித்தாவை ஜெயபாகுவுக்கும் மணம் முடிப்பித்தான். மகனது மகளான இரத்தினாவளியை மானவர்மனுக்கும், லோகநந்தாவை இளவரசன் கீர்த்தி ஸ்ரீ மேகனுக்கும், ரூபவதியை ஸ்ரீ வல்லபனுக்கும் திருமணம் புரிவித்தான். ரூபவதி இளவயதில் மரணமடைந்ததும், அவளது தங்கையான சுகலாவை (மகளின் மகள்) ஸ்ரீவல்லபனுக்கு மணம் முடிப்பித்தான். திரிலோக சுந்தரியின் நாட்டிலிருந்து வந்த இளவல்களான மடுகண்ணன், பீமாராஜா, பாலக்கரன் சுந்தரி ஆகியோரையும் தன்னுடன் இருத்திக் கொண்டான். இளவரசி சுந்தரியைத் தனது மகனான விக்கிரமபாகுவிற்கு மனைவியாக்கினான். அத்தோடு லீலாவதியையும் (யசோதரா - வீரவன்மன் மகள்) அவனுக்குத் திருமணம் புரிவித்தான். விஜயபாகுவின் ஆட்சி அமைதியாகவும் போரின்றியும் தொடர்ந்தது.

## விஜயபாகுவின் சமயப்பணிகள்

விஜயபாகு புலந்திநகரைத் தலைநகராக்கிக் கொண்டான். பலமானதும் உயரமானதுமான கோட்டை மதில்கள் புலத்திநகரில் அமைக்கப்பட்டன. கொத்தளங்கள் அமைக்கப்பட்டன. கோட்டையைச்சுற்றி ஆழமான அகழிகள் அமைந்தன. அதன் பின்னர் சமயப்பணிகளிலீடுபட்டான். பர்மிய மன்னன் அனுருத்தனுக்குத் தூதுவர்களை அனுப்பி, பௌத்தத்தில் நன்கு தெளிவறிவுடைய பிக்குகளை வரவழைத்தான். அவர்களைக் கொண்டு பௌத்தத்தின் மூன்று பித்திகா ஒழுக்கங்களையும் நாடெங்கும் செழிப்புற ஓதுவித்தான். மூன்று பித்திகாக்களையும் எழுதுவித்து, பிக்குகளுக்கு வழங்குவித்தான். இந்தியாவிலுள்ள போதிக்குப் பல தடவைகள் வைரங்கள், முத்துக்கள் போன்ற விலைமதிப்பற்ற திரவியங்களை அன்பளிப்பாக வழங்கினான். புலத்திநகரில் பல இடங்களில் விகாரைகளைக் கட்டுவித்தான். அவற்றினைப் பௌத்தத்தின் மூன்று பிரிவினருக்கும் வழங்கினான். பின்னர் மிகச்சிறப்பான விகாரை ஒன்றினையும், ஐந்தடுக்குகளக்கொண்ட பாசாடா கட்டிடத்தையும் அவற்றினைச்சுற்றி அழகான வதிவிடங்களையும் அமைத்து பலநூறு பிக்குகளை தங்கி வாழ வசதியளித்தான். புலத்திநகரில் புனித தந்ததாதுக் கோயிலை நிர்மாணித்தான். தர்மசங்கானியை மொழி பெயர்ப்புச் செய்ததுடன், ஒவ்வொரு நாள் அதிகாலையும் ஓதுவதற்கு ஒழுங்கமைத்தான். ஜம்புத்தீவிலிருந்தும் பிக்குகள் வருகை தந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் கன்னட மன்னனும் பல அன்பளிப்புகளைத் தமது தூதுவர்கள் மூலம் விஜயபாகுவிற்கு அனுப்பிவைத்தான். விஜயபாகு அன்போடும் மரியாதையோடும் அவர்களை வரவேற்று ஏற்றுக்கொண்டான். முதலில் கன்னட மன்னனின் தூதுவர்களோடு, தனது தூதுவர்களை பெறுமதியான பல அன்பளிப்புகளோடு கன்னடத்திற்கு அனுப்பி வைத்தான். சோழ நாட்டினூடாக அவர்கள் சென்றபோது, வழிமறித்த சோழ மன்னன் சிங்களத்தூதுவர்களின் காதுகளையும் மூக்கையும் அரிந்துவிட்டான். தூதுவர்கள் மூளிகளாக விஜயபாகுவிடம் வந்து முறையிட்டனர். கோபமுற்ற மன்னன், அமைச்சர்களோடு ஆலோசனை செய்து, இலங்கையில் வசித்த சோழநாட்டுத் தமிழர்களை அழைத்து, 'எங்களது சமுத்திர மத்தியிலுள்ள ஏதாவது தனித்தீவு ஒன்றில் இருவரும் தனிச்சமர் புரிந்து எமது பலத்தினை நிருபிப்போம் அல்லது இருவரது சேனைகளும் மோதி முடிவு செய்வோம். இதனைச் சோழ மன்னனிடம் சென்று கூறுங்கள்" எனக்கூறி அனுப்பி வைத்தான். அவர்களைப் பெண்கள் அணியும் ஆடையணிகளோடு சோழமன்னனை அவமானப்படுத்தும் நோக்கோடு சோழநாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

அதன்பின்னர் தனது படையுடன் அனுராதபுரத்திற்குச் சென்றான். அத்தோடு இரண்டு சேனாதிபதிகளின் தலைமையில் மித்திகாவத்தைத் துறைக்கும், மகாதீர்த்தத்துறைக்கும் இரு பெரும் சைனியங்களை சோழ மன்னனுடன் போரை ஆரம்பிக்குமாறு அனுப்பி வைத்தான். கடற்கப்பல்கள் மூலம் சிங்களச் சேனை சோழ நாடு புறப்படத் தயாராகியபோது அப்படையணிகளில் இருந்த வேளக்காரப்படைப்பிரிவினர், அதற்கு மறுத்துக் கிளர்ச்சி செய்து, இரு சேனாதிபதிகளையும் கோபமுற்ற யானைகள் போலத் தாக்கிக் கொன்றதோடு நில்லாது, புலத்திரநகரையும் சுற்றி வளைத்துக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் மன்னனின் சகோதரியையும் அவளது மூன்று புதல்வர்களையும் சிறைப்படுத்தியதோடு, புலத்திநகர் அரண்மனையையும் தீயிட்டுக் கொளுத்தினர். அனுராதபுரத்தில் அவ்வேளையிருந்த விஜயபாகு இதனைக் கேள்வியுற்று தக்கிணதேசத்திற்கு ஓடிச்சென்று, தனது திரவியங்களை வத்தகிரியில் மறைவாக ஒளித்தான்.

பின்னர் உருகுணை யுவராஜா வீரபாகுவுடனும் அவனது சேனா வீரர்களுடனும் புலத்திநகர் வந்து, வேளக்காரப்படையினருடன் கடும்போர் தொடுத்தான். தனக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர்களை சிறைப்படுத்தினான். அவர்களை மன்னனின் சேனாதிபதிகள் கொல்லப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு அழைத்து வந்து, கொல்லப்பட்ட அச்சேனாதிபதிகளின் சடல எச்சங்களாக மிஞ்சிக் கிடந்த எலும்புகளுடன், பின்புறமாகக் கட்டப்பட்ட கரங்களுடனும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டனர். இழுத்து வரப்பட்ட கிளர்ச்சியாளர்களை தீ இட்டுக் கொன்றொழித்தான். இவ்வாறு தனக்கெதிரான கிளர்ச்சியாளர்களைக் கொன்று இலங்கையைச் சுதந்திர புரியாக ஆட்சி செய்தான்.

சோழ மன்னனைப் போரில் மீண்டும் முறியடிக்க வேண்டுமென்ற வன்மத்தை விஜயபாகு மறக்கவில்லை. தனது நாற்பத்தைந்தாவது ஆட்சிக் காலத்தில், பெரும் சைனியத்துடன் சோழ மன்னனை போருக்கு வருமாறு அறைகூவி, கடற்றுறையில் காத்திருந்தான். சோழர் படை வரவில்லை. அதன்பின்னர் தன்படையுடன் புலத்திநகர் திரும்பினான். பின்னர் பல குளங்களைக் கட்டுவித்தும், பல பழைய குளங்களைப் புணரமைத்தும் விவசாயத்திற்கு வழங்கினான். மகாகமத்தில் சோழரால் உடைவுற்ற புனித தந்ததாதுக்கோயிலை மீளமைப்பித்தான். தாயார் தகனம் செய்யப்பட்ட இடத்திலும், தந்தையார் தகனம் செய்யப்பட்ட புத்தலவித்தியிலும் ஐந்து பெரும் வதிவிடங்களை அமைத்து அவற்றினைப் பிக்குகளுக்கு வழங்கினான். ஏராளமான விகாரைகளையும் அமைத்தான். சிவனொளிபாதமலை எனப்படும் சமன்குத்தா மலைக்கு, யாத்திரிகர்கள் இலகுவாக அடைவதற்கு வாய்ப்பாகப் படிக்கட்டுகள் அமைப்பித்தான்.



சிவதேவாலயம் (5) – பின்பக்கத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகுணையின் யுவராஜாவான வீரபாகு சடுதியாக மரணமடைய நேர்ந்தது. அவனது இறுதிக்கிரியைகளை நடாத்திய மன்னன், ஜெயபாகுவை யுவராஜாவாக்காது தனது மகன் விக்கிரமபாகுவை உருகுணையின் ஆதிபாதாவாக நியமித்தான். விக்கிரமபாகுவுக்கு கஜபாகு என்றொரு மகன் இருந்தான். விக்கிரமபாகு தனது குடும்பத்துடன், உருகுணையில் மகானககுலவைத் தலைநகராக்கிக் குடியேறி ஆட்சியை ஏற்றுக் கொண்டான். விஜயபாகு ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்

## விக்கிரமபாகு / ஜயபாகு

விஜயபாகு மரணமானதும், யுவராஜாவான உருகுணை மன்னன் விக்கிரமபாகுவிற்கு அறிவிக்காமல், விஜயபாகுவின் சகோதரி மித்தாவின் மூன்று புதல்வர்களும் ஆட்சியில் பொறுப்பேற்றுக் கொண்டார்கள் அத்தோடு விஜயபாகுவின் சகோதரனான ஜயபாகுவை இலங்கையின் அரசனாக்கினர். மித்தாவின் மகனான மானவர்மனை யுவராஜாவாக்கினர். அதன்பின் மானவர்மனும் இரு சகோதரர்களும் மன்னன் ஜயபாகுவோடு சேர்ந்து, ஆபரணங்கள், வைரங்கள் ஆகிய அரண்மனைத் திரவியங்களையும், தேர், யானைகள், குதிரைகள் என்பனவற்றையும் பங்கு போட்டுக் கொண்டனர். பின்னர் பெரும் சைனியத்துடன், விக்கிரமபாகுவைச் சிறைப்படுத்தும் நோக்குடன் புறப்பட்டனர். இவற்றினை அறிந்த விக்கிரமபாகு, 'எனது தந்தைக்கு இறுதிக்கடமைகளைச் செய்யும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. எனினும், புலந்திநகரத்திற்குச் சென்று எனது தந்தை தகனமானவிடத்தில் அழுது எனது துயரத்தை ஆற்றிக் கொள்ளவாவது வேண்டும்." என முடிவு செய்து தன்னுடன் எண்ணூறு போர்வீரர்களையும் அழைத்துக்கொண்டு மகாநாககுலவிலிருந்து புறப்பட்டான். பானசபுக்கை (புத்தள) என்னுமிடத்தில் இரு படைகளும் சந்தித்துக் கொண்டன. விக்கிரமபாகு, தனக்கு எதிரான அனைவரையும் நாலா பக்கங்களும் சிதறியோட வைத்தான். பின்வாங்கி ஓடிய சகோதரர்கள், மீண்டும் படை திரட்டி வந்து, விக்கிரமபாகுவின் படையை ஆதிபதாகாஜம்பா எனுமிடத்தில் மோதினர் ஆறு தடவைகள் வெவ்வேறிடங்களில் இரு படைகளும் மோதின யுத்தத்தில் விக்கிரமபாகு தன் ஒன்றுவிட்ட சகோதரர்கள் மூவரையும வெற்றிகொண்டு புலத்திநகர் நோக்கி தன் படையுடனும், அமைச்சர்களுடனும் பிரதானிகளுடனும் புறப்பட்டான். அரண்மனையுள் பிரவேசிக்குமுன் தன் தந்தை புதைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று தனது ஆழ்ந்த துயரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையையும் செலுத்தினான். பின்னர், தனது அரண்மனைக்கு வந்து, தன் வெற்றிக்காகப் பாடுபட்ட வீரர்களுக்கும், ஏனையோருக்கும் உரிய சன்மானங்கள் வழங்கினான்.

அதேவேளை, தப்பிச் சென்ற மானவர்மனும் ஏனைய இரு சகோதரர்களும் தக்கிணதேசத்தையும் உருகுணையையும் தமது அதிகாரத்தின் கீழ்க் கைப்பற்றிப் பங்கிட்டுக் கொண்டனர். மானவர்மன் தனது சகோதரனான கீர்த்தி ஸ்ரீ மேகனுக்கு, உருகுணையின் மேற்குப்பகுதியான துவாசசகாப் பகுதியையும் மற்றைய சகோதரன் ஸ்ரீ வல்லபனுக்கு உருகுணையின் கிழக்குப்பகுதியான இன்னோர் அட்டசகசா பகுதியையும் அவ்வப்பகுதிகளில் குடியேறி நிர்வகிக்குமாறு வழங்கினான். தான் தக்கிணதேசத்தினை எடுத்துக் கொண்டான். இந்தப்பிரிவுகளின் தலைநகரங்களாக முறையே புங்ககாமம், உடுந்துறை, மகாநாககுல என்பன அமைந்தன. தோல்வி கண்ட ஜயபாகுவும், மூன்று சகோதரர்களின் தாயார் மித்தாவும் கீர்த்தி ஸ்ரீ மேகனுடன் வசித்தனர்.

ஒருவருடம் கழிந்தது மானவர்மன் பழைய பகைமையை மறக்கவில்லை. விக்கிரமபாகுவைப் போரில் பழிவாங்கும் எண்ணத்துடன், போர் வீரர்களைத் தக்கிண தேசத்தில் திரட்டினான். ஒற்றர்கள் மூலம்



**சிவதேவாலயம் (5) - கர்ப்பக்கிரகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேள்வியுற்ற விக்கிரமபாகு பெரும்படையுடன் அவர்களை அவர்களின் பிரதேசத்திலேயே சென்று சந்தித்து, அவர்களைத் தோற்கடித்தான் எதிரிகள் பஞ்சஜோனா (கல்யாணி)வில் ஓடி மறைந்தனர். விக்கிரமபாகு அவர்களைச் சிறைப்பிடிக்கும் நோக்குடன் கல்யாணி நோக்கிப் பின் தொடர்ந்தான்.

ஆனால், அந்நேரத்தில் வீரதேவன் எனும் அரசனொருவன் ஆரிய தேசத்திலிருந்து (இந்தியா) தனது சேனையுடன் மகாதீர்த்தத்தில் இலங்கையைக் கைப்பற்றும் நோக்குடன் வந்திறங்கினான் அதனால் விக்கிரமபாகு கல்யாணியிலிருந்து மன்னாருக்குத் தன் படையை நகர்த்த நேர்ந்தது. இரு சைனியங்களும் மோதிக்கொண்டன. அந்த யுத்தத்தில் அரசனின் இரு புதல்வர்களான இளவரசர்கள் அனிகங்காவும் சகோதரன் சேனாதிபதி கீர்த்தியும், மேலும் பலரும் மரணமடைந்தனர். இன்னொரு படைத்தலைவன் சிரக்சயன் உயிரோடு கைதாகினான். இந்நிலையில் விக்கிரமபாகு, பயத்துடன் தனது எஞ்சிய வீரர்களுடன் பின் வாங்கியோடி அரண்மனையிலிருந்த திரவியங்களை எடுத்துக் கொண்டு, மலையதேசத் திற்குத் தப்பி ஓடினான். வீரதேவன் மன்னனின் படையைத் துரத்திவந்து, நகரத்தினைக் கைப்பற்றி சிலநாட்கள் இருந்தான். பின்னர், விக்கிரபாகுவைச் சிறைப்பிடிக்க, மலைய தேசத்திற்குப் படையுடன் சென்றான். அங்கு நடைபெற்ற யுத்தத்தில் வீரதேவனின் சிரம் கொய்யப்பட்டது. அவனின் படை தோல்வியைத் தழுவியது. விக்கிரமபாகு புலத்திநகர் வந்து அரசனானான்.

மானவர்மனும், அவனிரு சகோதரர்களும் போர் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டுத் தமது பிரதேசங்களுக்குச் சென்று அரசியற்றினர். சமயப்பணிகள் எதுவும் ஆற்றவில்லை. மக்களை வரிகள் மூலம், கரும்புச்சக்கையாக்கினர். உயர் குடியினரை உதாசீனம் செய்து, தாழ்ந்த வகுப்பினருக்கு பதவிகளை வழங்கினர். மிகுந்த வரிகளை விதித்ததோடு, விகாரைகளுக்குக் காணிக்கைகளாக வழங்கப்பட்டிருந்த வைரங்கள், ஆபரணங்கள் என்பனவற்றையும் தமதாகச் சூறையாடிக்கொண்டனர். எனினும், நான்கு சகோதரர்களும் ஐக்கியப்படாமையல் (மானவர்மன், கீர்த்திஸ்ரீமேகன் ஸ்ரீவல்லபன், விக்கிரமபாகு) இலங்கையை ஒரு குடைக்கீழ் ஆளவேண்டுமென்ற விருப்பினை ஐக்கியப்படாமையால் அடைய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 8
## பராக்கிரமபாகுவின் பிறப்பு

மன்னன் ஜெயபாகுவும், அவனது ராணி மித்தாவும் உருகுணையில் மரணமடைந்தனர். ஸ்ரீ வல்லபனின் மனைவி சுகலா எனபவள் மானவர்மன், லீலாவதி என்ற இரு பிள்ளைகளைப் பெற்றாள். மானவர்மனின் மனைவி இரத்தினாவளி, இரு புதல்விகளான மித்தா, பகவதி என்பாரைப் பெற்றாள். வீரவாகு எனப்படும் மானவர்மன் 'தனக்கு இரு புதல்விகளேயுள்ளனர். பட்டத்துக்கு மகனில்லையே' என எடுத்துரைத்தான். மானவர்மனும் பட்டமகிஷிக் கூறினான். இருவரும் கூடி இருக்கும் நாளில், மன்னன் ஒரு கனவு கண்டான். வெள்ளை யானை ஒன்று பட்டத்து மகிஷியின் படுக்கை அறைக்குள் நுழைவதாகக் கனவு கண்டான். 'தனது படுக்கையைச் சுற்றி அழகான ஒரு வெள்ளை யானை வலம் வந்தது' எனப் பட்டத்து மகிஷியும் தெரிவித்தாள். சோதிடர்கள் 'இது நல்ல சகுனம் உத்தமமான வீரப்புதல்வன் ஒருவன் பிறக்கவுள்ளான்' என்றனர். மானவர்மனின் மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அதனை நாடே பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தது.

இளவரசனின் உடலில் சில மச்சங்கள் காணப்பட்டன. மானவர்மன், அரசகுருவையும் பிராமணர்களையும் அழைத்து அவற்றினக் காட்டி விளக்கம் கேட்டான். அவர்கள் குழந்தையின் கரங்களிலும் கால்களிலும் இருந்த மச்சங்களை அவதானித்து, 'இந்தக் குழந்தை இலங்கை முழுவதையும் மட்டுமன்றி ஜம்புத்தீவையும் ஒரு குடைக்கீழ் ஆள்வான்" என்றனர். குழந்தை பிறந்தபோது அரண்மனை யானைகள் பெரிதாகப் பிளிறி ஆரவரித்தன. குதிரைகள் பெரிதாகக் கனைத்து ஆரவாரித்தன. இவையும் நல்ல சகுனங்களாக மன்னனுக்குப்பட்டிருந்தது.

மன்னன், தன் மகனுக்குப் பராக்கிரமபாகு எனப்பெயரிட்டான், அவனது எதிர்காலப் பராக்கிரமத்தை மனதிற் கொண்டு இப்பெயரை இட்டான். இளவரசனுக்குச் சகல சடங்குகளும் செய்யப்பட்டன. தனக்கு மகன் பிறந்த சங்கதியை இலங்கை மன்னனான விக்கிரமபாகுவுக்குத் தூதுவர் மூலம் அறிவித்தான். அதனைத் தூதுவர் மூலம் அறிந்த விக்கிரமபாகு, தனது சகோதரியின் மகனை எண்ணி மகிழ்ந்த வேளை, அக்குழந்தையின் தந்தையின் குணநலன்களையும் நடத்தைகளையும் எண்ணி வருந்தினான். பின்னர்," விஜயனை முதலாகக் கொண்டு தொடங்கிய அரச பரம்பரைக் கல்வியில், என் மருமகன் வைரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போல்வான். என் மருமகனை இங்கு, என்னிடம் வளர விட்டால், ஒரு தீய சக்தியும் அவனைத் தீண்டாது எனது மகன் கஜபாகு திறமையானவனல்லன். எனது இன்னொரு மகன் மகிந்தன், அரச பரம்பரையச் சேர்ந்த தாய்க்குரியவனல்லன், அதனால் அவனும் முடிக்குரியவனாகான். எனது இருதய விருப்பினை நிறைவேற்றக் கூடியவன் 'என முடிவு செய்து, அதனைத் தூதுவர்களுக்கு எடுத்துரைத்து மருமகனுக்குரிய ஆபரணங்கள், ஏனைய அன்பளிப்புகளை அளித்து 'குழந்தையை இங்கு அழைத்துவாரும்' என அனுப்பினான். இவற்றினைத் தூதுவர் மூலமறிந்த வீரபாகு (மானவர்மன்) "மன்னன் உரைத்தமை சத்திய வாக்குமாம் என்னுடலின் அங்கமான என் குழந்தையை எனது தீயசக்திகள் பாதிக்கும் என்பதற்காக அனுப்புவது சாத்தியமற்றது. என் குழந்தை விக்கிரமபாகுவோடு இணைந்தால் சூறாவளியுடன் சேர்ந்த நெருப்பு மாதிரி மன்னன் ஒளிர்வான். துரதிஷ்டசாலியான எமது நிலை இன்னும் மோசமாகும்". எனக்கூறித்தன் குழந்தையைத் தூதுவர்களிடம் அளிக்க மறுத்தான். தூதுவர்களுக்குத் தகுந்த சன்மானமாகக் காசுகள் வழங்கி அனுப்பி வைத்தான்.



சிவதேவாலயம் (5) – கர்ப்பக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவதேவாலயம் (5) – யாககுண்டம்**

## சங்கத்தாலி நகர் வருதல்

மானவர்மன் (வீரபாகு) மரணமான செய்தி அறிந்தவுடன், மற்றைய இரு சகோதரர்களும் விரைந்து வந்து, தமையனின் இறுதிக் கிரியைகளைச் செய்து முடித்தனர். கீர்த்தி ஸ்ரீ மேகன், தமையனின் ஆட்சியைத் தானே எடுத்துக் கொண்டான். மற்றைய இரு பிரதேசங்களையும் (உருகுணையின்) தம்பியான ஸ்ரீ வல்லபனுக்கு வழங்கி ஆளும்படி பணித்தான் தமையனின் கட்டளைப்படி, ஸ்ரீ வல்லபன், சிறுவனான பராக்கிரமபாகு, ராணி இரத்தினாவளி மற்றும் இரு புதல்விகள் (மித்தா, பகவதி) என்போரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு மஹானகுல வந்தான். அதன் பின்னர் இரத்தினாவளியின் மூத்த மகளான மித்தாவை தன் மகனான மானவர்மனுக்குத் திருமணம் செய்து வைத்தான். அமைச்சர்களை அழைத்து, 'இளவரசி மித்தா கலிங்க வம்சத்தினாள். அவளை அவளுடைய தாய், கலிங்கத்தில் உறையும் கஜபாகுவுக்குக் கலியாணம் செய்து கொடுக்க இரகசியமாக விருப்பம் கொண்டுள்ளாள். அவ்வாறு நிகழில் அவர்களின் பலம் அதிகரித்து விடும். அதனால் மித்தாவை எனது மகனுக்குக் கலியாணம் செய்து வைப்பதன் மூலம், அவனது பலத்தினை அதிகரிக்கச் செய்துள்ளேன்" என்றுரைத்தான். இதனைக்கேள்விப்பட்ட சூரியமரபினைச் சார்ந்த ராணி மறுப்புத் தெரிவித்தாள் 'கலிங்க மரபில் வந்த விஜயமன்னன், இத்தீவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்த இயக்கர்களை அழித்து இத்தீவை மக்கள் வாழ உகந்ததாக்கினர். அன்றிலிருந்தே கலிங்க மரபு மன்னர் வழி வருகின்றது. உங்களுடைய மகன் சந்திரமரபு வழிவந்தவன் எனது மகனை மணந்து கொள்வதன்மூலம் சூரிய வழியாகி விட முடியுமா?" என ராணி எதிர்ப்புத் தெரிவித்தும், திருமணம் நடைபெற்றது.

புலத்திநகர் மன்னனான விக்கிரமபாகு இருபது ஆண்டுகள் ஆட்சியின் நிறைவில் மரணமடைந்தான். அதன்பிறகு கஜபாகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். அதனைக் கேள்விப்பட்ட உருகுணை கீர்த்தி ஸ்ரீ மேகனும், ஸ்ரீவல்லபனும் கொதிப்படைந்தான். எங்களில் மூத்தவன் விக்கிரமபாகு ஆதலால் அரசு அவனுக்குரியதாக இருந்தது ஆனால் அவனுடைய மகன் நாட்டினை ஆளக்கூடிய வயதினனல்லன். இளம் பராயத்தவன், அவன் ஆட்சியை ஏற்று முடிசூடுமுன் நாம் தடுத்தாக வேண்டும்" என்று முடிவெடுத்து, பணத்தை வரி வழங்கி வேளக்காரப் படையினரைச் சேர்த்துக் கொண்டு, தனது படைகளுடன் புலத்திநகரை இரு புறங்களிலும் சூழ்ந்து கொண்டனர். கஜபாகு, அமைச்சர் பிரதானிகளை அழைத்து, "இரு மன்னர்களின் படைகளும் வேளக்காரப்படை முழுவதும் எமக்கு எதிராக இரு புறங்களும் எழுந்துள்ளன. நாங்கள் உடனடியாக மிகவும் பலமான பக்கத்தைத் தாக்கி அழிக்க வேண்டும். அதன் பின் மற்றதையும் அழிக்கவேண்டும்". என்றான். அதன்பின் தன் படையுடன் ஸ்ரீ வல்லபனின் சேனையை எதிர்கொண்டு, காணாவிலிருந்து மாணவரை நடந்த தாக்குதலில் தோல்வி கண்ட ஸ்ரீவல்லபன் தனது நாட்டிற்கு ஓடித்தப்பினான். அதேபோன்று கீர்த்திஸ்ரீமேகனும், கோகண்ணன் என்ற கஜபாகுவின் தளபதியால் தோற்கடிக்கப்பட்டு, தன் நாட்டிற்கு ஓடிப்போனான். கஜபாகு புலத்திரநகருக்குச் சென்று, தனக்கு எதிராகத் தொழிற்பட்ட துரோகிகளைத் தண்டித்து ஆட்சியை ஏற்றுக் கொண்டான். அதன்பின் இம்மூன்று மன்னர்களும் தத்தமது நாட்டெல்லைகளுள் சமாதானமாக வாழலாயினர்.

ஸ்ரீவல்லபனாகிய சிறிய தந்தையுடன் வாழ்ந்து வந்த பராக்கிரமபாகு, சிறிய தந்தை மூலம் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். இந்நிலையில், "என் போன்ற மன்னனின் புதல்வர்கள், தமது இலட்சியங்களைக் கைவிட்டு, இவ்வாறு எல்லைப்புறங்களில் வாழ்வது நியாயமாகுமா? ஆதலால், நான் எனது பிறந்த இடத்திற்குப்போய், அங்கு யுவராஜாவாக வேண்டும்" என எண்ணமிட்டான். அதன்பின் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிமானிகளோடு அங்கிருந்து புறப்பட்டு சங்கத்தாலி என்ற பிரதேசத்தை வந்தடைந்தான். இதனைக் கேள்விப்பட்ட கீர்த்திஸ்ரீமேகன், "எனது அரசை என்பின் ஆள எனக்கு மகனில்லை எனது தனிமையும், மகனில்லாக் குறையும் தீரப்பராக்கிரமபாகு வந்துள்ளான்" என நினைந்து, அவனைத் தக்க சுபவேளை ஒன்றில் சென்று சந்தித்து அவனை அழைத்து வந்தான், பராக்கிரபாகுவை, விழிகளில் ஆனந்தக் கண்ணீர் சொரியக் கட்டித் தழுவினான். பராக்கிரமபாகு, தன் இன்னொரு சிறிய தந்தையுடன் வாழலானான்.

## அத்தியாயம்: 9
## பராக்கிரமபாகுவின் திக்விஜயம்

**தா**ன் பிறந்த பிரதேசத்திற்கு வந்த பராக்கிரமபாகு இங்கு மிக மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தான். ஆட்சிக்கலை முதலான. பல் கலைகளையும் கற்றுத் தன் திறனை வளர்த்துக் கொண்டான். சமயநெறிகள், இலக்கியம், கவிதைபாடும் ஆற்றல் என்பனவற்றை வளர்த்துக் கொண்டான். மன்னனும், தன் பெறா மகனைத் தான் செல்லுமிடமெல்லாம் அழைத்துச் சென்றான்.

ஒரு நாள் அவ்வாறான ஒரு பயணத்தின் போது பராக்கிரமபாகு, பாடத்தாலி எனும் கிராமத்திற்கு வந்தனர். இக்கிராமத்தில் தான் மன்னனின் எல்லைப்புறப் பிரதேசங்களைக் காவல் காத்து வரும் சங்கா சேனாதிபதி வாழ்ந்து வந்தான். மன்னனும் இளவலும் வரும் செய்தி அறிந்த சங்கா, கிராமத்தை அலங்கரித்து, வரவேற்பளித்து, தலை வணங்கி நின்றான். அவனது விருந்தோம்பலை ஏற்றபின், அந்தக் கிராமத்திற் சில நாட்கள் தங்கியிருந்தனர். ஒருநாள் மன்னன், சேனாதிபதியிடம், "எனது மகன் உபநயனம் தரித்துக் கொள்வதற்கான வயது வந்துள்ளது. அதற்கான ஆயத்தங்களைச் செய்க" என்று பணிந்தான். கிராமமே விழாக் கோலம் பூண்டது. மூன்று நாட்கள் விழா நடந்தது. மும்மணிகளுக்கும் தானம் வழங்கப்பட்டது. பிராமணர்கள் வேதம் ஓத, உபநயனச்சடங்கு நடந்தேறியது. வசந்தகால விளையாட்டு விழாவில் கலந்து மகிழ்ந்திருக்கும்போது தூதுவர்கள், உருகுணையிலிருந்து வந்து, ஸ்ரீ வல்லபமன்னர் மரணமடைந்தார்" என்ற செய்தியைத் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மானவர்மன்

ஸ்ரீ வல்லபன் இறந்ததும், அவனது மகனான மானவர்மன் ஆட்சியை ஏற்றுக் கொண்டு, மித்தாவை ராணியாக்கினான். அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். சகோதரன் இறந்த செய்தியை அறிந்த கீர்த்தி ஸ்ரீ மேகன், பராக்கிரமபாகுவுடன் உடனடியாக சங்கத்தாலி நகரிற்கு வந்து தங்கினான். ஓர் ஆண்டு அங்கு தங்கினர். அவ்வேளை மானவர்மனின் இரண்டாவது ராணியான பகவதிக்கு, கீர்த்திமேகன் என ஒரு மகன் பிறந்த செய்தியும் தெரிய வந்தது. அவற்றினைக் கேள்வியுற்ற மன்னன், தனது பரம்பரை நன்கு பெருகுவதாக எண்ணி மகிழ்ந்தான்.

பராக்கிரமபாகு தன் கனவுகளை மறக்கவில்லை. இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வரவேண்டுமென்ற அவாவை அவன் என்றும் கொண்டிருந்தான். 'இந்தத் தீவு அப்படி ஒன்றும் பரந்த பரப்பினைக் கொண்டதல்ல. ஆனால், புத்தரின் கேசம், தோள் எலும்பு, கழுத்து எலும்பு, பல், பிச்சாபாத்திரம், பாத அடையாளம் முதலானவற்றினைத் தன்னகத்தே கொண்ட பெருமையுடையது. அத்தோடு போதிமரத்தின் கிளையையுமுடையது. இது பௌத்தத்தின் புனித இல்லம் மூன்று மன்னர்களை இந்த நாடு கொண்டுள்ளது. கிராமிய நிலச்சுவான்தார்கள் போலவே இவர்களுள்ளனர். தத்தமது சிறு சிறு பகுதிகளை ஆள்வதோடு திருப்திப்பட்டு விட்டனர். எனது சிறிய தந்தை கீர்த்தி ஸ்ரீ மேகனைவிட, மற்றிரு சகோதரர்களும் மரணமடைந்து விட்டனர். இறப்பது இயற்கை ஆனால், என் போன்ற இளவரசர்கள் பெரும் சாதனைகளைப் படைக்கப் பிறந்தவர்கள். உமாகா ஜாதிக, இராமாயணம், பாரதம் என்பன அவற்றைத் தான் கூறுகின்றன. இராமன், இராவணனை அழித்தான். பாண்டுவின் புத்திரர்கள் தமது சகோதரர்களான துரியோத னாதியோரைக் கொன்றொழித்தனர். இவ்வளவும் அரசாட்சிக்காக நிகழ்ந்தவை. சாணக்கியன் என்ற பிராமணக் குரு, நந்த வம்சத்தையே அழித்தான். உலகில் நடந்தேறியவைதாம் இவை. 'என சிந்திக்கலானான். எனது தந்தையார் ஒரு மன்னர். அவரின் அரசு இன்று எனக்கு வரவுள்ளது. எனது சிறிய தந்தையார் வாழ்வின் அந்திம காலத்திலுள்ளார். நான் எனது ஒற்றர்களை நாடெங்குமனுப்பி, அனைத்து பிரதேசங்களின் நிலைமைகளை அறியவேண்டும். எதிரிகளின் பலவீன நிலையை அறிந்ததும் அவர்களை முறியடித்துக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும். உன்னுடைய மூன்று தந்தையர்களும் ஏழுமுறை யுத்தம் செய்தார்கள். அவர்களால் இந்த நாட்டை ஒரு முடிக்குள் கொண்டுவர முடியவில்லை. இந்த இலங்கையின் ஒரு சிறு பகுதியை ஆளப்போகிற சிறுவனான உன்னால் அது எவ்வாறு சாத்தியமாகும்? என்பார்கள். அவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுக்கக்காய்ச்சிய ஆணியை என் செவியில் செருகுவது போலவுள்ளன. ஆனால், நான் எனது இலட்சியத்தைக் கைவிடேன். எனது வளர்ப்புத் தந்தை, சிறியதந்தை எனது மனநிலை அறிவார். ஆனால், அவற்றினை நிறைவேற்று முகமாக நான் திக் விஜயம் மேற்கொள்வதை ஒரு போதும் அனுமதிக்கமாட்டார். என்மீது கொண்ட பாசம் அதற்குத் தடையாகும் ஆகவே, நான் எவரும் அறியாமல் எனது ஆதரவாளர்களோடும் வீரர்களோடும இரகசியமாக வெளியேற வேண்டியது தான்' எனப் பராக்கிரமபாகு முடிவு எடுத்துக் கொண்டான்.

அவ்வாறே ஓரிரவு தனது இலட்சியத்தினை அடையப்பயணப்பட்டான்.

### தலைநகரைவிட்டு அகல்தல்

தட்சிணதேச மன்னனான கீர்த்தி ஸ்ரீ மேகன் அறியாமல் தன் சில படை வீரர்களோடும் சில ஆதரவாளர்களோடும் தலைநகரைவிட்டு அகன்று செல்ல பராக்கிரமபாகு ஆயத்தமான வேளை சங்கநாதம் காற்றில் பலமாகக் கலந்து வந்தது. அது நல்லதொரு சகுனமாகுமெனப் பராக்கிரமபாகு எண்ணிக் கொண்டான். காவலர்கள் அறியாமல் நகரைவிட்டு வெளியேறி, பல லீக்குகள் கடந்து பாடலத்தாலி என்னும் கிராமத்தின் எல்லையை அடைந்தனர். அவ்விடத்தில் தன் படை வீரர்களையும் ஆதரவாளர்களையும் முன்னராகவே வந்து கூடி நிற்குமாறு



சிவதேவாலயம் (6) - கட்டிடச் சிதைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகு பணித்திருந்தான். ஆனால் அத்திட்டப்படி போதிய எண்ணிக்கையினர் அவ்விடத்தில் கூடியிருக்காமை இளவரசனுக்கு ஏமாற்றமாக இருந்தது. மன்னனின் தண்டனைக்குப் பயந்து ஒருங்கே வரவில்லை என்பதைப் புரிந்து கொண்டான். 'நான் சிறுவன் என எண்ணிவிட்டார்கள் போலும். வயதல்ல இங்கு முக்கியம். சக்தியும் அதிகாரப்பலமும் என்னிடம் இருப்பதை மறந்துவிட்டார்கள்' எனக் குமுறினான். 'எங்கள் பயணத்தை என் சிறிய தந்தையின் ஆட்கள் மறித்துவிடுவார்கள் எனப் பயப்படவேண்டாம். என்னுடன் முன்னேறுக' எனப் பணித்தான்.


மாலை படர்ந்தது. அன்றிரவு அவ்விடத்தில் தங்கிவிட்டு சூரிய உதயத்துடன் அவர்கள் புறப்பட்டு அக்கிராமத்தினுள் நுழைந்தனர். அக்கிராமம் சங்கா என்ற சேனாதிபதியால் நிர்வகிக்கப்பட்டு வரும் எல்லைக்கிராமமாகும். இளவரசனின் வருகையை அறிவிக்கும் சங்கொலி கேட்டுத் தன் பரிவாரங்களுடன் அவ்விடத்துக்குச் சங்கசேனாதிபதி விரைந்து, இளவரசனையும் அவன் ஆட்களையும் எதிர் கொண்டு வரவேற்றான். இளவரசனை இன்னார் எனத் .தெரிந்து அவன் முன் மண்டியிட்டுத் தலை சாய்த்து வணங்கினான். இளவரசனின் வீரர்கள் சங்கசேனாதிபதியை ஐயப்பட்டுக் கொன்றுவிட விரும்பியபோதிலும் அதற்கு இடமளிக்காத பராக்கிரமபாகு, அவனைத் தன் கரத்தால் தொட்டுத் தூக்கிவிட்டதோடு, அவனுடன் அவன் மாளிகைக்கு விருந்தினனாகச் சென்றான். சங்கசேனாதிபதி இளவரசனை வரவேற்று உபசரித்த அதே வேளை, மன்னனுக்குத் தெரியாமல் பராக்கிரமபாகு புறப்பட்டு திக்விஜயத்தை மேற்கொண்டமையை உணர்ந்து, இரகசியமாக மன்னனுக்குத் தகவல் அனுப்பி வைத்தான். இளவரசனுக்கு இந்தச் செய்தி தெரிய வந்ததும், தன் நீண்ட இலட்சியத்துக்கு இவன் செய்கை தடையாகுமென்றுணர்ந்து அவனைக் கொன்று விட முடிவு செய்தான்.

### சேனாதிபதியின் சிரசைக் கொய்துவிடுக

'சேனாதிபதியின் சிரசைக் கொய்துவிடுக.'எனக்கட்டளையிட்டான். கணப்பொழுதில் அவன் கட்டளை நிறைவேறியது. சேனாதிபதியின் விசுவாசமான வீரன் ஒருவன் கொதிப்படைந்து இளவரசன் முன் வந்து தன் வாளை ஏந்தியபடி' சேனாதிபதியை ஏன் கொன்றீர்கள்?'எனச்சத்தமிட்டான். இளவரசனின் விழிகளைச் சந்திக்க வலுவின்றி அவன் காலடியில் விழுந்தான். 'அவனைக் கைதுசெய்க' என இளவரசன் சொல்வதற்கு முதலே, இளவரசனின் நம்பிக்கையான வீரன் ஒருவன் அவன் தலையைக் கொய்துவிட்டான். தன் கட்டளையின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதேவாலயம் (6) - லிங்கோற்சவர்

நடந்துகொண்டமைக்காக அந்த வீரன் தண்டனைக்குள்ளாகினான். சேனாதிபதியின் மரணத்துக்குப் பின்னர் அவனது சொத்துக்களை தமக்குள் பகிர்ந்து கொள்ளத் தன் வீரர்களுக்குப் பராக்கிரமபாகு அனுமதித்தான்.

## பராக்கிரமபாகுவைச் சுற்றிய இடர்கள்

பாடலத்தாலிக் கிராமத்தைவிட்டு உடனடியாகப் புறப்பட்டால் சேனாதிபதியைக் கொன்ற பயத்தால் இளவரசன அகன்றுவிட்டான் எனக் கருதக்கூடும் என்ற காரணத்தால் அக்கிராமத்தில் சில காலம் பராக்கிரமபாகு தங்கினான். அத்துடன் மன்னனாகிய தன் சிறிய தந்தை தனது திறன்மிக்க சேனாதிபதியைக் கொன்றமைக்காக யாது நடவடிக்கை எடுக்கவுள்ளான் என்பதை அறியவும் விரும்பிச் சில நாட்கள் அக்கிராமத்தில் தங்கியிருந்தான். சங்கசேனாதிபதியின் விசுவாசமான வீரர்களும் பொதுமக்கள் பலரும் அதனால் அக்கிராமத்தைவிட்டு அகன்று வெளியேறினர். ஒருகட்டத்தில் வெளியேறிய மக்கள் ஒன்று சேர்ந்து இளவரசனைக் காண வந்தனர். அரசனுக்கு எதிராக இளவரசன் புரட்சி செய்கின்றான் அதனால் தான் சேனாதிபதியைக் கொன்றழித்தான் என எண்ணினர். இளவரசனைத் திருப்தி செய்யும் கருத்தோடு,' மாபெரும் வீரனே, உமது பணிக்காகக் காத்திருக்கின்றோம். அரசுக்கு உரிமையாளனாக நீர் இருக்க உமது தந்தைக்குரிய இந்த இராச்சியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது சிறிய தந்தை எப்படி ஆளலாம்? நாங்கள் அனைவரும் தலைநகரான சங்கன்தாதலிக்குச் சென்று இராச்சியத்தைக் கைப்பற்றுவோம். அரசனுக்குச் சொந்தமான பொருட்கள், திரவியங்கள் அனைத்தையும் கைப்பற்றிவருகின்றோம்' என்றனர். உடனடியாக அவர்கள் படவராகுன்னகந்தை எனுமிடத்துக்கு அரசைக் கவரும் நோக்கோடு புறப்பட்டுச் சென்றனர். இளவரசன் பராக்கிரமபாகு உடனடியாகத் தன் ஆட்களை அனுப்பி, அவ்வாறு சென்றவர்களின் தலைவர்களைத் தன் முன்னிலையில் தருவித்தான்.

'சேனாதிபதிக்கு அத்தண்டனை வழங்கியது அரசனுக்கு, என் சிறிய தந்தைக்கு எதிராகப் புரட்சிசெய்யும் நோக்கத்துடனல்ல. என்மீது ஆத்திரப்படவேண்டாம். சிறிய தந்தையின் இராச்சியத்தில் ஒரு சிறு துண்டு நிலத்தைக்கூட அபகரிக்கும் நோக்கம் எனக்கில்லை. நம்புங்கள். வயோதிப காலத்தில் எதிரிகளிடமிருந்து பெற்றோரைக் காப்பாற்றும் பொறுப்பு என்போன்ற பிள்ளைகளுக்குரியது. ஆகவே உங்கள் எண்ணங்களும் முயற்சிகளும் தவறானவை. கைவிடுங்கள்.' என்றெடுத்துரைத்தான். 'அக்கிராமத்தில் தொடர்ந்திருந்தால் இவ்வாறான மனிதர்கள் தனக்கும தந்தைக்கு மிடையில் பகைமையை மூட்டிவிடுவார்கள்' என எண்ணி பாடலத்தாலிக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு, சிறியாலைக் கிராமத்திலுள்ள, சிறிதேவி மலைக்கு அருகிலுள்ள புத்தகமத்தை நோக்கி வந்தான். ஆயுதாரிகளாக அக்கிராமத்துள் பிரவேசித்ததும் மக்கள் பலரும் பயத்தால் அக்கிராமத்தைவிட்டு ஓடிவிட்டார்கள். நெடுந்தெருவில் அவர்கள் நடந்து வரும்போது, 'அரசனின் சேனாதிபதியைக் கொன்ற இளவரசன் வருகின்றான்' என கூவிக் கொண்டு சிலர் இளவரசன் மீது பாய்ந்தார்கள். பயமறியாத பராக்கிரமபாகு தன் வாளை உருவி அவர்களைத் தாக்கிச் சிதறியோடச் செய்தான். பின்னர் புத்தகமத்தை வந்தடைந்தார்கள்.

புத்தகமத்தில் சில நாட்கள் அவர்கள் தங்கினார்கள். அக்கிராமமக்கள் ஒன்று சேர்ந்து இளவரசனைக் கைது செய்ய எண்ணி அவனிருந்தவிடத்தினைச் சுற்றி வளைத்தார்கள். போர் உக்கிரமாகத் தொடங்கியதும் அம்பு மழை பொழிந்தார்கள். இளவரசனின் வீரர்கள் தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் விதமாகச் சிதறி ஓடத்தொடங்கினர். இளவரசனின் வாளையும் குடையையும் தாங்கிவரும் மெய்க்காப் பாளர்களும் பயத்தால் அவ்விடம் விட்டு ஓடத்தலைப்பட்டனர். அதனைக் கண்டு நகைப்படைந்த இளவரசன், தன் திறனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதற்கு இதுவே தக்க தருணம் என்று கருதி, 'என் வாளைத் தாருங்கள்' எனப் பெரும் குரலில் இடிமுழக்கமிட்டான். சங்கநாதமாக அக்குரல் ஒலித்தது. ஓடிய வீரர்கள் நின்று திரண்டு வந்தனர். இளவரசனின் கரத்தில் சுழன்ற வாள் எதிரிகளின் தலைகளைக் கொய்து தள்ளுவதைக் கண்டனர். உற்சாகமடைந்து எதிரிகளைத் தாக்கி ஓடஓட விரட்டியடித்தனர். அன்றைய வெற்றியின் பெருந்திறன் இளவரசனுக்குரியதாகியது.

அதன் பின்னர் புத்தகாமத்தில் தங்கியிருக்கும் வேளையில், இராஜரட்டை மன்னன் கஜபாகுவின் சேனாதிபதிகளில் ஒருவனும், எல்லைப் புறக் காவலனும், காலவாவிப்பிரதேசத்தில் வாழ்ந்து வருபவனுமாகிய கோகண்ண நகரகிரி என்பானுக்கு தன்னை வந்து சந்திக்குமாறு ஓலை ஒன்றனுப்பி வைத்தான். அது தன் ஆதிக்க இறைமையைப் பரிசீலனை செய்வதற்கான ஓர் உபாயமாக அமைந்தது. இளவரசனின் வலிமையை அறிந்திருந்த சேனாதிபதி நகரகிரி, தன் அரசனிடம் அதற்கான அனுமதியைப் பெற வேண்டும் என்ற சிந்தனையும் அற்றவனாக புத்தகமத்துக்கு விரைந்து வந்து பராக்கிரமபாகுவைத் தன் பரிவாரங்களுடன் சந்தித்தான். அவனை வரவேற்ற இளவரசன், 'என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஏன் அரசனுக்குத் தெரியாமல் ஓடிவந்தேன். அரசனுக்குப் பிரியமான சேனாதிபதியின் சிரசைக் கொய்தேன். என்னை எதிர்த்த பகைவர்களை அழித்தேன். நான் அழைத்ததும் விரைந்து வந்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன்.' என்றான். சேனாதிபதிக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் ஆபரணங்களையும் வேறு பரிசில்களையும் வாரி வழங்கினான். அன்றிரவு தன்னுடன் தங்கிச்செல்லுமாறு வேண்டினான்.

## சேனாதிபதி நகரகிரி


அன்றிரவு சேனாதிபதி நகரகிரி ஒரு கெட்ட கனவு கண்டான். தன்னை ஆயுதங்களுடன் சுற்றி வீரர்கள் நிற்பது போலவும், சிரசைக் கொய்துவிடும்படி இளவரசன் கட்டளையிடுவது போலவும் கனவுகண்டு பயத்துடன் பெருங்குரலில் அலறியவாறு படுக்கையிலிருந்து கீழே நிலத்தில் விழுந்தான். பயத்துடன் எழுந்து தன் வீரர்களையும் பின் தங்கவிட்டுவிட்டு காட்டினுள் நுழைந்து ஓடத்தொடங்கினான். தன் வெற்றிக் குடையையும் வாளையும் கூட விட்டுவிட்டு ஓடிக் காலவாவியை வந்தடைந்தான். இந்தச் சங்கதியைக் கேள்விப்படட சேனாதிபதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்கள் செய்தறியாது தம் வசமிருந்த ஆயுதங்களை எறிந்துவிட்டு காடுகளுக்குள் ஓடி காலவாவியைச் சென்று அடைந்தார்கள். இவற்றை அறிந்த இளவரசன் தனக்குள் நகைத்துக் கொண்டான்.

இதை அனைத்தையும் கேள்விப்பட்ட கிர்த்தி ஸ்ரீ மேகன் தன் அமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடாத்தினான். 'கடும் பாதுகாப்பிருந்தும் காவலர்களின் கண்களில் படாது, தன் தோழர்களுடன் ஓடிப்போன இளவரசன் , நம் நாட்டின் திறன்மிக்க ஒரு சேனாதிபதியைக் கொன்றுள்ளான். அவனுடைய சொத்துக்களை அபகரித்துள்ளான். பல கிராமங்களில் எதிர்த்த வீரர்களைக் கொன்றழித்துள்ளான். புத்தகாமத்தில் கிபாகு அரசன் அறியாமலேயே சேனாதிபதியை அழைத்துப் பேசியுள்ளான். இளவரசனின் செயற்பாடுகள் மன்னர்களிடையே விரோதத்தை ஏற்படுத்தி யுத்த சூழ்நிலையை உருவாக்கிவிடலாம். எங்களுடைய அதிர்ஷ்டம் இது வரை அப்படியொன்றும் ஏற்படவில்லை. எனினும் இளவரசன் இவ்வாறான மடைத்தனங்களைத் தொடர்ந்து செய்ய இடமளிக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.' என்று எடுத்துரைத்த அரசன் சேனா, மகிந்தா மற்றும் தேவபதமுல்லாதாரகா என்னும் மகாலெனா (பிரதம செயலர்) மூவரையும் அழைத்து, 'ஆயுதம் தரித்த வீரர்களில் போதியளவினரை அழைத்துச் சென்று இளவரசனைக் கைது



**சிவதேவாலயம் (7) - இன்றைய சிதைவுற்ற தோற்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருக' எனக் கட்டளையிட்டான். ஏராளமான வீரர்களுடன் இந்த வீரர்கள் மூவரும் ஸ்ரீயாலாக் கிராமத்தைச் சென்றடைந்து, பத்துக் குழுக்களாகத் தம்மை வகுத்து, சுற்றி வளைத்தனர். இளவரசன் இவற்றைக் கேள்விப்பட்டான். 'இவர்கள் அனைவரையும் ஒருங்கே சேர்த்து அழிப்பது தான் புத்திசாலித்தனம்' என்றெண்ணி, மாத்தளை சாரக்கமம் சூழ றுப்பிரதேசத்தில் கரந்துறைந்தான். அவனது சூழ்ச்சியை உணராது கணவாய் ஒன்றின் ஊடாக அணிவகுத்துச் செல்லும்போது சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்த இளவரசன் அவர்களைத் தாக்கி நிர்மூலமாக்கினான். ஏனையோர் ஆயுதங்களை வீசி எறிந்துவிட்டு சிதறி ஓடித்தப்பினார்கள். வெற்றி அடைந்த இளவரசன் போதிகமக் கிராமத்துக்கு மீண்டான். அங்கிருந்து லங்காபர்வதத்துக்கு அருகே இறனம்புறக்கிராமத்தில் தங்கியிருந்தான். அங்கிருக்கும்போது மன்னனின் படை மீண்டும் இளவரசனைக் கைப்பற்ற முயன்று படு தோல்வி கண்டது. தொடர்ந்து பயணப்பட்டும் போர் புரிந்தும் வருவதால் தனது வீரர்களுக்கு நீண்ட ஒரு ஓய்வு தேவைப்படுவதாக இளவரசன் கருதினான். அவர்கள் மன்னன் மீதுள்ள பயத்தால் அரசனிடம் திரும்பிப்போக விரும்பமாட்டார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். மீண்டும் அம்பொக்க என்றவிடத்தில் மன்னனின் சேனாவீரர்கள் முகாமிட்டுத் தங்கியிருந்தபோது, இளவரசனின் படை பிரவேசித்தது. செம்மறி ஆடுகளிடையே புகுந்து கர்ச்சித்த சிங்கம்போல இளவரசனைக் கண்ட மன்னனின் வீரர்கள் சிதறி ஓடினர். ஓடியவர்கள் துரத்திக் கொல்லப்பட்டனர். அக்கிராமம் தீக்கிரையாக்கப்பட்டது. அங்கிருந்து இளவரசனும் வீரர்களும் நவக்கிரிக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

## கீர்த்தி ஸ்ரீ மேகன்

இந்நிலையில் கீர்த்தி ஸ்ரீ மேகனின் மந்திரிகள் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டினர். பராக்கிரமபாகு இளவரசன் தொடர்ந்து பெற்றுவரும் வெற்றிகள் அவர்களுக்குக் கலக்கத்தைக் கொடுத்தன. 'ஆயிரக்கணக்கான சேனாவீரர்களுடன் சென்று, இளவரசனின் வீரர்களைத் துவம்சம் செய்துவிட வேண்டும்' என முடிவெடுத்தனர். அவ்வாறே ஏராளமான வீரர்களுடன் சென்று, இளவரசன் தங்கியிருந்த வீட்டினை முற்றுகையிட்டனர். இளவரசன் தங்கியிருந்த பிரதேசம் குளிரான பகுதியாக அமைந்தமையால் அந்த வேளை சிவப்பு நிறக்கம்பளம் ஒன்றினை அவன் போர்த்தியிருந்தான். அவனுடைய வீரர்கள் அயலேயுள்ள காட்டுப்பகுதியில் வேட்டையாடலில் ஈடுபட்டிருந்தார்கள். இளவரசனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிவிடத்தை மன்னனின் வீரர்கள் சூழ்ந்தபோது துணைக்கு அங்கு எவருமிருக்கவில்லை. அதனை இளவரசன் உணர்ந்து கொண்டான். துணிச்சலுடன் தன் கொண்டையை இறுக்கி முடிந்து கொண்டான். தன்னுடலை இறுக்கமாகச் செங்கம்பளத்தால் போர்த்திக் கொண்டான். வலக்கரத்தில் வாளைப் பலமாகப்பற்றியவாறு, யானைக் கூட்டத்துக்கு நடுவே புகுந்த சிங்கம் போல மன்னனின் வீரர்கள் நடுவே பாய்ந்து மன்னனின் படையைச் சிதற அடித்தான். அதன் பின் தன் படை வீரர்களை அழைத்து ஆலோசனை நடாத்தினான்.'என் சிறிய தந்தைக்கு என் மீது சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளது. எவருமறியாமல் நாம் இராச்சியத்தை விட்டு வெளியேறியதும். சங்காசேனாதிபதியைக் கொலை செய்ததும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதனைத் தீர்க்க வேண்டும்' என்றான். அவர்கள் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, கீர்ததி ஸ்ரீ மேகனின் இராச்சியத்தைக் கடந்து, கஜபாகுவின் ஆட்சிப்பிரதேசமான இராஜரட்டையிலுள்ள ஜனபத பிரதேசத்துக்குள் பிரவேசித்தனர்.


தன் ஆட்சிப்பிரதேசத்துக்குள் இளவரசன் வந்துள்ளான் எனத் தன் மெய்க்காப்பாளர்கள் மூலம் அறிந்து கொண்ட கஜபாகு யாது செய்ய வேண்டுமென அமைச்சர்களுடன் ஆலோசனை புரிந்தபின்னர், ஆபரணங்களையும் வேறு விலை மதிப்புள்ள பொருட்களையும் பரிசில்களாக அனுப்பி இளவரசனை அன்புடன் வரவேற்றான். 'கீர்த்தி ஸ்ரீ மேகனின் பெறுமதியுடைய மகனான நீங்கள் அவருடன் ஏற்பட் மனஸ்தாபம் காரணமாக வந்துள்ளீர்கள். நாங்கள் இணைந்தால் எந்தவொரு எதிரிகளும் எம்மை வெற்றி கொள்ள முடியாது. வந்து என்னைச் சந்திக்கவும்' என்ற தகவலையும் அனுப்பி வைத்தான். இராஜரட்டை மன்னன் தன் இலட்சியநோக்கங்களுக்கு எவ்வாறு துணைநிற்பான் என்பதை அறியவும், அந்த இராச்சியத்தின் நிர்வாக நடைமுறைகளை அறியவும் இளவரசன் விரும்பினான். அதற்கு முன் கஜபாகு மன்னனும் அமைச்சர்களும் தன்னை அழைத்தமையில் இருக்கின்ற விருப்பினை அறிந்து வருமாறு தனக்கு இஷ்டமான நிமலன் என்ற வீரனை செய்தி காவியோடு அனுப்பிவைத்தான். அதன் பின்னர் புலத்திநகரின் (பொலநறுவை) சமீபமாக முகாமிட்டான். அதனைக் கேள்விப்பட்ட கஜபாகு தன் பரிவாரங்களோடு அவ்விடத்துக்கு வந்து இளவரசனைத் தன்னுடன் தன் யானையில் அமர்த்தி ஊர்வலமாகப் பொலநறுவை நகரினைக் காட்டியவாறு அரண்மனைக்கு அழைத்துவந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 10
## பராக்கிரமபாகுவின் அரண்மனை வாழ்வு

**அ**ரண்மனையில் சில ஆண்டுகள் விருந்தினனாகத் தங்கி, கண்டியர்கள், பிராமணர்கள், அந்நியர்கள், தமிழர்கள், பன்மொழிபேசுவோர் யோருடன் பழகிப் பல்வேறு கலைகளையும் திறன்களையும் வளர்த்துக் கொண்டான். பொலநறுவை இராச்சியத்தின் பல்வேறு தொழிற்சிறப்புகளையும் தெரிந்து கொண்டான். பிக்குமாருடன் நல்லுறவினை வளர்த்து இதிகாச, புராணங்களைக் கற்றுக் கொண்டான். கஜபாகு மன்னனோடு முரண்பட்ட அமைச்சர்களுடனும் வீரர்களுடனும் தன் நெருக்கத்தைக் காட்டிக்கொண்டான். இவை மட்டுமன்றி கஜபாகு மன்னனோடு தன் உறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டி, உருகுணையில் வசித்து வந்த தன் தாயாருக்கு ஒரு கடிதம் அனுப்பி, அங்கிருந்த தன் சகோதரி பகவதி இளவரசியைத் திரண்ட செல்வங்களுடன் அழைப்பித்து, செல்வங்களைத் தனதாக்கிக் கொண்டு, தங்கையை கஜபாகு மன்னனுக்கு மனைவியாக்கித் தன் உறவினைப் பலப்படுத்திக் கொண்டான். யானையிலமர்ந்து பொலநறுவைப்பிரதேசம் எங்கும் உலாவந்து வர்த்தகர்கள், சாதாரணபிரசைகள் வீரர்கள் அமைச்சர்கள் ஆகியோருடன் நெருக்கமான பழக்கத்தை ஏற்படுத்திக்



சிவதேவாலயம் (7) - கர்ப்பக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். பொலநறுவையில் தன் எதிர்கால இலட்சியத்துக்கான உளவுபார்க்கும் வேலைகளைத் திறம்பட ஆற்றிக்கொண்டான்.

## பராக்கிரமபாகுவின் வீரம்

ஒருநாள் வீதிவழியே இளவரசன் வரும்போது குழுபிடித்த எருமை ஒன்று மூர்காவேசத்தோடு எதிர்பட்டவர்களைத் தாக்கியபடி ஓடிவந்தது. கண்டோர் அனைவரும் ஓடிவிட்ட நிலையில் இளவரசன் தனியனாக அதன் முன் எதிர்ப்பட்டு பெரும் பயங்கரக்குரலில் சிங்கம்போல கர்ச்சித்தான். வெறிபிடித்துவந்த எருமை அவ்விடத்தைவிட்டு ஓடித்தப்பியது. அதனைப் பார்த்த மக்கள் இளவரசனைப் பலவாறாகப் புகழ்ந்தேத்தினர். இதனைக் கேள்விப்பட்ட கஜபாகு அசூசை கொண்டான். தன்மீது கஜபாகு அசூசை கொண்டுள்ளான் என்பதை உணர்ந்து கொண்ட பராக்கிரமபாகு, தொடர்ந்தும் பொலநறுவையில் வசிப்பது ஏற்றதன்று எனப்புரிந்து கொண்டான். முதல் நடவடிக்கையாகத் தன் வீரர்களை அரண்மனையை விட்டு வெளியேறி ஜனபதவில் சந்திக்குமாறு அனுப்பி வைத்தான். தன் சொந்த நாடான தட்சிணதேசத்திற்குச் சென்று தங்கி இந்த மன்னனையும் அமைச்சர்களையும் வெற்றி கொண்டு சிறைப்படுத்த வேண்டும். அதன் பின்னர் என் சிறிய தந்தை கீர்த்தி ஸ்ரீ மேகனை இந்நகரத்துக்கு அழைத்து வரவேண்டும் என எண்ணிக் கொண்டான். அத்துடன் தான் முடிசூடுவதற்கு முன் தன் சிறிய தந்தையர் மூவரையும் வெற்றி கொள்ள வேண்டுமென எண்ணிக் கொண்டான். அதற்கு முதல் அரண்மனைக்குள் நுழைவதற்குரிய சுரங்கவாயில்களையும் தெரிந்து கொண்டான். புலத்தி நகரைவிட்டு வெளியேறுவதற்கு முன் கஜபாகு மன்னனிடம் விடைபெற்றுச் செல்ல வேண்டுமெனக் கருதினான். கஜபாகு மன்னன் முன் சென்று தன் நாட்டிற்குச் செல்ல விரும்புவதாகச் சொன்னான். விடைகேட்டான். 'உன் எண்ணங்கள் எல்லாம் நிறைவு பெற வாழ்த்துகின்றேன்' என வாழ்த்தி அனுப்பினான். அருகில் நின்றிருந்த பிரதம பிராமணக்குரு, இளவரசனை வாழ்த்தி, எதிரிகளை வெற்றி கொள்ளவும் எல்லா வளங்களைப் பெறவும் வாழ்த்துக் கூறினார். அதனைக் கேட்ட இளவரசன் 'இது நல்லதொரு சகுனம்' என எண்ணமிட்டான்.

அன்றே அரண்மனையைவிட்டு வெளியேறினான். வரும் வழியில் தட்சணதேசத்திற்குச் செல்கின்ற ஒரு வழிப்போக்கனைச் சந்தித்து, 'நீ அத்தேசத்தை அடைந்ததும் 'இளவரசன் பராக்கிரமபாகு நாட்டிற்குள் வந்ததைக் கண்டேன்' என அறிவிக்குமாறு சொல்லி அனுப்பிவைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவழியில் எதிர்பட்டுத் தாக்க முயன்ற பெண்கரடி ஒன்றை வாளினால் இரண்டு துண்டாக்கிவிட்டு ஜனபதவை வந்தடைந்து தன் வீரர்களுடன் சேர்ந்தான். பின்னர் தொடர்ந்து பயணப்பட்டு தட்சிணதேச எல்லைக் கிராமமான சாரகமத்திற்குள் பிரவேசித்தான். இளவரசன் நாட்டிற்குள் திரும்பிய செய்தியைக் கேள்விப்பட்ட மன்னன் கீர்த்தி ஸ்ரீ மேகன் மகிழ்ச்சி அடைந்தான். தூதுவர்களை அனுப்பி வரும்படி அழைப்பு விடுத்தான். அதற்கிடையில் மகன் வந்திருக்கும் செய்தி கேள்விப்பட்ட அவனுடைய தாய் இரத்தினாவளி அவனை தேடி வந்தாள். மன்னன் கிர்த்தி ஸ்ரீ மேகனுக்கும் மகனுக்கும் எற்பட்ட மனஸ்தாபத்தால் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடலாம் என எண்ணி மன்னனைச் சந்தித்து, அவனைச் சமானப்படுத்தினாள். பின்னர் மகனைச் சந்தித்து விபரம் தெரிவித்து மன்னனிடம் அழைத்துவந்தாள். முதலில் தலைநகர் சங்கத்தலிக்கு வர மறுப்புத் தெரிவித்த இறவரசன் தாயாரின் வற்புறுத்தலால் தலைநகருக்கு வந்து மன்னனைச் சந்தித்தான்.

பெறா மகனைக் கண்ட கீர்த்தி ஸ்ரீ மேகன் பூரிப்படைந்தான். ‘என் மனதினை அம்புபோலக் குடைந்து வேதனை தந்த துயரம் இன்று தீர்ந்தது. பராக்கிரமா. எனக்குக் கொள்ளி வைத்து என் இறுதிக்கடனை நிறைவேற்ற மகன் இல்லையே என ஏங்கிக் கிடந்தேன். துயர் தீர்க்க வந்துவிட்டாய். இளவரசனுக்குரிய அதிகாரங்கள் அனைத்தும் உனக்காகுக.’ என வரவேற்றுத் தழுவி மகிழ்ந்தான். அதன் பின்னர் நீண்டகாலம் கீர்த்தி ஸ்ரீ மேகன் உயிர் வாழவில்லை. அவனுடைய இறுதிச்சடங்குகளை பராக்கிரமபாகு சிறப்பாக ந்றைவேற்றி அரச கட்டில் ஏறினான். தட்சிணதேசத்தின் மன்னனாக முடி புனைந்து கொண்டான். வறட்சியினால் போதிய வளமின்றி வாடிய பிக்குகளுக்கும் பிராமணர்களுக்கும் போதிய வசதிகளை மன்னன் செய்தான் இதுவே மன்னனின் முதலாவது பணியாகும். இராச்சியத்தைப் புதிய மாவட்டங்களாகப் பிரித்தும் எல்லைப்புறத்தில் முகாம்களை அமைத்தும் தனக்கு நம்பிக்கையானவர்களை அவற்றை நிர்வகிக்க நியமித்தான். அத்துடன் தான் மன்னாகிய செய்தியை தன் சிறிய தந்தையர்களான இராஜரட்டை கஜபாகுவுக்கும் உருகுணை மானவர்மனுக்கும் தூதுவர் மூலம் அறிவித்தான்.

## அரசனாக முடிபுனைந்தல்

தட்சிணதேசத்தின் அரசனாக முடிபுனைந்ததும் தனது நீண்டநாட் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினான். இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற கனவு பெரும் இலக்காகவிருந்தது. அதற்கு முதல் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் திட்டமிட்டான். மழைநீரை மட்டும் நம்பி நெற்செய்கையி லீடுபட்டு வருவதையும் அளவு கணக்கில்லாத மழை நீர் அவமே சமுத்திரத்தில் கலப்பதையும் கண்ணுற்றான். ஒரு துளி மழைநீராவது வீணே சமுத்தி ரத்தில் கலக்கக் கூடாதென்பது அவன் இலட்சியமாகியது. தட்சிணதேசத்தின் ஒரு முக்கிய ஆறான தெதுறுஓயாவில் (ஜஜ்ஜரநதி) முதற்கட்டமாகச் சில நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தினான். அதே போல நாடெங்கும் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி நெல்வயல்களின் பரப்பினை அதிகரித்து நாட்டினை நெற்களஞ்சியமாக்கினான். பஸ்துன் கோறளையைத் தன் புதிய தலைநகரமாக மாற்றி அதற்கு பராக்கிரமபுரம் எனப்பெயரிட்டான்.

தட்சிணதேசத்தின் அதிபதியாக இருந்தபோது இராசரட்டையின் ஆட்சி யிலடங்கிய பராக்கிரம சமுத்திர வாவியைக் கட்டியதாகச் சூளவம்சம் குறிப்பிடுவது சாத்தியமன்று. அதனைப் பிற்காலத்திலேயே கட்டுவித்தான். எண்ணிக்கையில் 37 உக்கு மேற்பட்ட நீர்ப்பாசனக் குளங்களை இம்மன்னன் அமைப்பித்தான். 'வதிவிடத்தினைச் சுற்றியுள்ள நிலம் கூட மனிதனுக்குப் பயன் தராது வீணே கிடக்கக்கூடாது' என்பது அவன் இலக்காகும். இவ்வாறு தன் நாட்டின் அபிவிருத்தியை முதல் நோக்காகக் கொண்டு வெற்றி பெற்றான்.

**மலைராஜா**

'முன்னைய மன்னர்கள் மடத்தனமாகத் தங்கள் பொழுதினை யுத்தங்களில் செலவிட்டு நாட்டினை வீழ்த்திவிட்டார்கள். நாட்டினையும் சமயத்தையும் அவர்கள் விருத்தியுற வைக்கவில்லை. பௌத்த தர்மத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பிக்குகள் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு உந்துதலாக இல்லை' என மன்னன் கூறிக்கொண்டான். அனைத்து மாவட்ட நிர்வாகிகளுக்கும் நாட்டின் அபிவிருத்தி, மத விருத்தி என்பனவற்றைக் கவனிப்பதோடு இளைஞர்களுக்குப் போர்ப்பயிற்சி வழங்குமாறும் கட்டளை பிறப்பித்தான்.

முதலாவதாக தமிழ்படைகளுக்குத் தளபதியும், குருவக்கப்பிரதேசத்தில் வசிப்பவனுமான மலைராஜாவை அழைத்துப் போர்வீரர்களை ஒருங்கிணைத்துத் தயார் நிலையில் இருக்குமாறு கட்டளையிட்டான். நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைப் புறங்களில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படைத்தளபதிகளையும் தயார்படுத்தி வைத்தான். உண்ணாட்டு மாவட்டங்களை நிர்வகிக்கும் பன்னிரண்டு தலைவர்களும் தயார் படுத்தப்பட்டனர். மௌரியப்பிரதேசத்தில் வசிப்பவர்களான லம்பகர்ண இனத்தைச் சேர்ந்த லங்கா மஹாலானா, சிக்கநாயக்கா, ஜயமஹாலானா, சேத்தி நாயக்கா, மஹிந்தன் ஆகிய வீரர்களையும் தயார் நிலைப்படுத்தினான். கேரள வீரர்களும் ஆயிரக்கணக்கில் தயாராகினர். ஆயுதங்கள், குதிரைகள், யானைகள், தளபாடங்கள், தானியம், ஆடைகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டன. இராஜரட்டைமீது தாக்குதல்களுக்கு மன்னன் தாயாராகினான்.

## இராஜரட்டைமீது படை

இராஜரட்டைமீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களைப் பராக்கிமைபாகு செய்து முடித்தான். முதல் கட்டமாக மலையதேசத்தைக் கைப்பற்ற முடிவுசெய்தான். மலையதேசத்தின் தும்பறை, ஜற்றிகண்டகாப் பிரதேசங்களுக்குப் பொறுப்பாக விளங்கிய கஜபாகுவின் தளபதியான றக்கா தண்டநாயக்கனைத் தன்வசப்படுத்திக் கொண்டான். இயற்கைப் பாதுகாப்பினைக் கொண்டிருந்த மலையதேசத்தைத் தண்டநாயக்கன் பராக்கிரமபாகுவுக்குக் கையளித்தமையைத் தெரிந்து கொண்ட மக்களும் புரட்சிக்காரரும் தண்டநாயக்கன் திரும்பி வந்ததும் கொலைசெய்துவிட முடிவுசெய்தனர். அதனைக் கேள்விப்பட்ட தண்டநாயக்கன் அப்புரட்சிக்காரரைக் கைப்பற்றி அழித்தான். மலையகதேசத்தின் ஏனையபகுதிகளையும் கைப்பற்றி பராக்கிரபாகுவிடம் அளித்தான். அவ்வாறு மலைய பிரதேசத்தைப் பகுதி பகுதியாகத் தன் வசப்படுத்திக் கொண்டான். அதனை அடுத்து இராஜரட்டையைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது அவன் முக்கிய நோக்கமாகியது.அதற்கான திட்டங்களைப் பராக்கிரமபாகு வகுத்தான்.

அதன் பின்னர் றக்கா தண்டநாயக்கனுக்கு கேசதாது என்ற உயர் படை அந்தஸ்தும் செல்வங்களும் வழங்கி கஜபாகுவின் இராச்சியத்திலுள்ள மஜ்ஹிமா வக்ககா என்ற பிரதேசத்தைக் கைப்பற்றுமாறு அனுப்பி வைத்தான். அதன்படி நிலகிரிக்குச் சென்ற றக்க தண்டநாயக்கன் அப்பிரதேசத்தைக் கைப்பற்றினான். இதனைக் கேள்விப்பட்ட கஜபாகு பெரும் சைனியம் ஒன்றினை அவ்விடத்துக்கு உடன் அனுப்பி வைத்தான். அப்படை றக்க தண்டநாயக்கனால் முறியடிக்கப்பட்டது. அதனைக் கேள்வியுற்ற கஜபாகு, சிங்க ஏறுகள் போன்ற லோகஜித்வண்ணன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றக்கா லங்கநாதன் ஆகிய இரு தளபதிகளைப் படைகயோடு அனுப்பி, றக்கா தண்டநாயக்கனைத் தோற்கடித்து, ரேறுபலிக் என்ற பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டான். பராக்கிரமபாகு அதனை அறிந்து, சமன்தமல்லன், ஓத்துறாமல்லகன் என்னும் தளபதிகளின் தலைமையில் படைகளை அனுப்பி, கஜபாகுவின் சைனியத்தைத் தோற்கடித்து கோசகவக்காவைக் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு மலையதேசம் பராக்கிரபாகுவின் ஆதிக்கத்தினுள் வந்தடைந்தது.

வெற்றிவிழா கொண்டாடிய பின்னர் வேட்டைக்குப் புறப்பட்டனர். பராக்கிரமபாகு தன் பட்டமகஷியுடன் வேட்டைக்குச் சென்றான். காட்டுப்பிரதேசம் வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டு வலையிடப்பட்டது. பட்டமகஷியை ஒரு மரத்தடியில் தங்க வைத்த மன்னன் கண்களில் பட்டமரை ஒன்றினை வேட்டையாடப் புறப்படான். அந்த மரையானது இளம் யானை ஒன்றின் பருமனைக் கொண்டிருந்தது. மிக்க வெறியோடு இடப்பட்டிருந்த வலைகளை எல்லாம் அறுத்தெறித்தபடி பட்டத்துமகஷியை நோக்கிப் பாய்ந்து வந்தது. பயந்து போன வீரர்கள் மன்னனையும் மகஷியையும் தனியேவிட்டுவிட்டுச் சிதறி ஓடிப்போனார்கள். மன்னன் சிறிதும் அஞ்சாமல் ஈட்டி ஒன்றினால் அந்த மரையைத் தாக்கிக் காயப்படுத்தினான். காயமடைந்த அதன் கவர்க் கொம்புகள் மன்னனின் முன் கழன்று விழுந்தன. அதன் அருகில் சிங்கம் போல மன்னன் நிற்பதையும் மரையின் கவர்க் கொம்புகள் அவன் காலடியில் விழுந்து கிடப்பதையும் திரும்பிவந்த வீரர்கள் கண்டு வியந்தனர். 'சக்கிரவர்த்தியாக வேண்டிய மன்னன் இவன்' எனப் புகழ்ந்தனர்.

தன் படைகளை இரண்டு பிரிவுகளாக வகுத்து ஒன்றைக் கரையோரமாக முத்துத்தளங்களை நோக்கி அனுப்பி வைத்தான். மற்றைய படைப்பிரிவை உண்ணாட்டினூடாகக் காலவாவியை நோக்கி முன்னேறச் செய்தான். காலவாவிப்பிரதேசத்தில் கஜபாகுவின் வலிமை மிக்க தளபதியான கோகண்ணநாயக்க நகரகிரி என்பான் விளங்கினான். அவனது படையை பராக்கிமபாகுவின் தளபதி றக்காதிவண்ணன் என்பான் தன் பெரும் படையெடுப்பில் கோனாகமுகா என்றவிடத்தில் தோல்வி காண வைத்தான். இத்தோல்வியால் வெட்கமடைந்த கஜபாகுவின் தளபதி மீண்டும் சேனாவீரர்களைத் திரட்டிக்கொண்டு, தாக்குதலை மேற்கொண்டான். வெற்றியடைய முடியவில்லை. காலவாவிக் கோட்டை பராக்கிரமபாகு வசம் வீழ்ந்தது. அத்துடன் ஜனபதவின் சூரஅம்பாவன, லங்காகிரியின் போதிகமம் ஆகிய பிரதேசங்களும் பராக்கிரமபாகுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசமாயின. பின்னர் மகிந்தன், நகரகிரி ஆகிய தளபதிகளை மலாவலன நாட்டினைக் கைப்பற்றுமாறு படையோடு அனுப்பி வைத்தான். இவ்வீராகள் மன்னனின் கோரிக்கையை நிறைவேற்றினர்.

அதன்பின்னர் அவர்கள் நூற்றுக்கணக்கான போர்க்கப்பல்களில் சேனாவீரர்களோடு புறப்பட்டு முத்துச்சலாபத்தைக் கைப்பற்றினர். அந்தப் பிரதேசத்தின் தலைவனையும் கைதுசெய்தனர். அவ்விடத்தில் பலமான ஒரு படைமுகாமை அமைத்துவிடுமாறு மன்னன் கட்டளையிட்டான். இதன்படி பிலாவாசு என்றவிடத்தில் ஒரு கோட்டை அமைத்து பராக்கிரம் கொண்ட வீரர்களை அங்கு இருத்தினர். இதனைக் கேள்விப்பட்ட கஜபாகு அமைச்சர்களுடன் ஆலோசனை செய்து பெரும் சைனியம் ஒன்றினை அங்கு அனுப்பி வைத்தான். அதனை எவ்வாறு சமாளிக்க வேண்டுமென்பதைத் தெரிந்திருந்த பராக்கிரமபாகு, றக்கா தண்டநாயக்கனைப் படையோடு சென்று ஜனபதப் பிரதேசத்தைத் தாக்குமாறு பணித்தான். அதனால் தன் சைனியத்தை இரண்டு பிரிவுகளாக வகுத்து ஒன்றினை பிலவாசுக் கோட்டை அமைந்தபகுதிக்கும், மற்றையதை ஜனபதவுக்கும் அனுப்ப நேர்ந்தது. எனினும் கஜபாகுவின் படைகளைத் தண்டநாயக்கன் முறியடித்தான். அதன்பின்னர் ஜனபதவில் பலமாக ஒரு கோட்டையை மன்னனின் பணிப்பின்படி அமைத்தான். பராக்கிரமபாகுவின் சைனியத்தை முறியடித்து வெற்றி கொள்ள கஜபாகு பல தடவைகள் முயற்சி செய்து தோல்வியடைந்தான்.

## தேவசேனாதிபதி

அடுத்து பராக்கிமபாகு தன் தளபதிகளில் திறன் மிக்கவனான தேவசேனாதிபதி என்பானை அழைத்துச் சேனாவீரர்களோடு கஜபாகுவின் இன்னொரு பெரும் சைனியம் முகாமிட்டுள்ள கிரிபாப் பிரதேசத்தைத் தாக்குமாறு கட்டளையிட்டான். தேவசேனாதிபதி பல பிரதேசங்களைக் கைப்பற்றிப் பாதுகாப்பு அரண்களை அமைத்தபடி முன்னேறினான். கஜபாகுவின் தளபதிகளான ராமாநிலகிரி போன்றோரைக் கொன்றதோடு, கடக்குடா போன்ற தளபதிகளைக் கைப்பற்றி பராக்கிரமபாகுவிடம் அனுப்பிவைத்தான். இந்நிலையில் பராக்கிரமபாகு, தன் தளபதி மஹிந்த நகரகிரியை அழைத்து, 'நானே இனி யுத்தகளத்துக்குச் செல்லவிருக்கின்றேன். நான் அனுராதபுரத்தைக் கைப்பற்ற இன்றே புறப்படுகின்றேன்.' எனப் பெரும் சைனியத்துடன் புறப்பட்டு, அனுராதபுரத்தல் எதிரிகளின் படைகளை முறியடித்து அனுராபுரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றிக் கொண்டான். அதனைக் கேள்விப்பட்ட கஜபாகு தன் தளபதிகளுடன் வீரர்களை அனுப்பி அனுராபுரத்தைச் சுற்றி முற்றுகையிட்டு முக்கியவீதிகளில் தடைகளை ஏற்படுத்தினான். இந்தச் சூழ்நிலையினை அறிந்த தேவசேனாதிபதி தன் வீரர்களுடன் அனுராபுரத்துக்குப் புறப்பட்டான். எதிர்ப்பட்ட கஜபாகுவின் சைனியத்தைத் துவம்சம் செய்தான். அதே வேளை மலையராஜாவும் தன்படைகளுடன் தேவசேனாதிபதிக்கு உதவ முன்வந்தான். தேவசேனாதிபதியும் மலைய ராஜாவும் அனுராதபுரத்துக்குரிய பாதைகளில் முற்றுகையிட்டிருந்த கஜபாகுவின் படைகளை அழித்து அனுராதபுரத்தில் அரண் அமைத்தனர். அதன் பின்னர் பொலநறுவையை நோக்கிச் சைனியத்தைப் பராக்கிரமபாகு நடாத்தினான். செல்லும் வழியிலுள்ள நாலந்தா, ஆளிசாரா முதலான இடங்களில் இருந்த கஜபாகுவின் கோட்டைகளைப் பராக்கிரமபாகு கைப்பற்றிக் கொண்டான்.

பொலநறுவையைக் கைப்பற்றும் நோக்குடன் பராக்கிரமபாகுவின் படை நகர்ந்தது. இந்தவேளையில் உருகுணை மன்னன் மாணாபரணன் இந்த யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். முன்னர் பல தடவை கஜபாகுவுக்கு எதிராகப் படையெடுத்துத் தோல்வி கண்ட சோம்பிக் கிடந்த மாணாபாரணன், பராக்கிரமபாகு அடைந்து வருகின்ற வெற்றிகள் உருகுணை மன்னனுக்குக் கவலை அளித்தது. இராஜரட்டையைப் பராக்கிரமபாகு கைப்பற்றிக் கொண்டால் அவனால் உருகுணையைக் கைப்பற்றிக் கொள்வது கடினமாக அமையாது என எண்ணமிட்டான். எனவே பராக்கிரமபாகுவை இந்த யுத்தத்தில் தோல்வி காண வைக்க வேண்டும் என்று எண்ணித் தன் படைகளை கஜபாகுவுக்கு ஆதரவாக பொலநறுவை நோக்கி அனுப்பி வைத்தான். ஆனால் பராக்கிரமபாகுவின் வெற்றி உறுதிப்பட்ட நிலையில் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, பராக்கிரமபாகுவுக்கு உதவ முன்வந்தான். அதனால் தன் படைகளை சோபொரா என்றவிடத்தில் முகாமிடவைத்துப் பொலநறுவையைத் தாக்கச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தான்.

## கஜபாகுவின் தோல்வி

பராக்கிரமபாகுவின் படைகள் பொலநறுவையைச் சுற்றி முற்றுகையிட்டன. அவனுடைய படைகள் இலங்காநாதன், மகிந்தன் முதலான தளபதிகளின் தலைமையில், பொலநறுவைக்கு மேற்கு வாயிலாக விளங்கிய கண்டிகாமம் கணவாயூடாக நகர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதேவாலயம் (7)
ஊறுபட்டலிங்கம்

இக்கணவாயைக் காப்பாற்ற முயன்ற கஜபாகுவின் படை படு தோல்வியைச் சந்தித்து, பொலநறுவைக்குப் பின்வாங்கிச் சென்றது. பொலநறுவைக் கோட்டையைச் சென்றடைந்த பராக்கிமபாகுவின் படைத்தளபதிகள் மேககேது, கீர்த்தி இலங்காநாதன் முதலானோர் தாம் தான் புலத்தி நகருக்குள் முதலில் நுழையவேண்டுமென முன் நின்றனர். அதேவேளை கஜபாகு தன் எஞ்சிய சேனாவீரர்களை ஒன்று திரட்டி நகருக்கு வெளியே இயன்றளவு நகரத்தைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் அணிவகுத்தன. கஜபாகுவைக் கொல்லாது உயிருடன் கைதுசெய்யவேண்டுமென பராக்கிரமபாகு கட்டளையிட்டிருந்தான். நகரின் வெளியே நிகழ்ந்த யுத்தத்தில் கஜபாகுவின் படைகள் தோல்வி கண்டன. மன்னன் கஜபாகு கோட்டைக்குள் ஓடி இரகசியமான இடம் ஒன்றில் ஒளிந்து கொண்டான். பராக்கிரமபாகுவின் படைத்தளபதிகள் மேககேதுவும் கீர்த்தி இலங்காநாதனும் கோட்டை மதில்களைத் தகர்த்துக் கொண்டு புலத்திநகரினுள் புகுந்தனர். ஒளிந்திருந்த கஜபாகுவைத் தேடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதுசெய்து சிறையிலிட்டனர். அத்துடன் அந்த நாட்டின் இளவரசர்களான சோழகங்கனையும் விக்கிரமபாகுவையும் கைது செய்து சிறையிலடைத்தனர்.

அச்செய்திகளை நகருக்கு வெளியே தங்கியிருந்த பராக்கிரமபாகுவுக்குத் தெரியப்படுத்தினர். 'கஜபாகு மன்னனை உடனே சிரச்சேதம் செய்ய வேண்டும்' எனவும் தெரிவித்திருந்தனர். பராக்கிரமபாகு, மன்னனைக் கொல்வதை விரும்பவில்லை. உடனே தேவசேனாதிபதியை அழைத்து,'புலத்தி நகரத்தைக் கைப்பற்றிக் கொண்ட தளபதிகள் வெற்றியைக் கொண்டாடு முகமாகக் கஜபாகு மன்னனைக் கொன்றுவிட விரும்புகின்றனர். அதனால் உடனடியாக உன் படைகளுடன் சென்று அவ்வாறு நிகழாது பார்த்துக் கொள்க'என்று கட்டளையிட்டான். தேவசேனாதிபதி பராக்கிரமபாகுவின் பணிப்பின் படி புலத்தி நகரத்திற்குப் படைகளுடன் வந்தான். ஆனால் அவன் வருவதற்கு முதலே, கட்டுப்பாடுகளை இழந்த பராக்கிரமபாகுவின் படைவீரர்கள் புலத்தி நகரினுள் கொள்ளைகளில் ஈடுபட்டனர். வீடுகளை உடைத்து சூறையாடுதல் போன்ற வன்செயல்களில் ஈடுபட்டனர்.

### புலத்தி நகர் கலவரம்

அதனால் புலத்தி நகரினுள் கலவரங்கள் ஏற்பட்டன. அதனால் கலக்கமும் கோபமுமடைந்த புலத்தி நகர் அமைச்சர்களும் முக்கிய பிரதானிகளும் கலந்து பேசி, சொபோராவில் தன் படையுடன் முகாமிட்டிருந்த உருகுணை மாணாபரணனிடம் சென்று தமக்கு உதவுமாறும், ஸ்ரீ வல்லபனின் மகனும் கஜபாகுவின் பெறாமகனும் பராக்கிரமபாகுவின் ஒன்றுவிட்ட சகோதரனுமாகிய அவனுக்குள்ள உரிமையை எடுத்துக் கூறி, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொலநறுவையைக் கைப்பற்றி அரசுரிமையை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். குாலவாவியின் தலைவன் கோகண்ணவும் உடன் தண்டெடுத்து வருமாறு கேட்டுக் கொண்டான். மதிமயங்கிப் போன மாணாபரணன், அரசனை விடுவித்து, பராக்கிரமபாகுவின் படைகளை முறியடித்து, பொலநறுவையின் முடியைப் பூணுவேன் என்ற திடத்துடன் புலத்தி நகர் மீது படையெடுத்துச் சென்றான். கஜபாகுவின் படைத் தளபதிகளினதும் தன் தளபதிகளின் உதவிகளுடன் பராக்கிரமபாகுவின் படைகளை முறியடித்தான். தேவசேனாதிபதியைக் கைதுசெய்தான். சிறைச்சாலைக்கு விரைந்து கஜபாகுவை விடுவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் அமைதியை நிலைநாட்டிக் கொண்ட மாணாபரணன், கஜபாகுவின் நம்பிக்கையான தளபதிகளையும் முக்கிய அதிகாரிகளையும் கொன்றழித்ததோடு, கஜபாகுவையும் பின்னர் சிறையிலிட்டான். கஜபாகுவிற்குச் சொந்தமான யானைகள், குதிரைகள், அனைத்துச் செல்வங்கள் என்பனவற்றைத் தனதாக்கிக் கொண்டான். பொலநறுவை இராச்சியத்தின் மன்னனாக முடி புனைய எண்ணி, உருகுணையில் வசித்து வந்த தன் தாய், மற்றும் பெண்டிர்கள் அனைவரையும் புலத்தி நகர் அரண்மனைக்கு அழைப்பித்தான். முக்கியமாக உருகுணையில் பாதுகாப்பாகவிருந்த தந்ததாது, ஜயக்கலம் ஆகிய இரு பௌத்த சின்னங்களையும் பொலநறுவைக்கு எடுத்து வரச்செய்தான். (இப்புனித சின்னங்களைக் கொண்டிருப்பவர்களே பேரரசனாகும் தகுதி கொண்டவன் என்ற நம்பிக்கை இருந்தது.) தன் தாயாரையும் அமைச்சர்களையும அழைத்து ஆலோசனை நடாத்தினான். ‘கஜபாகுவை இரகசியமாக கொன்றுவிட்டு முடிசூட்ட வேண்டும்’ என அறிவித்தான். அவ்வாறான முடிவு செய்ததும் சிறையிலிருந்த கஜபாகுவுக்கு போதிய உணவு வழங்காது வருத்தினான். நஞ்சிட்டுக் கொலல்லாமா எனவும் திட்டமிட்டான். இவற்றை அறிந்து கொண்ட கஜபாகு தன் தூதுவன் ஒருவனை பராக்கிரமபாகுவிடம் அனுப்பி வைத்தான். ‘பெரும் துயரத்தில் சிறையிருக்கின்றேன். என்னைக் காப்பாற்றி உதவுக’ என்ற செய்தியையும் அறிவித்தான். பராக்கிரமபாகு அதனை அறிந்து வருந்தினான். தன்னால் தான் கஜபாகு இவ்வளவு துயரங்களையும் அடைய நேர்ந்தது என எண்ணமிட்டான். உடன் உதவும் எண்ணங்கொண்டான். அதற்கு முன்னோடியாகத் தன் வலிமை மிக்க தளபதிகளுக்குப் பதவிகளையும் சன்மானங்களையும் வழங்கினான். தான் பொலநறுவைமிது தண்டெடுத்துச் செல்லவிருப்பதால் நாட்டினைப் பரிபலிக்க, தண்டநாயக்கன் மஹாகேதுவை அழைத்து அவனை தட்சிணதேசத்தின் நிர்வாக அதிகாரியாக நியமித்தான். கீர்த்தி சங்காவை இலங்காதிகாரியாக நியமித்தான். இவ்விரு தண்டநாயக்கர்களில் மூத்தவனை கேசதாதுநாயக்கனாகவும் இளையவனை நகராஹலாலாவாகவும் பதவி வழங்கினான். அதன் பின்னர் கேசதாது நாயக்கன், இலங்காதிநாதன், கீர்த்தி இலங்காதிகாரி ஆகிய தளபதிகளின் தலைமையில் புவத்தி நகர் நோக்கிச் சேனாவீரர்களை அனுப்பி வைத்தான். புலத்தி நகரில் கரந்துறைந்த தேவசேனாதிபதியை அழைத்து பெரும் படையுடன் அவனையும் புலத்திநகருக்கு அனுப்பினான். மிகப்பலமான சைனியம் ஒன்றினோடு புறப்பட்ட பராக்கிரமபாகு கந்தளாயை நோக்கிச் சென்றான். அதேவேளை உருகுணையிலிருந்து எவ்விதமான படை உதவிகளும் மாணாபரணனுக்கு வராது படைகளை ஆங்காங்கு நிறுத்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான். கூட்டுக்குள் அகப்பட்ட பறவைகள் போல சுற்றி வளைக்கப்பட்ட பராக்கிரமபாகுவின் படைகளுக்கு மத்தியில் புலத்திநகர்க் கோட்டைக்குள் மாணாபரணனும் அவன் ஆட்களும் அடங்கினர். கோட்டை முற்றுகையிடப்பட்டது. கோட்டைக்குள் உணவுப்பொருட்கள் எடுத்துச்செல்வது கட்டுப்படுத்தப்பட்டது.

பராக்கிரமபாகுவின் படைகளுக்கு எதிர்நிற்க முடியாத மாணாபரணனின் படைகள் தோல்வியடையத் தொடங்கின. மாணாபரணனின் முக்கிய தளபதிகளான கொன்தா திசநாயக்கா, போதி இலங்காதிநாதன் ஆகியோர் சிறைபிடிக்கப்பட்டனர். அத்துடன் அரண்மனையிலிருந்த மாணபரணனின் பெண்டிர்கள், தாயார். அவன் மக்கள் முதலானோர் காவல் வசப்பட்டனர். சிறையிலிருந்து கஜபாகு சிறைமீட்கப்பட்டான். பராக்கிரமபாகு வினால் விடுவிக்கப்பட்ட கஜபாகு, தன்னாட்களுடன் கொட்டசாராவுக்கு (கொட்டியாரம்) உடனடியாகச் சென்று அங்கு தங்கினான். யுத்தகளத்தின் மறுமுனையில் நின்றிருந்த மாணபரணன் இச்செய்திகளை அறிந்தான். தன் பெண்டிர், பிள்ளைகள் காவலில் வைக்கப்பட்டதையும் கஜபாகு சிறை மீட்கப்பட்டு அகன்றமையையும் அறிந்து கொண்டான். உடனே யாருமறியாமல் இரகசியமாக அரண்மனைக்குள் நம்பிக்கையானவர்களுடன் புகுந்து, தந்ததாதுவையும் ஜயகலத்தையும் எடுத்துக் கொண்டு, பெண்டிர்பிள்ளை



சிவதேவாலயம் (7) – தீர்த்தக்கிணறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அழைத்துக் கொண்டு இரவோடிரவாகப் புலத்தி நகரைவிட்டு உருகுணைக்கு அகன்றான்.

புலத்தி நகரைத் தன்வசப்படுத்திக்கொண்ட பராக்கிரமபாகு, தனக்கென இரு மாடிகள் கொண்ட ஓர் அரண்மனை ஒத்த மாளிகையை அமைத்துக் கொண்டு கிரித்தலைக் கிராமத்தில் தன் பரிவாரங்களுடன் பொலநறுவையில் வாழத்தலைப்பட்டான். இந்நிலையில் கஜபாகுவின் தளபதிகள் சிலர் ஒன்று சேர்ந்து பராக்கிரமபாகுவின் வீரர்களை தன்னாறு என்ற கிராமத்தில் தாக்கினர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்த நிலையில், கஜபாகுவையும் அவனது தளபதிகளையும் கைப்பற்றுமாறு பராக்கிரமபாகு தன் தளபதிகளான தேவசேனாதிபதிக்கும் கீர்த்தி இலங்காதிகாரிக்கும் கட்டளையிட்டான். அதனால் மீண்டும் கஜபாகுவின் வீரர்களுக்கும் பராக்கிரமபாகுவின் வீரர்களுக்கும் போர் ஆரம்பமானது. அனைத்து யுத்தங்களிலும் கஜபாகுவின் படையினர் கடும் தோல்விகளைத் தழுவினர். இந்நிலையில் கஜபாகு தனக்கு உதவுமாறும் சமாதானத்தை ஏற்படுத்துமாறும் பிக்குகளிடம் சரண்புகுந்தான். அதனால் சங்கத்தினர் கிரித்தலைக்குச் சென்று அங்கு தங்கியிருந்த பராக்கிரமபாகுவைச் சந்தித்தனர். கஜபாகுவுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்திச் சாமாதானத்தைப் பேணுமாறு கோரினர். 'எந்த மன்னன் முதலில் மரணமடைகின்றானோ அவனின் பின் அவன் இராச்சியம் உயிரிடனுள்ள மன்னனைச் சென்றடையும். கஜபாகு மன்னனோ வயோதிப வயதில் உள்ளான். அவன் மரணத்தின் பின்னர் இராஜரட்டை உனக்குரியது. இனிவருங்காலத்தில் இந்த இரு மன்னர்களும் போர் புரிவதில்லை.'என ஓர் உடன்பாடு ஏற்படுத்தினர். அதனை ஏற்றுக் கொண்ட பராக்கிரமபாகு இராஜரட்டை இராச்சியத்தைக் கஜபாகுவிடம் ஒப்படைத்துவிட்டு தட்சிணதேசம் மீண்டான்.

### மீண்டும் பெற்ற கஜபாகு

இராசரட்டை இராச்சியத்தை மீண்டும் பெற்ற கஜபாகு, கங்காராதக்கையைத் தன் அரசவதிவிடமாக்கிக் கொண்டு வாழலானான். இத்தருணத்தில் மாணாபரணன் மீண்டும் கஜபாகுவுடன் நட்புப் பராட்டி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள தன் தூதுவர்களை அனுப்பி வைத்தான். அதனை ஏற்காத கஜபாகு மண்டலகிரி விகாரைக்குச்சென்று, 'எனக்குப்பின்னர் இந்த இராச்சியம் பராக்கிரமபாகுவைச் சேரும்.' என வாக்குறுதி செய்து கொண்டான். ஒரு கல்வெட்டிலும் அதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனமாகப் பதித்துவைத்தான். இருபத்திரண்டு வருட ஆட்சியின் பின்னர் கஜபாகு நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தான்.

அவ்வேளையில் கஜபாகுவின் அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து உருகுணை மன்னன் மாணாபரணனுக்கு உடன் வந்து இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தி அனுப்பி வைத்தனர். கஜபாகு மரணமான செய்தியைக் கேள்விப்பட்ட பராக்கிரமபாகு சேனாவீரர்களோடு விரைந்து வந்து புலத்தி நகரைத் தனதாக்கி கொண்டான். புலத்தி நகரைக் கைப்பற்றும் ஆசையோடு தன் படைவீரர்களோடு விரைந்து வந்து மாணாபரணன் பராக்கிரமபாகுவின் படைவீரர்களோடு பொருதித் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. மாணாபரணனால் மகாவலிகங்கையைக் கடக்க முடியவில்லை. பராக்கிரமபாகுவின் படை முக்கிய கடவைகளில் நின்று தடுத்து நிறுத்தியது. எனினும் ஏனைய வீரர்களுடன் மாணாபரணன், புலத்தி நகரிலுள்ள பாதுகாப்பற்ற ஒரு கடவையூடாக நகரினுள் புகுந்தான். பராக்கிரமபாகுவின் படைகளை மூர்க்கமாகத் தாக்கி நிலைகுலைய வைத்தான். அதனால் பராக்கிரமபாகுவின் படை பின்வாங்கி நாலந்தாவில் முகாமிட்டுச் சில காலம் தங்க நேர்ந்தது.

## தொடர்ந்த மோதல்கள்

பராக்கிரமபாகுவுக்கும் மாணாபரணனுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்து வந்தன. மாணாபரணனின் தளபதிகளில் ஒருவனான மஹிந்தன் என்பான் ஒருசைனியத்துடன் சாரோகமம் என்றவிடத்தில் அமைந்திருந்த கோட்டையில் கேசதாதுவின் தலைமையில் நிலைகொண்டிருந்த போர் வீரர்கள் மீது படையெடுத்தான். ஆனால் மகிந்தனின் வீரர்களைக் கேசதாது, களிறுகளிடையே புகுந்த சிங்கம் போலத் துவம்சம் செய்து காற்றில் அள்ளுண்டு போகும் பஞ்சாகத் துரத்தியடித்தான். மறுதடவையும் மகிந்தன் படையுடன் தலின்கமம் என்ற கோட்டையைத் தாக்கியபோது தோல்வி கண்டு ஓடித்தப்பினான் பின்னர் புனா என்றவிடத்தினைத் தாக்கிய மாணாபரணனின் தளபதிகளையும் வீரர்களையும் எவருமே எஞ்சிச் செல்லாதவிதத்தில் நிலத்தில் வீழ்த்தி அழித்தனர். இவ்வாறாக பராக்கிரமபாகுவின் படைகளைப் பலவிடங்களில் மாணாபரணனின் சேனை தாக்கித் தோல்வியைத் தழுவிக்கொண்டது. தேவசேனாதிபதி, ரக்காதிகாரி, இலங்காபுரன் போன்ற பராக்கிரமபாகுவின் வலிமைமிக்க தளபதிகளின் வாட்களுக்கு மாணாபரணனின் படைவீரர்கள் பலியாகி யுத்த களத்தினை சடலங்களால் நிரப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் பராக்கிரமபாகு, "மாணாபரணனை இந்தப்பிரதேசத்தில் தோற்கடிக்காவிடில் உருகுணையிலும் நிம்மதியாக வாழமுடியாது' என முடிவு செய்தான். அதனால் தன் முக்கிய தளபதிகளான தேவிலா, லோகா, அரக்கம்மநாதன், கன்சிகு நாயக்க முதலானோர் தலைமையில் பராக்கிரமபாகுபடை அணிகளை உருகுணையைத் தாக்குவதற்கு அனுப்பி வைத்தான் இதனால் மாணாபரணனின் படையணியில் ஒரு பகுதியினர் உருகுணையைக் காப்பாற்ற அங்கு மீள வேண்டியேற்பட்டது. அதே நேரம் மாணாபரணனின் தளபதிகளில் ஒருவனான நாராயணன் பெரும் படையோடு பராக்கிரமபாகுவின் கவனத்தைக் கலைக்குமாற்போல அனுராபுரத்தின் மீது படையெடுத்தான். இப்படையெடுப்பை ஆரம்பத்திலேயே இடைநடுவில் பராக்கிரமபாகுவின் படையணி ஒன்று முறியடித்தது. பராக்கிரமபாகுவின் சேனாவீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் பராக்கிரமபாகுவின் முக்கிய தளபதிகள் காயம்பட்டுச் சரிந்தபோது, பராக்கிரமபாகுவே யானையிலேறி யுத்தகளத்திற்குப் படை நடாத்திச் சென்றான். சிங்களக் கைவிஞையர்களால் செய்யப்பட்ட வாளை ஏந்தி எதிரிகளின் சிரசுகளைத் துண்டித்துத் தள்ளினான். மாணாபரணன், வெகு சிரமத்தின் மத்தியில் உருகுணைக்கு உயிர் தப்பி வரநேர்ந்தது.

பராக்கிரமபாகு நீண்ட காலமாக இலங்கை முழுவதற்கும் மன்னனாகும் குறிக்கோளுடன் இருந்தான். கஜபாகுவை வெற்றி கொண்டபின் இராஜரட்டையை பெற்றுக் கொண்டான். அதற்காகவும் உருகுணை மாணவர்மனுடன் நீண்ட கால யுத்தம் புரிய நேர்ந்தது. இறுதியில் பராக்கிரமபாகு (1153) புலத்தி நகரில் இலங்கையின் சக்கிரவர்த்தி யாக முடிபுனைந்தான். தட்சிணதேசத்தின் அரசனாக வந்ததின் பின்னர் பதினைந்து ஆண்டுகளின் பின்னரே இராஜரட்டையை தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள முடிந்தது.

### கீர்த்தி ஸ்ரீ மேகன்

இந்நிலையில் உருகுணை மன்னனான மாணபரணன், பராக்கிரமபாகு மீதுள்ள பயத்தினாலும் நோயினாலும் படுக்கையில் வீழ்ந்தான். தன் மகனும் இளவரசனுமான- கீர்த்தி ஸ்ரீ மேகனையும் அரண்மனைப் பெண்டிரையும் அமைச்சர்களையும் அழைத்து, 'புலத்தி நகரில் பாதுகாப்பாகவிருந்த புத்தரின் தந்ததாதுவையும் ஜயகலசத்தையும் நான் இங்கு எடுத்து வந்து வைத்திருக்கும் தப்பான செயலின் விளைவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இன்று படுக்கையில் விழுந்துள்ளேன். மீண்டும் எழுவேன் என்பதில் நம்பிக்கையில்லை. நான் மரணமாகி இவ்வுலகிலிருந்து அகன்றதும், பராக்கிரமபாகு மன்னனிடம் சென்று இந்த அரசை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, அவருடைய ஆணைக்குட்பட்டு வாழ்வீர்களாக' என்றான். அவன் விழிகள் கலங்கின. மாணாபரணன் மரணமடைந்த செய்தியை அறிந்த பராக்கிரமபாகு, மீண்டும் இரண்டாவது தடவையாக இலங்கை முழுவதற்கும் முடி புனைய எண்ணமிட்டான். பொலநறுவை நகரம் விழாக்கோலம் பூண்டது. தெருவெங்கும் வாழைகள் கட்டப்பட்டு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன. முடி புனைந்து யானையில் அமர்ந்து ஊர்வலம் வந்தான்.


## அத்தியாயம்: 11
## மகா பராக்கிரமபாகு

பராக்கிரமபாகு இலங்கை முழுமைக்கும் அதிபதியாகிய நிலையில் மக்களுக்கும் மதத்துக்கும் பல நன்மைகள் செய்யத் தொடங்கினான். முன்னைய ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டிருந்த வரிச்சுமைகளைக் குறைப்பதில் கவனம் செலுத்தினான். பௌத்த பிக்குகளுக்குத் தானம் முதலான வசதிகளைத் தொடர்ந்து குறைவின்றிக் கிடைக்க ஒழுங்குகள் செய்வித்தான். பௌத்தத்தில் இதுவரை காலமும் நிலவிவந்த மூன்று மதப்பிரிவுகளையும் சேர்ந்த பிக்குகளை அழைத்து அவர்களிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்த முயன்றான். நகரத்தின் மத்தியில் பெரியதொரு மண்டபத்தினை அமைத்து, அதில் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பிக்குகளுக்கு தானம் அளிக்கும் தர்ம சாசனத்தை உருவாக்கினான். வருடாவருடம் பிக்குகளுக்குக்குரிய துணிவகைகளை வழங்கி வந்தான். சகல வசதிகளும் கொண்ட தான சாலைகள் நான்கினை நகரத்தில் அமைப்பித்தான். பாத்திரங்கள், பாய் படுக்கைகள், நூற்றுக்கணக்கான பாற்பசுக்கள், பூந்தோட்டங்கள், பழத்தோட்டங்கள் என்பனவும் வழங்கினான். வழிப்போக்கர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்குமாக அன்ன சத்திரங்கள் பலவற்றை அமைப்பித்தான். தானியங்கள், மற்றும் அத்தியவசியப் பொருட்களைச் சேகரித்து வைக்கக் களஞ்சியங்களை அமைப்பித்தான். நாட்டிலுள்ள நோயாளர்களின் நலன் கருதி வைத்தியசாலை ஒன்றினை நிறுவினான். திறன் வாய்ந்த வைத்தியர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உதவிகளைப் பெற்றான். மாதத்தில் நான்கு நாட்களை சமய உபதேசநாட்களாக அனுஷ்டிக்க வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் அண்டங்காக்கை ஒன்று இறகுகள் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அடைக்கலம் புகுந்தது. மன்னனின் மேற்பார்வையில் அதன் நோயைத் தீர்த்துவைத்து வைத்தியர்கள் அதனைச் சுகப்படுத்தினர். மன்னன் அதனை யானையில் எடுத்தச் சென்று சுதந்திரமாகப் பறக்கவிட்டான். நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்ற மன்ன் பின்னர் புலத்திநகரின் கோட்டையைத் திருத்துவித்தான். புறநகரைச் சுற்றிப் பலமான மதில் ஒன்றினை அமைப்பித்தான். அதில் கொத்தளங்களையும் அமைப்பித்தான். விஜேயந்தா என்றொரு புதிய அரண்மனையையும் விசுயகர்மாவின் கட்டமைப்பு என வியக்குமாறு அமைப்பித்தான். நூற்றுக் கணக்கான தூண்கள் மீது, ஆயிரம் அறைகளுடன், ஏழு மாடிகள் கொண்டதாக அந்த அரண்மனை அமைந்தது. வேலைப்பாடுகள் கொண்ட கலசங்களை அது கொண்டமைந்தது. கதவுகளும் யன்னல்களும் தங்க வேலைப்பாடுகளைக் கொண்டமைந்தன. தங்கத்தாலும் தந்தத்தாலும் வேலைப்பாடுகளுடன் கூடிய கட்டில்கள் உயர்ந்த கம்பளங்களைக் கொண்டிருந்தன. அரசனின் அறை மிக அலங்காரமானதாக விளங்கியது. தங்க விளக்குகளும் முத்துத் தொங்கல்களும் அலங்கரித்தன. என்றும் மெல்லிய இனிமையான சங்கீத வாத்தியங்களின் ஒலி அரண்மனை எங்கும் நிறைந்திருக்கும்.



சிவதேவாலயம் (7) - கோமுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனோடு பிராமணர்கள் தமது சடங்கு, கிரியைகள் என்பனவற்றைச் செய்வதற்குரிய தங்கமாளிகை ஒன்று, மந்திரச்சடங்குகள் ஆற்றுவதற்காக விஷ்ணுவுக்கு ஒரு கோயில், புத்தரின் யாதகக் கதைகளைக் கேட்டு மகிழ்வதற்காக வட்டவடிவான மாளிகை ஒன்று, புனித நீரும் புனித நூல்களும் வழங்குவதற்குரிய பஞ்சதத்தி மாளிகை, என்பனவும் அமைக்கப்பட்டன. சமய நெறிகளைப் போதிக்கும் தர்மஹறன் மாளிகை, எப்போதும் நெய் விளக்குகளும் வாசனைத்திரவியத் தூபிகளும் கொண்டதாக விளங்கியது. சரஸ்வதி மண்டபம் எனப்படும் சங்கீத அரங்கு, ராஜவேதி புஜங்கா எனப்படும் மூன்று மாடிகளைக் கொண்ட பொழுது போக்கு மண்டபம், தேவர்கள் எல்லாம் வந்து கூடியிருப்பதற்கான இருக்கைகள், தங்கத்தினால் சிற்பவேலைப்பாடுகள் கொண்ட கற்பகதரு, ஒரு தூணில் கட்டப்பட்ட அழகான மகர வேலைப்பாடுகள் கொண்ட மாளிகை ஒன்று, அரண்மனையை அடுத்து நந்தவனம் ஒன்று, அதில் பல வகையான மலர்ச் செடிகள், பழமரங்கள், சிலைப் பொக்கணை, மங்கல பொக்கனை போன்ற நீராடு மன்றங்கள், எண்ணற்ற மண்டபங்கள் (சனி மண்டபம், மொனரா(மயில்) மண்டபம், கண்ணாடி மாளிகை), என்பனவும் அமைக்கப்பட்டன.

இராமனுக்குச் சீதைபோல, பராக்கிரமபாகுவுக்கு அவனது மஹாராணி ரூபவதி அமைந்திருந்தாள். அவளைத் தவிர நூற்றுக்கணக்கான மகளிர் அரண்மனையில் இருந்தனர். ரூபவதி பௌத்த மும்மணிகளில் (புத்தம், சங்கம், தர்மம்) நம்பிக்கை கொண்டிருந்தாள். அவள் பல்கலை வல்லுநர். ஆவள் வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தவள். நகரத்தின் மத்தியில் பெரும் தங்கப் பௌதத்தூபி ஒன்றினை அமைப்பித்தாள். மகா பராக்கிரமபாகு நகரத்தில் பல்வேறு வீதிகளை அமைப்பித்தான். வீதிகளின் மருங்கே பல்வேறு கட்டிடங்களைக் கட்டுவித்தான். பல்வேறு கடைத்தொகுதினை உருவாக்கினான். புலத்திநகர் வீதிகளெல்லாம் யானைகள், குதிரைகள், தேர்கள என்பனவற்றாலும் பாதசாரிகளாலும் நிரம்பி வழியும். இராஜவேதி புஜன்ஹா, இராஜா குலன்தகா, விஜித்தா ஆகிய மூன்று புறநகர்களை அமைப்பித்தான். வேலுவணா, இசுப்பத்தானா, குஷினறா எனும் மூன்று விகாரைகளை நகரத்தில் கட்டுவித்தான். அவற்றுடன் மூன்று தேவாலயங்களையும் கட்டுவித்தான். அரச அரண்மனைக்கும் புதிதாக நிறுவிய நகரங்களுக்குமிடையில் ஒவ்வொரு லீக் தூரம் இருந்தது. அவற்றிடையே மூன்று பெரும் விகாரைகளையும் தியான மண்டபங்களையும் தங்குமிடங்களையும் புத்தரின் சிலைகள் அமைந்த சிறிய மண்டபங்களையும் நிறுவினான். புலத்தி நகரைச் சுற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதில்களும் கோபுரங்களும் அமைப்பித்து அரசவாயில், சிங்க வாயில், இந்திரவாயில் என 14 வாசல்கள் வைப்பித்தான்.

## புணருத்தாரணம்

மகா பராக்கரமபாகு அதன் பின்னர் சோழர்களால் சிதிலமாக்கப்பட்ட பிரதான புராதன நகரமான அனுராதபுரத்தைப் புணருத்தாரணம் செய்ய விரும்பங்கொண்டான். போதி மரத்தையும் புனித சின்னங்களையும் பாதுகாக்க விரும்பி, அவற்றிற்கான திருத்த வேலைகளைச் செய்விக்குமாறு அமைச்சர் ஒருவனை அனுராதபுரத்துக்கு அனுப்பி வைத்தான். அங்கு வந்த அமைச்சர் அனுராதபுரத்தின் புனர்நிர்மாணத்தைச் செய்யத் தொடங்கினர். கோட்டை மதில்கள், கோபுரங்கள், கொத்தளங்கள், வீதிகள், பூங்காக்ள், தடாகங்கள் என்பனவற்றை அமைச்சர் திருத்தி அமைத்தார். அதன் பின்னர் ருவான்வெலிசாயச் சேத்தியத்தையும் ஏனைய சேத்தியங்களையும் திருத்துவித்தான். மூன்று பௌத்தமதப் பிரிவுகளுக்குமுரிய சேத்தியங்களையும் (மஹாவிகாரை, ஜேத்தவனவிகாரை, அபயகிரிவிகாரை) என்பனவற்றையும், லோகபஸாடா கட்டிடத்தையும், ஏனைய விகாரைகளையும் திருத்துவித்தான். அரசமாளிகையையும் திருத்தியமைத்தான். முன்னைய அரசர்களின் காலத்தில் இருந்தவாறு அனுராதபுரத்தைப் புதிய நகராக்கினான்.

அதன் பின்னர் பராக்கிரமபாகு, புதியதொரு நகரத்தை மதில்கள், கோபுரங்கள், கோயில்கள், தெருக்கள், சந்தைகள் என்பனவற்றோடு நிர்மாணித்தான். அதற்குப் பராக்கமம் என்று பெயரிட்டான். தன் இராச்சியத்திலுள்ள சகல பிரதானிகளுக்கும் முக்கியமான அறிவித்தல் ஒன்றினை விடுவித்தான். மக்களை வருத்தாதவிதத்தில் அரச வரிகள் முழுவதையும் அறவிடுமாறு கட்டளை பிறப்பித்தான். அத்துடன் போயா தினங்களில் இறைச்சிக்காக மிருகங்களைக் கொல்வதையும் கடலிலும் குளங்களிலும் மீன்களைப் பிடிப்பதையும் தடைசெய்வித்தான்.

உருகுணை அரசின் முக்கியமான பிரதானிகளும் அதிகாரிகளும் தம்மளவில் பராக்கிரமபாகுவின் மேலுள்ள பயத்தினால் அவன் என் நேரமும் படையெடுத்து வரலாமென எதிர்பார்த்தார்கள். அதனால் ஒன்று கூடி சதி ஆலோசனை செய்து மாணாபரணனின் தாயார் சுகலாவிடம் வந்து, உருகுணை அரசின் ஆட்சிப்பொறுப்பை ஏற்குமாறு கேட்டுக் கொண்டனர். பராக்கிரமபாகுவிற்கு எதிராக அணிதிரட்டவிருப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்தனர். அவர்கள் பேச்சில் மயங்கிய அரசி சுகலா உருகுணையின் ராணியாகத் தன்னை அறிவித்தாள். அவற்றைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு, றக்கசேனாதிபதியை அழைத்து, சேனாவீரர்களுடன் சென்று புரட்சியை அடக்குவதுடன், அதன் பின்னர் ஏற்றவாறு அதிகாரிகளை நியமித்து உருகுணையை நிர்வகிக்குமாறு அனுப்பி வைத்தான்.

## தந்ததாது

அதேவேளை உருகுணையைச் சேர்ந்த உண்ணாட்டுச் சிங்கள வீரர்கள், கேரள வீரர்கள், வேளக்காரப்படையினர் ஆகியோர் ஒருங்கு கூடி ஆலோசித்து, 'பராக்கிரமபாகு உருகுணையைக் கைப்பற்றச் சேனாவீரர்களை அனுப்பி வைத்துள்ளதாதாகத் தகவல் கசிந்துள்ளது. இது தான் தக்க தருணம் என்றும், உருகுணையைத் தாங்கள் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமெ'னவும் தீர்மானித்தனர். இப்புரட்சியாளர்களுடன் சுகலாவின் படையினரும் இணைந்து கொண்டனர். பராக்கிரமபாகுவின் உருகுணைப் படையெடுப்பின் உள்நோக்கம் புனித தந்ததாதுவையும் ஜயகலத்தையும் கைப்பற்றிப் புலத்தி நகருக்குக் கொண்டுவருவதாகும். றக்கசேனாதிபதியின் தலைமையில் முன்னேறிய சைனியத்துக்கு உதவுவதற்காகப் பராக்கிரமபாகு, புத்தாதிகாரி என்ற தளபதியின் தலைமையில் மேலதிக சைனியத்தை உருகுணைக்கு அனுப்பி வைத்தான். தீகவாவியில் தங்கியிருந்த பராக்கிரமபாகுவின் தளபதிகளான கீர்த்தி, கீர்த்தி ஜீவிதபொத்தகி என்போரின் தலைமையிலிருந்த சைனியம் அவ்விடத்திலிருந்த எதிரிகளின் படைகளைத் துவம்சம் செய்தன. பராக்கிரமபாகுவின் சைனியம், சுகலாவின் வீரர்களுடன் நடாத்திய போர்களில் பெரும்பாலானவை உருகுணையின் அட்டசகச என்ற கிழக்குப் பகுதியிலேயே நடந்தன. பராக்கிரமபாகுவின் படைகளுக்குத் தாக்குப் பிடிக்கமுடியாத உருகுணைச் சேனை தோல்வியடைந்தது. சிதறி ஓடியது. பராக்கிரமபாகுவின் படைகளோடு உருகுணை வீரர்கள் மோதியபோது, சுகலா ராணி உடுந்துறை என்ற கிராமத்தில் இருந்தாள். பராக்கிரமபாகுவின் படை நெருங்கியபோது சுகலா தன்னிடமுள்ள புனிததந்ததாதுடனும் ஜயகலத்துடனும் உருவெலவுக்குத் தப்பி ஓடி ஒளிந்து கொண்டாள்,

இந்தச்சங்கதியைக் கேள்விப்பட்ட பராக்கிரமபாகு, தனது தளபதிகளான றக்கா, புத்தாதிகாரி, கீர்த்தி ஆகியோருக்குக் கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அனுப்பினான்: 'ஒருங்கே எதிரிகளைத் தாக்கி அவர்களை முறியடித்து எப்படியாவது புனித தந்ததாதுவையும் ஜயகலத்தையும் கைப்பற்றுக' என. அதனால் எதிரிகளுடன் மஹாரிவர, வோஜலகமம், சுமணகல, படுகுணா ஆகிய பிரதேசங்களில் கடும் யுத்தம் நடைபெற்றது. உருகுணைப்படைகள் தோல்வி அடைந்தன. இறுதியில் உருவெலவில் யுத்தம் நடைபெற்றது. பராக்கிரமபாகுவின் சேனாதிபதிகள் இந்த யுத்தத்தின் முடிவில் புனிததந்ததாதுவையும், ஜயகலத்தையும் கைப்பற்றித் தமது பொறுப்பிலெடுத்தனர். அதனைப் பெரும் விழாவாகக் கொண்டாடினர்.

மாணாபரணனின் முக்கிய தளபதிகளில் ஒருவனான சுகராப்ததேவா என்பவன் உருகுணையில் எழுந்த புரட்சிக்குத் தலைமை வகித்தவர்களில் முக்கியமானவன். அவனை உயிருடன் கைது செய்து பராக்கிரமபாகு அவனைச் சங்கிலிகளால் பிணைத்துச் சிறையிலிட்டிருந்தான். அவன் சிறையிலிருந்து தப்பி உருகுணைக்கு ஓடிப்போனான். அவனைச் சிறைப்பிடிக்கப் பராக்கிரமபாகு, மஞ்சு என்ற தளபதியின் தலைமையில் பெரும் சேனை ஒன்றினை அங்கு அனுப்பி வைத்தான். தளபதி மஞ்சு எதிரிகளைச் சில யுத்தங்களில் தோல்வி காண வைத்து சப்பத்கமம் என்றவிடத்தில் முகாமிட்டுத் தங்கியிருந்தான்.

புனிததந்ததாதுவையும் ஜயக்கலத்தையும் எடுத்துக் கொண்டு, றக்கசேனாதிபதி,கீர்த்தி அதிகாரி, புதட்தாதிகாரி ஆகிய தளபதிகள் தேமத்தவால் பகுதிக்கு வந்தபோது, எஞ்சிய புரட்சியாளர்கள் ஒன்று சேர்ந்து அவர்களைத் தாக்கினர். பிரதான தளபதியும் ஏனையோரும் அத்தாக்குதலை முறியடித்து முன்னேறினர். இந்த யுத்தத்தில் றக்கசேனாதிபதி மரணமடைய நேரிட்டது. அரச மரியாதைகளோடு அவனுடைய சடலத்தை மற்றைய தளபதிகள் மஞ்சுவும் கீர்த்தியும் தகனம் செய்வித்தனர். பராக்கிரமபாகு தன்னுடைய திறன் வாய்ந்த தளபதியின் மரணத்தைக் கேள்வியுற்று வருந்தி, அவனைத் தகனம் செய்தவிடத்தில் சிறப்பாக அன்னதான மண்டபம் ஒன்றினை அமைக்குமாறு பணித்தான். சிறையிலிருந்து தப்பிய சுகராப்ததேவா புரட்சிப்படைக்குத் தலைமைதாங்கி, சேனாவீரர்களுடன் புத்தசலாகா என்ற கிராமத்தில் பராக்கிரமபாகுவின் சேனையைத் தாக்கி புனித சின்னங்களைக் கைப்பற்றும் நோக்கோடு அணிவகுத்தான். இதனை அறிந்த பராக்கிரமபாகு சேனை ஒன்றினை புத்தசாலாவுக்கு அனுப்பி வைத்து, சுகராப்ததேவாவின் படையைச் சிதறடித்தான். தப்பிய புரட்சியாளர்கள் மஹாகமத்திற்குத் தப்பி ஓடினார்கள். உடனடியாகப் புனித சின்னங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதேவாலயம் (7)க்கு அருகிலுள்ள ஓர் ஆலயம்

பொலநறுவைக்கு எடுத்து வருமாறு பராக்கிரமபாகு தன் தளபதிகளுக்குக் கட்டளை பிறப்பித்தான்.

தளபதி மஞ்சு புனித சின்னங்களைப் பெரும் சிரமத்தில் மத்தியில் பொலநறுவைக்கு எடுத்துவந்தான். பூரிப்படைந்த மன்னன் அப்புனித சின்னங்களை எதிர்கொண்டு வரவேற்றான். அவற்றைத் தன் சிரசில் தாங்கி ஊர்வலம் வந்தான். நாடே விழாக்கோலம் பூண்டது.

அதே வேளை, உருகுணையின் புரட்சியாளர்களை வேரோடு களையுமாறு கீர்த்தி, இலங்காபுரன் ஆகிய தளபதிகளுக்குக் கட்டளையிட்டு, தீகவாவிக்கு அனுப்பி வைத்தான்.

## தீகவாவியைக் கைப்பற்றல்

தீகவாவியைக் கைப்பற்றும் நோக்கோடு பராக்கிரமபாகுவின் தளபதிகள் தம் சேனாவீரர்களுடன் அவ்விடத்துக்கு விரைந்தனர். கிருவபத்துவை, சப்றகமுவப் பிரதேசங்களில் இருசாராருக்கும் கடும் சமர் நடந்தது. புரட்சிப்படைகளுக்கும் பராக்கிரமபாகுவின் படைகளுக்கும் இடையில் வழிவழியே போர் நடைபெற்றது. அனைத்திலும் மன்னனின் வெற்றி நிருபனமாகியது. தமிழதிகாரி ரக்காவின் சேனை முன் உருகுணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. மஹாநாககுலவில் நடைபெற்ற யுத்தத்தில் பராக்கிரமபாகுவின் தளபதிகளான தழிழதிகாரி, றக்கா கன்குகிநாதன், கேசதாது, தேவராஜா முதலானவர்கள் கடுஞ்சமர் புரிந்தனர். சர்ப்பங்களின் கூட்டத்தின் முன் புகுந்த கருடன் மாதிரி உருகுணையின் புரட்சிப்படை சிதறியோடியது. பராக்கிரமபாகு மன்னன் தன்னிடம் அடைக்கலம் புக விரும்பும் புரட்சியாளர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க முன்வந்தான். அதனால் ஏராளமானவர்கள் அடைக்கலம் புகுந்தனர். எஞ்சிய புரட்சியாளர்களை பலவிடங்களில் போர் புரிந்து வென்றனர். வெற்றிமேல் வெற்றியை அடைந்த பராக்கிரமபாகுவின் வீரர்கள் இறுதியில் துவர்தசகசவில் தமிழதிகாரியின் தலைமையில் பெரும்போரிட்டனர். மலைகளிலும் காடுகளிலும் மறைந்துறைந்து போரிட்ட புரட்சியாளர்களும் முற்றாகக் கொன்றழிக்கப்பட்டனர். புரட்சிப்படைகளுக்குத் தலைமை வகித்த சுகராப்ததேவாவை தமிழதிகாரியால் அனுப்பப்பட்ட தளபதி தேவலங்காபுரனால் கைதுசெய்யப்பட்டான். அத்தசகாஸ்சகா எனும் மறைவிடத்தில் ஒளிந்திருந்த ராணி சுகலா கைதுசெய்யப்பட்டாள். இவற்றினைக் கேள்விப்பட்ட பராக்கிரமபாகு மிக்க மனம் மகிழ்து, தன் தளபதிகளைப் பராட்டித் தமிழதிகாரிக்கு ஒரு லிகிதம் அனுப்பி வைத்தான். அதில், எதிரிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட உருகுணைக்குப் புத்தாதிகாரியை பொறுப்பதிகாரியாக நியமித்து அவனிடம் பொறுப்புக்களைக் கையளிக்குமாறும், கைது செய்யப்பட்ட ராணி சுகலாவை உடனடியாகப் புலத்தி நகருக்கு அனுப்பி வைக்குமாறும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பிரதான அதிகாரிகளை நியமிக்குமாறும் பணித்தான்.

## பராக்கிரமபாகுவின் வெளிநாட்டுத் தொடர்பு

அதன் பின்னர் மகா பராக்கிரமபாகுவின் அமைதியும் சுபீட்சமுமான ஆட்சி எட்டு ஆண்டுகள் கழிந்தது. எட்டு ஆண்டுகள் முடிவில் உருகுணையில் மீண்டும் இரண்டாவது புரட்சி ஒன்று தலை தூக்கியது. உருகுணை மக்கள் சிலரும் புரட்சியாளர்களும் ஒன்று சேர்ந்து கலவரங்களைத் தொடக்கினர். இதனைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு பெரும் படை ஒன்றினை அனுப்பி எதிரிகளை அழித்து உருகுணையை விடுவித்தான். அன்னின் பதினாறாவது ஆட்சி ஆண்டில் மகாதீர்த்தத்தைச் சேர்ந்த (மாதோட்டம்) சிலர் மன்னனுக்கு எதிராகக் கலவரம் செய்தனர். அப்புரட்சி ஒரு சில நாட்களிளேயே காற்றில் சிக்கிய புழுதி போல அகற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கும் பர்மாவுக்கும் (இராமணா) இடையில் நீண்ட காலமாக நல்லுறவுகள் நிலவி வந்துள்ளன. இருநாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கவில்லை. இலங்கையை ஆண்ட மன்னர்களும் பர்மிய அரசர்களும் தமக்கிடையே பரிசுப்பொருட்களையும் நல்வாழ்த்துக்களையும் பரிமாறி வந்தனர். ஒவ்வொருவரினதும் நலன்களைக் கவனிப்பவர்களாகவும் நண்பர்களாகவும் விளங்கிவந்தனர். இவ்வாறான நட்பையும் நல்லுறவையும் பராக்கிரமபாகுவும் தொடர்ந்து பேண அவாவினான். இவ்விருநாட்டு மன்னர்களுக்கிடையில் மனஸ்தாபம் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இருநாடுகளுக்குமிடையில் யானைகள், ஏனைய பொருட்கள் என்பனவற்றின் வர்த்தகம் நடந்து வந்தது. இலங்கையிலிருந்து வர்த்தகப் பொருட்களுடனும் வெகுமதிகளுடனும் செல்லும கப்பல் ஒவ்வொன்றுக்கும் ஒரு யானையைத் தனது பரிசாக பர்மிய மன்னன் வழங்கி வந்தான். ஆனால் (1112) ஆட்சிக்கு வந்த பர்மிய மன்னன் அலோங்சிசு என்பான் இயல்பாகவே மூர்க்க சுபாவம் உடையவனாதலாலும், இங்கிருந்து பர்மாவுக்குச் சென்றவர்கள் சிலரின் தவறான கோள் மூட்டல்களாலும், இந்த வழக்கத்தை நிறுத்தியதோடு, வேறு தொல்லைகளையும் விளைவித்தான். பர்மிய யானைகளை இலங்கைக்கு விற்பதைக் கட்டுப்படுத்தினான். அத்துடன் விற்பனை செய்யப்படும் யானைகளின் விலையையும் இரண்டு, மூன்று மடங்குகளாக உயர்த்திவிட்டான். பராக்கிரமபாகு மன்னன் தங்கத் தகட்டில் கடிதம் ஒன்றை எழுதி பர்மிய மன்னனுக்கு ஏராளமான பரிசுப் பொருட்களுடன் அனுப்பி வைத்தபோது தூதுவர் கொண்டு வந்த திரவியங்களைக் கொள்ளையடித்த பின்னர், தூதுவர்களைக் கைது செய்து, கம்போஜா மலைப் பகுதியில் சிறைவைத்தான். இலங்கை அரச சபையில் பர்மிய நாட்டின் தூதுவராகவிருந்த தப்பாசி என்பானை எவ்வளவு பெருந்தன்மையோடு பராக்கிரமபாகு நடாத்தினான் என்பதை அறிந்திருந்தும், சிறை வைக்கப்பட்ட சிங்களத் தூதுவர்களின் பாதங்களில் பிரம்புகளால் அடித்துச் சித்திரவதை செய்ததுடன், சிறையில் தண்ணீர் மொண்டு நிரப்புமாறும் கட்டளையிட்டிருந்தான். ஒருநாள் அத்தூதுவர்களை அழைத்து 'இனி வருங்காலத்தில் இலங்கையிலிருந்து எந்தவொரு வணிக கப்பலும் இங்கு வரக்கூடாது. மீறி வந்தால் அவற்றுக்கு ஏற்படும் கதிக்கு யாரும் பொறுப்பல்ல'என்று எச்சரித்து, அத்தூதுவரில் இருவரை பழுதடைந்த கப்பல் ஒன்றில் ஏற்றிச் சமுத்திரத்தில் செல்ல விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு சந்தர்ப்பத்தில் பராக்கிரமபாகு இலங்கை இளவரசி ஒருத்தியை கம்போஜா மன்னனுக்கு மணவினை நோக்கோடு கப்பலில் அனுப்பி வைத்தான். அவளையும் கப்பலையும் பர்மிய மன்னன் அடாத்தாகப் பிடித்துக் கொண்டான். இவற்றினைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு அடங்காக் கோபத்துடன் பர்மா மீது படையெடுத்தான். தன் முக்கிய தளபதிகளில் ஒருவனான தமிழ்த்தளபதி ஆதித்தனை அழைத்து, பர்மாமீது தண்டெடுக்கப் பணித்தான். 'மன்னின் கட்டளையைத் தனித்து நிறைவேற்றும் திறன் என்னிடமுள்ளது. எனினும் நமது சிறந்த தளபதிகள் சிலரை அழைத்துச் செல்லில் நன்று' என்றான் ஆதித்தன். அதன்படி கீர்த்தி, நகராதிகாரி முதலிய சேனாதிபதிகளும் ஆயத்தமாயினர். நூற்றுக்கணக்கான யுத்தக்கப்பல்கள் கட்டப்பட்டன. அவை கட்டி முடிக்க ஐந்து மாதங்கள் எடுத்தன. ஆயுதங்கள், வேறு போர்க்கருவிகள், போர் வீரர்கள், உணவு வகைகள், மருந்துகள் என்பன போதியளவு சேகரிக்கப்பட்டன. இரும்பினாலும் மான் தோல்களினாலும் ஆக்கிய கவசங்கள், நூற்றுக்கணக்கான எருமைக் கொம்புகளில் சேகரிக்கப்பட்ட காயங்களை ஆற்றும் ஔஸதங்கள், ஆயிரக்கணக்கில் விஷ அம்புகள் என்பனவும் தயாராகின. நல்லதொரு நாளில் கப்பல்கள் புறப்பட்டன. அக்கப்பல்களில் சில உவப்பற்ற காலநிலை காரணமாக கடலில் உடைந்து போயின. சில கப்பல்கள் அந்நிய தேசங்கள் சிலவற்றில் தரை தட்டின. ஐந்து கப்பல்கள் பர்மாவின் குசுமித் துறைமுகத்தைச் சென்றடைந்தன. அக்கப்பல்களுக்குத் தலைமை தாங்கியிருந்த கீர்த்தியும் நகராதிகாரியும் எதிகளோடு போராடி அவர்களைத் துவம்சம் செய்தனர். பர்மாவின் பாப்ஹலத் துறைமுகத்தில் தன் கப்பலுடன் வந்திறங்கிய தளபதி ஆதித்தன், எதிகளுடன் சண்டையிட்டுச் சுதேசிகளைச் சிறைபிடித்தான். பின்னர் நகரத்தினை நோக்கிப் படை நடாத்தி எதிர்ததுப் போரிட்ட பர்மிய மன்னனைப்பிடித்துக் கொன்றான். பர்மாவே திகிலடைந்து போனது. பர்மாவைத் தம் வசப்படுத்திக்கொண்ட தளபதிகள் யானைகளில் ஏறி நகரத்தில் வலம் வந்தனர். பர்மியத் தலைவர்களும் பிக்குகளும் ஒன்று கூடி ஆலோசித்துத் தூதுவர்களை அனுப்பி வைத்தனர். 'இலங்கை மன்னனுக்குரிய திறையை ஒழுங்காகச் செலுத்துவதாகவும், மன்னனின் கட்டளைகளுககுக் கீழ்ப்படிந்து நடப்பதாகவும்' ஒப்புக்கொண்டனர். அதன் பின்னர் ஒழுங்காகத் திறை செலுத்தப்பட்டது.

அதே தருணத்தில் புதியதொரு நிலைமை தமிழகத்தில் தோன்றியது. பாண்டிய மன்னனாக ஆட்சி புரிந்த பராக்கிரமனின், மதுரையை இன்னோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய இளவரசனான குலசேகரன் என்பான் கைப்பற்றிக் கொண்டான். அதனால் பாண்டிய மன்னன் பராக்கிரமன், இலங்கை வேந்தனிடம் உதவி கோரித் தூதுவர்களை அனுப்பினான். 'அரசே, உதவுவார் யாருமில்லை. எதிரியின் சேனாசமுத்திரத்தீயில் அகப்பட்ட தத்துப்பூச்சியாகிவிட்டேன். பஞ்சாச்சரத்தில் பதிக்கப்பட்ட வைரம் மாதிரி சுற்றி வளைக்கப்பட்டுள்ளேன். தங்களிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்.'

## அத்தியாயம்: 12
## இலங்காபுரத் தண்டநாயக்கன்

இதனைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு, இலங்காபுரத் தண்டநாயக்கனை அழைத்து, 'எங்களிடம் அடைக்கலம் கோரிய பாண்டிய மன்னனைக் காப்பாற்றுவது நமது கடமை. எங்களிடம் படை உதவி கோரிய அவனை எதிரிகள் அழிப்பதற்கு விடக்கூடாது. ஆதலால் உடன் அங்கு சென்று குலசேகரனை அழித்து, பாண்டு இராச்சியத்தை பாண்டிய மன்னினட்ம ஒப்படைக்க. அது வரை அங்கு தங்கிச் செயற்படுக.' என்று பணித்து இலங்காபுரத்தண்டநாயக்கனை அனுப்பி வைத்தான். அதன்படி மதுரை சென்ற இலங்காபுரன் எதிரிகளை முறியடித்து மதுரையை மீட்டு, கரந்துறைந்த பாண்டிய மன்னனிடம் நாட்டைக் கையளித்து மகாதீர்த்தம் (மாதோட்டம்) மீண்டான். இத்தருணத்தை எதிர்பார்த்திருந்த குலசேகரன், பாண்டிய மன்னனையும் அவன் மனைவி பிள்ளைகளையும் கைப்பற்றி மரணதண்டனை விதித்தான். மதுரையை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

அதனால் இலங்காபுரன் தன் படையுடன் மீண்டும் தமிழகம் வரநேர்ந்தது. நூற்றுக்கணக்கான யுத்தக்கப்பல்கள் நிறைந்த சேனா வீரர்களுடன் தண்டநாயக்கன் இராமேஸ்வரத்தில் கரையிறங்கினான். வடவல்திருக்கடை நாடார், குடையூர் முத்து நாடார், வில்லவராஜர், அனுக்கோட்டை நாடார், நரேசதேவன் முதலான சோழத் தளபதிகளுடன் பொருத நேர்ந்தது. அவர்களின் எதிர்ப்பை முறியடித்து இராமேஸ்வரத்தை இலங்காபுரன் முதலில் கைப்பற்றிக் கொண்டான். அவ்விடத்தில் முகாமிட்டு இருக்கும்போது, சீலமேகன், நரதுங்கன், பிரமராஜர், இலங்கியாராஜர், பழுதியராஜர், பனாசியராஜர், முதலிய சோழத் தளபதிகளுடன் சண்டை யிட்டு அவர்களின் சேனைகளை முறியடித்தான். அவர்கள் பின்வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக்கு ஓடிப்போனார்கள். இலங்காபுரனால் ஏராளமான தமிழர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். முன்னர் தமிழர்களால் இலங்கையில் சேதமாக்கப்பட்ட பல சேத்தியங்களைத் திருத்துவிப்பதற்காகச் சிறை பிடிக்கப்பட்ட தமிழ்க் கைதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு பராக்கிரமபாகு, இலங்காபுரனுக்குச் செய்தி அனுப்பி வைத்தான். அவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பழுதடைந்த சேத்தியங்களைப் புணருத்தரரணம் செய்யும் பணிகளை அவர்கள் ஆற்றினர். ரூவான்வெலிசாய சேத்தியம் அவ்வாறு திருத்தப்பட்ட ஒன்றாகும். அனுராதபுரத்தில் பல்வேறு சேத்தியங்கள் திருத்தியமைக்கப்பட்டன. திருத்தப்பணிகள் நிறைவு பெற்றதும் பராக்கிரமபாகு அனுராதபுரத்துக்கு வந்து சமய விழாக்களைக் கொண்டாடிப் புலத்திநகர் மீண்டான்.

இலங்கை வந்த இலங்காபுரத் தண்டநாயக்கன் தென்னிந்தியாவில் குண்டுக்கல் என்றவிடத்தில் தனக்கென ஒரு கோட்டை நிறுவி அதற்குப் பராக்கிரமபுரம் என்று நாமமிட்டு அதில் வசிக்கலானான். அக்கோட்டையும் மிக்க அரண் மிக்கதாக அமைக்கப்பட்டது. சுற்றுமதில்களும் அகழிகளும் கொண்டதாக இருந்தது. அவ்வேளையில் குலசேகரன் தன் பகைமையை மறக்கவில்லை. மீண்டும் தன் வலிமையை அதிகரித்துக் கொண்டு, சுந்தரபாண்டுராஜா, பாண்டிய ராஜா எனும் இரண்டு தளபதிகளைப் படைளோடு அனுப்பிவைத்தான். அப்படைகளை இலங்காபுரன் முறியடித்ததோடு அவர்களை விரட்டியடித்தான். அவர்களைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்று, ஆழவந்தபெருமாள் என்ற படைத்தலைவனைச் சிறைப்பிடித்தான். சில கிராமங்களையும் தனதாக்கிக் கொண்டான். குன்னப்பநல்லூர் போன்ற நகரங்களைச் சிதைவடையச் செய்ததோடு, மலவராஜா என்ற தளபதியையும் சிறைப்படுத்தினான். பின்னர் தன் படைகளுடன் பராக்கிரமபுரம் திரும்பினான்.

குலசேகரனால் தோல்வியின் அவமானத்யையும் பகைமையையும் மறக்க முடியவில்லை. சிங்களப் படையைத் தோற்கடிக்கும் வெறி மூண்டெழுந்தது. பெரும் படையைத்திரட்டினான். மலவச்சக்கிரவர்த்தி, பார்த்திக்குடாராராஜா, தொண்டாமராஜா, துவராதிப வேளார், வீரப்பெரியராஜா, நகுலராஜா, முதலான தளபதிகளைச் சேர்த்துக் கொண்டு இலங்காபுரனுக்கெதிரான யுத்தகளத்துக்குத் தானும் புறப்பட்டான். திருநெல்வேலித் தலைவர்களும் குலசேகரனின் வீரர்களோடு சேர்ந்து கொண்டனர். குண்டுக்கல் என்ற பராக்கிரமபுரம் இப்படைகளால் தாக்கப்பட்டது. இலங்காபுரனின் வீரர்களை மூர்க்கமாக எதிர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்காபுரனின் படைளை எவ்வாறாயினும் தோற்கடித்துக் கொடுத்துவிடவேண்டும்'என அவர்கள் தீர்மானம் எடுத்தனர். அதனால் தரைவழியாகவும் கடல் வழியாகவும் இரு படையணிகள் பராக்கிரமபுரத்தை முற்றுகையிட்டன. இலங்காபுரன் கோட்டையிலிருந்து புறப்பட்டு வந்து குலசேகரனின் வீரர்களைத் துரத்தியடித்தான். அவர்கள் தம் முகாம்களுக்கு ஓடிவரநேர்ந்தது. இவ்வாறு ஐம்பத்து மூன்று தடவைகள் குலசேகரனின் வீரர்கள் பின்வாங்கிச் சென்றனர். அதன் பின்னர் நகழ்ந்த யுத்தத்தில் குலசேகரனின் தளபதிகள் சிலரின் சிரசுகள் கொய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழ் வீரர்கள் செத்துக் களத்தில் வீழ்ந்தனர். குலசேகரன் பின் வாங்கி ஓடினான். அவனையும் அவன் வீரர்களையும் இலங்காபுரனின் படைகள் துரத்திச் சென்றன. குலசேகரனின் படை முகாமிட்டிருந்த எறிக்காவூர் என்ற கிராமத்தைத் தீயிட்டு அழித்தனர். அவ்விடத்தில் இலங்காபுரம் என் இன்னொரு கோட்டை அரணை இலங்காபுரத் தண்டநாயக்கன் நிர்மாணித்தான். அதன் பின்னர் தேவியாபட்டினம், ஸ்ரீயாவளம் ஆகிய பிரதேசங்களையும் தனதாக்கிக் கொண்டான். அவ்வாறே இருபத்தேழு பெரிய கிராமங்கள் இலங்காபுரனால் தீக்கிரையாக்கப்பட்டன.

**வீரபாண்டியன்**

இவ்வேளையில் இலங்காபுரனுக்குப் புதிய தகவல் எட்டியது. அதன்படி குலசேகரனால் கொல்லப்பட்ட பாண்டிய மன்னனான பராக்கிரமபாண்டியனின் மகனான வீரபாண்டியன் என்பான் உயிர் தப்பிக் கரந்துறைவதாகச் செய்தி கிட்டியது. அவனுடன் அவன் மனைவியும் பிள்ளைகளும் மலைப்பிரதேசத்தில் வாழ்வதாகக் கூறினார்கள். உடனே இலங்காபுரன், 'நான் குலசேகரனின் படைகளை வெற்றி கொண்டு, பாண்டி நாட்டில் அரைப்பகுதியை மீட்டுள்ளேன். மதுரைக்கு இரண்டு மூன்று லீக் தூரத்தில் தங்கியுள்ளேன். உன்னுடைய தந்தைக்கு உதவுவதற்காகவே என் மன்னர் எங்களை தென்னிந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். துரதிர்ஷ்டவசமாக எதிரிகளால் உன் தந்தை கொல்லப் பட்டார். உரிமை உனது. பயமின்றி வந்து உனது அரசைப் பெற்றுக் கொள்க'. என அறிவித்தான். வீரபாண்டியன் அவ்வாறே புறப்பட்டு இலங்காபுரனிடம் வந்து அடைக்கலம் புகுந்து கொண்டான். செய்தி அறிந்த இலங்கை வேந்தன் பராக்கிரமபாகு, அவனுக்குத் தேவையான திரவியங்கள், ஆபரணங்கள் அனைத்தையும் கப்பலில் இங்கு அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை
அகழ்வில்
வெளிப்பட்ட
நடராஜர்
விக்கிரகம்

இலங்காபுரனின் படைவீரர்கள் மதுரையை நோக்கி முன்னேறினர். வழியிலுள்ள கிராமங்களையும் சிற்றரசுகளையும் கைப்பற்றியவாறு விரைந்தனர். இத்தருணத்தில் ஜகத்விஜயன் என்ற தளபதியின் தலைமையில் இலங்கையிலிருந்து கப்பல் படை ஒன்று இங்கு வந்து இலங்காபுரனின் படையுடன் சேர்ந்து கொண்டது. பல வெற்றிகளை ஜகத்விஜயனின் படை குவித்தது. ராஜனா நகரத்தில் நிகழ்ந்த யுத்தத்தில் அலங்காபுரனின் தலைமையிலான படை அணி ஒரு புறமும் ஜகத்விஜயனின் படை அணி இன்னொரு புறமுமாகக் குலசேகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையை முற்றுகையிட்டன. குலசேகரன் ராஜினா நகரத்தைவிட்டுத் தப்பி ஓடினான்.

குலசேகரன் பயத்துடன் ராஜனா நகரத்தைவிட்டுத் தப்பி ஓடிப் போனான். அதன் பின்னர் மதுரைக்கு வந்த இலங்காபுரனும் திக்விஜயனும் அங்கு தங்கினர். வீரபாண்டியனிடம் பாண்டிநாட்டை ஒப்படைக்க விரும்பினர். இது உன் தந்தையின் இராச்சியம் ' என்று அவனை மன்னனாக்க முடிவு செய்தனர். அத்துடன் அந்த இராச்சியத்தில் நிலவிய உண்ணாட்டுக் கலவரங்களையும் அடக்கிவிட்டனர். பொன் அமராவதியில் மூண்ட பெரும் புரட்சியை முற்றாக அடக்கிப் பொன் அமராவதியிலிருந்த மூன்றடுக்கு மாளிகையுட்படப் பல வதிவிடங்களைத் தீக்கிரையாக்கினர். இலங்கை மன்னன் பராக்கிரமபாகு வீரபாண்டியனுக்கு முடி சூட்டு விழாவிற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டான். முடிசூட்டு விழாவுக்குத் தேவையான சகல திரவியங்களையும் மதுரைக்கு அனுப்பி வைத்தான்.

அதேவேளை ராஜனாவிலிருந்து தொண்டைமனார் பிரதேசத்துக்குத் தப்பி ஓடிக் கரந்துறைந்த குலசேகரன், தொண்டைமானாரைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அங்கிருந்து கொண்டு தன் படைப்பலத்தைப் பெருக்கிக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்தான். அதனைக் கேள்வியுற்ற இலங்காபுரன் உடன் தன் படையுடன் சென்று தொண்டமானாரைத் தீக்கிரையாக்கினான். அப்பிரதேசத்தில் தான் பராக்கிரமபாண்டியனைக் குலசேகரன் தன் வாளுக்கு இரையாக்கி யிருந்தான். குலசேகரன் தொண்டமானாரைக் கைவிட்டு பாளையங் கோட்டைக்குத் தன் படையுடனும் உறவினர்களுடனும் தப்பி ஓடினான். அவனைத் தொடர்ந்த இலங்காபுரனதும் ஜகத்விஜயனதும் படை பாளையங்கோட்டையை முற்றுகையிட்டுத் தாக்கியது. இப்போரில் ஏராளமான குதிரைகளும் யானைகளும் கைப்பற்றப்பட்டன. தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். பாளையங்கோட்டையிலிருந்து துரத்தி யடிக்கப்பட்ட குலசேகரன் மதுரைக்கு ஓடிச்சென்றான். தன்னை இலங்காபுரனின் படை தொடர்ந்து வருவதைக் கண்டு சோழநாட்டிற்குள் புகுந்தான். இலங்காபுரன், ஜகத்விஜயனைப் படையோடு பத்த நல்லூரில் முகாமிட்டிருக்குமாறு தெரிவித்துவிட்டு, தன்னுடன் ஒரு படையணியை அழைத்துக் கொண்டு, திருக்கானுப்பூர் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமாகச் சோழமன்னனின் ஆதரவைப்பெற்றுக் கொண்ட குலசேகரன், சோழச் சேனாவீரர்களுடன் படையெடுப்புக்குத் தயாராகினான். பெரும் யுத்தம் நிகழ்ந்தது. அதில் ஏழு லீக் தூரத்துக்குத் தமிழர்களின் சடலங்கள் சரிந்துகிடந்தன. சோழநாட்டின் எல்லைப்புறக் கிராமங்களையும் இலங்காபுரன் தீக்கிரையாக்கினான். குலசேகரன் அனைத்தையும் இழந்து ஓடிப்போனான். நாட்டை வீரபாண்டியனிடம் ஒப்படைத்துவிட்டு, இந்த இராச்சியத்தில் பராக்கிரமபாகுவின் தலைச்சின்னம் பொறித்த காகப்பணம் பயன்படுத்தப்பட வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்து, அதன் பின்னர் பாண்டிய, சோழக் கைதிகளோடு இலங்காபுரன் இலங்கைக்குத் திரும்பினான்.

இந்த வெற்றியைக் கொண்டாடி நினைவு கூரும் விதமாகப் பராக்கிரமபாகு, பாண்டிவிஜயம் எனும் நாமத்தில் ஒரு கிராமத்தை உருவாக்கினான். பிராமணர்களுக்கு அக்கிராமத்தில் வளமாக வாழ நிலங்களையும் பல நன்கொடைகளையும் வழங்கினான்.


## அத்தியாயம்: 13
## பராக்கிரமபாகுவின் பின்னர்..

பராக்கிரமபாகு மன்னன் நாட்டின் அபவிருத்தியிலும் பௌத்த சமயத்தின் வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்தினான். நாட்டு மக்களைப் பௌத்த சமயத்தையும் பிக்குகளையும் பேணி ஒழுகுமாறு பணித்தான். பௌத்த விகாரைகளிடையே சமயநெறியில் ஒற்றுமைத் தன்னை நிலவ வேண்டி நடவடிக்கைகள் எடுத்தான். முதலில் மூன்று விகாரைகளைச் சேர்ந்த பிக்குகளிடையேயும் மக்களிடையேயும் நிலவிய வேறுபாடுகளைக் களைய முயற்சிகள் எடுத்தான். மஹாகாசிபதேரர் என்ற வயோதிபப் பிக்குவைத் தலைமைப் பீடத்தில் நியமித்தான். மூன்று புத்தகாககளையும் விநாயா முழுவதையும் சந்தேகமறக் கற்றான். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த மதிப்பார்ந்த பிக்குகளைப் புலத்திநகருக்கு அழைத்து அங்கு அமர்த்தினான். அனுராபுரத்தில் வாழ்ந்த நானபாலதேரர்,ஏனைய பகுதிகளில் வாழ்ந்த நகின்டபாலியதேரர், மொகலானதேரர், உருகுணையில் செலன்ராஜரத்னவிகாரையின் நந்ததேரர், மஹாவிகாரைத்தேரர்கள் என்போரை அழைப்பித்தான். மஹாகாசிபதேரரின் தலைமையில் இவர்கள் பௌத்த ஒழுக்கங்களைச் சீர்ப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டகாமினி அபயன் காலத்தில் பிரிந்த அபயகிரி விகாரைப்பிரிவினரையும், மஹாவிகாரையிலிருந்து மஹாசேனன் காலத்தில் பிரிந்த ஜேத்தவன விகாரைப் பிரிவினரையும், மஹாவிகாரைப்பிரிவினரையும் சமய ஒழுக்கத்தில் ஒற்றுமைப்படுத்துவதில் பராக்கிரமபாகு மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றான். அவற்றுடன் பல விகாரைகளையும், பிக்குகள் தங்குவதற்கான மண்டபங்களையும்,, தந்ததாதுக்கோயில் ஒன்றையும் வட்டத்தடாகம், குகைத்தடாகம், புறாத்தடாகம், தாமரைத்தடாகம் போன்ற பல தடாகங்களையும் அமைப்பித்தான். ஜேத்தவனக் கல்லூரியையும் கட்டி அளித்தான். அத்துடன் ஆலாகான பிரிவேனா, சுத்தாத்த சேத்தியம், ரூபவதி சேத்தியம், பிரம்மாவுக்கான ஓர் ஆலயம், இலங்காதிலக சிலா மண்டபம், பத்தசீமா பாசடா என்ற உபதேச மண்டபம், பச்சிமராம, உத்தரராமா சேத்தியங்கள், வித்யாதாரகுகை, நிசன்ன பத்திமலேனா (இருக்கும் சிலைக் குகை), நிப்பன்னபத்திமகுகை (துயிலும் சிலையுள்ள குகை), பாண்டிய நாட்டிலிருந்து கொண்டு வந்த தமிழ்க்கைதிகளைக் கொண்டு கட்டப்பட்ட தெமிளதாதுகோபம், இராஜவேதி புஜங்கா நகரில் கட்டப்பட்ட இஸ்பத்தான விகாரை, தத்துகாபசேத்தியம், மூன்று சிலா மண்டபங்கள், சீகபுர நகரத்தில் குசினாறா விகாரை, அத்துடன் அங்கு ஒரு தாதுகோபம், விஜித நகரில் வேலுவன விகாரை, கவுத்த விகாரை முதலானவற்றைக்



பொலநறுவை கோட்டை வடக்கு வாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவித்தான். அனுராதபுரத்தில் தமிழர்களால் முன்னர் சேதமாக்கப்பட்ட இரத்தினவாலுகதூபி, அபயகிரி தூபி, ஜேத்தவன தூபி, மிரிசுவெட்டி தூபி, லோகபாசாடா, அரண்மனைகள், தூபராமயா சேத்தியம் என்பன திருத்தப்பட்டன.

பராக்கிரமபாகு மன்னன் இலக்குயன்ன, திப்புயன்ன முதலான நந்தவனங்களை அமைத்தான். அதனைவிட நூற்றுக்கணக்கான நந்தவனங்கள் பல பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டன. பல கிராமங்களிலும் நகரங்களிலும் 99 தூபிகளை அமைத்தான். 466 சிலா மனைகளைப் புதிதாக அமைப்பித்தான். 91 வெள்ளரசுக் கிளைகளை நாடெங்கும் நாட்டுவித்தான். இவ்வாறு பல சமயக்கட்டிடங்கள் அவனால் அமைக்கப்பட்டன. 79 தேவாலயங்கள் அமைத்தான்.

மகா பராக்கிரமபாகு தனது இராச்சியத்தில் நூற்றுக்கணக்கான நீர்ப்பாசனக்குளங் களையும் கால்வாய்களையும் அமைப்பித்துள்ளான். ஆகாசகங்கை என்ற கால்வாயை அமைப்பித்தவன் பராக்கிரமபாகுவே ஆவான். பராக்கிரம சமுத்திரம் என்ற மாபெரும் நீர்ப்பாசனக் குளத்தைக் கட்டினான். மஹிந்த தடாகம், எக்கஹ வாவி, குட்ட வாவி, மணிஹிர வாவி, மஹாதரகலை வாவி, கிரித்தலை வாவி, கன்ன வாவி, பதவாவி முதலான நூற்றுக்கணக்கான குளங்களை அமைப்பித்தான். 460 சிறிய குளங்களைத் திருத்துவித்தான்.காம்பிறாக் கால்வாய், ஹேமாவதி கால்வாய், நிலாவாஹினி கால்வாய், சாலாவதி கால்வாய், வேதவதி கால்வாய், மங்கலகங்கைக் கால்வாய் என, 504 கால்வாய்களை வெட்டுவித்தான். ஜயகங்கைக் கால்வாயைத் தூர் வாரித் திருத்து வித்தான். அவனது தாய் இரத்தினாவலியைத் தகனம் செய்த உருகுணையில் இரத்தினாவலி சேத்தியத்தை கட்டுவித்தான். உருகுணையில் பல தூபிகளையும் நீர்ப்பாசனக் குளங்களையும் அமைப்பித்தான்.

இலங்கை வரலாற்றின் மாபெரும் மன்னனான பராக்கிரமபாகு 33 ஆண்டுகள் உன்னதமாக இராச்சியத்தைப் பரிபாலித்தபின் மரணமானான்.

## விஜயபாகு

பராக்கிரமபாகுவின் பின்னர் அவனது சகோதரியின் மகனும் சிறந்த அறிவாளியும் கவிஞனுமாகிய அவனது மருமகன், விஜயபாகு என்ற நாமத்துடன் அரசகட்டிலேறினான். அரசவாரிசாக இவன் இருந்தபோதும் ஆரம்பத்தில் இவன் கலிங்க வாரிசாக இருந்தமையால் இவனுக்கு எதிராகவே அமைச்சர்களும் பிரதானிகளும் விளங்கினர். எனினும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புகளை அடக்கி வெற்றிகொண்ட விஜயபாகு, குபேரனின் அழகாபுரி போலவும், இந்திரனின் அமராவதி போலவும், தன் புலத்திநகரிலிருந்து ஆட்சி செலுத்தினான். பௌத்தமத வளர்ச்சிக்குப் பல தொண்டாற்றினான். மனுநீதிகளை அறிந்தவனாதலால், மக்களை நான்கு அற ஒழுக்கங்களையும் பின்பற்றி நடக்குமாறு பணித்தான். ஓராண்டு காலம் விஜயபாகுவின் நல்லாட்சி நிலவியது.

## மஹிந்தன்


விஜயபாகுவின் நண்பனாகப் பழகிய கலிங்கதேசத்தவனான மஹிந்தன் என்பான், தீபாணி என்ற துஷ்டனோடு சேர்ந்து, சதி செய்து, மன்னனைக் கொன்று அரசனானான். ஆனால் அவனால் ஆக ஐந்து நாட்கள் மட்டுமே அரசாள முடிந்தது. படைத்தளபதி, அமைச்சர்கள், பிரதானிகளின் ஆதரவோடு அவன் அரசனாக முயற்சிக்கவில்லை. அதனால் ஐந்தாம் நாளே தூக்கி எறியப்பட்டான். அவனின் பின்னர் கலிங்க மரபைச் சேர்ந்த கீர்த்தி நிசங்க மல்லன் என்பவன் ஆட்சிப் பீடமேறினான். அவன் சில காலம் புலத்திநகரிலிருந்து ஆட்சி செலுத்தினான். புத்த தாதும் ஜயகலமும் வைப்பதற்காக ஒரு சேத்தியம் கட்டுவித்தான். அத்துடன் இரத்தினாவலி சேத்தியத்தையும் புணருத்தாரணம் செய்வித்தான். அவன் தன்னாட்சிக் காலத்தில் ஜம்புக்கோள விகாரையையும் அமைப்பித்தான். அத்துடன் 73 சிலாமனைகளை கட்டுவித்தான். ஒன்பது ஆண்டுகள் அமைதியாகவும் சிறப்பாகவும் ஆட்சிபுரிந்து மரணமானான். அதன் பின்னர் அவனது ஒரு மகனான வீரபாகு என்பான் ஆட்சிப் பீடமேறினான். ஒரு நாளில் தன் ஆட்சியைத் தன் சகோதரனான விக்கிரமபாகு என்பவனிடம் பறி கொடுத்தான். அவனால் மூன்று மாதங்களே ஆட்சியை வைத்திருக்க முடிந்தது. அவனிடமிருந்து ஆட்சியை நிசங்கனின் மைத்துனனாகிய கொடகங்கன் என்பானிடம் பறிகொடுத்தான். கொடகங்கன் ஒன்பது மாதங்கள் ஆட்சி செலுத்தினான்.

கீர்த்தி என்ற சேனாதிபதி மன்னனைக் கைதுசெய்து அவனது விழிகளை அகற்றிக் கொன்றுவிட்டு, மகா பராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியின் உதவியுடன் மூன்றாண்டுகள் ஆட்சி புரிந்தான். அதன் பின்னர் சாகசமல்லன் என்ற ஒக்காகா வம்சத்தைச் சேர்ந்தவன் இரண்டாண்டுகள் அரசனாக விளங்கினான். அவன் பின்னர் படைகளின் தலைவனாக விளங்கிய ஆயாசமன்தன் என்பான் நீதியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டப்படியும், கீர்த்தி நிசங்காவின் மனைவியான கல்யாணவதியின் துணையுடன் ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். கல்யாணவதி சமயப் பற்று மிக்கவள். பன்னசாலகா கிராமத்தில் தன் பெயரில் ஒரு விகாரை கட்டுவித்தாள். அந்த விகாரைக்கு நிலங்கள், அடிமைகள், திரவியங்கள் என்பனவற்றை வழங்கினாள். மன்னன் ஆயாசமன்னின் அனுமதியுடன், தேவாதிகாரி என்பானை வெலிகமத்துக்கு அனுப்பி அங்கு அழகான விகாரை ஒன்றினைக் கட்டுவித்தாள். அவன் சுயாகுலவட்டான எனும் பிரிவேனாவையும் அமைத்தான். ஆயாசமன்தின் பின்னர் தர்ம அசோகன் என்ற இளவரசனை பொம்மை அரசனாகக் கொண்டு ஓராண்டு ஆட்சி புரிந்தான். அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது மூன்று மாதக் குழந்தையாக இருந்தான். அவ்வேளை சோழநாட்டிலிருந்து படையெடுத்துவந்த அனகங்கன் என்பான் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அதன் பின்னர் பதினேழு நாட்கள் மட்டுமே ஆட்சி புரிய அவனால் முடிந்தது. ஏனெனில் அனகங்கனின் தளபதியான கமுநாகன் அரசனைக் கொன்றுவிட்டு, மகாபராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியின் துணையுடன் (முன்னரும் ஒரு தடவை ஆண்டவள்) ஓராண்டு ஆட்சி செலுத்தினான். அவ்வேளை தென்னிந்தியாவிலிருந்து தமிழர்



இலங்காதிலக விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையுடன் வந்த லோகிசாரன் என்ற மன்னன் இலங்கையைக் கைப்பற்றி புலத்திநகரிலிருந்து ஒன்பது மாதங்கள் அரசாண்டான்.

கலங்கார வம்சத்தைச் சேர்ந்த பராக்கிரமன் என்ற சேனைத் தலைவன் மகாபராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியை மீண்டும் அரசகட்டிலேற்றினான். இந்த அரசியின் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் போது ஏழாவது மாதம், பராக்கிரமபாண்டியன் தென்னிந்தியாவிலிருந்து பெரும் படையுடன் வந்து, லீலாவதியையும் தளபதியையும் கொன்று இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டான். அவனது மனுநீதி தவறிய ஆட்சி மூன்றாண்டுகள் புலத்திநகரில் நிலவியது.

## அத்தியாயம்: 14
## கலிங்க மாகன்

**இ**ந்நிலையில் இலங்கை மக்கள் செய்த பாவங்களின் விளைவாக கலிங்க தேசத்தைச் சேர்ந்த குரூர மனம் கொண்ட இளவரசன் மாகன் என்பான் இருபதினாயிரம் கலிங்க வீரர்களுடன் இலங்கையில் இறங்கி, தன் வசப்படுத்திக் கொண்டான். அவன் தவறான சமயநெறிகளைக் கொண்டு ஒழுகுகின்ற நீதி நியாயமற்ற துட்டன். அடர் காட்டிடையே அழிவைச் செய்ய எழுந்த காட்டுத் தீ. உண்மையென்ற அல்லி மலர்களைக் கூம்ப வைக்கும் சூரியன். பகற் பொழுதில் மலரும் தாமரை களைக் வாடவைக்கும் சந்திரன். காட்டுத் தீ பரவியது போல இலங்கையை அவர்கள் ஆக்கிரமித்தனர். 'நாங்கள் கேரளத்தின் பூதங்கள்' எனக் கோஷமிட்டபடி இலங்கை வாழ் மக்களின் உடைகள், ஆபரணங்கள், திரவியங்கள் என்பனவற்றைக் கொள்ளையிட்டனர். கிராமங்கள் தோறும் வன் செயல்கள் புரிந்தனர். வீடுகளுள் புகுந்து கைகளையும் பாதங்களையும் வெட்டிக் கொள்ளையிட்டனர். சிங்கள மக்களுக்குச் சொந்தமான மாடுகளையும் எருமைகளையும் அபகரித்துச் சென்றனர். செல்வந்தர்களை ஓட்டாண்டியாக்கினர். புத்த சிலா மனைகளையும் சேத்தியங்களையும் தரை மட்டமாக்கினர். கைப்பற்றிய வீடுகளையும் விகாரை மனைகளையும் தமக்கு விரும்பிய தமிழர்களுக்கு அளித்தனர்.

சிறுவர்களைச் சாட்டைகளால் அடித்தனர். மக்களைக் கொண்டு கடுமையாக வேலைகளைச் செய்வித்தனர். பெறுமதி வாய்ந்த நூல்களைக் கொளுத்தி அழித்தனர். முன்னைய மன்னர்களால் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதி மிக்கதாக மதிக்கப்பட்டு பேணப்பட்ட இரத்தினவலி சேத்தியத்தை முற்றாக அழித்தனர். அந்தோ, அந்தோ! இவ்வாறு யமனின் கிங்கரர்கள் மாதிரி செயற்பட்ட தமிழ்ப்பூதங்கள் இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தன. அதன் பின்னர் புலத்தி நகரினைச் சுற்றி வளைத்துப் பராக்கிரமபாண்டியனைக் கைதுசெய்து விழிகளைத் தோண்டியபின்னர் அவனது திரவியங்களை எல்லாம் கவர்ந்து கொண்டனர். விலைமதிப்பற்ற முத்துக்களும் வைரங்களும் கொள்ளையிடப்பட்டன.

அதன் பின்னர் சிங்களச் சேனாதிபதி மாணபரணன் கலிங்கமாகனை அழைத்து ஆட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். புலத்திநகரில் முடிசூடி வாழத்தலைப்பட்டதும், தான் பின்பற்றும் தவறான மார்க்கத்தை (சைவம்) பின்பற்றுமாறு மக்களைப் பணித்தான். தமிழர்களுக்கு (கேரளர்களுக்கு) வயல்கள், மேய்ச்சல் தரவைகள், வீடுகள், தோட்டங்கள், மாடுகள். எருமைகள் எனச் சிங்களவருக்குச் சொந்தமானவற்றை உடமை களாக்கினான். விகாரைகளுக்கும் சங்கத்துக்கும் ஒதுக்கப்பட்டிருந்த பரவணி நிலங்களையும் இவ்வாறு வழங்கினான். கலிங்க மாகனின் கொடுங்கோலாட்சி இலங்கையில் 21 வருடங்கள் நிலைத்திருந்தது.

**சிற்றரசுகள்**

கலிங்க மாகனின் கொடுங்கோலாட்சி புலத்திநகரில் நிலவிய காலத்தில் சிங்களத் தலைவர்களில் சிலர் இலங்கையின் சில பாதுகாப்பான அரண்போன்ற மலைப்பிரதேசங்களில் சிற்றரசுகளை நிறுவிக் கொண்டிருந்தனர். அங்கிருந்து நாட்டு மக்களின் நலன்களையும் மதத்தையும் காப்பாற்றி வந்தனர்.

சுபசேனாதிபதி என்ற படைத்தளபதி, எதிரிகளான கேரள பூதங்களால் இலகுவில் அடைய முடியாத சுபபர்வத்தில் நகரம் ஒன்றினை அமைத்துக் கொண்டு அதிகாரியாக விளங்கினான். ஆலகமன்றம் போன்ற அழகான நகரம் அதுவாகும். புவனேகபாகு என்ற தலைவன் எதிரிகளால் இலகுவில் அடைய முடியாத கோவிந்தமலையில் கோட்டை ஒன்றினை அமைத்துக் கொண்டு, உருகுணை நாட்டைப் பரிபாலித்தான். அதே போல மணிமேகலைப் பிரதேசத்திலுள்ள கங்கதோணி மலைப்பிரதேசத்தில் அழகான கோட்டை ஒன்றினை சங்க என்ற படைத்தலைவன் அமைத்துக் கொண்டான். குரூர மன்னனாகிய மாகனின் படைகளிலிருந்து இரண்டு லீக்குகளுக்கு அப்பால் இது அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசங்கபோதி மன்ன மரபில் வந்தவனாகிய விஜயபாகு என்ற இளவரசன், வன்னிப் பிரதேசத்தைத் தன்னாதிக்கத்தின் கீழ் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். சிங்களப் படை ஒன்றினைத் திரட்டிக் கொண்டு மாகனுக்கு எதிராகப் போர் முழக்கமிட்டு, தமிழர்களை அவர்களின் இருப்பிடங்களிலிருந்து கலைத்துவிட்டு, மாயாரட்டைப் பிரதேசத்தை விடுவித்தான். அதன் பின் தம்பதேனியா மலையில் கோட்டை ஒன்றினை அரணாக அமைத்துக் கொண்டான். இவ்வாறு மாகனுக்கும் விஜயபாகுவுக்கும் யுத்தம் நடக்கும்போது, புலத்தி நகரிலிருந்து பிக்குகள் புனித தந்ததாதுவையும் ஜயகலத்தையும் எடுத்துக் கொண்டு மாயாரட்டைப் பிரதேசத்துக்குள் முக்கியமாகக் கொத்மலைப் பிரதேசத்துக்குள் நுழைந்தனர். மாயாரட்டை இராச்சியத்துள் புகுந்த பிக்குகள் கொத்மலைப் பிரதேசத்தில் பாதுகாப்பான இடத்தில் புனித தாதுக்களைப் புதைத்து வைத்தனர். வாசிஸ்சராதேரர் போன்ற பிக்குகள் பாண்டிய நாட்டுக்கும் சோழநாட்டுக்கும் தென்னிந்தியாவுக்கும் ஓடிச்சென்றனர். இவற்றைக் கேள்விப்பட்ட விஜயபாகு தன் அமைச்சர் சிலரை தென்னிந்தியாவுக்கு அனுப்பி அங்கு சென்ற பிக்குகளை வரவழைத்துக் கொண்டான். அவர்களாக திரும்பி வந்ததும் அவர்களை வணங்கி கௌரவித்து, புனித தாதுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களைக் காட்டுமாறு வேண்டினான். அவர்கள் புனித தாதுக்களை எடுத்து வழங்க ஒப்புக் கொண்டார்கள். மன்னன் பெரு மகிழ்வோடு தன் படைகளை அழைத்துக் கொண்டு கொத்தமலைப் பிரதேசத்துக்குச் சென்று, அவற்றைப் பெற்று பெரு விழாவொன்றை எடுப்பித்தான். அன்று அவன் சக்கிரவர்த்திப் பதவி கிடைத்தது போலப் பூரித்துப் போனான். தன் ஆட்சிக்குட்பட்ட நகரங்களுக்கு அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்றான். பின்னர் தன் இடத்துக்கு எடுத்து வந்து விழாக்கள் கொண்டாடினான். பின்னர் பெலிகலை மலை உச்சியில் தாதுக் கோயில் ஒன்றினை அமைத்து அதில் அவற்றைப் பிரதிஷ்டை செய்து வைத்தான். அக்கோயிலைச் சுற்றி பிக்குகள் தங்கி வாழ மனைகளையும் அமைத்துக் கொடுத்தான். சங்கரகித்த தேரர், திம்புபுலாகலை மெதங்கா தேரர் போன்றோரின் ஆலோசனைகளுடன் படையெடுப்பகளால் அழிந்துபோன நூல்களையும் நெறிகளையும் மீண்டும் எழுதுவித்தான் . விஜயபாகு ஆராமை, விஜயசுந்தர ஆராமை என்பனவற்றைக் கட்டுவித்தான். வட்டலகம என்ற விகாரையை அமைப்பித்தான். தமிழர்களால் சேதமடைந்து சேத்தியங்களையும் மஹாதூபியையும் திருத்துவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபாகுவுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர் ஒருவன் பராக்கிரமபாகு, மற்றவன் புவனேகபாகு. எதிரிகளை வெற்றி கொள்கின்ற அறிகுறிகள் பராக்கிமபாகுவிடம் இருப்பதை மன்னன் அவதானித்தான். தனக்குப்பின்னர் இந்த இராச்சியத்தைப் பராக்கிரமபாகுவே ஆள வேண்டுமென அனைவரும் அறிய வைத்தான்.

## (இரண்டாம்) பராக்கிரமபாகு

(இரண்டாம்) பராக்கிரமபாகு மிகுந்த அறிவுடையவன். கலிகால சாகித்ய பண்டிதனாக விளங்கினான். அவன் ஆட்சியாளனாகியதும் புவனேகபாகுவை உபராஜாவாக நியமித்ததுடன் தன் அரசில் பாதிப்பிரதேசத்தை நிர்வகிக்குமாறு பணித்தான். 'இலங்கை முழுவதையும் ஒரே இராச்சியமாக்கி எனதாக்குவேன். அதற்கு முதல் புனித தாதுக்களை இங்கு வரவழைத்து விழாவெடுத்து சங்கத்தாரை மகிழ்விப்பேன். அதன் பின்னர் தமிழர்களை வெற்றி கொள்வேன்' என முடிவு செய்தான். கொத்மலையிலிருந்த புனித தாதையும் ஜயக்கலத்தையும் தம்பதேனியாவுக்கு எடுப்பித்து வந்தான். தன் அரண்மனைக்கு அருகில் கோயில் ஒன்றினை அமைத்து அதில் வழிபாட்டுக்கு வைப்பித்தான். அழகான தங்கப் பேழைகளில் அவற்றினை வைத்துப்பின்னர் தாமரை



கண்டி தலதா மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரில் அவற்றை ஏந்தியவாறு, 'கடவுளுக்கும் மேலான கடவுளான புத்தர் மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவருடைய புனித உடற்பகுதிகளைக் கொண்ட சேத்தியங்கள் இலங்கையில் பதினாறு இடங்களில் உள்ளன. முத்துசிவனின் மகனான அசேலன் பௌத்தமதத்தை நன்கு வழி நடாத்தினார். ஆனால் குதிரை வர்த்தகர்களான சேனன், குத்திகன் என்ற இருவரிடம் இராச்சியத்தைப் பறிகொடுத்தான். அதன் பின்னர் துட்டகாமினி என்றறியப்பட்ட அபயன் இலங்கையை வெற்றி கொண்டிருந்த எல்லாளன் என்ற சோழனிடமிருந்து நாட்டையும் சமயத்தையும் விடுவித்தார். அதன் பின்னர் வட்டகாமினி நாட்டையும் சமயத்தையும் பாதுகாத்தார். ஆனால் ஐந்து தமிழ் ஆக்கிரமிப்பாளரிடம் நாட்டைப் பறிகொடுத்தார். அதன் பின்னர் தாதுசேனனால் பாதுகாக்கப்பட்ட நாடும் சமயமும் ஆறு தமிழ் மன்னர்களிடம் பறிபோனது. சோழர்களை இந்த நாட்டிலிருந்து துரத்தியடித்துவிட்டு ஆட்சியை நடாத்திய விஜயபாகு நாட்டையும் சமயத்தையும் பாதுகாத்தார். இன்று மாகனிடமும் ஜயபாகுவிடமும் புலத்திநகர் இராச்சியம் உட்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து நான் விடுவிப்பேன்.' என்று சபதமெடுத்தான்.

அவ்வேளை ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அரசனின் கைகளிலிருந்த புனித தந்ததாதுக்கள் அவன் கைகளிலிருந்து வானில் எழுந்தன. கௌதமபுத்தரின் வடிவில் ஒளி உருவம் வானில் தெரிந்தது. பிரகாசமான வடிவில் ஆறு வர்ணங்களில் அவ்வுரு ஒளிர்ந்தது. பின்னர் அரசனின் கைகளில் பழையவாறு புனித தாதுக்களாக மாறி அமர்ந்தன. 'இந்நாளே என் வாழ்வின் அர்த்தமுள்ள தினம். புதிய உத்வேகம் கொள்ள வைத்துள்ளது.' எனப் புளகாங்கிதம் அடைந்தான்.

அந்த அதிசயமான சம்பவத்தின் பின்னர் மக்கள் பயத்தினாலும் மகிழ்ச்சியினாலும் மதிப்பினாலும் பராக்கிரமபாகு மீது ஈடுபாடுகொண்டனர். தன்னாட்சிக்காலத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களை மன்னித்துத் தண்டத்துடன் விடுதலை செய்தான். தன் பகைவர்களையும் மன்னித்து விட்டான். தமிழ்ப்படை வீரர்களை எதிர்த்து அழிப்பதற்கான படை திரட்டலைச் செய்தான். பலசாலிகளான சிங்கள இளைஞர்களைத் தன் படையில் சேர்த்துக் கொண்டான். பராக்கிரமபாகுவின் படைவீரர்கள், சர்ப்பங்கள் மீது விழும் கருடன்கள் போலச் சிலவேளைகளில் மாகனின் வீரர்களைத் தாக்கி வரலாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகன், ஜயவாகு

அத்தருணத்தில் மாகன், ஜயவாகு ஆகிய இரண்டு தமிழ் மன்னர்களின் தலைமையில் 40 ஆயிரம் தமிழ் வீரர்களும் கேரள வீரர்களும் இருந்தனர். மாகன் தன் பாதுகாப்புக் கோட்டைகளையும் அரண்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் அமைத்திருந்தான். புலத்திநகரம், கொட்டசாரா, கங்கதத்தக்கா, கொக்கலை, பாடி, குருந்தி, மானாமத்தை, மகாதீர்த்தம், மன்னார்ப்பட்டினம், புலச்சேரித்துறை, வலிகாமம், கோணா, கோணுசு, மடுப்படப்பாதுறை, சுக்காரா ஆகிய 15 பிரதேசங்களில் அமைத்திருந்தான். புலத்திநகரம் பராக்கிமபாகுவின் படைவீரர்களால் முற்றுகையிடப்பட்டது. மாகனும் ஏனையோரும் நிலமைகளைப் புரிந்து கொண்டனர். தமது திரவியங்கள், எடுக்கக் கூடிய சொத்துக்கள், பட்டுத்துணிகள் என்பன வற்றைக் காவிக்கொண்டு தம் பெண்டிர் பிள்ளைகளுடன் கோட்டையை விட்டு வெளியேறினர். கிழக்குக் கதவு வழியாக வெளியேறுவதற்குப் பதிலாக மேற்குக் கதவு வழியாக வெளியேறினர். காலவாவிப் பிரதேசத்தில் முகாமிட்டிருந்த சிங்களப்படைவீரர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது. அவர்களின் பொருட்கள், திரவியங்கள் அனைத்தையும் பறித்துக் கொண்டதோடு தப்பி காடுகளுக்குள் ஓடிய ஒருசிலரைத் தவிர அனைவரையும் வாளுக்கு இரையாக்கினர். சிங்கள மக்கள் தம் செல்வங்களையும் காணிகளையும் மீளப் பெற்றனர். மாகனின் ஆட்சி இவ்வாறு முற்றுப் பெற்றது.

# அத்தியாயம்: 15
# சந்திரபானு

பராக்கிரமபாகுவின் பதினோராவது ஆண்டு ஆட்சி நிறைவில், மலாயா நாட்டைச் சேர்ந்து சந்திரபானு என்ற இளவரசன் இலங்கை மீது பெரும் படையுடன் வந்திறங்கினான். 'நாங்களும் பௌத்தர்கள்' என அறிவித்தான். சந்திரபானுவின் வீரர்கள் விஷஅம்புகளைப் பாவித்து சர்ப்பங்கள் போல தாக்கிக் கொன்றனர். இலங்கை நாட்டையே துவம்சம் செய்வது போல இயங்கினர். குளங்கள் உடைக்கப்பட்டதால் வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தின. கிராமங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். அதனைக் கேள்விப்பட்ட பராக்கிரமபாகு, தன் மருமகன் வீரபாகுவைப் பெரும் சைனியத்துடன் சந்திரபானுவை அடக்குமாறு அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரனும் கொடூரமானவனுமான வீரபாகு, சந்திரனை ராகு பிடிப்பது போல சந்திரபானுவின் படைகளை அழித்தான். மலாயா வீரர்கள் சிதறி ஓடினர். இராமனின் வீரர்கள் முன் எதிர் நிற்க முடியாத இராச்சதர்கள் போல சிதறி ஓடினர். ஏராளமானோர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் வீரபாகு தேவேந்திரா முனைக்குச் சென்று, விஷ்ணு தேவாலயத்துக்குச் சென்று, விஷ்ணுவை வழிபட்டுவிட்டுத் தம்பதேனியா திரும்பினான்.

கலிங்க மாகனை நாட்டைவிட்டுத் துரத்தி, சந்திரபானுவின் படைகளைப் புறங்கண்ட பராக்கிரமபாகு அதன் பின்னர் சங்கத்துக்குப் பல தொண்டுகளாற்றினான். தம்பாவிலிருந்த தர்மகீர்த்தி தேரரை இலங்கைக்கு வரவழைத்து சமய நெறிகளைச் சீர்ப்படுத்தினான். பல சேத்தியங்களையும் பிக்குகளுக்கான மனைகளையும் அமைத்தான். அவனது தம்பியான புவனேகபாகுவும் பல சமயத் தொண்டுகளைப் புரிந்தான்.

அதன் பின்னர் கண்டி ஸ்ரீவட்டானவில் மஹாவிகாரையை கட்டுவித்தான். அத்துடன் போதி, சேத்தியம், சிலாமனை என்பனவும் அமைக்கப்பட்டன. தம்பதேனியாவிலிருந்து கண்டி வரையிலான வீதி அலங்கரிக்கப்பட்டது. மணல் பரவி, வழியெங்கும் வாழைகள் நாட்டி, தோரணைங்கள் கட்டி, பல்வகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டது. யானைகள், நடனக்காரர், பிரதானிகள் சூழ தம்பதேனியாவிலிருந்து புனித தாதும் ஐயக்கலமும் ஊர்வலமாக மஹாவிகாரைக்கு எடுத்து வரப்பட்டன. ஏழு நாட்கள் பெருவிழா கொண்டாடப்பட்டது.

பராக்கிரமபாகு விகாரை, பெலிகலையில் புவனேகபாகு விகாரை, குருனாகலையில் மஹிந்தபாகு பிரிவினா, களனி விகாரை, அத்தனகல விகாரை, பெந்தோட்டை விகாரை, தேவேந்திரா தேவாலயம் முதலானவை மன்னனால் கட்டுவிக்கப்பட்டன. பிக்குகளுக்கான விஷேட அங்கிகள் வழங்கப்பட்டன. பெரு விழா எடுத்து புனிததாதுக்களை மக்களின் தரிசனத்துக்கு வைத்தான். பின்னர் சமன்குத்தா (சிவனொளிபாதம்) மலைக்குப் புனித யாத்திரை மேற்கொண்டான்.

பராக்கிரமபாகு தான் தன் நாடெங்கும் புனித யாத்திரை ஒன்றினை மேற்கொள்ள விரும்பினான். புனித தலங்களைச் சேவிக்க அவாக் கொண்டான். தன் அமைச்சர்களை நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பி அப்பிரதேசங்களின் அபிவிருத்திகளை முன்னெடுக்க வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமனகலைக்கு (சிவனொளிபாதம்) தக்கதொரு பாதையை அமைப்பித்தான். வீதிகளைச் செப்பனிட்டு, நதிகளுக்குக் குறுக்கே பாலங்களை அமைப்பித்தான்.

ஒரு பருவம் கடும் வறட்சி நாட்டில் ஏற்பட்டது. நெல் வயல்கள் காய்ந்து கருகின. கடும் பஞ்சம் ஏற்பட்டுவிடும் நிலை தோன்றியது. மன்னன் சேத்தியங்கள், கோயில்கள் எங்கும் வழிபாடியற்றினான். மழையை வேண்டி புனிததாதுக்களை ஊர்வலமாக எடுத்து வந்தான். அதன் பின்னர் கருமுகில் கூடிப் பெருமழை பொழிந்து வறட்சி நீங்கியது.

ஒருநாள் மன்னன் தனது ஐந்து பிள்ளைகளான விஜயபாகு, புவனேகபாகு, திலோகமல்லன், பராக்கிரமபாகு, ஜயபாகு ஆகியோரையும், சகோதரி மகனான வீரபாகுவையும் தன் சமூகத்துக்கு அழைத்தான். 'இந்த உலகத்தில் பெற்றோருக்கு மிகநல்ல பிள்ளை, நல்லபிள்ளை, உதவாதபிள்ளை என மூவகை மக்கள் பிறப்பர். உதவாதபிள்ளை குரங்கின் கைப் பூமாலையை ஒத்தவன். வறுமைக்கு நாட்டை இட்டுச் செல்வான். நான் நல்ல பிள்ளையாக இருந்ததால் என் தந்தை மாயா தேசத்தை மட்டும் எனக்களித்தார் ஆனால் நான் இலங்கை முழுவதையும் ஒரே இராச்சியமாக்கினேன். தமிழர்களின் ஆதிக்கத்தை ஒழித்தேன். வன்னி இளவரசர்களை மலைப்பிரதேசங்களில் தஞ்சம் புகக் கலைத்துவிட்டேன். இந்திய மன்னர்கள் பாண்டியனும் சோழனும் எனக்கு ஏராளமான அன்பளிப்புகளைத் தந்துள்ளனர். நானும் ஏராளமான சொத்துக்களைக் கொண்டு குபேரன் மாதிரி உள்ளேன். ஏழேழு தலைமுறைக்கும் உங்கள் பிள்ளைகள் அனுபவிக்கப் போதுமான வளமுள்ளது. என் தந்தைக்கு நான் உத்தம மகனான விளங்கினேன். நீங்களும் அவ்வாறானவர்களே. சுக்கராவுக்கு 60 ஆயிரம் பிள்ளைகள் இருந்தார்கள். அவர் ஜம்புதீபத்தை (இந்தியா) அத்தனை பிரிவுகளாக்கி ஒவ்வொரு இராச்சியத்தைப் பிள்ளைகளுக்கு அளித்தார். இன்றும் பத்து இளவரசர்கள் ஜம்துத்தீபத்தை பத்து இராச்சியங்களாக்கி ஆட்சிபுரிகின்றனர். நீங்களும் இலங்கை இராச்சியத்தை அவ்வாறு உங்களுக்குள் பிரித்து ஆளலாம். ஆனால் எதிரிகள் உங்கள் ஒற்றுமையைக் கண்டு அஞ்சும்படி இருக்க வேண்டும்.' என்றான்.

அதன் பின்னர் பிக்குகளையும் அமைச்சர்களையும் அழைத்து அவர்களின் அபிப்பிராயத்தகைக் கேட்டான். அவர்கள் அனைவரும், 'மூத்தமகன் விஜயபாகுவே அரசனாக உகந்தவன். சிறந்த வீரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளி. எதிரிகளை அடக்கக் கூடிய வல்லமையுள்ளவன். எதிரிகளும் சிங்கள வன்னி இளவல்களும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். நாங்களும் விஜயபாகுவின் கீழேயே பணியாற்ற விரும்புகின்றோம்' என்றார்கள். அவர்களின் முடிவை மன்னன் ஏற்றுக்கொண்டான். அதன் பின்னர் விஜயபாகுவை தன் அருகிலேயே ஆட்சியின் போது அமர்த்திக் கொண்டான்.

## நிர்வாகத்தில் விஜயபாகு

இராச்சியத்தின் நிர்வாகத்தில் விஜயபாகு பங்குகொள்ளத் தொடங்கினான். தன் தந்தைக்குத் தான் மிகச்சிறந்த மகன் என நிருபிப்பேனென எண்ணமிட்டான். பராக்கிரமபாகுவின் சகோதரியின் மகனும் தன் மாமனும் சிறுவயதிலிருந்தே தன்னுடன் நல்லுறவுகளைப் பேணியவனுமாகிய வீரபாகுவைத் தன் நெருங்கிய நண்பனாகவும் நம்பிக்கைக்குரிய அதிகாரியாகவும் நியமித்துக் கொண்டான். புத்த தந்தது‌ாதுவுக்கு அலங்காரமான சேத்தியம் ஒன்றினை அமைப்பித்தான். தன் சகோதரர்களான பராக்கிரமபாகுவையும் ஜயபாகுவையும் அழைத்து அரண்மனையில் தந்தைக்கு அருகிலேயே எப்போதும் கூட இருக்கச் செய்தான். தன் இளைய சகோதரனான திலோகமல்லனைச் சேனாதிபதியாக நியமித்து தம்பதேனியாவில் தங்கி இராச்சியத்தைக் கண்பானிப்பானாக நிர்வகிக்குமாறு பணித்தான். தான் தன் வதிவிடத்தை மஹாவத்தாலை எனுமிடத்துக்கு மாற்றிக் கொண்டான். அங்கிருந்து தெற்கிலிருந்து வரும் அபாயங்களைத் தடுப்பது எளிதெனக்கருதினான். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வரும் எதிரிகளை முறியடிப்பதற்காகத் தன் சகோதரன் புவனேகபாகுவைப் பெரும் சேனையுடன் சுந்தரபர்வத்தில் (யாப்பகுவை) தங்க வைத்தான். விஜயபாகு நாடெங்கும் திக்விஜயம் மேற்கொண்டு திரும்பி வந்தான். அதன் பின்னர் பொலநறுவையைத் திருத்தியமைக்கும் எண்ணத்துடன் புலத்தி நகருக்குப் புறப்பட்டான் தந்தை பராக்கிரமபாகு மகனுடன் புவத்திநகர் செல்லப் புறப்பட்டார். ஆனால் பாழடைந்திருக்கும் நகரத்துக்கு அரசனை அழைத்துச் செல்ல விரும்பாமல் அவரை தம்பதேனியாவில் தங்கியிருக்குமாறு கூறிவிட்டு பொலநறுவை சென்றான். இவனுடன் படைவீரர்கள், பிரதானிகள் ஆகியோரும் சென்றனர். ஒரு பகுதி குடிமக்களும் அந்நகருக்கு நகர்ந்தனர். புதிதாகப் புலத்தி நகரத்தைத் திருத்தியமைத்தான். வன்னித்தலைவர்களைக் கொண்டு அனுராதபுரத்தில் ரூவான்வெலிசாய தூபியைத் திருத்துவித்தான். விஜயபாகு அதன் பின்னர் சமனகுத்தவுக்கும் யாத்திரை மேற்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்கிரிகலை, கம்பளை (கங்கசிறீபுரம்), குருணாகலை முதலானவிடங்களில் விகாரைகளையும் சிலாமனைகளையும் அமைத்தான்.

**மீண்டும் சந்திரபானு**

இந்த வேளையில் மலாயாத் தலைவனான சந்திரபானு, மலாய வீரர்களையும் பாண்டிய சோழத் தமிழ்ப் போர்வீரர்களையும் சேர்த்துக் கொண்டு இலங்கை மீது மீண்டும் படையெடுத்து வந்தான். மகாதீர்த்தத் துறையில் வந்திறங்கினான். பாடி, குருந்தை முதலான பிரதேசங்களைக் கைப்பற்றி அங்குள்ள மக்களையும் தம்படையில் சேர்த்துக் கொண்டு சுபபர்வத்தில் முகாமிட்டிருந்தான். விஜயபாகுவுக்குத் தூது அனுப்பினான்: 'நான் சிங்கள அரசுகளான உருகுணை, பிஹிட்டி, மாயா மூன்றையும் நிச்சயமாகக் கைப்பற்றுவேன். அதனால் புனித தாதுக்களையும் என்னிடம் ஒப்படைத்துச் சரணடைக. அல்லது போருக்கு வருக'.

இதனை அறிந்த விஜயபாகு உடன், இளவரசன் வீரபாகுவின் தலைமையில் பெரும் சேனையை அனுப்பிவைத்தான். அதன் பின்னர் அமைச்சர்களுடன் கலந்தாலோசித்துப் பெரும் படையுடன் தானே போருக்குச் சென்றான். சந்திரபானுவின் சேனை சுற்றி வளைக்கப்பட்டது. விஜயபாகுவினதும் வீரபாகுவினதும் படைகளுக்கு முன் எதிர் நிற்க முடியாமல் சந்திரபானுவின் சேனை சிதறி ஓடியது. ஆயுதங்களையும் குதிரைகள், யானைகள் என்பனவற்றையும் கைவிட்டு காடுகளுக்குள்ளும் மலைக்குன்றுகளுள்ளும் தப்பி ஓடினர். சந்திரபானுவின் கொற்றக்குடை, அரசமேளம், வலம்புரிச்சங்கு, ஆபரணங்கள், மகளிர், அனைத்தையும் விஜயபாகு கைப்பற்றி அரண்மனைக்கு அனுப்பிவைத்தான். அதன் பின்னர் புலத்தி நகருக்குத் திரும்பினான். விகாரைகள், சேத்தியங்கள், தூபிகள். சிலாமனைகள் என்பனவற்றினால் புலத்தி நகர் இந்திரலோகமாக மாறியது.

புலத்திநகரை முன்பு விளங்கியது போன்று திருத்தி அமைத்தான். இராச்சியத்தின் அரசநகரமாகப் பிரகடணப்படுத்தினான். பின்னர் மன்னன் பராக்கிரமபாகுவுக்குத் தூதுவர்கள் மூலம் செய்தி அனுப்பி புலத்தி நகருக்கு வருமாறு அழைப்பு விட்டான். பிரதானிளோடு புலத்தி நகருக்கு வந்த மன்னனை எதிர்கொண்டு வரவேற்றான். நகரே விழாக்கோலம் பூண்டது. அதன் பின்னர் வீரபாகுவிடம் புலத்திநகரைப் பொறுப்புக் கொடுத்துவிட்டு, தந்தையுடன் தம்பதேனியாவுக்குச் சென்று புனித தாதுக்களை ஊர்வலமாக எடுத்து வந்தான். அதற்கென அமைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத்தியத்தில் தாதுவை வைத்துப் பிரதிஸ்டை செய்து தந்தையின் விருப்பினை நிறைவேற்றினான். அதன் பின்னர் பராக்கிரமபாகு புலத்தி நகரில் இரண்டாம் தடவையாக முடிபுனைந்து கொண்டான். சகஸதீர்த்தத்தில் (தாஸ்தோட்டை) உபசம்பதா வைபவம் ஒன்றினை விஜயபாகு தந்தைக்காக நடாத்தினான். முப்பத்தைந்து வருடங்கள் ஆட்சி புரிந்தான்.

## 4 ஆம் விஜயபாகு

இரண்டாம் பராக்கிரமபாகு காலமாகியதும் மூத்தபுதல்வனான 4 ஆம் விஜயபாகு முடிசூடினான். அவனுடைய ஆட்சியின் இரண்டாம் வருடம் அவனுடைய தளபதிகளில் ஒருவனான மித்திரன் என்பவன் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பினான். அவன் அரண்மனை வேலையாள் ஒருவனை இலஞ்சம் கொடுத்துத் தன் பக்கம் சேர்த்து அரசனை ஒருநாள் இரவு கொலை செய்வித்தான். இதனைக் கேள்விப்பட்ட விஜயபாகுவின் சகோதரன் புவனேகபாகு பயத்தால் சுபகலைக் கோட்டைக்குத் தப்பி ஓடினான். அதன்பின்னர் இந்தத் துஷ்ட தளபதி மித்திரன், முனாஸ்ரா என்பானின் குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது துஷ்டர்களை ஒழுங்கு படுத்திப் புவனேகபாகுவைக் கொல்வதற்கு முயன்று தோல்வி கண்டான். இளவரசன் பயணம் செய்கின்ற மூடுபல்லக்கைக் குறிவைத்து அமைக்கப்பட்ட கூரான சுழல் ஆயுதங்கள் குறிதப்பிவிட்டன. இளவரசன் கீழே குதித்துத் தன்னாட்களுடன் கலகலைக் கிராமத்தைச் சென்றடைந்தான். அங்கு வலிமையான யானை ஒன்றில் ஏறி கொலபின்னை ஆற்றைக்கடந்து சுபகலையை வந்தடைந்தான்.

துட்டதளபதி மித்திரன் அதன்பின்னர் தம்பதேனியாவுக்குச் சென்றான். அரசனுக்கான ஆடை ஆபரணங்களை அணிந்து, சிம்மாசனத்தில் அமர்ந்து முடிசூடிக் கொண்டான். அதேவேளை மந்திரிகள் எல்லாரும் ஒன்று கூடி நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை குறித்து ஆலோசனை செய்தார்கள். தம்பதேனியப் படை வீரர்களாக ஆர்ய வீரர்களும் (இராஜபுத்தான வீரர்கள்), சிங்கள வீரர்களும் இருந்தனர். ஆர்ய வீரர்களுக்குத் தலைவனாக தாகுறாகன் என்பவன் விளங்கினான். இப்படைவீரர்களுக்கான வேதனம் நீண்ட காலமாகக் கொடுக்கப்படவில்லை. ஆர்ய அந்நிய வீரர்களின் வேதனத்தை முதலில் வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆர்ய வீரர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அமைச்சர்கள் பல தடவை முயன்றனர். ஒரு கட்டத்தில் எழுநூறு ஆர்ய வீரர்களும் ஒருங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகுறாகன் தலைமையில், 'எதற்கும் அரசனைச் சென்று சந்திப்ப' தாக முடிவு செய்தனர். அதன்படி சென்றபோது அரச சிம்மாசனத்தில் தளபதி மித்திரன் அமர்ந்திருப்பதைக் கண்டு திகைத்தனர். உடனே தாகுறாகன் தன் தோழர்களுக்குச் சைகை செய்யதபடி, தன் வாளைச் சடுதியாக உருவி, மித்திரனின் தலையைத் துண்டித்தெறிந்தான்.

நாட்டில் சிறு பரபரப்பேற்பட்டது. சிங்களவீரர்கள் 'இதனை என்ன நோக்கத்துடன் செய்தீர்கள்?' எனக் கோபத்துடன் கேட்டனர். 'சுபகலையில் தங்கியுள்ள எங்கள் இளவரசர் புவனேகபாகுவுக்கு விசுவாசம் தெரிவித்து இதனைப் புரிந்தோம்.' என்றனர். அதனை ஏற்றுக்கொண்ட சிங்களவீரர்கள், ஆர்ய வீரர்களுடன் இணைந்து சுபகலைக்கு (யாப்பகுவை)ச் சென்று புவனேகபாகுவை சுபகலையிலிருந்து தம்பதேனியாவுக்கு அழைத்து வந்தனர். புவனேகபாகுவை மன்னனாக முடிபுனைந்தனர். புவனேகபாகு ஆர்யவீரர்களுக்கும் சிங்கள வீரர்களுக்கும் ஊதியத்தையும் பரிசுகளையும் வழங்கினான். அக்காலத்தில் இந்தியக்கரையிலிருந்து படையெடுத்து வந்த காலிங்கராஜன், கொடகங்கன், முதலானோரின் தமிழ்ச்சேனைகளைத் துரத்தியடித்தான். கடாலிவத்தை, மாப்பணா, தீபா, ஹிமாயநாகா போன்ற வன்னி இயவரசர்களின் புரட்சிகளை ஒடுக்கினான். தம்பதேனியாவில் சில வருடங்கள் இருந்து ஆட்சி செய்த பின்னர் தன் தலைநகரை யாப்பகுவைக்கு (சுபுஹிரி) மாற்றிக் கொண்டான். அவன் தன் காலத்தில் பௌத்த சமயத்துக்குப் பெருந்தொண்டுகள் ஆற்றினான். யாப்பகுவையில் இருக்கும் போது மரணமடைந்தான்.

நாட்டில் இக்காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அக்காலத்தில் பாண்டிய மன்னன் (ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்) தன் மந்திரியும் படைத்தளபதியுமான ஆரியச்சக்கிரவர்த்தி என்பவனின் தலைமையில் தமிழர் சேனை ஒன்றினை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அவன் பெயருக்கு ஏற்ப இனத்தால் ஆரியனல்லன். அவன் இலங்கை நாட்டைப் பாழாக்கியபடி யாப்பகுவைக்குள் படையுடன் நுழைந்தான். அங்கு புனித தந்ததாதுவையும் ஏராளமான திரவியங்களையும் கைப்பற்றிக் கொண்டு பாண்டி நாட்டுக்குத் திரும்பிச்சென்றான். அவற்றைப் பாண்டியன் குலசேகரனிடம் கையளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 16
# மூன்றாவது பராக்கிரமபாகு

**வி**ஜயபாகுவின் மகனான பராக்கிரமபாகு (3 வது) இலங்கையின் அரசனாகியதும் பாண்டிநாடு சென்று மன்னனிடம் பரிந்து பேசி அப்புனித சின்னங்களை இலங்கைக்கு மீட்டு வந்தான். அவற்றைப் புனித நகரான புலத்தியிலுள்ள புனிததந்ததாதுக் கோயிலில் மீண்டும் பிரதிஸ்டை செய்தான். சில காலம் ஆட்சி செய்தபின்னர் மரணமடைந்தான். அவனுக்குப் பின்னர் யாப்பகுவையின் மன்னனாக இருந்து மரணமடைந்த புவனேகபாகுவின் மகன் புவனேகபாகு என்ற இளவரசன் (2 வது) அரசனாகினான். அவன் தன் நாட்டின் தலைநகராக குருனாகலை (ஹற்றிசெலாபுரம்) அமைத்துக் கொண்டான். ஆயிரம் பிக்குகளுக்குத் தினந்தோறும் அன்னமிட்டான். இவன் ஒவ்வொரு ஆண்டும் தனது முடிசூட்டு விழா நாளினை முன்னிட்டு உபசம்பதா வைபவத்தை நடாத்தி வந்தான்

அவனாட்சியின் பின்னர் புகழ் பெற்ற குடும்பமொன்றில் பிறந்தவனான பராக்கிரமபாகு (4வது) என்பான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். தந்ததாதுவுக்கு மூன்றடுக்குக் கோயில் ஒன்றினைக் கட்டுவித்தான். சங்கத்தாரைப் பல வகைகளிலும் கௌரவித்தான். சோழநாட்டிலிருந்து மிகப்படித்த பன்மொழிப்பண்டிதர் ஒருவரை சமய முன்னேற்றத்துக்காக வரவழைத்தான். புத்த ஜாதகக் கதைகளை அவரைக் கொண்டு படிப்பித்தான். பாளி மொழியிலிருந்த அக்கதைகளைச் சிங்கள மொழியில் மொழி பெயர்ப்பித்தான். தன் பெயரில் ஒரு பிரிவேனாவையும், புராணகமம், சன்னிராசீலா, லகுஜமண்டகா, மொறவங்கா எனும் நான்கு விகாரைகளையும் அமைப்பித்தான். விஜயபாகு மன்னன் கட்டுவித்திருந்த தித்தாகம விகாரையைத் திருத்துவித்தான். தேவபுரம் என்றவிடத்தில் இரண்டு மாடிகளைக் கொண்ட புத்த சிலாமனை ஒன்றினை அமைத்தான். மேதானன்காரா, கஜாசக்தி ஆகிய சமய பண்டிதர்களை தருவித்துக் குடியமர்தினான் அவர்களுக்குக் காணிகளையும் திரவியங்களையும் அன்பளிப்புச் செய்தான். வலிகமக் கிராமத்தில் பராக்கிரமபாகு விகாரையைக் கட்டுவித்தான். சாலிகிரி (எல்பிரியா) என்ற பெரியதொரு கிராமத்தைப் பிக்குகளுக்குத் தானமாக வழங்கினான். ராஜகமத்தில் ஸ்ரீகானானந்தா என்ற அழகிய விகாரையையும், பிரிவேனா, போதி மரம், சிலாமனை என்பனவற்றை நிறுவி, தான் சோழ நாட்டிலிருந்து அழைத்து வந்த பன் மொழிப்பண்டிதருக்கு வழங்கிக் குடியமர்த்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் மாயாதானு (சீதாவக்கை) எனும் அழகிய நகர் ஒன்றினை உருவாக்கினான். அங்கு விஷ்ணுவுக்கு ஒரு கோயில் அமைப்பித்தான். இவ்வாறு பல நற்காரியங்களை ஆற்றிய பராக்கிரமபாகு மரணமடைய நேரிட்டது.

இந்த மன்னனின் பின்னர் வன்னி புவனேகபாகு, அவனின் பின்னர் ஜயபாகு என்போர் ஒருவர் பின் ஒருவராக அரசாண்டார்கள். அவர்களின் பின்னர் புவனேகபாகு என்பான் ஆட்சியிலமர்ந்தான். மகாவலி கங்கைக்கு அருகே அமைந்த கங்கஸ்ரீபுரம் (கம்பளை) என்ற நகரத்தில் தன் வதிவிடத்தை அமைத்துக் கொண்டான். பௌத்த சமயத்துக்கு அரிய தொண்டுகள் ஆற்றினான்.

## 6 வது பராக்கிரமபாகு

4 ஆம் புவனேகபாகுவுக்குப் பின்னர் கங்க ஸ்ரீ புரத்திலிருந்து பராக்கிரமபாகு (5வது) என்பானும் விக்கிரமபாகு (3வது) என்பானும் ஒருவர் பின் ஒருவர் அரசனானார்கள். விக்கிரமபாகு அரசனாக விளங்கிய காலத்தில் பலம் மிக்க இளவரசன் ஒருவன், அழகக்கோணார் என்பது அவன் பெயர், மொஹறா கங்கைக்கு (மகாவலி கங்கை) அருகிலுள்ள பெராதோனி (பேராதனை) நகரில் வசித்து வந்தான். அவன் புத்தர் முன்னர் விஜயம் செய்த கல்யாணி என்ற நகரத்தில் விளங்கிய சேத்தியங்களையும் சிலாமனைகளையும் போதிகளையும் பராமரித்தான். கல்யாணிக்குத் தெற்கே அமைந்திருந்த தாருகமம் என்ற வாவிக்கு அருகே, உயர் மதில்களைக் கொண்டமைந்த ஜெயவர்த்தனபுரக் கோட்டை என்ற நகரத்தை உருவாக்கினான். அந்த நகரத்தில் வசித்து அழகக்கோணார், தன்னை இந்நகரத்தின் அரசனாகப் பிரகடனப்படுத்தினான். புவனேகபாகு (5வது) என்று தன் பெயரை மாற்றிக் கொண்டான். பௌத்தத்துக்கு விசுவாசமாகச் செயலாற்றி வந்தான். இருபது வருட ஆட்சியின் பின்னர், மரணமடைய, அவன் சகோதரனான வீரபாகு என்பான் ஆட்சியைப் பெறுப்பேற்றான். அவன் பின்னர் சூரியகுலத்தோன்றலான பராக்கிரமபாகு (6வது) என்பான் அரசகட்டிலேறினான். அவன் ஜெயவர்த்னபுரக்கோட்டையிலிருந்து ஆட்சி நடாத்தினான். அவன் மும்மணிகளையும் பெரிதும் போற்றி ஆட்சி செலுத்தினான். தந்ததாதுவுக்கு தங்கத்தாலும் வைரத்தாலும் செய்த பேழை ஒன்றினை வழங்கினான். உருகுணை, பிஹிட்டி, மாயாவட்டை ஆகிய மூன்று பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்த பிக்குகளுக்குத் தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

தருமங்கள் செய்தான். பப்பதகண்ணா (பிப்பிலியானா) என்றவிடத்தில் தன் தாயாரின் பெயரால் சுனீத்ராதேவி பிரிவேனாவை அமைப்பித்தான். சேதமுற்றிருந்த சேத்தியங்கள், ஆராமைகள் என்பனவற்றைத் திருத்துவித்தான். நாற்பத்திரண்டு வருட ஆட்சியின் பின்னர் மரணமடைய நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபராக்கிரமபாகு

பராக்கிரமபாகுவின் மரணத்தின் பின்னர் அவனது பேரனான ஜயபாகு (வீரபராக்கிரமபாகு) என்பான் அரசனானான். ஆனால் குறுகிய காலத்தில் அவனை 6வது பராக்கிரமபாகு கொன்றுவிட்டு இராச்சியத்தைத் தனதாக்கிக் கொண்டான். அவனை பண்டித பராக்கிரமபாகு என்பர். ஆறாண்டுகள் ஆட்சி செலுத்தினான். அதன் பின்னர் புவனேகபாகுவின் (6வது) சகோதரனான வீரபராக்கிரமபாகு அரசனானான். அவனின் பின்னர் விஜயபாகு என்ற ஓர் இளவரசன் ஆட்சிலமர்ந்தான். அவனின் மரணத்தின் பின்னர் புவனேகபாகு (7வது) மன்னன் ஆகினான். அதன் பின் ஸ்ரீசங்கபோதி என்ற அரசகுலத் தோன்றலுக்குப் பிறந்த வீரவிக்கிரமன் என்பவன் மஹாவாலுகா (மகாவலி) நதிளால் சூழப்பட்ட செங்கடசேல ஸ்ரீவர்த்னாவை (கண்டி) தலைநகராக்கி அரசனாகினான். அங்கு சேத்தியம் ஒன்றினை அரண்மனைக்கு அருகிலமைத்து அதில் தந்ததாதுவைப் பிரதிஷ்டை பண்ணுவித்தான். பிக்குகளுக்காக 86 ஓடு வேய்ந்த மனைகளை அமைத்துக் கொடுத்தான்.

முப்பதினாயிரம் பனை ஏடுகளில் நூல்களை எழுதுவித்தான். சமன்குத்தாவுக்கு யாத்திரை செய்தான். 780 படிகளைச் சிவனொளி பாதமலைக்குச் செல்ல அமைப்பித்தான்.

## மாயாதுன்னை

வீரவிக்கிரமனின் ஆட்சி நடந்து கொண்டிருந்த வேளையில் சூரிய மரபில் பிறந்த சிறிய அரசர்கள் பலர் ஜெயவர்த்தனபுரக் கோட்டையிலும் கரையோரப் பிரதேசங்களிலும் வாழ்ந்திருந்தனர். அவர்களில் மாயாதுன்னை என்பான் குறிப்பிடத்தக்கவன். அவனுக்கு இராஜசிங்கன் என்றொரு துட்டத்தனமான மகன் இருந்தான். அவன் தன் தந்தையைத் தனது கரத்தினால் கொன்றுவிட்டு இராச்சியத்தைக் கவர்ந்து கொண்டான். அவனை சீதாவாக்கையின் இராஜசிங்கன் என்பர். அவன் சமயத்துக்குரிய தொண்டுகளைச் செய்பவனாக மாறினான். அவன் பிக்குகளின் தலைவர் ஒருவரிடம், 'என் தந்தையைக் கொலை செய்த பாவத்தை எப்படிப் போக்குவேன்?' என வேண்டினான். அவர் கூறிய வழி முறைகள் அவனுக்குத் திருப்தியைத்தரவில்லை. 'செய்த பாவத்தின் பலாபலன்களைப் போக்க முடியாதா?' என அடிபட்ட சர்ப்பம் போலச் சீறினான். ஆதன் பின்னர் சிவனை வழிபடுகின்றவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரம் கேட்டான். அவர்கள் பரிகாரம் சொன்னார்கள். அதனால் மன்னன் சைவசமயத்தைத் தழுவிக் கொண்டான் உடல் முழுவதும் சாம்பலை (திருநீறு) பூசிச் சைவனாகிச் சிவனை வழிபாடு செய்பவனாகினான். அதன் பின்னர் பிக்குகள் சிலரைக் கொலை செய்வித்தான். புனிதமான பல நூல்களை எரியூட்டியான். சேத்தியங்களை இடித்துத் தள்ளினான். பிக்குகள் பலர் பயத்தினால் தங்கள் சந்நியாச காவி அங்கிகளைக் களைத்து எறிந்தனர். பலர் தாம் வசித்த வீடுகளைக் கைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிப்போயினர். பழி பாவத்துக்கு அஞ்சாத இராஜசிங்கன் பௌத்த மதத்தை இவ்வாறாகச் சீரழித்தான்.

## விமலதர்மசூரியன்

இராஜசிங்கனின் ஆட்சி நிலவிய காலத்தில், சூரிய வம்சத்தில் பிறந்து கங்கஸ்ரீபுரத்தில் வசித்துவந்த ஓர் இளவரசன் கொழும்பா (கொழும்பு) நகரத்துக்கு வந்தான். அங்கு தங்க முடியாது போகவே கோவாவுக்குச் சென்று சில காலம் அங்கு தங்கியிருந்தான். அங்கு ஏற்பட்ட சிறிய சண்டையில் கஜபாகு என்ற பலசாலியைக் கொன்றமைக்காக அவனுக்குப் பல விருதுகள் கிடைத்தன. இந்த இளவரசன் அங்கிருந்து இலங்கைக்கு வந்து, பஞ்சகுடாரட்டையில் தங்கி அங்கிருந்த மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டான். இராஜசிங்கன் இறந்ததும் இந்த இளவரசன் சிறீவர்த்தனாநகரத்தில், விமலதர்மசூரியன் என்ற நாமத்தோடு முடிபுனைந்து கொண்டான். கண்டி நகரைச் சுற்றி உயர் மதில்கள் அமைத்து, 18 கோபுரங்கள் அமைத்துப் பாதுகாப்புச் செய்தான். அத்துடன் லபுஜகம (டெலிகம) என்ற கிராமத்தில் இருந்த புனிததந்ததாதுவை தன் இருப்பிடத்துக்கு வரவழைத்தான். தன் அரண்மனைக்குப் பக்கத்தில் ஒரு தந்ததாதுக் கோயிலமைத்து அதில் பாதுகாத்தான். சந்நியாசம் புகுந்து பிக்குவாக வாழ்ந்துவந்த தன் சகோதரனை அழைத்து சந்நியாசத்தைக் களைவித்து யுவராஜாவாக அமர்த்திக் கொண்டான்.

## செனரத்ன

அடுத்து இந்த இராச்சியத்தின் அரசனாகச் செனரத்ன என்ற செனரத் முடிசூடிக் கொண்டான். அவன் தன் இறந்து போன சகோதர மன்னனின் மனைவியை பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். அவனுடைய காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வாய்ந்த சில வர்த்தகர்கள் கொழும்பாவில் வந்து இறங்கினார்கள். அவர்கள் பறங்கியர்களாவர். (போர்த்துக்கேயர்) நம்ப முடியாதவர்கள். குரூரமான மனத்தினர். சிங்கள மக்களுக்குத் தொல்லை தருபவர்களாக இருந்தனர். பெண்களின் கற்பைச் சூறையாடுபவர்களாகவும், சிங்கள மக்களின் வீடுகளைக் கொளுத்து பவர்களாகவும், கிராமங்களை அழிப்பவர்களாகவும் விளங்கினர். சிலாமனைகளை உடைத்தும் சேத்தியங்களை சேதப்படுத்தியும் வந்தனர். சில இடங்களில் பாதுகாப்பான கோட்டைகளையும் அமைத்துக் கொண்டனர்.

செனரத்ன புனித தந்ததாதுவை அடர் காடுகள், நதிகள், மலைகள் சூழ்ந்த பாதுகாப்பான பஞ்சததாவுக்கு எடுத்துச்சென்று பாதுகாத்தான். அதன் பின்னர் நகரத்தைக் கைவிட்டு, தன் திரவியங்களுடனும், தன் மூத்த சகோதரர்களின் ஆண்மக்களுடனும் தன் பட்டத்து ராணியுடனும் மஹியங்கணைக்கு அகன்று போனான். மஹியங்கணையில் வசிக்கின்ற வேளையில் அவனுக்கும் ராணிக்கும் ஒரு புதல்வன் பிறந்தான். நல்ல குணங்குறிகளுடனும் அதிர்ஷ்ட நட்சத்திரங்களுடனும் பிறந்தான். வளர்பிறை மாதிரி இளவரசன் வளர்ந்தான். மகனை நன்கு வளர்ப்பதில் மன்னன் அதிக கவனம் செலுத்தினான். சிறீவர்த்தன நகரத்தை பாரம் எடுத்து அதில் வசிப்பாராகினர். அங்கு வாழும் காலத்தில் தன் தமையனின் மக்களுக்கும் தன் மகனுக்கும் எப்படி இராச்சியத்தை எவ்வாறு பங்கிடவேண்டுமென மூன்று பனை ஓலைகளில் எழுதி தந்ததாதுப் பேழைக்கு அருகில் வைத்தான். அதன் பின்னர் மூன்று இளவரசர்களையும் அழைத்து, ஒவ்வொரு ஓலையை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான். ஊவாப்பிரதேசம் மூத்த இளவரசனாகிய குமாரசிங்கனுக்குக் கிடைத்தது. மாத்தளைப் பிரதேசம் இரண்டாவது இளவரசனாகிய விஜயபாலாவுக்குக் கிடைத்தது. மலைநாட்டின் ஐந்து பகுதிகள் மன்னனின் மகனாகிய இராஜசிங்கனுக்குக் கிடைத்தது. ஓலைகளின்படி அவரவர்களுக்குக் கிடைத்த இராச்சியங்களை அரசன் காட்டினான். மலைநாட்டின் பொறுப்பினை எடுத்த தன் மகனே இலங்கை அரசின் பலம் மிக்க மன்னன் என அறிவித்தான். அவரவர்களுக்குரிய அரசுகளை அவர்களுக்கு வழங்கினான். ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்தபின்னர் அரசன் மரணமடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 17
# மூன்று மன்னர்கள்

இலங்கையைப் பங்கிட்டு அமைந்த இராச்சியங்களை மூன்று அரசர்களும் ஆண்டனர். பறங்கிகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டனர். சில காலங்களில் இம்மூன்று சகோதரர்களுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இராஜசிங்கன் இலங்கை முழுவதற்கும் மன்னனாக விரும்பினான். மூத்த இளவரசன குமாரசிங்கன் நஞ்சூட்டிக் கொல்லப் பட்டான். அதனை அறிந்த இரண்டாவது இளவரசன் விஜயபாலா மாத்தளையைவிட்டு தப்பி ஓடி அந்நியதேசம் ஒன்றில் தன்னாட்களுடன் அடைக்கலம் புகுந்தான். அதனால் மூன்றாவது இளவரசனான இராஜசிங்கன் இலங்கை முழுவதற்கும் மன்னனாக முடி சூடிக்கொண்டான். இராஜசிங்கனைக் கொல்வதற்குப் பல முயற்சிகள் நடைபெற்றன. ஒரு தடவை பல இளைஞர்களுடன் அவன் வேட்டைக்குப் புறப்பட்டான். குதிரைகளில் அவர்கள் புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும் அவன் குதிரையை வேகமாகப் பாய்ந்தோடும் படி சைகை செய்தனர். அக்குதிரை வேகமாக ஓடி ஒரு புதைகுழியில் அவனைத் தள்ளப் பார்த்தது அதனைப் புரிந்து கொண்ட இராஜசிங்கன் தன் குதிரையிலிருந்து பாய்ந்து பின்னால் வந்தவனின் குதிரையில் பாய்ந்தேறி ஓடித் தப்பிக் கொண்டான். இன்னொரு தடைவை ஆற்றினைக் கடக்க உதவுகின்ற கடவையில் அவனைக் கொல்லச் சதி நடந்தது. ஆனால் இராஜசிங்கன் இக்கரையிலிருந்த பாறைக் குன்றிலிருந்து மறு கரையிலிருந்த பாறைக் குன்றுக்குத் தாவித் தப்பித்துக் கொண்டான்.

பறங்கிகளின் பலத்தையும் திட்டங்களையும் புரிந்து கொண்ட இராஜசிங்கன் தன் படைப்பலத்தை அதிகரிக்கத் தன்னாட்சிக் காலத்தில் பல நடவடிக்கைகளை எடுத்தான். சிங்கள வீரர்களைப் போருக்குத் தயாராக்கினான். சிறிவர்த்தனா நகரத்தைவிட்டுப் பிரதானிகள், வில் அம்பு வீரர்கள், வாள் வீரர்கள், வேல் தரித்தவர்கள், யானை, குதிரைப் படைகளுடன் வெளிப்பட்டான். எதிரிகளால் (பறங்கிகள்) முற்றுகை யிடப்பட்ட பஞ்சவுடரட்டையைச் (கண்டி) சுற்றி வளைத்து, எதிரிகளைத் துவம்சம் செய்தான். எதிரிகள் மன்னனின் தாக்குதலால் நிலை குலைந்து பயத்துடன் சிதறி ஓடினார்கள். குறுக்கிட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளுள் விழுந்தெழும்பினர். கடும் காற்றினால் பஞ்சாகப் பறப்பதுபோல மன்னனின் சேனை முன் நிற்க முடியாது போயினர். எதிரிகளின் கோட்டைகளை மன்னன் கைப்பற்றிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தினால் ஏராளமான எதிரி வீரர்கள் ஓடித்தப்பினார்கள். கடற் கரையோரங்களில் அமைந்திருந்த தங்களின் கோட்டைகளில் சில காலமே இந்த சமய நம்பிக்கையற்றவர்களால் வாழ முடிந்தது. இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள தீகவாவிப் பிரதேசத்தில் இராஜசிங்கன் தங்கியிருந்தபோது, கரையோரத்தில் ஒல்லாந்தர் எனும் சாதிய னர் வந்து தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டான். அதனால் தன்னிரு மந்தி ிகளை ஒல்லாந்தரின் அழகான நாட்டிற்குத் தூது அனுப்பி, ஏராளமான கப்பல்களுடன் தன் நாட்டிற்கு வருமாறு அழைத்தான். ஒல்லாந்தரின் வீரர்களை வரவேற்ற மன்னன், ஒல்லாந்த வீரர்கள், சிங்களவீரர்கள் இணைந்த கூட்டுப் படைக்குத் தலைமைதாங்கி பறங்கிகளின் படையைத் தோற்கடித்தான். பறங்கிகளின் கோட்டைகளைக் கைப்பற்றி ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தான். இலங்கையை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் பொறுப்பை ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தான். வருடாவருடம் தனக்குத் திறை செலுத்துமாறு பணித்துவிட்டு. அசுரர்களை வெற்றி கொண்ட இந்திரன் மாதிரி தன் நாட்டுக்குள் புகுந்தான். அதன் பின்னர் மதுரையிலிருந்து இளவரசி ஒருத்தியைத் வரவழைத்துத் தன் பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். ஐம்பத்திரண்டு ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தான்.

## விமலதர்மசூரியன்

இராஜசிங்கனின் பின்னர் அவனது மகனான விமலதர்மசூரியன் ஆட்சி பீடமேறி னான். மதுரையிலிருந்து அரசகுமாரி ஒருத்தியைத் தருவித்துத் தன் பட்டத்துராணியாக்கிக் கொண்டான். மக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்ட விமலதர்மசூரியன் நீதியாகவும் சமத்துவமாகவும் நாட்டை ஆட்சிபுரிந்தான். புனித தந்ததாதுவுக்குப் பெருவிழா ஒன்றினை நடாத்த முடிவு செய்தான். முதல் கட்டமாக மூன்றடுக்கில் ஒரு கோயிலைக் கட்டி (தலதாமாளிகை) அதில் பிரதிஷ்டை செய்தான். ஆண்டுதோறும் புனித தாதுவிற்கு விழாவெடுத்தான். நூற்றுக்கணக்கான பிக்குகளுக்கு அவ்விழாவில் அங்கிகள், தானங்கள் என்பனவற்றை வழங்கினான். சமன்குத்த மலைக்குக் கால்நடையாக யாத்திரை செய்தான். அங்கிருந்த புனித பாதங்களுக்கு வெள்ளியினால் கவசமிடுவித்தான். பௌத்தத்துக்குப் பல தொண்டுகளாற்றி 22 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். அவனின் பின்னர் அவன் மகனான வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் ஆட்சிப் பீடமேறினான். அவனும் மதுரையிலிருந்து இளவரசிகளை வரவேற்று மணந்து கொண்டான். மஹியங்கணை சேத்தியத்துக்கு விஜயம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் மந்திரி மனை.

திருத்தப் பணிகள் செய்வித்ததோடு, விழாவும் எடுப்பித்தான். சமன்குத்தாவுக்கும் அனுராதபுரத்துக்கும் யாத்திரைகள் மேற்கொண்டான். அங்கெல்லாம் சமயப் பணிகள் செய்தான். கண்டித் தலைகநருக்கு இணையாகக் குண்டசாலை என்ற ஒரு நகரத்தை அமைத்தான். அங்கு மகாவலியின் மருங்கில் தென்னந்தோட்டங்களை உருவாக்கினான். தந்ததாது மாளிகையின் சுவர்களில் 32 ஜாதகக் கதைகளையும் ஓவியமாகத் தீட்டுவித்தான். நகரத்தின் மத்தியில் நாகதேவாலயத்தை கட்டுவித்தான். பண்டிதர் சரண்கராதேரரை வரவழைத்து நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டான் 33 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சிபுரிந்தான்.

விமலதர்மசூரியனுக்குப் பின்னர் பட்டத்து ராணியின் இளைய சகோதரனான ஸ்ரீவிஜயராஜசிங்கன் என்பான் அரசனாகினான். அவன் பௌத்த தர்மத்துக்கு பெரும் தொண்டுகளாற்றினான். மதுரையிலிருந்து அரசகுலத்தவள் ஒருத்தியைத் தருவித்துத் தன் பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். மன்னனுக்குரிய கடமைகளை நன்கு ஆற்றிக் கொண்டு கண்டி நகரத்தில் வசித்து வரலாயினான். பிறப்பிலிருந்து பொய்யான சமயத்தைப் பின்பற்றி வந்த மகாராணியும் மெய்மையான சமயத்தவளாக மாறினாள். உலகத்தில் புத்தரே தலையானவர் என்பதை நம்பி, புத்தருக்கும் தந்ததாதுவிற்கும் நாளாந்தம் வழிபாடியற்றி வரலாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை மலர்களால் அர்ச்சித்து, கற்பூரம் முதலான வாசனைத் திரவியங்களையும் நறுமண நெய்விளக்குகளை ஏற்றி ஆபரணங்களைத் தானமாக வழங்கியும் வழிபாடியற்றினர். பிக்குகளுக்கு அங்கிகளைத் தானமாக வழங்கினர். சமயப் பேச்சுக்களை நாளாந்தம் கேட்பவனாகவும் சமய நூல்களை எழுதுவிப்பவனாகவும் மக்களின் அன்பைப் பெ றவனாகவும் விளங்கினான். உபதோசராமையில் வாழ்ந்த சரண்கராத் தே ரை அழைத்து, பானாவறாஸ் எனப்படும் திரிப்பித்திகாவை சிங்கள மொழியில் எழுதுவித்தான். வேறு சமயத்தைச் சேர்ந்த மூடர்கள் சிலர் தற்போதைய தலைநகரில் புனிததந்த தாதுவுள்ள பகுதியில் துஷ்ட பிசாசுகள் குடியிருப்பதாகவும் புதியதொரு நகரத்தைத் தாபித்துக் கொள்ளுமாறும் ஆலோசனை கூறினர். இதனைக் கேள்வியுற்ற அமைச்சர்கள் ஒன்று கூடி ஓரிரவு தந்ததாது உள்ள பேழையைத் திறந்து பர்க்க விரும்பி திறக்க முயற்சித்தனர். அவர்களால் அப்பேழையைத் திறக்க முடியவில்லை. மன்னனிடம் சென்று முறையிட்டனர். மன்னன் உடன் புறப்பட்டு வந்து உரிய திறப்பினை இட்டு தாதுப் பேழையைத் திறந்து மகிழ்வுடன் வழிபட்டான். புத்தரின் தந்ததாதுவைப் பார்த்த மன்னன் 'இன்று தான் பிறவிப்பயனை அடைந்தேன்' என்று பூரித்தான். நாட்டு மக்களை அழைத்து தாதுவைப் பார்வைக்கு வைத்ததோடு பெரிய தொரு சமய விழாவையும் எடுப்பித்தான். மன்னனால் தாதுக் கோயிலுக்குப் பல பணிகள் அதன் பின்னர் ஆற்றப்பட்டன. அலுவிகாரை, மாத்தளையில் குகைக்கோயில்கள், புத்தர் சிலாவிக்கிரகங்கள், சேத்தியங்கள் என்பன விஜயராஜசிங்கனால் அமைக்கப்பட்டன. சிறிவத்தானா என்ற புதியதொரு நகரத்தை அமைத்துக் கொண்டான். அங்கு அரசமாளிகைகளைக் கட்டுவித்தான். காவற்கோபுரங்களை அமைப்பித்தான்.

முன்னைய மன்னன் இராஜசிங்கனால் துரத்தப்பட்ட பறங்கிகள் நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்துவந்தனர். பணத்தாசை காட்டி மக்கள் பலரையும் தம் சமயத்துக்கு மாற்றி வந்தனர். இதனைக் கேள்விப்பட்ட மன்னன் தன் அமைச்சர்களை அழைத்து, பறங்கிகளின் இல்லங்களையும் அவர்களது நூல்களையும் அழித்துவிடுமாறு கட்டளை பிறப்பித்தான். அவர்களை நாட்டைவிட்டுத் துரத்தவும் கங்கணம் கட்டினான். மன்னன் பல்வேறு சமயவிழாக்களைக் கொண்டாடியதோடு புத்தரின் புனித பாத அடையாளங்களுள்ள சமன்குப்தாவுக்கும் யாத்திரை மேற்கொண்டான். அனுராதபுரத்திலும் மஹியங்கணையிலும் சமய விழாக்களை நிகழ்த்தினான். கிழக்கு மேற்குப் பிராந்தியங்களில் பாலங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளையும் அமைப்பித்தான். பேகு, றாக்கங்கா, பர்மா முதலான நாடுகளிலும் அயோத்தியிலும் பௌத்தமதம் நல்ல நிலையில் உயர்வடைந்திருப்பதை ஒல்லாந்தர் மூலம் கேட்டறிந்து மகிழ்வடைந்தான். சொக்கத்தங்கத்தினால் தந்ததாதுக்கு ஒரு பேழை செய்வித்து வழங்கினான். வைரக்கற்களினால் அதனை அலங்கரித்தான். ஸ்ரீவிஜய இராஜசிங்கன் எட்டாண்டுகள் இந்த நாட்டினைச் செவ்வையாகப் பரிபாலித்தான்.

## அத்தியாயம்: 18
## கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்

**ஸ்ரீ**விஜயராஜசிங்கனுக்குப் பிறகு அவனது மனைவியின் சகோதரனாகிய கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் அரசனாகினான். மிகுந்த அழகன். பௌத்தத்தைக் கண்ணெனப் போற்றினான். அனுராதபுரம், மற்றும் ஏனைய புனிதத் தலங்களுக்கு யாத்திரைகளை மேற்கொண்டான் சமயச் சடங்குகளை நிறைவேற்றினான். புனித தந்த தாதுவுக்கு பெரஹரா சமய நிகழ்வை நடாத்தினான். மஹாவம்ச நூலை முழுமையாக எழுதுவித்தான். தனது இரண்டு சகோதரர்களை யுவராஜாக்களாக நியமித்தான். கண்டியிலிருந்து அரசாளும் போது, ஒல்லாந்தர்கள் என்னும் வியாபாரிகள் இலங்கைக் கடற்கரையை வந்து அடைந்தார்கள். இலங்கைக் கடற்கரையோரங்களை எதிரிகளிடமிருந்து (பறங்கிகள்) பாதுகாக்கும் நோக்குடன் கண்டி அரசனுடன் பேச்சு வார்த்தை நடாத்த விழைந்தனர். அதனால் வழமைபோல ஏராளமான பரிசுப்பொருட்களுடன், துணிவகைகள், மற்றும் திரவியங்களுடன், மன்னனிடம் வந்து பேச்சு வார்த்தை நடாத்தி மீண்டனர். சமயத்தையும் நாட்டையும் காப்பாற்றும் எண்ணம் மன்னனிடம் இருந்தது. ஆனால் ஒல்லாந்தர் மக்களிடையே தம் சமயத்தையும் பழக்க வழக்கங்களையும் பரப்பி மக்களை அடக்குவாராயினர். அதனால் ஒல்லாந்தரை அடக்குமாறு மன்னன் படை அனுப்பி வைத்தான். படையினர் ஒல்லாந்தரின் வீடுகளையும் கோட்டைகளையும் கைப்பற்றி அழித்தனர். ஒல்லாந்தருக்கு மனதில் பயத்தை ஏற்படுத்தினர். எனினும் ஒல்லாந்தர் தமது சேனாவீரர்களுடன், அதில் மலாயர்கள் ஏனையவர்களுடன் சேர்ந்து படையெடுத்து கிராமங்கள், தேவாலயங்கள், விகாரைகள், வதிவிடங்கள் ஆகியவற்றைத் தாக்கி அழித்தனர். மன்னனின் கட்டளைப்படி ஒல்லாந்தப் படை எதிர்த்துத் தாக்கப்பட்டது. கண்டி மீது எடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுப்பு முறியடிக்க முயற்சிக்கப்பட்டது. காடுகளும் மலைகளும் எதிரியின் நகர்வுக்குத் தடையாக இருந்தன. எனினும் அவர்களை முறியடிக்க ஏற்ற தருணமல்ல என்றெண்ணிய மன்னன், தந்ததாது, பட்டத்துராணி, இரண்டு யுவ ராஜாக்கள், ஏராளமான திரவியங்கள் ஆகியவற்றுடன் கரந்துறைந்தான். எனினும் எதிரிகளால் இயற்கை அரண் கொண்ட கண்டியைக் கைப்பற்ற இலகுவில் வேகமாக வந்தடைய முடியவில்லை எனினும் கண்டியை வெள்ளைப்பிசாசுகள் போல வந்தடைந்து, சமய நூல்களையும் ஏனைய புனித சின்னங்களையும் சேதப்படுத்தினர். மன்னன் தலைநகருக்கு அருகில் கரந்துறைந்தான். ஒல்லாந்தருடன் சேர்ந்து கொண்டவர்களை மக்கள் மன்னனின் கட்டளைப்படி அழித்தொழித்தனர். சமய விசுவாசமுள்ள தலைவர்களும் மக்களும் எதிரிகளைச் சுற்றி வளைத்து தாக்கி அவர்களைப் புறங்காண வைத்தனர். தலைநகர் திரும்பி வந்த மன்னன் தலைநகரை முன்னர் போலத் திருத்துவித்தான். தந்ததாதுவை கோயிலில் மீண்டும் வைத்தான். புத்தத்தையும் சங்கத்தையும் மன்னன் பாதுகாத்தான். ஒல்லாந்தர் மன்னனுடன் சமாதானம் செய்து கொண்டனர்.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் தந்ததுாதுமீதும் பௌத்த சமயத்தின் மீதும் மிகுந்த பற்றுடையவனாக விளங்கினான். தந்ததாதுக் கோயிலுக்குத் தொடர்ந்து அன்பளிப்புகள் வழங்கி வந்தான். சாரன்கராத் தேரரைக் கொண்டு பிக்குகளைத் தூய்மைப்படுத்தியதோடு நல்வழிப்படுத்தினான். அவன் தன்னாட்சிக்காலத்தில் சயாம் நாட்டிற்குத் பௌத்த தூதுவர்களை அனுப்பிப் பிக்குகளையும் நூல்களையும் தருவித்தான். சாரங்கராத்தேரரை சங்கராஜாவாக நியமித்தான். சயாம் நாட்டின் மூத்த தேரரான உபாலியின் வழிநடத்தல்படி இலங்கையில் சங்கத்தாரை நெறிப்படுத்துவித்தான். சயாம் நாட்டிற்கு இங்கிருந்து பௌத்த யாத்திரிகர்கள் சென்றார்கள். அதே போல அங்கிருந்தும் பௌத்த யாத்திரிகர்கள் இலங்கைக்கு வந்தனர். ஒபாலித் ஆதரரின் இறுதிக்கிரியைகளில் இங்கிருந்து சென்ற பௌத்த தூதுவர்கள் கலந்து கொண்டனர். சயாம் மன்னனுக்கு அன்பளிப்புகளைத் தூதுவர்கள் கொண்டு சென்றனர். இலங்கைப் பிக்குகள் சயாம் நாட்டில் கல்வி கற்றார்கள். கங்காராம விகாரை, குண்டசாலை விகாரை என்பன வற்றினை கண்டி மன்னன் அமைப்பித்தான். சிவனொளிபாத மலையிலிருந்த இந்து மதச்சின்னங்களை அங்கிருந்து அகற்றுவித்தான். மடவல விகாரை, தேவன்கல விகாரை, மடப்பொல விகாரை, றிதி விகாரை முதலானவற்றையும் கட்டுவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் மரணத்தின் பின்னர் அவனது இளைய சகோதரனான இராஜாதி ராஜசிங்கன் அரசனாகினான். அவனும் பௌத்த சமயத்துக்கு தொண்டுகளாற்றினான். அவன் காலத்தில் சயாமிலிருந்து உபாலி என்ற தேரரின் தலைமையில் இலங்கைக்கு வந்த பிக்குகள் சிறீவர்த்தனாவுக்கு அருகில் தமது வதிவிடங்களை அமைத்துக் கொண்டனர். இராஜாதி ராஜசிங்கனுக்குப் பின்னர் அவனது சகோதரியின் மகனான ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் என்பான் அரசனானான். அவன் கெட்ட சகவாசிகளோடு சேர்ந்து சமயத்துக்கும் மக்களுக்கும் கொடுமைகள் செய்தான். அமைச்சர்கள் பலரைச் சிரச்சேதம் செய்வித்தான். இரக்கமில்லாத இம்மன்னன் கொள்ளையனாக இயங்கினான். மக்களை வருத்தினான். இவை காரணமாகக் கொழும்பு மக்களால் சிறை பிடிக்கப்படடு இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டான். அதன் பின்னர் இலங்கை இராச்சியத்தை ஆங்கிலேயர்கள் அபகரித்துக் கொண்டனர்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நாவல்கள்

1. வாடைக்காற்று
2. நந்திக்கடல்
3. சித்திரா பௌர்ணமி
4. ஆச்சி பயணம் போகிறாள்
5. இரவின் முடிவு
6. அலை கடல்தான் ஓயாதோ
7. முற்ற ஒற்றைப்பனை
8. கொத்தியின் காதல்
9. பிரளயம்
10. கங்கைக் கரையோரம்
11. காட்டாறு
12. நடந்தாய் வாழி வழுக்கியாறு
13. ஒருமைய வட்டங்கள்
14. யானை
15. காவோலை
16. கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
17. இந்த நாடு உருப்படாது ?
18. கிடுகுவேலி
19. அக்கினிக் குஞ்சு
20. காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
21. கடல்கோட்டை
22. மழைக்காலம்
23. ஓ அந்த அழகிய பழைய உலகம்·
24. தீம்தரிகிட தித்தோம்
25. குவேனி
26. மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
27. கந்தவேள் கோட்டம்
28. யாககுண்டம்
29. அக்கினி
30. சாம்பவி
31. கொழும்பு லொட்ஜ்
32. போரே நீ போ
33. மரணங்கள் மலிந்த பூமி
34. ஈழ ராஜா எல்லாளன்
35. ஆறுகால் மடம்
36. பூதத்தீவு புதிர்கள்
37. வானும் கனல்சொரியும்
38. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
39. ஜன்மபூமி
40. மீண்டும் வருவேன்
41. அலையின் கீதம்
42. யுத்தபூமி

## ஆசிரியரின் சிறுகதைத் தொகுதிகள்

1. இதயமே அமைதி கொள்
2. யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
3. இரவு நேரப் பயணிகள்
4. ஓடில்லா நத்தைகளும் கூடில்லா ஆமைகளும்
5. குந்தி இருக்க ஒரு குடிநிலம்
6. வற்றாநதி

## ஆசிரியரின் பல்சுவைக் கட்டுரைநூல்கள்

1. கூடாரவாழ்க்கை.
2. சுனாமி
3. ஈழத்து சிறுகதை வரலாறு
4. ஈழத்தவர் வரலாறு
5. யாழ் கோட்டை வரலாறு
6. 24 மணிநேரம்
7. 12 மணிநேரம்
8. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது.


**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் புனைக்கதைத் துறையில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும் கலாநிதி செங்கை ஆழியான் க. குணராசா இலங்கை வரலாற்றுத் துறையிலும் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றார். ஏற்கனவே மகாவம்சம் கூறும் இலங்கை வரலாற்றை நமக்குத் தந்த ஆசிரியர். இப்பொழுது சூளவம்சம் கூறும் இலங்கை வரலாற்றை நமக்கு அளித்துள்ளார். மூல நூல்களின் நம்பகத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கும் அவை தெரிவிக்கின்ற செய்திகளைப் புரிந்து கொள்வதற்கும் இந்நூல்கள் உதவுகின்றன.

கமலம் பதிப்பகம்
75/10 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

ISBN: 978-955-1624-05-07

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org